இலங்கை: மனித உரிமைகள் நிலை

2005

சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம்

இலங்கை
மனித உரிமைகளின் நிலை
2005

இலங்கை
மனித உரிமைகளின் நிலை
2005

2004ஆம் ஆண்டு தை - மார்கழி வரையுள்ள
காலப்பகுதியின் தமிழ் மொழிபெயர்ப்பை
இவ்வறிக்கை உள்ளடக்குகின்றது

சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அறநிலையம்
3, கின்சி ரெறஸ்
கொழும்பு 8
இலங்கை

சட்டத்துக்கும் சமூகத்துக்குமான
அறநிலையம்.

ஐப்பசி 2005

ISBN 978-955-1302-15-3

பொருளடக்கம்

IV வீட்டு வன்முறைத்தடுப்புச் சட்டமூலம் மற்றும் பெண்கள் உரிமைச் சட்டமூலம் என்பவை பற்றிய ஆய்வு

முன்னுரை

இந்த அறிக்கையில் 2004ஆம் ஆண்டு இலங்கை மனித உரிமைகள் தொடர்பான நிலைமை குறித்து சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அறநிலையம், இலங்கை: மனித உரிமைகள் நிலைமை பற்றிய மீளாய்வு 2005இல், தொகுத்துள்ள அறிக்கையின் மிக முக்கிய 4 அத்தியாயங்களினதும் முழுமையான ஆய்வினது (திருத்தப்பட்ட) மொழி பெயர்ப்புக்கள் அடங்கியுள்ளன. அவ்வத்தியாயங்களாவன:

- மனித உரிமைகளுக்கான நீதித்துறை பாதுகாப்பு
- மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை
- வாக்களிப்பதற்கான உரிமை
- வீட்டு வன்முறைத்தடுப்புச் சட்டமூலம் மற்றும் பெண்கள் உரிமைச் சட்டமூலம் என்பவை பற்றிய ஆய்வு.

இவ்வத்தியாயங்களுடன் தொடர்புடைய துறைகளில் இலங்கை எந்தளவு தூரத்துக்கு இவை தொடர்பான சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றியுள்ளது, நிறைவேற்றி வருகின்றது மற்றும் இதன் மூலம் எந்தளவுக்கு இலங்கைப் பிரஜைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்பன போன்றவையும் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றன. இதன் கீழ் இத்துறைகள் தொடர்பான முன்னேற்றங்களும் பின்னடைவுகளும் கலந்துரையாடப்படுகின்றன. இலங்கையில் இத்துறைகள் தொடர்பான சர்வதேச மற்றும் உள்நாட்டு சட்ட ரீதியான கடப்பாடுகள் இவ்வத்தியாயங்களின் உள்ளும், மனித உரிமைகளின் தோற்றத்தில் நோக்கப்படுகின்றது. இத்துறைகள் தொடர்பான மனித உரிமைகளின் நிலைமையை மென்மேலும் நல்ல நிலைக்குக் கொண்டு வருவதே இதன் இறுதி இலக்காகும்.

இவ்வறிக்கைகள், இலங்கையிலுள்ள மனித உரிமைகள் துறையில் தேர்ச்சிமிக்கோரால் தொகுக்கப்பட்டிருப்பதுடன் அதன் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மேற்படி ஒவ்வொரு அத்தியாயமும் அது தொடர்பான புலமைபெற்றவர்களால் மென்மேலும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் 2004 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியில் இலங்கை கையெழுத்திட்டுள்ள போதிலும் அதனை உறுதி செய்கின்ற சர்வதேச மனித உரிமைகள் இணக்கப்பாடுகளின் பட்டியலொன்றும் உள்ளடங்கியுள்ளது.

இந்த அறிக்கையானது இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான அரசியல் யாப்பு ரீதியான சர்வதேச கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை அரச மற்றும் அரச சார்பற்ற சகலரும் மதிக்கவும், பாதுகாக்கவும் விருத்தி செய்யவும் மேற்கொண்டுள்ள பிரயத்தனங்களை மிகத் தீவிரமாக வலியுறுத்தும் ஒரு முயற்சி என நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இதனடிப்படையில் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் அபிவிருத்தி செய்யவும் தம்மை அர்ப்பணித்துள்ள அனைவரும் இந்த அறிக்கையை அதற்கான பொது இணக்கமாக உபயோகிப்பார்கள் என்பது எமது நேர்மையான எதிர்பார்ப்பாகும்.

பொதுவாக ஆங்கில மொழியில் பிரசுரமாகின்ற இவ்வறிக்கையின் பிரித்தெடுக்கப்பட்ட அத்தியாயங்களில் தமிழ் மொழிபெயர்ப்பை வெளியிடுவதன் மூலம் மேலே குறிப்பிடப்பட்ட அம்சங்களை மிகவும் பரந்து விரிந்த கருத்துப் பரிமாற்றத்துக்குக் கொண்டு செல்வதே எமது எதிர்பார்ப்பாகும். இம் மொழிபெயர்ப்பானது மனித உரிமை செயற்பாட்டாளர்களைப் போன்றே மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என நாம் நம்புகின்றோம். இக்கடின உழைப்பை வெற்றியடையச் செய்வதற்கு ஒத்துழைத்த சகல மொழிபெயர்ப்பாளர்களுக்கும், இணைப்பலுவலர்களுக்கும் நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அறநிலையம்
கொழும்பு.
அக்டோபர் - 2006

I

பொதுவான நோக்கு

*எலிஸபெத் நிஸான்**

1. அறிமுகம்

இவ்வாண்டுக்கான மனித உரிமைகள் தொடர்பான தொகுப்பு 2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமை விடயங்களை மீளாய்வு செய்வதாக அமைகின்றது. இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நிலவிய பகைமைகள், தற்காலிகமாக 2004 ஆம் ஆண்டு முழுவதிலும் ஓய்விற்கு வந்திருந்தபோதிலும், அவ்வாண்டு காலப்பகுதியில் இரு தரப்புகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் முன்னெடுக்கும் வகையில் எதுவித செயன்முறை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இன்று வட கிழக்குப் பகுதிகளில் மனித உரிமை நிலைமைகள் மிகவும் தளம்பல் நிலையிலேயே காணப்படுகின்றன. குறிப்பாக ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்ற சந்தர்ப்பத்திலும், அதனைத் தொடர்ந்து சில மாதங்களின் பின் கேணல் கருணாவின் தலைமையின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளிலிருந்து கிழக்கு பிரிவு பிரிந்த சந்தர்ப்பத்திலும் இது முக்கிய

---

* மனித உரிமைகள் ஆலோசகர்

சான்றாக விளங்கியது. நவம்பர் மாதம் இறுதியளவில் "மாவீரர் தினத்தில்" தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆற்றிய உரையையடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் நிபந்தனைகளின் அடிப்படையில் மீளப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்காவிட்டால் பகைமைகளுக்கு மீண்டும் திரும்பலாமெனும் அச்சுறுத்தலும் காணப்பட்டது. இன்னும் ஆயுதப் போராட்டம் மீண்டும் விரைவில் வெடிக்கலாமெனும் கணிசமான அச்சமும் நிலவியது. ஆயினும் 30,000 மக்களைப் பலிகொண்டும் 4,00,000இற்கும் அதிகமானோரின் வீடுகளைப் பறித்தும் அழிவிற்குக் காரணமாக அமைந்த இலங்கையின் கரையோரங்களைக் கடுமையாகப் பாதித்த இந்து சமுத்திர சுனாமி நிகழ்ந்த டிசம்பர் 26ஆம் நாள் அளவிலும் அத்தகைய நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தென் மற்றும் கிழக்குக் கரையோரங்களில் குடியிருந்த மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். ஆண்டு முடிவின்போது, சுனாமியின் பிரதிபலிப்பே அநேகமாக பல புதிய மனித உரிமைப் பிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது எனும் பிரதிபலனும் தெளிவாகத் தோன்றத் தொடங்கியது. எனினும், அத்தகைய விடயங்கள் மாத்திரமே 2004ஆம் ஆண்டு இறுதியில் சற்று வெளியாகத் தொடங்கின. அத்துடன் அவை தொடர்ந்து வரும் மாதங்களிலும் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்படும். அவற்றை அத்தொகுப்பில் உள்ளடக்க முடியாது.

2. மனித உரிமைகளுக்கான நீதித்துறைப் பாதுகாப்பு

பொலிஸ் ஆணைக்குழு, பொலிஸ் திணைக்களம் மற்றும் ஏனைய உரிய சபைகள் எடுக்க வேண்டுமெனும் பயனுள்ள தடுப்பு நடவடிக்கை தொடர்பில் உயர் நீதிமன்றம் பல பணிப்புரைகளை வழங்கியிருக்கின்றபோதிலும் இலங்கையில் தொடர்ந்திருக்கும் துன்புறுத்தல் செயல்கள் தணியவில்லை. என்றாலும் சில சமயங்களில் உண்மையிலேயே கிடைக்கவிருக்கும் பரிகாரத்தை பாதிப்புக்குள்ளானவர்கள் அனுபவிக்காத சந்தர்ப்பத்தில் பறிமுதலான நடுத்தீர்ப்புத் தொகைகளும் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் அரசாங்கத்தின் கடப்பாட்டை நிறைவேற்றுகின்ற பொது நிதிப் பயன்பாடும் சில சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளது. கிஸாலி பின்டோ ஜயவர்த்தன, அவருடைய "மனித உரிமைகளுக்கான

நீதித்துறைப் பாதுகாப்பு" எனும் அத்தியாயத்தில் உறுதியாக அவ்வழுத்தத்தை இவ்விடயத்திற்குப் புறம்பாக மாற்றி முன்வைக்கின்றார். "இவ்விடயங்களில் நீதிமன்றங்கள் நடுத்தீர்ப்புத் தொகையை விதிக்க வேண்டுமெனும் நட்டஈட்டளவு தொடர்பிலான சர்ச்சையான விடயத்திற்கப்பால் (ஏதேனும் சம்பவத்திலுள்ள அர்த்தமற்ற விடயம்) நகரும் விவாதங்கள் மிக முக்கிய விடயங்களாக விளங்குவது நல்ல சந்தர்ப்பமாகும்" எனவும் அவர் கருதுகின்றார். பல சம்பவங்களில் நீதிமன்றம், தனியாள் அலுவலர்கள் துன்புறுத்தல் செயல்களுக்குப் பொறுப்பாகவிருந்துள்ளனர் என இனம் கண்டுள்ளதுடன் அதிகாரிகள் நிச்சயம் அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் பணித்துள்ளது. என்றாலும் தண்டனை வழங்கப்படுவதாக இல்லை. *"தனிப்பட்டரீதியாக பொலிஸ் அதிகாரிகள் (கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட) துன்புறுத்தல் செயல்களுக்குப் பொறுப்புடையவர்களாக விளங்குகின்றனர் என இனம் காணப்பட்டுள்ளபோதிலும் அவர்களுக்கு எதிராக உள்ளகத் திணைக்கள நடவடிக்கை எடுக்கப்பட்டதையோ அல்லது நீதிமன்றங்களில் வெற்றிகரமாக வழக்குத் தொடரப்பட்டதையோ ஏன் நாம் காணவில்லை"* என ஜயவர்த்தன கேள்வி எழுப்புகின்றார். அத்தகைய நடவடிக்கை அல்லது வழக்குத் தொடரலின் அச்சுறுத்தல், கணிப்பிட முடியாததாகவிருக்கும். நீதிமன்றத்தின் பணிப்புரைகள் செல்லத்தகாததும் நியதியின் ஆழ்ந்த அர்த்தத்தில் பயனற்றதாகவும் இருந்துள்ளன.

பொலிஸ் கட்டுக்காப்பிலுள்ள துன்புறுத்தலுக்காளான நபர் ஒருவர் சம்பவத்தை மறுக்கும் போது முக்கிய சட்டநெறி விடயங்களும் எழுகின்றன. இலங்கையில் இதுவரை அடிப்படை உரிமை மீறல்கள் சம்பவமொன்றில், இறந்தவர் சார்பில் அவரின் உறவினர்கள் சட்டபூர்வமான அந்தஸ்தைக் கொண்டிருக்க முடியுமா? எனும் சர்ச்சைக்குரிய இவ்விடயம் தொடர்பான முக்கிய சட்டநெறி வளர்ச்சிகளையும் ஜயவர்த்தன ஆராய்கின்றார். அதனால் துன்புறுத்தலின் பயனாக மரணமொன்று சம்பவித்துள்ளது எனும் வேளையில் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடர அத்தகையதொரு நபரின் மரபுரிமைரீதியான உரித்தாளிகள் உரித்தைக் கொண்டுள்ளனர் என்பது தெளிவு. இன்று பாதிப்புக்குள்ளானவர்களின் உரிமைகள் மீறலானது பரிகாரம் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டுமெனும் அங்கீகாரத்தின் பேரில்

இது அமைகின்றது. இதுவே அவர்களின் உறவினர்களுக்கான பயனுள்ள உரிமை மாறல்களில் காணப்படும் அணுகு முறையாகவும் அமைகின்றது. எனினும், ஜயவர்த்தன இச்சட்ட நியாயப்படுத்தல் நிரலை எவ்வாறு மேலும் விளங்கப்படுத்தலாம் என்பதை நிரூபித்துக் காட்டும்முகமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் நியாயப்படுத்தல் நடவடிக்கைக்கு கவனத்தை ஈர்க்கின்றார். *"பாதிப்புக்குள்ளானவர்களின் உரிமைகள் மாத்திரமன்றி அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் உரிமைகளும், பாதிப்புக்குள்ளானவர்களுக்கு நியாயமென வழங்கும் பரிகாரத்தின் விளைவாக துன்புறுத்தல் அல்லது கொடுமைப்படுத்தல், மனிதாபிமானமற்ற அல்லது அவமதிக்கின்ற நடவடிக்கைகளுக்கு ஆளாக்கப்படலாகாது எனும் நேரடி வன்முறைச்செயல் அடங்கலாக 126(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பெறும் 11ஆம் உறுப்புரையின் விரிவான விளக்கமொன்றில் இது சம்பந்தப்படுவதாக அமைகின்றது".*

பேச்சுச் சுதந்திரம் சம்பந்தமான விடயங்களிலிருந்து எழுகின்றதும் சட்டநெறிப் பிரச்சினைகளாக மாறுகின்றதுமான அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வினைப் படம் பிடிக்க தொலைக்காட்சிச் செய்தி பதிப்பாசிரியருக்கும், அவரது பணியாட்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்ட விடயம் ஜனாதிபதித்துவப் பாதிப்பின்மை நடவடிக்கையின் வரையறைகளிலான ஒரு தீர்மானத்திற்கு இட்டுச் சென்றது. நிகழ்ந்த அனுமதி மறுப்பு நடவடிக்கையானது "வெளிப்படையான பாரபட்சம்" என நீதிமன்றம் கண்டது. என்றாலும் சட்ட முறையற்ற அரசியலமைப்புக்கு முரணான செயல் ஒன்று என நியாயப்படுத்த ஜனாதிபதித்துவப் பணிப்பொன்றின் எதிர்வாதப் பலத்தைக்கீழ் அதிகாரி ஒருவர் பயன்படுத்த முடியாது எனும் வாதத்தையும் வலியுறுத்திச் சென்றது.

தென் கடுகதி வீதிக்குரிய காணி கொள்ளல் சம்பந்தமான முக்கியவொரு விடயத்தில் சமத்துவத்திற்கான உரிமையைப் பொறுத்து அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமைகளில் உயர் நீதிமன்ற எதிர்வாதம் மேலும் ஆராயப்படுகின்றது. இங்கு நீதிமன்றத் தீர்ப்பில் "பொது மக்கள் நம்பிக்கை" கோட்பாடு வலிமையாக வெளிப்படுத்தப்பட்டது. ஜயவர்த்தன விளக்குவது போன்று, *"பொது அதிகாரிகளுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பூரணமற்ற அல்லது*

பிணிப்பில்லாதவைகளாக விளங்குகின்றன. என்றாலும் அவை பொது மக்களுக்கான நம்பிக்கையிலுள்ளவை எனவும் எந்நோக்கங்களுக்காக அளிக்கப்பட்டுள்ளனவோ அந்நோக்கங்களை நிறைவேற்றவே காணப்படுகின்றன எனவும் இன்னும் அவற்றின் பயன்பாடுகள் அந்நோக்கங்களுக்குரிய குறிப்பு மூலம் சட்டநெறி மீளாய்வுக்கு உட்பட்டதாகவுமுள்ளன எனவும் இது கருதுகின்றது".

ஜயவர்த்தன தனது அத்தியாயத்திலுள்ள கலந்துரையாடலானது, அடிப்படை உரிமை விடயங்களில் உயர் நீதிமன்றத் தீர்மானங்கள் பற்றிய ஆய்வை மாத்திரம் உள்ளடக்கியதாக அமையாது சமய சம்பிரதாயங்களையும், குடியரசின் உத்தியோகபூர்வ சமயமாக பௌத்த சமயத்தை ஆக்கத் தேவைப்படும் ஏனைய விடயங்களையும் தடை செய்கின்ற சட்ட மசோதா ஒன்றின் அரசியலமைப்புத் தன்மை பேரிலான அதன் விளக்கங்களையும் உள்ளடக்கியதாக அமைகின்றது என விவரிக்கின்றார். அடிப்படை உரிமைகளின் பாதுகாப்பு உள்ளகத் தொடர்பும் பேராணைப் பரிகாரங்கள் மனுவும் வலிமையடைந்த சந்தர்ப்பத்தைச் சுட்டிக்காட்டும் பொருட்டு வழக்குச் சாட்சிப் பொருட்களை முன்வைத்து சட்ட உரிமை ஒன்றின் மறுப்பை எதிர்த்து அரசியலமைப்பின் 140ஆம் உறுப்புரையின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்த பேராணை மனுக்களின் வளர்ச்சிகளையும் அவர் ஆராய்கின்றார். மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் பேராணை நியாயாதிக்கத்தில் சாதகமான விளைவுகளைத் தோற்றுவித்துள்ள அரசியலமைப்புரீதியாக அடிப்படை உரிமைகளுக்கு உரிய ஸ்தானத்தையளிக்கின்ற முறையில் சம்பந்தப்படுகின்ற சட்டநெறி அவதானிப்புகள் மூலம் இவ்வளர்ச்சிப் போக்குகள் ஆதரவளிக்கப்பட்டன.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் (ICCPR) இன் விருப்புத் தெரிவு உபசரணையின் பிரகாரம் தனியாள் தொடர்பாடல்களுக்கான பொறுப்பில் ஐ.நா மனித உரிமைகள் குழுவின் தீர்மானங்கள் உள்ளிட்ட விடயமே அத்தியாயத்திற்கான வரவேற்கத்தக்க இறுதிச் சேர்க்கையொன்றாக விளங்குகின்றது. 2004ஆம் ஆண்டில் ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவனுக்கெதிராக மூன்று அவதூறுக் குற்றச்சாட்டுக்களைக் கொண்டுவந்து 1996 மற்றும் 1997ஆம் ஆண்டுகளில் உண்மையிலேயே அவரின் பேச்சுச் சுதந்திரம் மீறப்பட்டிருந்தது.

இக்குற்றச்சாட்டுக்கள் அப்போது பல வருடங்களாக நிறைவு பெறாத நிலைக்குத் தள்ளப்பட்டுக் காணப்பட்டதுடன் அவரின் பேச்சுச் சுதந்திரம் தொடர்பில் இறுக்கமான தாக்கமொன்றையும் கொண்டிருந்தன. சிங்கராசா வழக்கு விடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இரண்டாவது தீர்மானமும் ஏற்கனவே மேலே காணப்பட்ட நபருடைய கீர்த்தி உரிமைகள் விடயத்தில் ஆராயப்பட்டது. அதன்பயனாக, பயங்கரவாதத் தடைச்சட்டம் அதன் சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றுவதாகவிருந்தால், அரசாங்கம் அதைத் திருத்த அல்லது நீக்க வேண்டுமென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நியதி காணப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இத்தீர்மானங்கள், இலங்கை உயர் நீதிமன்றம் ஏற்படுத்தியவற்றிற்கு ஆதரவளிக்கின்றன. இன்னும் அதன் சொந்தத் தீர்மானங்களை அடைவதில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் மீது கவனத்தை ஈர்க்கும் வகையிலும் நீதிமன்றத்தை வலியுறுத்துகின்றது.

3. மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை

சமயம் தொடர்பான இரு சட்ட மசோதாக்களின் அரசியலமைப்புத் தன்மையை நிர்ணயிக்கின்றதும் உயர் நீதிமன்றத்துடன் சம்பந்தப்படுகின்றதுமான மேலே கூறப்பட்ட அம்சங்களுடன் தொடர்புற்ற விடயங்கள் இலங்கையில் காணப்படும் கிறிஸ்தவ ஆலய மதப்பிரசாரச் செயற்பாடுகள் பற்றி சில சமய சமூகங்களுக்குள் அதி அக்கறையான சூழலொன்றைத் தோற்றுவித்து அண்மைய ஆண்டுகளில் அத்தகைய ஆலயங்களின் எண்ணிக்கையில் துரித அதிகரிப்பை ஏற்படுத்தவும் துணைபுரிந்தன. உயர் நீதிமன்றம் இவ்விடயங்கள் மீதான அதன் தீர்மானங்களில் மதச் சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமையை அத்தீர்மானங்கள் எவ்வகையில் வரையறுத்தன என்பதையும் அவ்விடயத்திற்கான பின்னணி என்னவென்பதையும் ஆர்.கே.டபிள்யு குணசேகர அவர்கள் தனது "மத உரிமை" எனும் அத்தியாயத்தில் ஆராய்கின்றார். கிறிஸ்தவ ஆலய மதப் பிரசார நடவடிக்கைகள் சார்பில் பாராளுமன்றத்தில் முன்வைத்த பல கூட்டிணைந்த சட்டமூலங்களின் அரசிலமைப்புத் தன்மையை எதிர்த்து ஒரு வழக்கில் அத்தகையதொரு குழு மூலமான பொருளாதாரச் செயற்பாடு கண்டிப்பாக மதம் சார்ந்ததல்ல என நீதிமன்றம் நியாயப்படுத்தியது.

இன்னும் அது மக்கள் தம் சொந்த மதத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரத்தைக் களங்கப்படுத்தக் கூடிய "ஆசைபுகட்டி ஏமாறச் செய்யும்" ஒரு நடவடிக்கையாக இருக்கலாம் எனவும் மறைமுகமாகச் சுட்டிக் காட்டியது. அதேபோன்று இரு வருடங்களின் பின்னரும் நீதிமன்றம், "பிற நலனுக்காக சமூகப் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தும்" நடவடிக்கையானது சில சமயம் ஒருவர் தான் தேர்ந்தெடுக்கும் மதத்தை அனுட்டிப்பதற்குரிய உரிமையைப் பாதிக்கலாம் எனவும் நியாயப்படுத்தியது. பொருள் ரீதியாக, நன்மைகளை வழங்கி கிறிஸ்தவ மதத்தைப் பிரசாரப்படுத்தும் நடவடிக்கையாலும் பௌத்த மதம் எதிர்காலத்தில் நிலைத்திருக்கும் தன்மைக்கு அச்சுறுத்தலாக அமையலாம் எனும் வாதத்தின் அடிப்படையில் 2003ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கூட்டிணைந்த சட்டமூலம் ஒன்றுக்கான எதிர்ப்புக் காணப்பட்டது. இது தொடர்பில், நீதிமன்றம் ஒரு மதத்தைப் பிரசாரப்படுத்தும் உரிமையானது ஒரு மதத்தைப் பரப்பும் நடவடிக்கை அல்ல என நியாயப்படுதியது. குணசேகர வலியுறுத்துகின்ற ஒரு தீர்மானம் "உறுப்புரை 14(1)(உ)இல் காணப்படும் உரிமைகளுக்கான 9 மற்றும் 10ஆம் உறுப்புரைகளிலுள்ள மதச் சுதந்திரத்தின் நோக்கத்தைத் தவறான விதத்தில் ஒழித்துள்ளது".

கிறிஸ்தவ ஆலயங்களின் (Evangehical churches) மதப் பிரசார நடவடிக்கைகள் தொடர்ச்சியாக வளர்ந்து வருவதையடுத்து மதமாற்றத்திற்கு எதிரான சட்டத்தை அமுலாக்க வேண்டும் எனும் அழுத்தமும் அதிகரித்தது. இந்நிலையில், புதியதொரு குற்றத்தைத் திணிக்கின்ற "கட்டாய மதமாற்றலைத் தடுக்கும்" உரித்துடைய தனியாள் சட்டமூலம் ஒன்றை அறிமுகப்படுத்தியவர் ஒரு பௌத்த பிக்கு ஆவார். இச்சட்டமூலத்தின் அரசியலமைப்புத் தன்மைக்கு 21 மனுதாரர்கள் சவாலாக நின்று அதற்கு எதிராக ஆதரவளித்தனர். சட்டமூலத்தின் பல்வகை வாசகங்கள் தொடர்பிலான நீதிமன்றத்தின் நியாயப்படுத்தலை குணசேகர அவர்கள் ஆராய்ந்து இறுதியில், "ஜெயித்தவர் அல்லது ஜெயிக்காதவர் என எவரும் கிடையாது. தீர்மானத்தின் மூலம் இரு தரப்புக்களுக்கும் ஏதாவது நியாயம் கிட்டியது. இன்னும் அத்தீர்மானமே மதமாற்றத்திற்கு எதிரான சட்டத்திற்கான தடைகளையும் ஏற்படுத்தியது" எனும் முடிவிற்கு வருகின்றார். அத்தீர்மானத்திலிருந்து எழும் பல்வகை விளக்கப் பிரச்சினைகளை ஆராய்ந்து, குணசேகர அவர்கள் "*மதச் சுதந்திரத்தின் நோக்கத்தில் தெளிவான ஒரு விளக்கத்தை வழங்க*

அத்தீர்மானம் தவறிவிடுகின்றது. மத நம்பிக்கைக்கான உரிமையும் மதம் ஒன்றைப் பின்பற்றுவதற்கான உரிமையும் நிபந்தனையற்றனவாக இருக்கலாம். ஆனாலும் ஒரு மதத்தைப் பரப்புவதற்கான உரிமையின்மீது எந்தளவு வரையறைகளை விதிக்கலாம் எனும் பிரச்சினையும் இருந்து வருகின்றது" என வாதிடுகின்றார். இந்த விடயம், இன்றுவரை தீர்வுகாணப்படாமலேயே தொடர்ந்திருந்து வருகின்றது.

4. வாக்களிப்பதற்கான உரிமை

வட - கிழக்குப் பகுதியில் குறிப்பிடத்தக்க விதிவிலக்கான சம்பவங்களைத் தவிர அதிகமான பாகங்களில் நியாயமான தேர்தல் பிரசாரமாக அமைந்தது எனக் கருத்தப்பட்ட 2004 ஏப்பிரல் மாதம் 02ஆந் திகதிய பாராளுமன்றத் தேர்தலானது, ஜனாதிபதி குமாரதுங்க அவர்களின் தலைமையின் கீழ் ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் ஒரு பிணைப்பை ஏற்படுத்தியது. வன்முறைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் கொலைகள் என்பவற்றால் வட-கிழக்குப் பகுதிகளில் தேர்தல் நடவடிக்கைகள் களங்கப்படுத்தப்பட்டன. குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவு வழங்கும் தமிழ் தேசியக் கூட்டணிக்கு எதிராகச் செயற்படும் கட்சிகளின் ஆதரவாளர்கள் மற்றும் அபேட்சகர்களே இவ்வாறு வன்முறைக்குட்படுத்தப்பட்ட தரப்புகளாவர். அன்று வட-கிழக்குப் பகுதிகளில் தமிழ் தேசியக் கூட்டணி அதிகப் பெரும்பான்மை ஆசனங்களை வென்றது. இத்தொகுப்பிலுள்ள பந்தியில் காணப்படும் "வாக்களிக்கும் உரிமை" எனும் தலைப்பில் அசங்க வெலிகல வட-கிழக்கில் தேர்தல்களை நடாத்துதல் தொடர்பில் பின்வரும் முக்கிய கருத்தை முன்வைக்கின்றார். *"இங்கு குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் தமிழீழ விடுதலைப் புலிகள், ஆதரவு வழங்கும் தமிழ் தேசியக் கூட்டணிக்கு எதிராக விளங்கும் கட்சிகள் மற்றும் அபேட்சகர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களும், தாக்குதல்களுமே அதிகமாகக் காணப்படுகின்றன என்பதாகும். தமிழீழ விடுதலைப் புலிகள், வட-கிழக்குப் பகுதிகளிலும் இன்னும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் வெளிப்படையான அரசியல் பலத்தை அனுபவித்து வருகின்றனர். வட-கிழக்கு நிர்வாகத்தில் நிறுவனரீதியான பிரகடனப்படுத்தப்பட்ட பங்களிப்பு ஒன்றுக்கான விருப்பை தமிழீழ விடுதலைப் புலிகள்*

வெளிப்படுத்தினர் எனவும் இன்னும் அதன் நிகழ்நிலை அதிகாரம் அநேகமாக அப்பிராந்தியம் எங்கும் அரசாங்கம் சாராத அரசியல் கர்த்தாவொன்றாக பரந்து விளங்கினர் எனவும் கருதுவோமாயின் அது அதிகாரத்தின் கீழுள்ள பகுதிகளில் மாத்திரம் சுதந்திரமானதும், நியாயமானதுமான ஒரு பிரசாரத்திற்கான நிபந்தனைகளும் தேர்தல் சட்டமுறை நிலையும் பிரச்சினையிலேயே அமைந்திருக்க வேண்டும் எனும் கடுமையான அச்சத்திற்குக் காரணமாகவிருந்தது எனலாம்".

தேர்தல் பிரசாரத்தின்போது அவதானிக்கப்பட்ட மற்றுமொரு விடயம் தென் பகுதியில் தேர்தலை நடாத்துவதில் தாக்கமொன்று நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதாகும். அவ்விடயமே வெலிகல அவர்களாலும் ஆராயப்படுகின்றது. இன்னும் "அரசியல் கட்சிகள் மற்றும் அரச ஊடகங்களுக்கிடையிலான உண்மையான தொடர்புகளை வெளியிடுகின்றதும், கட்டுப்படுத்துகின்றதுமான அரசாங்கத்தின் ஊடக நிறுவனங்கள்" தேர்தல் பிரசாரங்களின்போது செயற்பட்ட விதமும் அவதானிக்கப்பட்ட அத்தகைய விடயமாகும். ஆட்சிசெய்யும் தரப்புக்கு அரச ஊடகங்களில் காணப்பட்ட வெளிப்படையான பக்கச்சார்பைத் தடுத்து நீதியான சமநிலையான செய்திகளை வழங்குவது சம்பந்தமான வழிகாட்டிகளை தேர்தல் ஆணையாளர் நடைமுறைப்படுத்த முற்பட்டபோது, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் அசாதாரண நடவடிக்கை முயற்சியை மேற்கொண்டது. அதனால் அதன் நடவடிக்கைகள் தோல்வியாக மாறி அடிப்படை உரிமைகள் மனுவொன்றினூடாக உயர் நீதிமன்றத்தில் அது எடுத்துரைக்கப்பட்டது.

இலங்கையில் காணப்படும் தேர்தலுக்கான அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதையும் தேர்தல் சீர்திருத்தம் பற்றிய இன்றைய விவாதத்தின் நிலைமையையும் மீளாய்வு செய்யும் வகையில் "வாக்களிக்கும் உரிமை" எனும் தலைப்பில் அதிகமான பல வாதங்களை வெலிகல முன்வைக்கின்றார். 2001ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்புக்கான 17ஆவது திருத்தத்தின் கீழ் முதலில் நடாத்தப்படவிருந்த தேர்தல்கள் 2004ஆம் ஆண்டில் ஏப்பிரல் மாதத் தேர்தலாகும் என அவர் குறிப்பிடுகின்றார். இன்னும் அதுவே தேர்தல் ஆணையாளர் பதவியை ஒழித்து அதற்குப் பதிலாக சுதந்திரமான, நியாயமான தேர்தல்களைக் கண்காணிக்கும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவொன்றை உருவாக்குவதற்குரிய

ஏற்பாடுகளையும் செய்கின்றது. அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுகள் அடிப்படையில் தேர்தல் ஆணைக்குழுவிற்கான தலைவரை நியமிக்க ஜனாதிபதி மறுப்புத் தெரிவித்தைத் தொடர்ந்து தேர்தல் ஆணைக்குழு உண்மையில் நியமிக்கப்படவில்லை. எனினும் பதிலாக, அதன் அதிகாரங்கள் தனியான தேர்தல் ஆணையாளர் ஒருவரினால் நிறைவேற்றப்பட்டன. அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுகளின் பேரில் செயற்படுவதற்கான ஜனாதிபதியின் மறுப்புத் தெரிவித்தல் நடவடிக்கையானது, அநேகமாக அரசியலமைப்புக்கு முரணாக அமைந்தது என்பதுடன் 17ஆவது திருத்தத்தின் மெய்ப்பொருளை மீறுவதாகவும் அமைகின்றது. *"ஜனாதிபதி, ஒரு கட்சியின் தலைவர் என்ற வகையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் பெற்றவர் என்ற வகையிலும் புதிய சபைக்கான நியமனங்களில் காணப்படும் தனது தற்றுணிபைத் தொடர்ந்தும் பயன்படுத்துவாராயின் உறுப்புரை 41(ஆ)இன் முழுத் திட்டமும் செல்லுபடியற்றதாகிவிடும். 17ஆவது திருத்தப் பத்திரத்தையும் மெய்ப் பொருளையும் மீறியதில், எவ்வாறாயினும், இன்றுவரை தேர்தல் ஆணைக்குழு அரசியலமைப்புக்கு முரண்பட்டதாகவே விளங்குகின்றது".*

வெலிகல அவர்கள் கூறுகின்றவாறு, "இலங்கையில் உள்ளது போன்ற இன அரசியல் உணர்வுகளைப் பண்பாகக் கொண்ட பிரிந்து காணப்படும் சமூகங்களில் ஜனநாயகமும் அதன் செயற்பாடுகளும் மரபுரீதியாகச் சர்ச்சைக்குரிய விடயங்களாகவே விளங்கி வருகின்றன". 1931 தொடக்கம் 1978 வரை அமுலில் இருந்த தேர்தல் முறைக்குப் பின்னுள்ள முறையை பெரும்பான்மை ஆட்சி தேர்ந்தெடுத்தது. அதேவேளை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது (1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது) தாராளத் தன்மையையும் பிரத்தியேகத் தன்மையையும் மேம்படுத்த வேண்டியதாக உள்ளது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை இன்னும் இலங்கையில் வழக்கத்தில் இருந்தாலும் வெலிகல அவர்களின் மீளாய்வில் ஆராயப்பட்டதுபோல் அது அதன் பலவீனத்தைக் கொண்டுள்ளது. முடிவில், இரு வாக்குகளை வாக்காளர்களுக்கு அறிமுகப்படுத்தும் ஜேர்மன் நாட்டு ஜனநாயக அடிப்படையில் சீர்திருத்தம் அமைய வேண்டும் எனும் வாதத்தை வெலிகல முன்வைக்கின்றார். அதாவது ஒரு வாக்கு வாக்காளர்களின் பிரதிநிதிக்கும் மற்றைய வாக்கு அரசியல் கட்சிக்கும் என்றவாறு அமையும். *"தேர்தல் நடவடிக்கையில்*

அரசியல் கட்சி தலைமைத்துவத்தின் பொருத்தமான பாத்திரம் போன்ற விடயங்களைக் கருத்திற் கொள்ளும் முறையொன்றில் கலந்திருக்க வேண்டுமெனும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மற்றும் முதல் முதலிலிருந்த தேர்தல் முறைக்குப் பின்னுள்ள தேர்தல் முறை ஆகியவற்றின் சிறப்பம்சங்களுக்கும், நிலைத்திருக்கும் தன்மைக்கும் இன்னும் அதிகமானவர்களின் பிரதிநிதித்துவத்திற்கு மாத்திரமன்றி சமூகத்தில் உள்ள சகல அக்கறையுடைய தரப்புகளுக்கும் அது ஏற்பாடுகளைச் செய்வதாக அமைகின்றது".

5. வீட்டு வன்முறைத் தடுப்புச்சட்டமூலம் மற்றும் பெண்கள் உரிமைச் சட்டமூலம் என்பவை பற்றிய ஆய்வு

எனும் அத்தியாயமானது இலங்கையிலுள்ள பெண்களின் உரிமைகளுக்கான சட்டமுறைச் சட்டகத்தை வலுவூட்டும் நோக்குடைய இரு சட்டமூலங்களை ஆராய்வதில் ஒருமுகப்பட்டுக் காணப்படுகின்றது. அவையாவன: வீட்டு வன்முறைத் தடுப்புச் சட்டமூலம் மற்றும் பெண்கள் உரிமைகள் சட்டமூலம் என்பனவாகும். சட்டமூலத்தின் ஏற்பாடுகளை விமர்சன ரீதியாக ஆராய்ந்து அதன் குறைகளைக் காணமுன், வீட்டு வன்முறைத் தொடர்பிலான தேசிய மற்றும் சர்வதேச சட்டமுறைச் சட்டகங்களை நூலாசிரியர் அம்பிகா சற்குணநாதன் மீளாய்வு செய்கின்றார். குறிப்பாக இச்சட்டமூலம் பாதுகாப்புக் கட்டளை விடயத்தில் பிரத்தியேகமாக ஒரு முகப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றது. இன்னும் அது வீட்டு வன்முறை விடயத்திற்கான சிறந்ததொரு அணுகுவழியை மேற்கொள்ளவும் தவறுகின்றது. மேலும் அது வீட்டு வன்முறை கடுமையான ஒரு குற்றமெனும் செய்தியை எடுத்துரைக்கவும் தவறுகின்றது. சற்குணநாதன் அவர்களின் ஆய்வில், "சட்டத்தின் பயனையோ அல்லது பெண்கள் எதிர்நோக்கும் சமூகப் பொருளாதார உண்மை நிலைகளையோ கருதாமல் வெறுமனே சர்வதேசக் கடப்பாடுகளை நிறைவேற்ற வரைகின்ற அரசாங்கச் சட்டவாக்கத்தின் முக்கிய ஒரு அம்சமாக இவ்வீட்டு வன்முறைத் தடுப்புச் சட்டம் விளங்குகின்றது". சற்குணநாதன் அவர்களின் பெண்கள் உரிமைகள் தொடர்பான சட்டமூல மீளாய்வானது கணிசமான அளவு மிகச் சாதகமாகவே காணப்படுகின்றது. இச்சட்டமூல வரைவின் மூலம் தேசிய பெண்கள் குழுவை மேலும் அதிகாரங்கள் கொண்ட ஆணைக்குழுவாக மாற்றுவதற்கு

எதிர்பார்க்கப்படுகின்றது. ஆணைக்குழுவின் நோக்கங்கள், உரிய ஒதுக்கீடுகள், உறுப்புரிமை, அதிகாரங்கள் மற்றும் நிதி அலுவல்கள் பற்றி விபரமாக அவர் கூறுவதாவது, இந்தச் சட்டமூலம் "பெண்கள் உரிமைகளை வலுவூட்டுதல் மற்றும் பாதுகாத்தல் சம்பந்தமாக எடுக்கப்படும் நேர்மையான நடவடிக்கை" என்பதாகும். அவர் மேலும் கூறுவதாவது, மகளிர் நிலைமைகள் நீதியின் அடிப்படையில் மட்டும் நிலைத்திருப்பது மட்டுமல்ல என்பதும், வரலாற்று, பொருளாதார, சமூக மற்றும் கலாச்சாரம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு நிறுவன மற்றும் அந்யோன்யமான சமமற்ற தன்மையை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதாகும்".

II

மனித உரிமைகளுக்கான நீதித்துறைப் பாதுகாப்பு

*கிஷாலி பின்டோ ஜயவர்தன**

1. அறிமுகம்

ஒரு சட்டமுறை, சட்டவாட்சியுடன் எந்தளவுக்கு இயைந்து செல்கின்றது என்பதை அளவிடுவதற்கான மிக உறுதியானதும் அதிக சமநிலை கொண்டதுமான அளவுகோல் அதன் நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை பகுப்பாய்வு செய்வது போன்று அதன் சட்டங்களைப் பரிசீலிப்பதுமாகும்.

அதிக மனச்சாட்சி கொண்ட சிறந்த நீதிபதிகள் இறுக்கமான சட்டங்களுடன் அல்லது சட்ட ஏற்பாடுகள் மூலம் நீதித்துறைத் தொழிற்பாட்டின் நோக்கங்களுக்கு மதிப்புக் கொடுத்து அற்புதமான காரியங்களினை நிகழ்த்த முடியும். அதே நேரம் ஒரு பண்பற்ற அல்லது அரசியல் சார்புள்ள நீதிபதி மிகவும் தெளிவான சட்டமொன்றின் முன் அல்லது அரசியலமைப்பு ஏற்பாட்டின் முன் மௌனம் சாதிக்கவும் முடியும். இக்கருத்து 2004ஆம் ஆண்டில்

---

* எல்.எல்.பீ (சிறப்பு), சட்டத்தரணி, பிரதிப் பணிப்பாளர் மற்றும் தலைவர், சட்டப் பிரிவு, சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அற நிலையம், ஆசிரியர் பீடம் (சட்டம்) ஆலோசகர் / பத்தி எழுத்தாளர் சன்டே டைம்ஸ், கொழும்பு.

வழங்கப்பட்ட நீதித்துறைத் தீர்ப்புக்கள் விடயத்தில் மிகவும் பொருத்தமானதாகும். குறிப்பாக நாட்டின் ஜனநாயக நிறுவனங்களின் ஆரோக்கியமான செயற்பாடுகளில் மோசமான தாக்கம் செலுத்திய குடியியல் மற்றும் அரசியல் உரிமை மீறல்கள் விடயத்தில் அது உண்மையாகும்.

இந்த அத்தியாயம் குறித்த வருடத்தில் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களையும் நீதிமன்றத்தின் மீளாய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட முக்கியமான முடிவுகளையும் ஆராய்கின்றது. அது தவிர மேன்முறையீட்டு நீதிமன்றம் அரசியல் அமைப்பின் 140 ஆவது உறுப்புரையின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள ஆணை பிறப்பிக்கும் நியாயாதிக்கத்தைப் பயன்படுத்தி வழங்கிய தீர்ப்புக்களில் சில பிரஜைகளின் உரிமைகளின் மீது பாரிய தாக்கம் செலுத்தியிருப்பதனால் அந்தத் தீர்ப்புக்களையும் இந்த அத்தியாயம் பரிசீலிக்கின்றது. அதனால் இந்நூலில் இந்த தலைப்பு தொடர்பாக எழுதப்பட்ட முன்னைய அத்தியாயங்களில் இருந்து இந்த அத்தியாயம் வேறுபடுகின்றது. அந்த அத்தியாயங்கள் உயர் நீதிமன்றத்தின் அடிப்படை உரிமைகள் தொடர்பான தீர்ப்புக்களையே முழுமையாக ஆராய்ந்தன.[1]

மேலும் இந்த அத்தியாயம் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் (ICCPR) விருப்புக் குறிப்பு வரைவேட்டின் அடிப்படையில் இலங்கையின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட முறையீட்டாளர்களால் தனிப்பட்டமுறையில் சமர்ப்பிக்கப்பட்ட முறையீடுகளுக்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழு வழங்கிய தீர்ப்புக்கள் தொடர்பான ஆய்வுகளையும் கொண்டுள்ளது.

---

[1] இது சம்பந்தமாக பார்க்கவும். இலங்கையில் மனித உரிமைகளுக்கான நீதித்துறைப் பாதுகாப்பு: மனித உரிமை நிலைமை 2004 (கொழும்பு)

2. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் நீதிப் பொறுப்பு

2.1. சித்திரவதையும், கொடுமையும், மனிதாபிமானமற்ற மற்றும் தரக்குறைவான முறையில் நடாத்துதல் என்பவற்றிலிருந்து சுதந்திரம் பெறும் உரிமையுடன் தொடர்புடைய நீதித்துறை நியாயங்கள்.

வாகாச்சிகே தயாரத்ன எதிர் பொலிஸ் மா அதிபரும் ஏனையோரும். [2]

இலங்கையர் ஒருவர் எப்பொழுது ஒரு சிறந்த நல்லிறக்கப் பண்பு மிக்கவராக இருப்பார்? அல்லது அதற்கு மாறாக, அத்தகைய ஒரு தலையீடு ஒன்று ஏற்படச் சாத்தியான இடர் நிலைக்கு வழங்கப்பட்ட அனைத்து செலவினங்களிலும் இது விலத்தப்பட்டதாக இருக்க முடியுமா? விதிகளைவிட வேறு சிலவற்றை எதிர்பார்க்கும் நாகரிகமடைந்த பண்பாடுகளைக் கொண்ட சாதாரண சட்டங்களினால் அவதானிக்கப்படும் சமூகமொன்றில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற வகையில் இந்த வினாக்கள் எமக்கு மிகவும் பொருத்தமாகும்.

இந்த வழக்கில், பாரிய விபத்தொன்றில் சம்பந்தப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டு பொலிஸ் அலுவலர்களால் கொண்டு செல்லப்பட்ட அயலவரொருவரின் மகனின் விடயத்தில் தலையிட்ட ஐம்பத்தைந்து வயதுடைய சிரேஷ்ட சட்டத்தரணியின் சம்பவம் பின்வருமாறு உள்ளது:

காரிலிருந்து வெளியே இழுத்தெடுக்கப்பட்ட அவர் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படும் பொழுது பொலிஸ் அலுவலர் ஒருவரினால் உதைக்கப்பட்டார். அவர் கெஞ்சிக் கேட்டபோது அவர் தாக்கப்படாது பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். மேலும் அவர் மோசமான இழிவான வார்த்தைகளால் ஏசப்பட்டதுடன், அவ்விடத்திற்கு வந்த ஏனைய பொலிஸ் அலுவலர்களாலும்

---

[2] உயர் நீதிமன்றம் (அடிப்படை உரிமைகள்) விண்ணப்ப இல 337 / 2003, உயர் நீதிமன்ற அறிக்கைகள் 17.05.2004. சீ.வீ. விக்னேஸ்வரன், நீதிபதி, நீதிபதி யாப்பா மற்றும் ஜான் டீ சில்வா என்போர் இத்தீர்ப்புடன் இணங்குகின்றனர். இது குறித்த எழுத்தாளரினால் "உரிமைகள் பற்றிய நோக்கு" சன்டே ரைம்ஸ் 30 மே 2004 என்ற ஆய்வின் விரிவாகும்.

தாக்கப்பட்டார். அவர் தப்பியோட முற்பட்டபோது தடுக்கப்பட்டதுடன் சிலர் அவனைச் சுடு என சத்தமிடுவதையும் கேட்டார். அவர் இன்னும் தாக்கப்பட்டிருந்தார். பொலிஸ் ஜீப்பிலிருந்து இறக்கி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். அவர் விடுதலையாகும் வரை அங்கே தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

இங்கு நீதிபதிகளுக்கு முன்கொணரப்பட்ட விடயம், பொலிஸ்மா அதிபரினால் முன்வைக்கப்பட்ட கேள்வி, குறித்த சட்டத்தரணி தாக்கப்பட்டது தொடர்பிலோ அல்லது தடுத்து வைக்கப்பட்டது தொடர்பிலோ கேட்கப்படவில்லை. ஆனால் இந்த விடயத்திற்குப் பொறுப்பான குறித்த பொலிஸ் அலுவலர்களை அடையாளம் காண்பதே முக்கிய விடயமாக இருந்தது. ஆரம்பத்தில் குறித்த சிறுவனை கொண்டு சென்றவர்கள், அல்ல பின்னர் சம்மந்தப்பட்ட பொலிஸ் அலுவலர்கள் அல்லர்.

குற்றம் புரிந்த பொலிஸ் அலுவலர்களை குறிப்பாக அடையாளம் காணமுடியாத போது சித்திரவதை மற்றும் தரம் குறைவாக நடாத்தல் என்பவற்றுக்கு எதிரான சுதந்திரம், சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் மற்றும் பலவந்தமாக கைது செய்தலுடன் தடுத்து வைத்தலுக்கு எதிரான சுதந்திரம் போன்ற முறைப்பாட்டாளரின் உரிமைகளை மீறிய குற்றத்தை அரசு புரிந்துள்ளது. இதற்கு பொறுப்பாக ரூபா 500,000/- தொகையொன்றினை நட்டஈடாக கொடுக்க வேண்டும் எனப்பட்டது.

> குறித்த சம்பவத்தில் பங்கெடுத்த பொலிஸ் அலுவலர்களினால் கூட்டாகச் செய்யப்பட்ட செயற்பாடுகளுக்கும் அதற்குப் பின்னரான பலாத்கார கைது மற்றும் முறைப்பாட்டாளரை பம்பலப்பிட்டி பொலிஸ் நிலயத்திற்குக் கொண்டு சென்றது, அங்கு அவரைத் தடுத்து வைத்தது, என்பவற்றுக்கான பொறுப்பு நியாயமாகவும், நேர்மையாகவும் அரசின் மீதாக இருத்தல் வேண்டும். அரசே அதன் அலுவலர்களின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாகும்.[3]

இங்கே சமமாக நடாத்தப்படும் உரிமை மீறப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இங்கு பொலிஸார் சட்டத்தரணிக்கு (சிறந்த நல்லிறக்கப் பண்பு மிக்கவராகவும் இறக்கமுள்ள அயலவராகவும் செயற்படுபவர்)

[3] பார்க்க - மேற்சொன்ன தீர்ப்பின் 24 ஆம் பக்கம்.

சட்டத்தின் சமமான அந்தஸ்த்தை வழங்கத் தவறிவிட்டனர். அவரது அயலவரின் மகனின் செயற்பாட்டினால் விபத்தில் வாகனத்தினால் மோதுண்டு விழுந்தது பொலிஸ் அலுவலர் என்ற ஊகத்தின் அடிப்படையில் முறைப்பாட்டாளரின் வேண்டுகோளுக்கு அவர்களது செயற்பாடுகளுக்குத் தடையாக இருக்கிறது எனக் காட்டும் வகையில் பொலிஸார் சரியான பதிலை வழங்கவில்லை.

அரசின் மீது விதிக்கப்பட்டுள்ள பொறுப்பும் அதன் வாதப்பிரதி வாதங்களும் - நட்டஈட்டுக் கொடுப்பனவும்.

உரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புடைய குறித்த பொலிஸ் அலுவலர்களை இனம் காணுவது சந்தேகத்திற்கிடமாயினும் அல்லது உறுதியாயினும் அரசின் மீதே பொறுப்புக்கள் விதிக்கப்படுவது மிகப் பழமையானதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான கொள்கையாகும்.[4] பொலிஸ் படையானது அரசின் உறுப்பொன்றாகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு செலுத்துவது அரசின் பொறுப்பேயாகும்.

அத்தகைய வழக்குகளில் நியாயமான தொகையொன்றை நட்டஈடாகச் செலுத்துவதற்கு அரசைப் பொறுப்பாக்கும் நீதித்துறையின் நிலைப்பாடானது, அத்தகைய வழங்கல்களின் மூலமான நிதிச் சுமையைத் தாங்குவது தொடர்பில் இந்நாட்டிலுள்ள வரி செலுத்துநர்களின் நன்மதிப்பு மற்றும் மதிப்பற்ற தன்மை என்ற பொதுமக்கள் கலந்துரையாடலை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயம் *தயாரத்ன* வழக்கில் நீதி மன்றத்தின் மனநிலையை வெளிப்படையாகக் கட்டுப்படுத்தியது. தனிப்பட்ட பொலிஸ் அலுவலர்களால் உரிமைகள் மீறப்படுவதற்கு நட்டஈடு வழங்குவதற்கு அரசைப் பணிப்பது "குற்றம் புரிந்த அலுவலர்கள் தண்டிக்கப்படாமல் விடப்படும்" அதேவேளை அரசாங்கப் பணம் வீணாகச் செலவிடப்படுகின்றது.[5]

---

4 அமல் சுதத் சில்வா எதிர் கொடித்துவக்கு, பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் ஏனையவர்கள். (1987)

5 மேற்சொன்ன 2ஐப் பார்க்க, வழக்குத் தீர்ப்பின் 24ஆம் பக்கம். தனிப்பட்ட பொலிஸ் அலுவலர்கள் குற்றச் சாட்டை முன்வைக்கும் விண்ணப்பதாரியின் மணமொவ்வாத தன்மையை நீதிமன்றம் சுட்டிக்காட்டுகின்றது. "காரணம் அவருக்குத் தெரியும் என்ற வகையில்"

இரந்தக மற்றும் ஏனையவர்கள் எதிர் ஹல்வெல, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி - ஹக்மன பொலிஸ் நிலையம்,[6] என்ற வழக்கைப் போன்று இன்னும் சில சந்தர்ப்பங்களில், மனுதாரர்கள் சிறையில் இருக்கும் பொழுது தாக்கப்பட்டது வைத்திய அறிக்கைகள் மூலம் நிரூபிக்கப்பட்டது. இருந்த பொழுதிலும் நீதிமன்றம் உயர் பெறுமதி வழங்குவதையிட்டும் வாபஸ் பெற்றுக்கொண்டது. தாக்குதலுக்குப் பொறுப்பான குறித்த சிறைச்சாலை அதிகாரிகள் அடையாளம் காணப்படாத போதிலும் இரண்டு மனுதாரர்களில் ஒவ்வொருவருக்கும் 25,000 ரூபா தொகையொன்று நட்டஈடாகக் கொடுப்பதற்கான பொறுப்பில் இருந்து அரசு நிறுத்திவைக்கப்பட்டது.

இதனை இன்னுமொரு வகையில் நோக்கின், உரிமைகள் மீறலுக்கு பொறுப்பான குறித்த பொலிஸ் அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டால் அவர்கள் தாமே நட்டஈட்டினைச் செலுத்துவதற்கு கட்டளையிடப்படுவார்கள். *சில்வா எதிர் இத்தமல்கொட*[7] வழக்கில் உறவறுப்புக்கு குற்றம் சாட்டப்பட்ட இராணுவ வீரர் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு சிறைக்காவலில் இருக்கும் போது இறந்து போனார். அவரது மரணத்தின் பின் அவரது விதவை மனைவியும் அவரது பராயம் அடையாத பிள்ளைகளும் நட்டஈடு பெறுவதற்கு உரித்துடையவர்கள் என்ற வகையில் அவர்களுக்கான நிவாரணத்தை நீதிமன்றம் வழங்கியது. ரூபா 700,000/- தொகையொன்றினைச் செலுத்துவதற்கு அரசு பணிக்கப்பட்டதுடன் இரண்டு பொலிஸ் அலுவலர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் ரூபா 50,000/- இனைச் செலுத்த கட்டளையிடப்பட்டது.

---

[6] (2004) 1 இசஅ 268. அத்துடன் *அதிகாரி மற்றும் அதிகாரி எதிர் அமரசிங்க மற்றும் ஏனையவர்கள்,* உநீ (அஉ) விண்ணப்ப இல. 251/2002. உநீ அறிக்கை 14.02.2003 மற்றும் சட்டத்தரணி ஒருவரைத் தாக்கியதில் சம்மந்தப்பட்ட பொலிஸ் அலுவலலொருவருக்கு எதிராக ரூபா 20,000/- நட்டஈட்டுக் கட்டளை வழங்கப்பட்டதுடன் வழக்குச் செலவான ரூபா 5000/- இனை அரசாங்கம் செலுத்த வேண்டும் என்ற அண்மையில் தீர்க்கப்பட்ட வழக்கு.

[7] நீதிபதி மார்க் பர்ணான்டோவின் தீர்ப்பு (2003) 02 இசஅ 63. இந்த வழக்கு தொடர்பாக பார்க்க: "இலங்கையில் மனித உரிமைகளுக்கான நீதித்துறைப் பாதுகாப்பு" மனித உரிமைகள் அந்தஸ்து 2004 (கொழும்பு - சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அறநிலையம். 2004) மற்றும் இத்தீர்ப்பினைப் பின்பற்றி அன்மைக்கால நீதித்துறை அபிவிருத்திகள் கீழ்வரும் பந்திகளில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

வேவலகே ராணி பெர்னாண்டோ[8] வழக்கில் பொலிஸாருக்கு மேலதிகமாக சிறைச்சாலை அலுவலர்களினாலும் அவர் தாக்கப்பட்டதினாலேயே மரணம் இடம் பெற்றிருந்தது. அரசு ரூபா 925,000/- செலுத்த வேண்டும் என்று பணிக்கப்பட்ட அதேவேளை மூன்று சிறைச்சாலை அலுவலர்களில் ஒவ்வொருவருக்கும் ரூபா 25,000/- என்ற வகையில் ஒரு மில்லியன் ரூபா செலுத்தப் பணிக்கப்பட்டனர். இறந்தவர் மூன்று பராயமடையாத பிள்ளைகளின் தந்தையாக இருந்தார் என்பதைக் கருத்திற்கொண்ட நீதிமன்றம் நட்டஈடு மற்றும் வழக்குச் செலவுக்காக நிலையான தொகையொன்றினை வழங்கத் தீர்மானித்தது. அவர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்த காலத்தில் அவர் நடத்தப்பட்ட விதத்தை "கொடூரமான படமொன்று வரையப்படடிருந்துடன் கைதி மோசமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டார். இரும்புக் கதவொன்றிலே கட்டி அவரது உயிர் பிரியும் வரை தனிமையாக விடப்பட்டார்" என்பதுவும் இத் தீர்ப்பிற்குப் பங்களித்த காரணியாகும்.

இந்த வழக்குகளை ஒருவர் மதிப்பீடு செய்தால், நீதிமன்றம் சன்மானம் வழங்கும் வகையில் அதி உயர் சன்மானங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை மாறாக சட்டத்தைச் செயற்படுத்தும் அலுவலர்கள் மற்றும் / அல்லது அந்த நேரத்தில் அரசில் பணியாற்றும் அலுவலர்களின் காட்டுமிராண்டித்தனமான நடத்தைகளே இங்கு கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்ள முடியும். ஜெரால்ட் பெரேரா வழக்கின் சம்பவத்தை எடுத்துக் கொண்டால், ஒரு சாதாரண ஊழியர், பிரபல்யமான குற்றவாளியான "ஜெராட்" என பிழையாக நம்பப்பட்டு தவறுதலாக கைது செய்யப்பட்டார். அவரது சிறுநீரகம் மோசமாகப் பாதிக்கப்படுமளவு தாக்கப்பட்டார். இங்கும் கூட, நீதிமன்றம் நட்டஈடாகவும் வழக்குச் செலவுக்காகவும் ரூபா 800,000/- இணை வழங்கப்பணித்து 11, 13(1) மற்றும் 13(2)ஆம் உறுப்புரைகளின் கீழ் மனுதாரரின் உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளதனால் இத்தொகையை உரிமை மீறல்களுக்குப் பொறுப்பாக காணப்பட்ட பொலிஸ் அலுவலர்களும் அரசும் செலுத்த வேண்டும் எனப்பட்டது.[9] அத்துடன்,

---

[8] உநீ (அஉ) விண்ணப்ப இல. 700/2002, உநீ அறிக்கைகள் 26.07.2004. கலாநிதி நீதிபதி ஷிரானி பண்டாரநாயக்க, நீதிபதிகளான ஜான் டி சில்வா மற்றும் நிஹால் ஜயசிங்க என்பவர்களின் உடன்பாட்டுடன் வழங்கிய தீர்ப்பு.

[9] சன்ஜீவ எதிர் சுரவீர (2003) 1 இசஅ 317, நீதிபதிகளான எதுசூரிய மற்றும் விக்னேஸ்வரனின் உடன்பாட்டுடன் நீதிபதி மார்க் பர்ணான்டோவின் தீர்ப்பு.

வைத்திய செலவுகளை அரசாங்கம் மீளளிப்புச் செய்யவேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கைக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியதுடன் கடுமையான சித்திரவதையினால் அவர் பாதிக்கப்பட்டு அரச வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றிருந்த போதும் அவர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதையும் உள்ளடக்கியதாக வைத்திய செலவை வழங்க வேண்டும் எனப்பட்டது.

அதேநேரம், அவரது தொடர் தேர்ச்சியான சுகாதார பிரச்சினைகளைப் போக்குவதற்கும் அவரது மனோரீதியான உளைச்சலை இல்லாததாக்கவும் இவ்வளவு தொகை பணம் கொடுத்தும் போதுமா என்ற வினா எழுந்தது. எனினும், இந்த வினாவிற்கு பதில் வழங்கும் வகையில் 2004 நவம்பர் 21 ஆம் திகதி பட்டப் பகலில் ஜெராால்ட் பெரேரா சுடப்பட்டு அதன் பின்னர் வைத்தியசாலையில் மரணித்தார். இதற்கு சில தினங்களுக்கு முன்னர் சித்திரவதைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தொடரப்பட்ட மேல் நீதிமன்ற வழக்கில் அவர் சாட்சியமளித்திருந்தார். விசாரணைகளின் போது சித்திரவதைக்குப் பொறுப்பான சில பொலிஸ் அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டனர். அவரது மரணத்தின் போது, வைத்திய செலவுக்கான மீளளிப்பில் பெருந்தொகையொன்று இவருக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

இந்த வழக்குகள் அனைத்திலும் பாதிக்கப்பட்டவர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் கிளர்ச்சியூட்டுகின்ற துன்பந்தரும் கதைகளே அடிக்கடி குறிப்பிடப்படுவதை காண்கின்றோம். அவர்கள் அனுபவித்துள்ள வேதனைகளுக்கு எவ்வளவு பெருந்தொகையை நட்டஈடாக வழங்கினாலும் ஈடு செய்ய முடியாது. இந்த வழக்குகளில் நீதிமன்றங்களினால் வழங்கப்பட விருக்கும் நட்டஈட்டினளவு தொடர்பான வினாவிலிருந்து (எந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது மோசமான வினா) கலந்துரையாடல்கள் அதிகளவில் நகர்த்தப்பட்டு தண்டனையிலிருந்து விலக்கீட்டுரிமை விடயமாக அதிகளவிலான விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

இந்த அத்தியாயத்தின் பின் பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள *சாஹவுல் ஹமீத் முஹம்மது நிலாம் மற்றும் ஏனையவர்கள் எதிர் உடுகம்பொல மற்றும் ஏனையவர்கள்* வழக்கில்[10] ஆய்வுக்காலப் பகுதியின் போது மரணத்தைக் கண்டறிய முடியாத அல்லது அந்த விடயத்திற்காக, உடல்ரீதியாக தாக்கப்பட்டதற்கு பெருந் தொகையான நட்டஈடொன்று வழங்கப்பட்டிருக்கும் சம்பவம் குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு மனுதாரருக்கும் ரூபா 750,000/- தொகையொன்றினைச் செலுத்துமாறு அரசு பணிக்கப்பட்டதுடன் முதலாவது பிரதிவாதியான பொலிஸ் அத்தியட்சகர் உரிமைகள் மீறப்பட்டதாக காணப்பட்ட ஒவ்வொரு மனுதாரருக்கும் ரூபா 50,000/- தொகையொன்றினை தனிப்பட்ட முறையில் செலுத்த வேண்டும் எனப் பணிக்கப்பட்டார். மனுதாரர்கள் இராணுவ புலனாய்வுக் கட்டளையிடும் அலுவலர்களாக இருந்தனர்.

அதிகாரத்திலுள்ள ஆட்களின் பதில் ஆட்பொறுப்பு

சில்வா எதிர் இத்தமல்கொட வழக்கில் முதலாவது பிரதிவாதியான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மனுதாரரின் மீது மேற்கொள்ளப்பட்ட சித்திரவதை மற்றும் கொடூரச் செயல்களில் பங்கேற்றமை, அவற்றுக்கு அதிகாரமளித்தமை, அனுசரணை வழங்கியமை, அவற்றை அறிந்திருந்தமை என்பதற்காக பொறுப்புச் சாட்டப்படவோ அல்லது சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ இல்லை. மாறாக மனுதாரர் சட்டத்தில் கூறப்பட்ட விதத்தில் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்தவில்லை என்பதற்காகவே சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் அவர் தனது கீழ்நிலை உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கத் தவறியதாக குற்றம் சுமத்தப்பட்டார். அவர் அவ்வாறு கண்காணித்திருப்பின் மனுதாரர் மோசமாக நடாத்தப்பட்ட சம்பவத்தைத் தவிர்த்திருக்க முடியும். அத்துடன் பிழையான நடத்தைகளை விசாரித்திருக்கவும் முடியும்.

---

[10] உ நீ (அ உ) விண்ணப்ப இலக்கங்கள் 68/2002, 73/2002, 74/2002, 75/2002, 76/2002 உ நீ அறிக்கைகள் 29.01.2004, பிரதம நீதியரசர் சரத் நந்த சில்வா மற்றும் நீதிபதி பீ எதுகூரிய என்பவர்களின் இணக்கப்பாட்டுடன் நீதிபதி (கலாநிதி) ஷிரானி பண்டார நாயக்க அவர்களின் தீர்ப்பு.

மேலும் *வேவெலகே ராணி பெர்ணான்டோ* வழக்கில் 3ஆம், 4ஆம், 5ஆம் பிரதிவாதிகளாக முறையே நீர்கொழும்பு சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி, நீர்கொழும்பு சிறைச்சாலையின் பிரதம சிறைக்காவலர், நீர்கொழும்பு சிறைச்சாலையின் சிறைச்சாலைகள் அத்தியட்சகர் ஆகியோர் இருந்தனர். இந்த மூவரும் தமது கடமையில் கவனக்குறைவாக இருந்தமை (மரணித்தவரைத் தாக்குவதில் அவர்கள் நேரடியாகப் பங்கு கொண்டதற்கு சாட்சிகள் இல்லாத போதும்) நீதி முறைத்தேடலின் போது கண்டறியப்பட்டன.

எரக்கந்த எதிர் ஹல்வெல, ஹக்மனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வழக்கின் சம்பவங்களின்படி சான்றளிக்கப்பட்டவாறு குற்ற முறையான செயற்பாட்டின்மைக்கு பொறுப்பினை விதிப்பது தொடர்பில் ஒவ்வொரு வழக்கிலும் இந்த விடயங்கள் விளக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். இதில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்ட சிரேஷ்ட சிறைச்சாலை அலுவலர்களின் பொறுப்பினை நீதிமன்றம் சுட்டிக்காட்டவில்லை. மாற்றமாக மருத்துவச் சான்றுகளின்படி மனுதாரர்களுக்கு இழைக்கப்பட்ட சித்திரவதை சிறைச்சாலையில் வைத்தே இடம்பெற்றுள்ளது எனச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கு பதிலாக விதிப்புப் பொறுப்பினை முழுவதுமாக நீதிமன்றம் அரசின் மீதே விதித்தது.

இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வருடத்தில் ஒரு ரிசேர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள் சட்ட விரோதமான முறையில் நடந்து கொண்டதாகவும் மனுதாரர் குறித்த பிரதேசத்தில் நடைபெற்ற மஹாபொல கண்காட்சியைப் பார்க்கச் சென்றபோது அவரைத் தாக்கியதாகவும் நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்ட மனு தொடர்பான தீர்ப்பில்[11] குறித்த நிகழ்வு நடந்த நேரத்தில் கண்காட்சிக்கு சமூகமளித்திருந்தும் அந்தத் தாக்குதலைத் தடுத்து நிறுத்த எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமைக்கு கொகரல்ல பொலிஸ்

---

[11] *ஏ.எம் விஜித அலகியவண்ணவ எதிர் எல்பீஜீ லலித் பிரேமா, ரிசேவ் மொலிஸ் கான்ஸ்டபில் மற்றும் ஏனையவர்கள்.* உ நீ (அ உ) விண்ணப்ப இல 433/2003, உ நீ அறிக்கை. 30.11.2004 நீதிபதிகளான எஸ் யாப்பா மற்றும் ராதா பர்ணான்டோ ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் பிரதம நீதிபதி சரத் நந்த சில்வா அவர்களின் தீர்ப்பு. பதிலாட் பொறுப்பு விதிக்க முடியுமான சந்தர்ப்பத்தின் அகல் விரிவான இணக்கப்பாடு ஒன்றிற்காக. பார்க்க: *பண்டா எதிர் கஜநாயக்க* (2002) 1 இ.ச.அ 365 மற்றும் *தேசப்பிரிய எதிர் வீரகோன்,* உநீ விண்ணப்ப இல 42/2002, உ நீ அறிக்கைகள் 08.08.2003

நிலைய பொறுப்பதிகாரியை நீதிபதிகள் கண்டித்தனர். மேலும் மனுதாரர் தாக்கப்பட்டது தொடர்பாக விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்காமைக்காகவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனிப்பட்ட முறையில் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும், பொலிஸ் திணைக்களமும் எதிர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நீதிமன்றத்தின் கட்டளை.

> பொலிசாரின் பொறுப்பில் இருக்கும் போது சித்திரவதை செய்யப்பட்டதாகவும், கொடுரமான முறையிலும், மனிதாபிமானமற்ற, கீழ்த்தரமான முறையிலும் நடாத்தப்பட்டதாகவும் செய்யப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை குறைந்தபாடில்லை. (அரசியலமைப்பின்) உறுப்புரை 4(ஈ) அடிப்படை உரிமைகள் மதிக்கப்படவும், பாதுகாக்கப்படவும், முன்னேற்றப்படவும் வேண்டும் என்ற கடமையை விதிக்கின்றது. அது சித்திரவதையில் இருந்து பாதுகாக்கப்படுவதனையும் உள்ளடக்கியதாகும். அந்தக் கடமை அரசாங்கத்தின் அனைத்துத் துறையினருக்கும் பொருத்தமானதாகும். பொலிஸ்மா அதிபர் அதிலிருந்து விதிவிலக்கு கோர முடியாது. குறைந்தது விசேடமாக நியமிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளும் (தேசிய) மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களும் பிரதிநிதிகளும் உள்நாட்டு சமூகத் தலைவர்களும் திடீர் விஜயங்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை அவர் செய்ய முடியும். அவர்களுக்கு தடுப்புக்காவலில் உள்ளவர்களுடன் நேர்காணல்களை மேற்கொள்ளவும் அவர்கள் நடாத்தப்படும் முறை பற்றியும் தடுப்புக்காவல் நிலை பற்றியும் அறிக்கை சமர்ப்பிக்கவும் அதிகாரமளிக்கப்பட வேண்டும்.
>
> உறுப்புரை 11இன் மீறல்களைத் தடுப்பதற்கு வடிவமைக்கப்பட்ட பணிப்புரைகளுக்கு பயன்வலு கொடுப்பதற்கும், ஒழுக்காற்று அல்லது குற்றவியல் நடபடிகளினால் பின்பற்றப்பட வேண்டியிருந்த முறையான புலன்விசாரணையை உறுதிப்படுத்துவதற்கும் நீண்டகாலமாக தவறியமை அங்கீகாரம் மற்றும் அதிகாரம் இல்லாவிட்டாலும் தடைச்சொல்லின்றி உடன்படுதல் மற்றும் மன்னிப்பு என்பவற்றின் அனுமானம் மிகவும் நியாயமானதாக இருக்கலாம்.[12]

[12] மேற்சொன்ன 9ஆம் குறிப்பைப் பார்க்க. நீதிபதி மார்க் பர்ணான்டோவின் அவதானிப்பின் படி.

சில்வா எதிர் இத்தமல்கொட வழக்கிலும் *தயாரத்ன* வழக்கிலும் தவறிழைக்கும் தனிப்பட்ட உத்தியோகத்தர்களை உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்த கண்டிப்பான நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கும், பொலிஸ் திணைக்களத்துக்கும் உத்தரவிட்டது. இந்த நோக்கத்தை நிறைவு செய்வதற்காக இந்தத் தீர்ப்பின் பிரதிகளை பொலிஸ் மா அதிபருக்கும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கும் அனுப்புமாறு உயர் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு உத்தரவிட்டது.

பெருந்தொகையான வழக்குகளில் கடந்த இரு தசாப்தங்களாக இந்த இருவருக்கும் இத்தகைய உத்தரவுகள் பல பிறப்பிக்கப்பட்டன. (சிரேஷ்ட, கனிஷ்ட) பொலிஸ் உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்புக் கூறவேண்டும் என்று தெரியவந்த சந்தர்ப்பங்களில் கூட ஏன் அவர்களுக்கு எதிராக திணைக்களத்தில் உள்ளக நடவடிக்கை எடுக்கப்படவோ அல்லது நீதிமன்றங்களில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவோ இல்லை அத்தகைய நடவடிக்கைகள் அல்லது சட்ட நடிவடிக்கைகள் ஏனையோருக்கு எச்சரிக்கையாக அமைவதனால் ஏற்படும் விளைவுகள் மட்டிட முடியாதவையாகும். உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவுகள் மதிக்கப்படவோ அவற்றின் வாசகங்கள் ஆழமான கருத்தில் பயன்படுத்தப்படவோ இல்லை.

அடிப்படை உரிமை மீறல்களை செய்தவர்களாக அறியப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியாமைக்கு தாபனக் கோவையில் உள்ள இடைவெளிகளே (குறைபாடுகளே) காரணம் என்று சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கூறுகின்றனர். அத்துடன் இந்தத் தடையை எவ்வாறு வெற்றி கொள்ள முடியும் என்று சிவில் சமூகத்துடன் வாதம் புரிகின்றனர்.[13] இந்தச் சட்டக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கும் தவறிழைக்கும் பொலிஸ்

---

13 *சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அற நிலையத்தின் மீள்நோக்கினைப்* பார்க்க. 15 இணைந்த வெயியீடு இலக்கங்கள் 208 மற்றும் 209 (பெப்ரவரி - மார்ச் 2004) இதனையொத்த பணிப்புரைகள், தமது பாதுகாப்பிற்கும் நபர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்ட திணைக்களங்களின் தலைவர்களான அலுவலர்களுக்கு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக *வேவெலகே ராணி பர்னான்டோ* வழக்கில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்ட பணிப்புரையைக் குறிப்பிடலாம். மேற்சொன்ன குறிப்பு 8 ஐப் பார்க்க.

உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொருத்தமான ஒழுக்காற்று தடைகளை அமுலாக்கவும் பொலிஸ் மா அதிபரோ அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவோ ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் ஆரம்பிக்க முன்வரவில்லை. *வேவலகே ராணி பர்ணான்டோ (மரணித்த ஹேவகே லால் என்பவரின் மனைவி) மற்றும் ஏனையோர் எதிர் சீதுவ பொலிஸ் நிலைய சிறுகுற்றப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் ஏனைய எட்டுப் பேர்.*[14]

இந்த வழக்கு உறுப்புரை 11இனை (சித்திரவதை மற்றும் கொடூரமான முறையிலும் மனிதாபிமானமற்ற முறையிலும் கீழ்த்தரமாக நடாத்தப்படுவதில் இருந்து பாதுகாப்பு) மீறியதாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பல முறைப்பாடுகளில் கூறப்பட்டுள்ள பொதுவான ஒரு முறையை உதாரணம் காட்டி விளக்கியது. அந்த முறைப்பாடுகள் பொலிஸார் தனி நபர்களை சிறு திருட்டைக் காரணம் காட்டிக் கைதுசெய்த பின்னர் அரச உத்தியோகத்தர்களின் பொறுப்பில் இருக்கும் போது அவர்கள் மரணித்ததாகக் கூறுகின்றன.

மரணித்தவர் விளக்கமறியலில் இருக்கும் போதே மரணித்துள்ளார். மாறாக பொலிசாரின் தடுப்புக்காவலில் இருக்கும் போது அல்ல. சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகள் அவரது மரணத்துக்கு காரணமாக அமைந்ததா என்று உறுதிப்படுத்துமாறு நீதிமன்றம் கட்டளையிட்டது. அது தொடர்பான விசாரணைகளின் போது சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் நீண்டகாலம் கடுமையாகத் தாக்கியதனால் அவரது மரணம் நிகழ்ந்துள்ளதாகத் தெரியவந்தது. அதனால் அரசாங்கம் ரூபா 925,000/- செலுத்த வேண்டும் என்றும் தாக்குதலுக்குப் பொறுப்பான சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தலா ரூபா 25,000/- வீதம் செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் கட்டளையிட்டது. அத்துடன் பின்வரும் கோட்பாடுகள் நீதி முறைப்படி வலியுறுத்தப்பட்டன.

நீதிமன்றத்தின் முன் தோன்றும் இறந்தவர்களின் வாரிசுகள்

[14] மேற்சொன்ன குறிப்பு 8 ஐப் பார்க்க.

மற்றும் / அல்லது அவர்களின் தங்கி வாழ்பவர்களின் உயிர் வாழும் உரிமை மீறப்பட்டுள்ளதுவா?

மனுதாரர்கள் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாகக் குற்றஞ்சாட்டவில்லை. மாறாக மரணித்தவரின் அடிப்படை உரிமைகளே மீறப்பட்டிருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதனால் அவர்களுக்கு இந்த வழக்கைத் தொடர்வதற்கு சட்டபூர்வமான அந்தஸ்து இல்லை என்று பிரதிவாதிகள் ஆரம்பத்தில் ஆட்சேபனை தெரிவித்தனர். இந்த ஆட்சேபனையை நிராகரித்த நீதிமன்றம் முன்மாதிரியான முற்தீர்ப்பொன்றை[15] மேற்கோள்காட்டி இலங்கை அரசியலமைப்பில் உயிர் வாழ்வதற்கான உரிமையை ஏற்றுக் கொள்ளும் தெளிவான ஏற்பாடுகள் இல்லாத போதும் உறுப்புரை 13(4)இனை தேவையான முறையில் அர்த்தப்படுத்தி ஒருவருக்கு வாழும் உரிமை உள்ளது என்றும் அதனை நீதிமன்ற உத்தரவொன்றின் மூலம் பறிக்க முடியாது என்றும் உறுதிப்படுத்தியது. உறுப்புரை 13(4) பின்வருமாறு கூறுகின்றது: "தகுதிவாய்ந்த நீதிமன்றம் ஒன்றின் உத்தரவின்றி எந்தவொரு நபருக்கும் மரண தண்டனையோ சிறைத் தண்டனையோ வழங்கப்பட முடியாது."

அரசியலைமைப்பின் உறுப்புரை 13(4) உயிர் வாழும் உரிமையை வழங்குவதனால் அத்தகையதொரு உரிமைக்கு பரிகாரம் வழங்காத ஒரு சூழ்நிலை காணப்பட முடியாது. "அத்தகையதொரு நபருடன்" தொடர்புடைய அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டுபவருக்கு தானாக அல்லது ஒரு சட்டத்தரணியூடாக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கும் உரிமையை அரசியலமைப்பின் உறுப்புரை 126(2) வழங்குகின்றது. அரசியலமைப்பின் உறுப்புரை 11இனை மீறுவதன் விளைவாக மரணம் நிகழுமிடத்து சட்டபூர்வமான வாரிசுகள் அல்லது தங்கிவாழ்வோர் உறுப்புரை 13(4)இனையும் உறுப்புரை 126(2)இனையும் சேர்த்து வாசிப்பதன் மூலம் நடவடிக்கை எடுக்க முடியும்.

சில்வா எதிர் இத்தமல்கொட வழக்கிலும், *வேவெலகே ராணி*

[15] *சில்வா எதிர் இத்தமல்கொட* (2003) 1 இரவு 14 வழக்கில் நீதிமன்றம் வழக்கைத் தொடர்வதற்கு அனுமதி வழங்கிய முடிவைப் பார்க்க. (கலாநிதி) நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்காவின் கருத்து. அதேபோல் இவ்வழக்கின் இறுதி முடிவு குறிப்பு 7ஐப் பார்க்க. இங்கு நீதிமன்றம் (நீதிபதி மார்க் பர்ணான்டோ) "ஒரு ஆளின் வாழ்க்கையை மனிதன் ஒருவராக இருப்பதற்கு முன் நிபந்தனையாக இருக்கும் அத்தியவசியமான ஒன்றான வாழ்க்கையை அவரது இணக்கமின்றி அல்லது அவரது விருப்பத்திற்கு மாறாக சட்டமுறையற்றவகையில் இழக்கச் செய்வது நிச்சயமாக மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதாக இருக்கும்" என்றது.

பர்னாண்டோ வழக்கிலும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் மறைந்துள்ள உயிர் வாழும் உரிமையை ஏற்றுக் கொள்வதில் செய்யப்பட்ட நீதித்துறை முன்னேற்றத்தைக் கவனத்தில் எடுத்து அத்தகைய துக்ககரமான உரிமை மீறல்கள் காணப்படும் சூழ் நிலைகளில் நீதித்துறையை விரிவாக்கம் செய்வது பொருத்தமானதாக இருக்கும். அதற்கு உறுப்புரை 11இனை உறுப்புரை 126(2)உடன் சேர்த்து வாசித்து விரிவாகப் பொருள்கோடல் செய்ய வேண்டும். அத்துடன் நேரடியான மீறல் என்பதில் பாதிக்கப்பட்டவரின் உரிமைகள் மட்டுமன்றி அவரது குடும்ப அங்கத்தவர்களின் உரிமைகளும், சித்திரவதைக்கும் கொடூர மனிதாபிமானமற்ற முறையில் கீழ்த்தரமாக நடாத்தலுக்கும் உட்படுத்தப்படக் கூடாது என்பதையும் உள்ளடக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இந்த அணுகுமுறை பாதிக்கப்பட்டவரின் உரிமைகள் மீறப்பட்டதை ஏற்றுக்கொள்வதில் இருந்து அத்தகைய உரிமைகளை அவரது சட்டரீதியான வாரிசுகளும் அல்லது தங்கிவாழ்வோருக்கும் வழங்குவது வரை வேறுபடக் கூடியதாக இருக்க வேண்டும். பின்னையது மேலே ஆராயப்பட்ட இரண்டு வழக்குகளிலும் உதாரணம் காட்டி விளக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவரின் உரிமைகளை மீறுவதனால் குடும்ப உறுப்பினர்களின் உரிமைகள் மீறப்படுகின்றன என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. உதாரணமாக குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் விருப்புக் குறிப்பு வரைவேட்டின் (ICCPR) வாசகங்களுக்கு ஏற்ப அரசுகளுக்கு எதிராக தனிநபர்கள் சமர்ப்பிக்கும் முறைப்பாடுகள் விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு (UNHRC) தனது நியாயாதிக்கத்தைப் பயன்படுத்துவதற்கான அதன் சட்டத்தில் இந்த விடயம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு, குறித்த தன்மைகளைக் கொண்ட காணாமல்போன நிகழ்வுகள் தொடர்பில், காணாமல் போனவர் அனுபவித்த குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயத்தின் (ஒருவரின் சுதந்திரத்துக்கும் பாதுகாப்புமான உரிமை) 10ஆம் (சுதந்திரம் பறிக்கப்பட்ட அனைத்து நபர்களும் மனிதாபிமான முறையிலும் அடிப்படை மனிதப் பண்புகளுக்கு மதிப்பளித்தும் நடாத்தப்படுவதற்கான உரிமை) உறுப்புரை அடங்கலாக அனைத்து உரிமை மீறல்களிலும்

பாதிக்கப்பட்டவர்களாக காணாமல் போனவரின் குடும்பத்தினரும் கருதப்பட வேண்டும் என்று ஏற்றுக்கொண்டுள்ளது.[16]

மிக அண்மையில் இராணுவத்தின் பொறுப்பில் இருந்த தனது மகன் 1990 ஆம் ஆண்டில் காணாமல் போனதாக திருக்கோணமலையைச் சேர்ந்த ஒரு தந்தை செய்த முறைப்பாடு விடயத்தில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கைக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கும் போது பின்வருமாறு கூறியது.

> வெளி உலகுடன் தொடர்பற்ற விதத்தில் நிச்சயமற்ற முறையில் பிடித்து வைத்திருந்ததனால் ஏற்பட்டுள்ள பாதிப்பின் அளவை (ஆணைக்குழு) ஏற்றுக் கொள்கின்றது. பிடிக்கப்பட்டு 15 மாதங்களின் பின்னர் முறைப்பாட்டாளர் தனது மகனை எதேச்சையாக கண்டிருப்பதனையும் கவனத்தில் கொள்கின்றது. இது உடன்படிக்கையின் உறுப்புரை 7இனை மீறியதனால் அவர் பாதிக்கப்பட்டவராகக் கருதப்பட வேண்டும். (சித்திரவதைக்கும் கொடூர மனிதாபிமானமற்ற முறையில் கீழ்த்தரமான முறையில் நடாத்தப்படாமலும் தண்டிக்கப்படாமலும் இருப்பதற்கான உரிமை) மேலும் அவரது மகன் காணாமல் போயிருப்பதனாலும் அவரது நிலை மற்றும் எங்கு இருக்கிறார் என்பது தொடர்பான நிச்சயமற்ற தன்மையினாலும் முறைப்பாட்டாளரின் குடும்பத்துக்கு ஏற்பட்ட துன்பம், மன அழுத்தம் என்பவற்றைக் கவனத்தில் எடுத்து ஆணைக்குழு முறைப்பாட்டாளரும், அவரது மனைவியும், உடன்படிக்கையின் 7ஆவது உறுப்புரை மீறப்பட்டதனால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கருதுகின்றது. அதனால் முறைப்பாட்டாளரின் மகனின் விடயத்திலும், அவரது குடும்பத்தவர் விடயத்திலும் உடன்படிக்கையின் உறுப்புரை 7 மீறப்பட்டிருப்பதாக தனது முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளவற்றின் அடிப்படையில் கூறுவதாகக் கருதுகின்றது.[17]

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு கூறும் இந்தக்

---

16 *குயின்டரஸ் எதிர் உருகுவே* வழக்கு இல: 107/1981 1983 ஜுலை 21இல் சட்ட நோக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

17 *ஜகதீஸ்வரன் சர்மா எதிர் இலங்கை* வழக்கு இல 950/2000 2003 ஜூலை 31இல் சட்ட நோக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஏனைய ஐக்கிய நாடுகள் மனித உரிமைக்கழுவின் இலங்கையுடன் தொடர்கான முடிவுகளை கலந்துரையாடுவதற்காக இவ் அத்தியாயத்தின் 6 ஆம் பிரிவைப் பார்க்க.

காரணம் ஏதேச்சையாகக் காணாமல்போன நிகழ்வொன்றுக்காக கூறப்பட்டதாகும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய காரணங்கள் பாதிக்கப்பட்டவர் மரணிக்கும் துக்ககரமான சித்திரவதைகள் விடயத்தில் ஏன் ஏற்கப்படாமல் அவரது குடும்ப உறுப்பினர்கள் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய முடியாதுள்ளது என்பதற்கும் தர்க்க ரீதியான காரணம் கூறுவது கடினமாகியுள்ளது.

உறுப்புரை 11 மற்றும் உறுப்புரை 13(4) என்பவற்றின் கீழ் உயிர் வாழும் உரிமை அடங்கும் அத்துடன் உறுப்புரை 126 (2) இல் "நபர்" என்ற சொல் "அத்தகைய நபரின் சட்டரீதியான வாரிசுகளையும் அவரில் தங்கி வாழ்வோரையும்" உள்ளடக்கும் என்றும் பரந்த கருத்தில் பொருட்கோடல் செய்யப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறிய காரணத்தை நோக்கும் போது இது மிகவும் பொருத்தமாக அமையும்.[18]

கடும்போக்குள்ள குற்றவாளிகளுக்கு அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள தனிநபர் சுதந்திரம் என்ற உரிமையை விரிவுபடுத்துதல்

வேவெலகே ராணி பெர்னாண்டோ வழக்கில் மரணித்தவர் இரண்டு வாழைப்பழச் சீப்புக்களைத் திருடியதற்காகவே கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் காரணம் கூறினர். இந்தத் திருட்டுக் குற்றச்சாட்டு தனிநபர் சுதந்திரம் என்ற அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரிமையைப் பாதுகாத்தல் என்ற மரணித்தவருக்குச் செய்யப்படவேண்டிய கடமையை விட்டு திசை திருப்பியிருக்கக்கூடாது. என்று நீதிமன்றம் சுட்டிக் காட்டியது. பின்வரும் பொதுக் கொள்கையைச் சுட்டிக்காட்டுகின்றன என்ற வகையில் முன்னைய தீர்ப்புக்கள் குறிப்பிடப்பட்டன.

மனுதாரர் அனுதாபம் காட்டுவதற்குத் தகுதியற்ற

---

[18] *சில்வா எதிர் இத்தமல்கொட* அத்துடன் *வேவெலகே ராணி பர்ணான்டோ* என்ற வழக்குகள் இது தொடர்பானதாகும். குறித்த 14 மற்றும் 15ஐப் பார்க்க. உரிமையொன்று தலையீடு செய்யப்படுதல் தொடர்பாக உறுப்புரை 126 இன் கீழ் விண்ணப்பமொன்றினைச் செய்வதற்கு ஒவ்வொரு ஆளும் உரித்துடையவர் என்ற அரசியலமைப்பின் 17ஆம் உறுப்புரைக்கும் உறுப்புரை 126(2) இற்குமிடையில் இணைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

> கடும்போக்குள்ள குற்றவாளியாக இருக்க முடியும். எனினும் எமது ஜனநாயக அமைப்பில் அரசியலமைப்பு உத்தரவாதங்கள் ஏதாவது கருத்தை அல்லது பெறுமானத்தைக் கொண்டிருக்க வேண்டுமாயின் எமது அரசியலமைப்பில் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புக்கள் அவருக்கு வழங்கப்படுவது அவசியமாகும்.[19]

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பராமரித்தல் என்ற கடமையின் பூரணமற்ற தன்மை

இந்தக் கலந்துரையாடலில் மிக முக்கியமான இன்னொரு பகுதியும் இருக்கின்றது. விளக்கமறியலில் உள்ள கைதிகளை உரிய முறையில் நடாத்துதல் என்பது தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகளை நடாத்தும் முறையில் இருந்து வேறுபட வேண்டுமா என்பதே அந்தக் கேள்வியாகும். தடுத்து வைக்கப்பட்டவர்களின் உரிமைகள் தொடர்பாக இலங்கையின் அரசியல் அமைப்பு தெளிவான ஏற்பாடுகளைக் கூறாவிடினும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 10இல் கைதிகள் பொருத்தமான முறையில் தனியாகக் கவனிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பாகச் சொல்லப்பட்டுள்ளது. சர்வதேச சட்டவியல் இந்தக் கொள்கை தொடர்பில் அவர்களின் கருத்தை ஏற்றுக் கொள்வதில் இரு கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லை.

---

[19] *அமல் சுதத் சில்வா எதிர் கொடிதுவக்கு* (1987) 2 இசஅ 119 இணைப்பார்க்க. அத்துடன் *செந்தில் நாயகம் எதிர் சௌவிரட்ன* (1987) 2 இசஅ. 187 *திசாநாயக்க எதிர் மஹர சிறைச்சாலைகள் அத்தியட்சகர்* (1987) 2 இசஅ 247. *பிரேமலால் டி சில்வா எதிர் பரிசோதகர் றொட்ரிகோ* (1991) 2 இசஅ 307. *பிரியசேனவின் சட்டத்தரணி பெல்லவத்தகே எதிர் வாத்துவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி*. உ.நீ விண்ணப்ப இல. 433/93. உ.நீ அறிக்கைள் 31.08.1994 *சில்வா எதிர் இத்தமல்கொட* குறிப்பு 7ஐப் பார்க்க. மனுதாரரின் மோசமான நடத்தை தொடர்பான குற்றச்சாட்டு அவருக்கெதிராக நடைபெற வேண்டும். இது குற்றமற்ற தன்மை என்பதற்காக மாத்திரமல்ல ஆனால் எதிர்வாதியின் செயற்பாடுகள் மனுதாரரின் வாழ்வுரிமையைத் தடுத்துவைத்த வகையில். அவருக்கெதிரான மோசமான நடத்தைக் குற்றச்சாட்டினைக் குறைப்பதற்கான சந்தர்ப்பத்தை இழந்துவிட்டார் என நீதிமன்றத்தினால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் போது நீதிமன்றம் விளக்கமறியலில் உள்ள கைதிகளின் குற்றம் நிரூபிக்கப்படும் வரை எந்தவொரு நபரும் நிரபராதியாகவே கருதப்படவேண்டும் என்ற கொள்கையைப் பின்பற்றி வித்தியாசமான முறையில் கவனிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 10இனை ஒத்திருக்கவில்லை. எனினும் மரணித்தவரை மிருகத்தனமான முறையில் நடாத்தியது தொடர்பான தனது கண்டனத்துக்கு ஆதரவாக அது சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்திலுள்ள உள்நாட்டுச் சட்டத்தை மட்டுமன்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கருத்துக்களையும் கைதிகளின் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகளினதும் மற்றும் பிரகடனங்களினதும் ஏற்பாடுகளையும் அதிகளவில் ஒத்திருந்தது.[20]

சாவுல் ஹமீத் முஹம்மது நிலாம் மற்றும் ஏனையவர்கள் எதிர் உடுகம்பொல மற்றும் ஏனையவர்கள் என்ற வழக்கில்[21] நீதிபதி (கலாநிதி) ஷிராணி பண்டாரநாயக்க செய்த நீதிமுறைப் பிரகடனம் விசேடமாகக் குறிப்பிடப்பட்டது.

அரசாங்க உத்தியோகத்தர்களான சிறைச்சாலை அதிகாரிகள், கைதிகளைத் தாக்குவது மோசமான நடாத்துதலின் ஒரு பாரதூரமான வடிவமாகவே கருதப்பட வேண்டும். இது குறித்த உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்டவர்களின் பலவீனத்தை தவறாகப் பயன்படுத்தியுள்ளதையே காட்டுகின்றது.[22]

---

20 *தோமஸ் எதிர் ஜமைக்கா கொமினிகேஷன்* இல 266/1989 ஐ நா ம உ குழுவின் நோக்குகள் 1993 நவம்பர் 2. அத்துடன் பொதுக்கூட்டத் தீர்மானம் 43/174, 1988 டிசம்பர் 9 குற்றத்தை தடுத்தல் மற்றும் குற்றவாளிகளை நடாத்துதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் காங்கிரஸ், ஜெனீவா 1955இனால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் 1957 ஜூலை 31இன் 663 இ (XXIV) மற்றும் 19977 மே 13இன் 2076 (LXII) தீர்மானங்களின் படி பொருளாதார மற்றும் சமூகப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டதுமான சிறைக் கைதிகளை நடாத்துவதற்கு நியமித்த ஆகக்குறைந்த விதிமுறைகள்.

21 குறிப்பு 10ஐப் பார்க்க. இவ்வழக்கு அரசியல்ரீதியாக மிகவும் பதற்றமான ஒரு விடயமாக இருந்தது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் அப்போதைய பிரதான அமைச்சர்களின் செயற்பாடுகள் தொடர்பான விடயங்களே சுற்றிவளைப்பில் உற்கிடையாக இருந்தன.

22 குறிப்பு 8ஐப் பார்க்க, தீர்ப்பின் 14 ஆம் பக்கம்.

குறிப்பாக இராணுவத்தின் பாதுகாப்பிடம் எனச் சொல்லப்பட்ட ஒரு வீட்டை பொலிஸ் உத்தியோகத்தர்கள் திடீர்ச் சோதனை செய்தது தொடர்பில் இராணுவத்தின் இரகசிய நடவடிக்கைளுக்கான உத்தியோகத்தர்களுக்கும், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இடையில் ஏற்பட்ட சர்ச்சைக்குரிய நிலைப்பாடு குறித்த தரப்புக்கள் நீதிமன்றத்தின் உதவியை நாடுவதற்குக் காரணமாக அமைந்தது. அக்காலத்தில் "home and home match" என்ற ஆங்கில வாசகத்திற்கு சிறந்த ஒரு உதாரணமாக அது இருந்ததுடன் இலங்கையின் செய்தித்தாள்களின் பக்கங்களில் அதிக இடம்பிடித்திருந்தது. இந்தத் தீர்ப்பு நிவாரணம் வழங்கும் தனது அணுகுமுறையில் விசேடமான நீதிமுறைச் சுதந்திரத்தை விளக்கியது.

மனுதாரர்கள் ஐவரும் புலனாய்வுத்துறை நிர்வாகசபையின் உளவுத்துறையில் சேவையில் நீண்டகால உறுப்பினர்களாக இருந்தனர். அவர்கள் தமது சட்டபூர்வமான கடமையைச் செய்து கொண்டிருப்பதாக விளக்கிய போதிலும் கண்டியைச் சேர்ந்த ஒரு பொலிஸ் அத்தியட்சகர் தமது பாதுகாப்பு வீட்டைச் சோதனை செய்ததாகவும் அதனடிப்படையில் தம்மை கைதுசெய்து தடுத்துவைத்ததாகவும் குற்றஞ்சாட்டினார். அத்துடன் இந்த நடவடிக்கை 11, 12(1), 13(1) மற்றும் 13(2) ஆகிய உறுப்புரைகளை மீறுவதாக உள்ளது என்றும் குற்றஞ்சாட்டினர்.

தான் மீறியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்த பிரதிவாதியான பொலிஸ் அத்தியட்சகர் மனுதாரர்கள் ஒரு குடியிருப்புப் பகுதியில் பெருந்தொகைப் பயங்கரமான ஆயுதங்களை வீட்டில் வைத்துக் கொண்டு வாழ்வதாக தகவல்கள் கிடைத்த பின்னரே தான் திடீர்ச் சோதனை மேற்கொண்டதாக அவர் வாதிட்டார். எவ்வாறிருப்பினும் ஒரு பிரதேசத்தில் இராணுவப் பாதுகாப்பு வீடு இருந்தால் பொதுவாக அது தொடர்பாக அப்பிரதேசத்திலுள்ள பொலிசாருக்கு அறிவிக்கப்படும். எனினும் இந்த நிகழ்ச்சியில் அவ்வாறு நடக்கவில்லை என்றும் தான் வெறுமனே சந்தேகத்துக்கிடமான செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைகளைப் புலனாய்வு செய்தல் என்ற கடமையையே செய்ததாகவும் அவர் கூறினார்.

சட்டவிரோதமான முறையில் கைது செய்து தடுத்து வைத்தல்

தகவல்களை ஆராய்ந்த நீதிமன்றம் முதலாவது பிரதிவாதியின் கூற்று ஏற்கத்தக்கதல்ல என்றும் மனுதாரர்களைக் கைது செய்யும்போது அவ்வாறு கைது செய்வதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம் எதுவும் இருக்கவில்லை என்றும் தீர்மானித்தது. எந்தவொரு மனுதாரருக்கும் அவர்கள் கைது செய்யப்படுவதற்கான காரணம் சொல்லப்படவில்லை. அவ்வாறு சொல்ல வேண்டும் என்பது சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதனால் உறுப்புரை 13(1) மீறப்பட்டுள்ளது என்பது உறுதியாகின்றது.

அத்துடன் சட்டவிரோதமாக தடுத்து வைத்தலுடன் தொடர்புடைய உறுப்புரை 13(2)உம் மீறப்பட்டுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டது. மனுதாரர்கள் ஆரம்பத்தில் 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க (திருத்தப்பட்ட) பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு (7)(1)இன் கீழ் தடுத்து வைக்கப்பட்டனர். அது அந்தப் பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை எழுபத்திரெண்டு மணித்தியாலங்கள் வரைக்கும் தடுப்புக்காவலில் வைப்பதற்கு அனுமதிக்கின்றது. அதற்கு மேல் தடுத்து வைப்பதாயின் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட தடுப்புக்காவலில் வைக்குமாறு கூறும் கட்டளையின் பேரில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் அது அமைய வேண்டும். அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்படுவோர் நீதவானின் முன்னிலையில் நிறுத்தப்பட வேண்டும். இந்த வழக்கில் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட தடுப்புக் காவலில் வைக்குமாறு கூறும் கட்டளை சமர்ப்பிக்கப்படவோ மனுதாரர்கள் ஒரு நீதித்துறை உத்தியோகத்தரின் முன்னிலையில் ஆஜராக்கப்படவோ இல்லை.

அதிகளவில் மனவேதனையை ஏற்படுத்துவது உறுப்புரை 11 இனை மீறுவதாகவே கருதப்படும்

எனினும் சித்திரவதை கொடூரமான முறையிலும், கீழ்த்தரமான முறையிலும் நடாத்துதல், இழிவு படுத்துதல் என்பவற்றைத் தடைசெய்யும் உறுப்புரை 11ஐ மீறிய நிகழ்வுகளைக் கண்டித்தது தொடர்பில் இந்தத் தீர்ப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. இது ஒப்பீட்டளவில் அரிதான ஒரு நிகழ்வாகும். தற்காலிகமான அல்லது நிலையான உடலியல் காயங்களை ஏற்படுத்தும் எந்தவொரு உடல்

ரீதியான தாக்குதலும் இல்லாத நிலையிலும் உறுப்புரை 11 மீறப்பட்டுள்ளதாக இந்தத் தீர்ப்பு கூறுகின்றது. மனுதாரர்கள் முறையீடு செய்த கீழ்த்தரமாக நடாத்துதல் என்பது அவர்கள் அனுபவித்த சிறைத் தண்டனையை அடிப்படையாகக் கொண்டதாகும். - அதாவது அவர்கள் காற்றோட்டமில்லாத ஒடுங்கிய அறையில் வைக்கப்பட்டார்கள். அங்கு மது போதையிலுள்ளவர்களின் வாந்தியிலிருந்து வீசிய சகிக்க முடியாத துர்நாற்றத்துக்குள் அவர்கள் இருக்க வேண்டி ஏற்பட்டது. அதேபோல் அவர்கள் ஒரு பொலிஸ் நிலையத்திலிருந்து இன்னொரு பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட விதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்.

உறுப்புரை 11 மீறப்பட்டதைக் கண்டறியும் போது போதுமான அளவு மனவேதனையை ஏற்படுத்துவது ஒரு உரிமை மீறப்பட்டுள்ளதை நிறுவப் போதுமானதாகும். இந்தக் கொள்கையைக் கொண்ட உள்நாட்டு மற்றும் பிராந்திய நாடுகளின் முற்றீர்ப்புகள் மேற்கோள் காட்டப்பட்டன. [23]

திடீர்ச் சோதனையின் விளைவாக மனுதாரர்களும் அவர்களது குடும்பங்களும் எதிர்நோக்கிய "பாரிய அபாயத்துக்கு" விரைவான நீதிமுறை அனுதாபம் விசேடமாகச் சொல்லப்பட்டது. அதன் போது மனுதாரர்கள் பயங்கரவாதச் செயற்பாடுகளை அதி இரகசியமாகக் கண்காணிக்கின்ற ஒரு விசேட குழுவின் அங்கத்தவர்களாக இருந்தார்கள் என்பது நினைவு கூறப்பட்டது. பிரதிவாதிகளின் நடவடிக்கைகளின் விளைவாக தாங்கள் பகிரங்கப்படுத்தப்படுவது

---

[23] *குமாரசேன எதிர் உதவி பரிசோதகர் சிரியன்த மற்றும் ஏனையவர்கள்* உநீ விண்ணப்ப இல 257/93. உநீ அறிக்கைகள் 1994.05.23 இங்கு தாக்கப்பட்டது உடல்ரீதியான இயலாமையை ஏற்படுத்தவில்லையாயினும் ஊறு ஏற்படுத்தப்பட்டது. உறுப்புரை 11ஐ மீறுவதற்குத் தேவையான மிகவும் ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக நீதிமன்றம் கருதியது. இங்கு மிகவும் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் *பெர்ணான்டோ எதிர் சில்வா*, உநீ விண்ணப்ப இல 7/89 உநீ அறிக்கைகள் 1991.05.03 வழக்கில் ஆளொருவரை மருத்துவ சிகிச்சை, உணவு மற்றும் சாதாரண உடல் இயக்கத்திற்குத் தேவையான அடிப்படை வசதிவாய்ப்புகளை வழங்காது தடுத்து வைத்தலானது உறுப்புரை 11ஐ மீறும் விடயம் எனப்பட்டது. மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றத்தின் (EUCT) சட்டவியலானது இதே விடயத்தைக் குறிப்பிடுகின்றது. *டைரெர் எதிர் ஐக்கிய இராச்சியம்* (1978) 2 EHHR, 1 *கிரீக் வழக்கு* 127 B (1969) Com. Rep. 70, *கெம்பல் மற்றும் கோசான்ஸ் எதிர் ஐக்கிய இராச்சியம்* (EUCTஇன் வழக்குச் சட்டம், 1,170)

தங்களது உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் என்று மனுதாரர்கள் மன்றாடியது செவிடன் காதில் ஊதிய சங்காகவே அமைந்தது. இந்த உரிமை மீறல்களுக்கு அதிக நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று தீர்மானிப்பதில் இதுவும் ஒரு காரணியாக அமைந்தது.[24]

இந்தத் தீர்ப்பு பயனுள்ளதாகும். உறுப்புரை 11 பற்றிய குற்றச்சாட்டுகள் விடயத்தில் செய்யப்பட வேண்டிய நீரூபித்தல் என்ற பொறுப்பை அது தளர்த்தியது. நீதி கோரும் மனுதாரர்கள் மீது தேவையற்ற பாரங்களைச் சுமத்தக் கூடாது என்று நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டது.[25]

கைது செய்தல், தடுத்து வைத்தல் தொடர்பில் பாகுபாடான முறையில் நடாத்துதல்

மனுதாரர்கள் கைது செய்யப்பட்ட பின்னர், அவர்கள் நடாத்தப்பட்ட முறையின் விளைவாக உறுப்புரை 12 மீறப்பட்டுள்ளது என்று நீதிமன்றம் எடுத்த தீர்மானம் ஒரு சுவாரஷ்யமான கேள்வியை எழுப்பியது. முதலாவதாக சட்டவிரோதமாகக் கைது செய்தல், தடுத்துவைத்தல்கள் இடம்பெற்ற வேளைகளில் சமவாய்ப்பிற்கான உரிமை மீறப்பட்டுள்ளது என்ற விடயம் அனைத்து வழக்குகளிலும் பின்பற்றப்பட்டுள்ளது. அதேவேளை சித்திரவதை அல்லது கொடூரமாக மற்றும் தரக்குறைவாக நடாத்துதல் அல்லது அவமானப்படுத்தல்களின் போது பாதிக்கப்பட்டவர்கள் இரண்டு வித்தியாசமான நடத்தைகளைச் சந்தித்த பொழுதிலும் இவ்வாறான இரண்டு உரிமைகளையும் இணைக்கும் நிலையான ஏற்பாடுகள் இது தொடர்பில் இருப்பது பின்னர் தீர்க்கப்பட்ட வழக்குகளில் சிறந்த வெளிக்காட்டல்களை வழங்கியுள்ளன.

---

24 குறிப்பு 10 இனைப் பார்க்க, தீர்ப்பு பக்க இல. 40 ஒவ்வொரு மனுதாரருக்குமான மொத்தத் தொகை ரூபா 800,000/- அதில் 750,000/- ரூபா அரசினாலும் ரூபா 50,000/- முதலாவது எதிர்வாதியான பொலிஸ்மா அதிபரினாலும் செலுத்தப்பட்டது.

25 *வேல்முருகு எதிர் சட்டமா அதிபர்* (1980) 1 FRD 180. *அபேவிக்ரம எதிர் தயாரத்ன* உ நீ விண்ணப்ப இல. 125/88, உ நீ அறிக்கைகள் 1989.07.12 *சன்னபீரிஸ் மற்றும் ஏனையவர்கள் எதிர் சட்டமா அதிபர்* (1994) 1 இசஅ 1

2.2 கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம், சங்கம் அமைக்கும் சுதந்திரம் என்பவற்றுக்கான உரிமை தொடர்பான நீதிமுறை நியாயம் (14 (1) (அ) (ஆ) மற்றும் (இ)ஆம் உறுப்புரைகள்.

எம்.என்.டி பெரேரா எதிர் பாலபட்டபந்தியும் ஏனையோரும்[26]

2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ரணில் விக்ரமசிங்க பிரதமராகச் சத்தியப்பிரமாணம் செய்யும் வைபவத்தை ஒளிப்பதிவு செய்யச்சென்ற கொழும்பிலுள்ள தொலைக்காட்சி நிறுவனமொன்றின் செய்தி ஆசிரியரும் அவரது ஆட்களும் ஜனாதிபதி மாளிகையில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டபோது நிகழ்ந்தவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த மனுதாக்கல் செய்யப்பட்டது. தனது ஜனாதிபதிப் பதவியை எதிர்ப்பதாக உணரப்படும் குறித்த தனியார் ஊடகவியலாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டமைப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதமரின் சத்தியப்பிரமாணத்தை ஒலி/ஒளி பரப்பவோ அல்லது அறிக்கைப்படுத்தவோ ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்ற ஜனாதிபதி குமாரதுங்கவின் வழிகாட்டலுக்கு இணங்கவே அந்தத் தனியார் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஜனாதிபதி குமாரதுங்க தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியை எதிர்த்த பிரதான அரசியல் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும்.

இந்த மறுப்பு தொடர்பற்ற அரசியலுக்காக அல்லது தனிப்பட்ட நலனுக்காக "தெளிவான பாகுபாடு" காட்டியுள்ளது என்பது பெரும்பான்மை கருத்தாகும் (நீதிபதி ஷிராணி திலகவர்த்தன உடன் உடன்படும் வகையில் நீதிபதி விக்னேஸ்வரனின் கருத்து). இந்தப் பாகுபாடு எத்தகைய உயர்பதவி வகிப்பவர்களால் செய்யப்பட்டாலும் மன்னிக்க முடியாததாகும். அவ்வாறு தடுக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் சட்டத்தின் முன் சமமாக நடாத்தப்படும் உரிமையும் பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரங்களுக்கான உரிமையும் மீறப்பட்டிருப்பதாகக் கண்டறியப்பட்டது.

---

[26] உ நீ (அ உ) விண்ணப்ப இல. 27/2002, உ நீ அறிக்கைகள் 2004.10.19 நீதிபதி ஷிராணி திலகவர்தனவின் இணக்கப்பாட்டுடன் நீதிபதி திசாநாயக்க ஒருபடாத நிலையில் நீதிபதி விக்னேஸ்வரனின் தீர்ப்பு. இது தொடர்பான சட்டவியல் நியாயங்களுடன் இந்த எழுத்தாளர் 2004 ஒக்டோபர் 24, *சன்டே ரைம்ஸ்* பத்திரிகையில் "போகஸ் ஒன் ரைட்ஸ்" எனும் தலைப்பில் எழுதியுள்ளார்.

ஜனாதிபதியும், நீதித்துறையின் உயர் அங்கத்தவர்களும் குறித்த சில அதிகாரிகள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும் என்று அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால் பிரதமர் அத்தகையதொரு பணியைச் செய்ய வேண்டியவராக இல்லை. எனவே அவரது சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்ச்சிக்கு பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டாலும் அது பொது இடமொன்றில் நடைபெற்றாலும் அது ஒரு பொது நிகழ்ச்சியாகமாட்டாது. இந்த நிகழ்ச்சி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. அது ஒரு பொது இடமல்ல. ஊடகவிலயலாளர்களுக்கு அங்கு நுழையும் உரிமை இல்லை. மரியாதைக்காகவே ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். எனவே யாராவது தவிர்க்கப்பட்டிருந்தால் அது எந்தவொரு ஊடகவியலாளருக்கும் தனது உரிமை மீறப்பட்டுள்ளது என்று வாதிடும் உரிமையை வழங்கமாட்டாது என்று அரச தரப்பில் வாதிடப்பட்டது.

இது ஒரு பொது வைபவமா இல்லையா என்பதை இந்த வழக்கின் அனைத்துச் சூழ்நிலைகளையும் கவனத்தில் எடுத்தே தீர்மானிக்க வேண்டும் என்று இந்த வாதத்தை ஏகமனதாக நிராகரிக்கும் போது பெரும்பான்மைத் தீர்ப்பில் கூறப்பட்டது. இந்த நிகழ்வில் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்ற வேறு ஒரு கட்சியின் தலைவரை தனது பிரதமராக நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். ஜனாதிபதி மாளிகையில் வைத்து செய்யத் தீர்மானித்துள்ள பிரதமரின் நியமனச் செயற்பாட்டை செய்வதற்கும் அதனை அரசாங்க இலச்சினையின் கீழ் செய்வதற்கும் அரசியல் அமைப்பின் உறுப்புரை 33 ஜனாதிபதிக்கு அதிகாரமளிக்கின்றது.

ஒரு உத்தியோகபூர்வ நிகழ்வை ஒரு உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளார். அது ஒரு பொது வைபவம் அல்ல என்று மறுக்கவும் மனோ இச்சைப்படி சில ஊடகவியலாளர்களை அந்த நிகழ்ச்சியை பதிவு செய்யாமல் தடுக்கவும் ஜனாதிபதிக்கு முடியுமா? பாதுகாப்பைக் கவனத்தில் எடுத்து அனைத்து ஊடகங்களுக்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தால் நிலைமை வேறுபட்டதாக இருந்திருக்கும். அதுவும் நீதிமுறை மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒரு அம்சமாகும். எனினும் இங்கு அவ்வாறான பாதுகாப்பு சொல்லப்படவில்லை. மாறாக ஜனாதிபதியின் உத்தரவு நீதியான பிரமாணங்களைக் கொண்டிராத

போதும் வாதத்துக்குரிய செயற்பாட்டுக்கான முழுமையான காரணமாக முன்வைக்கப்பட்டுள்ளது.[27]

ஜனாதிபதி விடுபாட்டுரிமை வரையறைகளை ஒழுங்குபடுத்தல்

குறிப்பாகக் கீழ்நிலை உத்தியோகத்தர்களின் அரசியலமைப்புக்கு முரணான செயற்பாட்டை நியாயப்படுத்த ஜனாதிபதியின் உத்தரவு மாத்திரம் போதுமானதல்ல என்று பெரும்பான்மையினர் கருதினர். கீழ்நிலைச் செயற்பாடு வெளிப்படையான தெளிவான சட்டவிரோதச் செயலாக இருப்பின் அதனை ஜனாதிபதியின் உத்தரவு பாதுகாக்க முடியாது என்று முன்னைய வழக்குச் சட்டத்தைப் பயன்படுத்தி புறத்தொதுக்கப்பட்டது.[28] அதற்கு நீதிபதி விக்னேஸ்வரன் பின்வரும் காரணங்களை முன்வைத்தார்.

> ஒரு இறைமையுள்ள நாட்டின் தலைவர், சூழ்நிலைகள் எந்த அளவுக்கு அவரைக் கோபமூட்டுபவையாக உண்மையானதாக அல்லது கற்பனையானதாக இருப்பினும் அவர் குறுகிய வட்டத்தில் செயற்படுபவராக அல்லது பழிவாங்கும் குணம் கொண்டவராக அல்லது பகைமை உள்ளவராக செயற்படுவார் என்று எதிர்பார்க்க முடியாது. தலைவர்களும் மனிதர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் மீது கொண்ட

---

27 இந்தக் கண்ணோட்டத்துடன் இணங்கும் வகையில், அரசாங்க மற்றும் உத்தியோகபூர்வ தீர்மானம் எடுத்தல்கள் அனைத்திலும் தனியாள் விருப்புக்கள் கீழ்படுத்தப்பட வேண்டும் என்ற விடயம் திலக்கவர்த்தன நீதிபதியினால் குறிப்பிடப்பட்டது. இது இவ்வாறிருக்க, துணை தீர்மானங்களில் மாத்திரமல்ல, முழு தீர்மானம் எடுத்தல் நடபடிகளிலும் இது கடைபிடிக்கப்படுதல் வேண்டும். நீதிபதி திசாநாயக்க தனது ஒருப்படாத நோக்கில், பொதுச் சொத்து, பொது இடம் என்ற இரண்டில் ஒவ்வொன்றும் சமமானதாக இருக்க முடியாது. அரசுக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களும் பொதுச் சொத்தாகும். ஆனால் அனைத்தும் பொது இடமாக இருக்க முடியாது. அரசின் தலைவரது உத்தியோகபூர்வ வதிவிடம் பொது இடமாகமாட்டாது. ஏனனில் அதற்கு அனைவரும் சென்றுவருவதற்கான ஏற்பாடுகளிலில்லை.

28 *விசுவலிங்கம் மற்றும் ஏனையவர்கள் எதிர் லியனகே மற்றும் ஏனையவர்கள்.* (இல. 1) ஒன்பது நீதிபதிகளைக் கொண்ட நிறைகுழாம் (1983) 1 இ ச அ 203, 204 வழக்கில் நீதிமன்றம் நீதிபதி சர்வானந்தாவினுடைய அவதானிப்புக்களை எடுத்துக்காட்டியது. அதேபோன்று *விஜேசூரிய எதிர் அரசு* 77 புசஅ 25,56 வழக்கும் குறிப்பிடப்பட்டது. இது தொடர்பாக பார்க்க, *கருணாதிலக்க எதிர் திசாநாயக்க* உ நீ விண்ணப்ப இல. 431/2001, உநீ அறிக்கைகள் 2003.03.17.

> அன்பின் காரணமாகவும், நம்பிக்கையின் காரணமாகவும் நாட்டு மக்கள் அவர்களுக்கு வழங்கிய அதிகாரத்தையும், சிறப்புரிமைகளையும் அணிந்த மனிதர்களாக அத்தலைவர்கள் இருக்கிறார்கள். அந்த குடிமக்களைத் தடுப்பதற்கு இந்த அதிகாரம் பயன்படுத்தப்படக் கூடாது.

உஸ்ஹெட்டிகே நிஹால் பெரேராவும் ஏனையோரும் எதிர் பொலிஸ் மா அதிபரும் ஏனையோரும்[29]

மனுதாரர்கள் அனைவரும் பொதுசன ஐக்கிய முன்னணியின் ஜாஎல பிரதேச சபையின் உறுப்பினர்களாவர். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் தமது சமமாக நடாத்தப்படுதல், பாகுபாடு காட்டப்படாதிருத்தல் என்பவற்றுக்கான உரிமைகள், கருத்துச் சுதந்திரம், அமைதியாக ஒன்று கூடுதல், சங்கம் அமைத்தல் ஆகிய சுதந்திரங்களுக்கான உரிமைகளையும் பொலிசாருடன் சேர்ந்து மீறியுள்ளதாகக் குற்றஞ்சாட்டினார். அவர்கள் 21.12.2001 இல் நடாத்தப்படவிருந்து பின்னர் 31.12.2001, 11.01.2002, 22.01.2002 ஆகிய தினங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஜாஎல பிரதேச சபையின் 57ஆவது மாதாந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் தடுத்தார்கள் என்றும் 22.01.2002 நடாத்தப்படவிருந்த கூட்டத்தில் கலந்துகொள்ள மனுதாரர்கள் முயற்சித்த போது 3 ஆம் மனுதாரர் தாக்கப்பட்டுள்ளார்.

---

[29] உ நீ (அஉ) இல. 93/2002 உ நீ அறிக்கைகள் 2004.01.28. நீதிபதியான பர்ணான்டோ மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோரின் இணக்கத்துடன் நீதிபதி ரி.பி வீரசூரியவின் தீர்ப்பு. இதே காலத்தின் போது, *பீ.ஏ திலகரட்ன எதிர் எம் எட்வின் அல்விஸ், தலைவர், பிரதேச சபை, திவுலபிட்டிய மற்றும் ஏனையவர்கள்*, உ நீ (விஷேட) விண்ணப்ப இல. 122/2002, உ நீ அறிக்கைகள் 16.02.2004 என்ற வழக்கைப் பார்க்க. நீதிபதியான அமீர் இஸ்மாயில், எச். எஸ். யாப்பா வின் இணங்குதலுடன் பிரதம நீதியரசர் சரத் நந்த சில்வாவின் தீர்ப்பைப் பார்க்க. இந்த வழக்கில் திவுலபிட்டிய பிரதேச சபைத் தலைவர் மற்றும் பொலிஸாரின் கூட்டுச் செயற்பாட்டினால் முற்சக்கர வண்டிச் சாரதி ஒருவர் அவரது முற்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்துவதைப் பலாத்காரமாக தடுத்ததுடன் அவரது வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிச் சான்றிதழ்கள் என்பன பறிக்கப்பட்டமை என்பவற்றின் மூலம் ஒரு சட்டரீதியான நிகழ்வில் கலந்து கொள்வதற்கான உரிமை (உறுப்புரை 14 (1) (எ) மறுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டது.

மனுதாரர்கள் உட்பட பிரதேச சபையின் பொதுசன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள், இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடும் டென்டர்களை வழங்குவதில் பாகுபாடான முறையிலும் நியாயமற்ற முறையிலும், நடந்து கொண்டார்கள் என்றும் அதனாலேயே மனுதாரர்கள் தாக்கப்பட்டதாகவும் அவர்கள் கூட்டத்துக்கு சமுகமளிக்க முடியாதவாறு தடுக்கப்பட்டார்கள் என்றும் பிரதேச சபையின் உறுப்பினர்களான பிரதிவாதிகள் தமது ஆட்சேபனையின்போது வாதிட்டனர்.

சாட்சிகளை விசாரித்த பின்னர் நீதிமன்றம் பிரதிவாதிகளின் எதிர்க் கோரிக்கையை ஏற்க மறுத்தது. டென்டர்களை வழங்குவதில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் அநீதி தொடர்பாக பொலிசாரிடம் முறையீடு செய்யப்படவில்லை. அத்துடன் பிரதேச சபைகளின் டென்டர் சபைகள் பொதுசன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி ஆகிய இரண்டு கட்சிகளினதும் உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது. அத்துடன் இந்தப் பிரச்சினை தொடர்பாக எந்தவொரு உறுப்பினரும் முறைப்பாடு செய்திருக்கவில்லை என்பதனையும் இந்த நீதி முறைக்காண்பு உள்ளடக்கியிருந்தது.

மனுதாரர்கள் தடுக்கப்பட்டமை டென்டர்களை வழங்குவது தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சை காரணமாக அல்ல என்றும் அது 2001 ஆண்டின் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்றதன் விளைவாக ஏற்பட்டது என்றும் நீதி முறைக்காண்பின் போது தெரிய வந்தது. மனுதாரர்கள் பிரதேச சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதைத் தடுத்தமைக்காகவும், பொதுசன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களுக்கு அது தொடர்பாகப் பாதுகாப்பு வழங்கத் தவறியமைக்காகவும் மனுவில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் குற்றமிழைத்தவர்களாவர் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எவ்வாறாயினும் குறித்த குற்றச்செயலில் பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் பொலிசாருக்கும் இடையிலான தொடர்பு நிரூபிக்கப்படாமையினால் அந்த உறுப்பினர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

3. சமமாக நடாத்தப்படுவதற்கான உரிமை தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் நீதிமுறைப் பொறுப்பு

3.1 காணி சுவீகரித்தல்

ஹீதர் தெரேஸ் முண்டி எதிர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் ஏனையோரும்[30]

தெற்கு நோக்கிய அதிவேகப் பாதை நிர்மாணத்திற்காக அரசாங்கத்தினால் எடுத்துக் கொள்ளப்படவுள்ள அக்மீமன மற்றும் பண்டாரகம பிரதேச காணிகளின் உரிமையாளர்கள், தமது தடையுத்தரவு கோரும் மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டதால் உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்தனர். பாதிக்கப்பட்ட சொத்துரிமையாளர்களுக்கு அறிவிக்காமல் அதிவேகப் பாதையின் இறுதி ஒழுக்கை மாற்றுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை எடுத்த தீர்மானம், 1988ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, 2000ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்டவாறான, 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்துக்கும் அதன் ஒழுங்குகளுக்கும் மாற்றமானது என்பதைக் கண்டறியுமிடத்து மேன்முறையீட்டு நீதிமன்றம் தவறாக வழிநடாத்தப்பட்டுள்ளது அல்லது தவறிழைத்துள்ளது என்ற அடிப்படையில் அவர்கள் முறையீடு செய்ய விரும்பினார்கள்.

ஆரம்பத்தில் அதிவேக பாதை சூழலியல் ஆய்வு நடாத்தப்பட்ட மூலச் சுவட்டில் (Original Trace) அமைக்கப்படவிருந்தது. பின்னர் அது ஒன்றிணைக்கப்பட்ட சுவட்டுக்கு மாற்றப்பட்டது. ஒன்றிணைக்கப்பட்டதுவும் சூழலியல்ரீதியாக ஆய்வுசெய்யப்பட்டது. பின்னர் அது இறுதிச் சுவட்டுக்கு திசை திருப்பப்பட்டது. சூழலியல் பாதிப்புகள் அல்லது மனிதக் குடியிருப்புப் பிரச்சினைகள் விடயத்தில் அதன் தாக்கங்கள் ஆழமான முறையில் மதிப்பீடு செய்யப்படவில்லை. மேன்முறையீட்டாளர்கள் அதனைத் தான் ஆட்சேபித்தார்கள்.

---

[30] *ஹீதர் முன்தி எதிர் மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் ஏனையவர்கள்*, உ நீ மேன்முறையீட்டு இல. 58/03, உ நீ அறிக்கைகள் 2004.01.20 நீதிபதியான இஸ்மாயில் மற்றும் விக்னேஸ்வரனின் உடன்பாட்டுடன் நீதிபதி மார்க் பர்ணான்டோவின் தீர்ப்பு. பக்க இல. 13. பொது நம்பிக்கைக் கோட்பாட்டின் பொதுவான அளவைகள் தொடர்பாக மேலதிக சட்டரீதியான ஆய்வுகளுக்கு பார்க்க, *பெரேரா எதிர் பதிரன*, உ நீ விண்ணப்ப இல. 453/97, உ நீ அறிக்கைகள் 2003.01.30 *சேனசிங்க எதிர் கருணாதிலக* (2003) 1 இசஅ 172 மற்றும் *தவனீதன் எதிர் திசாநாயக்க* (2003) 1 இசஅ 75.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வழிகாட்டலின்படியே அந்தப் பாதை ஒன்றிணைக்கப்பட்ட சுவட்டிலிருந்து இறுதிச் சுவட்டுக்குத் திசை திருப்பப்பட்டது என்றும் வேராஸ் கங்கை / பொல்கொடை வாவி சதுப்பு நில பொழுதுபோக்குப் பிரதேசத்தைத் தவிர்ப்பதற்காக ஒன்றிணைக்கப்பட்ட சுவடு மூலச்சுவட்டுக்கு மாற்றப்பட வேண்டும் என்றும் அது சுட்டிக் காட்டியிருந்தது என்றும் அரச தரப்பினர் வாதிட்டனர். எனினும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் திசைதிருப்பப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்ட பிரதேசத்துக்கு அப்பால் வீதி அபிவிருத்தி அதிகாரசபை சென்றுள்ளதாகவும் அதன் விளைவாக அதிவேகப் பாதை தமது சொத்துகளைப் பாதிக்கும் என்று சிறிதளவும் அறிந்திராத சொத்துரிமையாளர்கள் பாதிக்கப்பட்டதாகவும் ஆட்சேபனையை எதிர்க்கும்போது மேன்முறையீட்டாளர்கள் வாதிட்டனர்.

உயர் நீதிமன்றம் மேன்முறையீட்டாளர்கள் சார்பாகத் தீர்ப்பு வழங்கியது எனினும் சுவடுகள் மாற்றப்பட்டதன் விளைவாக அவர்களுடைய காணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன என்று முன்னறிவித்தல் கொடுக்கப்படாததன் காரணமாக உரிமை மீறப்பட்டமைக்காக நட்டஈடு மட்டும் வழங்கப்பட வேண்டும் என்று வரையறுத்தது.

இரண்டு அடிப்படை அம்சங்களில் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. முதலாவதாக "பொது நம்பிக்கை" பற்றிய கொள்கையை உறுதியாகச் சொன்னதால் அது முக்கியத்துவம் பெறுகின்றது. அரசாங்க அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முழுமையானவையோ கட்டுப்பாடுகள் அற்றவையோ அல்ல. மாறாக அவை பொது மக்களுக்காக நம்பிக்கையின் அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டவையாகும். அவை அவர்கள் ஏற்றுக்கொண்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். அத்துடன் அவர்கள் அதனைப் பிரயோகிக்கும் முறை அந்த நோக்கங்கள் தொடர்பில் நீதி முறை மீளாய்வு செய்யப்பட வேண்டும். அந்த வகையில் நிறைவேற்று அதிகாரமும் பொதுவாக அடிப்படை உரிமைகள் ஆய்வுக்கும் குறிப்பாக சட்டத்தின் முன் அனைவரும் சமம், சட்டத்தினால் சமனாகப் பாதுகாக்கப்படுதல் என்பவற்றுக்கு உத்தரவாதமளிக்கும் உறுப்புரை 12(1)இற்கும் அவசியம் உட்படுத்தப்பட வேண்டும். "சட்டப் பாதுகாப்பு" என்பது அவதானிப்பதற்கும் கேட்பதற்குமான உரிமையையும் உள்ளடக்கியதாகும். "பொது

நம்பிக்கைக்" கோட்பாட்டுக்கு மாற்றமான அல்லது அடிப்படை உரிமைகளை மீறுகின்ற நிர்வாக நடவடிக்கைகளின் முடிவுகளும் செல்லுபடியற்றதாக்கப்படுதல் வேண்டும்.

இரண்டாவதாக உயர் நீதிமன்றத்துக்கான மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. அதனால் பொதுவாக உரிமை மீறல்களுடன் தொடர்புடைய அம்சங்களைக் கொண்டிருக்கமாட்டாது. (அவை அரசியலமைப்பின் 126(2) உறுப்புரை. உயர் நீதிமன்றத்தில் நேரடியாகத் தாக்கல் செய்யப்படும் அடிப்படை உரிமைகள் மனுவில் கூறப்பட்டுள்ளன) எவ்வாறாயினும், அதிவேகப் பாதையின் சுவடு அவர்களின் காணிகள் பாதிக்கப்படும் விதத்தில் மாற்றப்படும் முன்னர், அரசியலமைப்பின் உறுப்புரை 12(1)இல் வழங்கப்பட்டுள்ள மனுதாரர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்காக உயர் நீதிமன்றம் இந்த வழக்கில் அரசியலமைப்பின் உறுப்புரை 126(3)ஐப் பயன்படுத்தியது. இந்த உரிமை மீறலுக்கு ஈடான நட்டஈடு மாத்திரம் வழங்குமாறு நீதிமன்றம் பணித்தது. உறுப்புரை 12(1) சட்டத்தின் முன் அனைவரும் சமமாக நடாத்தப்பட வேண்டும் என்றும் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றது,

நீதிபதி எம்.டி.எச்.பர்ணான்டோ பின்வரும் விடயங்களைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டியுள்ளார். அவை:

அ) அக்மீமன, பண்டாரகம ஆகிய இடங்களில் பாதையின் திசை திருப்பத்தில் தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23(உ)உ ஒழுங்கு விதி 17(I)(அ), மத்திய சுற்றாடல் அதிகார சபை நிபந்தனை III ஆகியவற்றின் கருத்தில் "திருத்தங்களைச்" செய்துள்ளது, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் குழுவொன்றை பாதிக்கப்பட்ட (பிரதேசங்கள் பற்றிய கள ஆய்வொன்றைச் செய்வதற்காக) நியமிக்கும் அளவுக்கு பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அவை மேன்முறையீட்டாளர்களையும் அவர்களது சொத்துரிமைகளையும் மோசமாகப் பாதித்துள்ளன அவை அதிவேகப் பாதையின் குறித்த திட்டத்தின் பிரதான அம்சமாகவும் இருந்தது. அவை திட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் முன்மொழியப்பட்ட மாற்றங்களாகவும் உள்ளன.

(ஆ) பாதிக்கப்பட்ட நபர்கள் என்ற வகையில் பாதிக்கப்பட்ட கிராமத்தவர்களுக்கு இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு இணங்க அறிவித்தல் கொடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும். சமமாக நடாத்தப்படுதல், சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுதல் என்பவற்றுக்கான அவர்களுடைய அடிப்படை உரிமைக்கிணங்க குறித்த திசை திருப்புதல் திருத்தங்களாக இல்லாதிருந்தாலும்கூட, அவை மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. அதனால் ஒவ்வொரு தரப்பிடமும் விசாரித்தல், உறுப்புரை 12(1) என்பவற்றின் அடிப்படையில் அவர்களிடம் விசாரித்திருக்க வேண்டும்.

(இ) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23(உ)உ ஒழுங்கு விதி 17(அ) என்பன வீதி அபிவிருத்தி அதிகாரசபை திருத்தங்கள் பற்றி மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அறிவித்து அதன் அனுமதியைப் பெற வேண்டும் என வேண்டுகின்றது. ஒழுங்கு விதி 17(11) இன் படி ஒரு " பிற்சேர்க்கை அறிக்கை" அவசியமாக இருந்தது,

(ஈ) நோக்கங்களையும், நடைமுறையையும் கவனத்தில் எடுத்து மத்திய சுற்றாடல் அதிகார சபை முன்னைய இரு சுவடுகளையும் கவனத்தில் எடுத்தது போன்று இறுதிச் சுவட்டையும் அதிகம் கவனத்தில் எடுத்திருக்க வேண்டும். அது மத்திய சுற்றாடல் அதிகாரசபை பொது நம்பிக்கைக்கு உட்பட்டதாகக் கொண்டுள்ள ஒரு அதிகாரமும் கடமையும் ஆகும். அதனை பாதிக்கப்பட்ட தனிநபர்கள் உட்பட பொது மக்களின் நலனுக்காகப் பிரயோகிக்கப்பட வேண்டும். அந்த அதிகாரத்தையும் கடமையையும் இன்னொரு நிறுவனத்துக்குக் கைமாற்றும் அதிகாரம் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு இல்லை. குறைந்தது திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை நிறுவனத்துக்குக் கூட அனைத்தையும் கைமாற்ற முடியாது. அவ்வாறு செய்வதனால் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் தனது சொந்தப் போக்கைத் தானே முழுமையாகவும் இறுதியாகவும் மதிப்பீடு செய்யும் நிலை தோன்றும். மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு 1999 இல் இறுதிச் சுவட்டை நிர்ணயிக்க வழங்கிய அனுமதி ஒரு முழுமையான கட்டுப்பாடில்லாத இரத்துச்செய்ய

முடியாத ஒரு கைமாற்றத்தை நிறுவவோ அத்தகையதொரு கைமாற்றத்தைக் கொண்டுள்ளதாக அர்த்தப்படுத்தப்படவோ முடியாது.

(உ) எவ்வாறாயினும், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் IXஆவது நிபந்தனை இறுதிச்சுவடு முதற்சுவட்டுக்கு மாற்றப்பட வேண்டும் என்றும் முதற் சுவட்டுக்கு சற்று அருகில் அமைக்க முடியாது என்றும் கூறுகின்றது. எனவே இறுதிச் சுவட்டு அமைவிடம் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதிக்கு மாற்றமானதாகும்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அணுகுமுறையை மதிப்பீடு செய்த நீதிபதி பர்ணான்டோ மேன்முறையீட்டு நீதிமன்றம் (அதாவது பாதிக்கப்பட்ட கிராமத்தவர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் அவர்களின் தியாகம் உரிய முறையில் ஏற்றுக் கொள்ளப்பட வில்லையென்றும், அவர்களது உரிமைகள் பாதிக்கப்படுவதை நீதிமன்றம் இயன்றளவு குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும்) சில கைமாறுகள் விடயத்தில் உடன்படுவது போல் தோன்றினாலும் நிவாரணம் வழங்குவது அல்லது முறையீட்டை நிராகரிப்பது என்ற இரண்டில் ஒரு வழிமுறையைத் தான் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளதாக அது நினைத்தது. எனினும் இந்த அணுகுமுறை அதன் ஆணையீட்டு அதிகாரத்தினால் அடிப்படை உரிமைகளில் ஏற்படும் தாக்கத்தைக் கவனத்தில் எடுக்கவில்லை.

(அ) நிலைமை இவ்வாறு இருக்கும் போது மேன்முறையீட்டு நீதிமன்றம் இறுதிச் சுவடு தொந்தரவுக்குள்ளாக்கப்படக்கூடாது என்று செலவையும் தாமதத்தையும் கவனத்தில் எடுத்து சமநிலையாக தீர்வு கூறி முடித்திருக்க முடியும். மற்றவற்றுக்கிடையில் செலவைக் குறைப்பதற்காக அரசுக்கு சார்பாகத் தீர்ப்பு வழங்கி பாதிக்கப்பட்ட கிராமத்தவர்களுக்கு அவர்களது உரிமைகள் பாதிக்கப்பட்டமைக்காக நஷ்டஈடு வழங்குதல் மாத்திரமே நீதியானதாக அமையும்.

(ஆ) உறுப்புரை 126(3)இன் கீழ் மேலதிக சூழல் தாக்க மதிப்பீட்டு நடபடி முறைகளுக்கு பதிலாக கிராமத்தவர்களின் நட்டஈட்டு கோரிக்கைக்கு நிவாரணம் வழங்க வேண்டும் எனக் கோரி விசாரணைக்காக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்

செய்யப்பட்டது. இது உரிமை மாத்திரம் என்பதனால் உரிமைகள் மீறப்பட்டதற்காக நட்டஈடு வழங்கப் பணிக்கப்பட்டது.

மன்தி தீர்ப்பானது, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் எழுத்தாணை நியாயாதிக்கத்துடன் உயர் நீதிமன்றத்தின் அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கத்தினையும் இணைத்தல் என்ற விடயத்தையும் பொது நம்பிக்கைக் கோட்பாடுகள் தொடர்பான விடயங்களுக்கும் ஏற்புடைத்தான கொள்கைகளை உறுதியாக எடுத்துரைத்தது என்ற வகையில் மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகும். எவ்வாறாயினும் உண்மையான விடயமாக இருக்கும் கிராமவாசிகளின் வழக்குக்கு ஒத்துழைக்கும் வகையில் இறுதி கண்டுபிடிப்பு தொடர்பில் துணை சூழலியல் மதிப்பீட்டுக்கு கட்டளையிடும் அளவுக்கு நீதிபதிகள் செல்லவில்லை.

இதற்கு மேலதிகமாக, "நீதி மற்றும் சமத்துவம் எனக் கருதப்படமுடியுமான அத்தகைய பணிப்புரைகளைச் செய்வதற்கு அல்லது அத்தகைய நிவாரணத்தை வழங்குவதற்கு" அதன் அரசியலமைப்பு ரீதியான அதிகாரத்தைக் கொண்டிருந்த போதிலும் நீதிமன்றமானது உரிமை மீறல்களை இயற்கை நீதியின்பால் சுருக்கமாகத் தானே வரையறுத்துக் கொண்டது. குறிப்பாக அவர்களது நிலம் சுவீகரிக்கப்பட்டது தொடர்பான தகவல்களை மிகவும் முனைப்பான வேண்டுகோளாக வலியுறுத்தியபோதும் எதிர்வாதியின் செயற்பாடுகளினால் ஏற்பட்ட ஏனைய உரிமை மீறல்கள் நீதிமன்றத்தினால் எடுத்துக் காட்டப்படவில்லை.

3.2 சட்டத்திற்கமைவாகச் செயற்பட வேண்டுமென்ற அரசாங்க அலுவலர்களின் பணி

பர்வின் எதிர் விஜயசிரி, பரீட்சைகள் ஆணையாளர் மற்றும் ஏனையவர்கள் [31]

பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தத்தின் 13 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று அரசியலமைப்பின் 27(2)(ஏ)இனால் விளக்கப்பட்டுள்ளவாறான அரசாங்கத்தின் கொள்கை நோக்கமொன்றாக வரைவிலக்கணப்-

[31] (2004) 1 இசஅ 49 நீதிபதியான விக்னேஸ்வரன் மற்றும் வீரசூரிய என்பவர்களின் இணக்கப்பாட்டுடன் நீதிபதி மார்க் பெர்ணான்டோவின் தீர்ப்பு.

படுத்தப்பட்டுள்ளதுமான உயர்கல்வி பெறும் உரிமையை ஏற்று அங்கீகரிக்கும் வகையில் பரீட்சைத் திணைக்களத்தின் அலுவலர்களின் கடமைகளில் ஒன்றாக, பரீட்சையின் ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்தல் மற்றும் விடைத்தாள்கள் எவ்வகையிலும் மாற்றம் செய்யப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் பரீட்சைகளை நடாத்துதல், முறைகேடுகள் தொடர்பான எவையேனும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக பூரண மற்றும் திறந்த புலன்விசாரணை நடாத்துதல் என்பன காணப்படுகின்றன.

இந்த வழக்கு நிகழ்வுகளின்படி, 2002ஆம் ஆண்டு ஏப்ரல் - மே மாதங்களில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றிய முறைப்பாட்டாளரின் விடைத்தாள்களில் இரண்டு தாள்கள் கழற்றப்பட்டதுடன் பின்னர் அவருடைய தந்தைக்கு அநாமோதயமாக அனுப்பப்பட்டிருந்தது. இதன் மூலம் 12(1)ஆம் உறுப்புரை மீறப்பட்டிருக்கின்றது என முறைப்பாட்டாளரினால் செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்கு மூன்றாவது எதிர்வாதியான பிரதிப் பரீட்சைகள் ஆணையாளரொருவரினால் முறையான புலன்விசாரணைகள் நடாத்தப்படவில்லை எனக் கூறப்பட்டது.

3.3 சட்டமுறை எதிர்பார்ப்புக் கோட்பாடு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கைந்நூலின் உள்ளடக்கத்திற்கிணங்க அதன் மாணவர் அனுமதிக் கொள்கையின் அடிப்படையில் மருத்துவ பீடத்திற்கு 2001/2002ஆம் கல்வி ஆண்டிற்காகப் புதிய மாணவர்களைத் தெரிவு செய்யும் செயன்முறையுடன் தொடர்பான 3 தீர்ப்புகள் 2004ஆம் ஆண்டின் போது வெளியாயின.[32]

மனுதாரர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது மருத்துவ பீடத்திற்கு மாணவரின் அனுமதி தொடர்பாக குறிப்பிடப்பட்ட, வெளியிடப்பட்ட ஆகக் குறைந்த புள்ளிகள் (வெட்டுப் புள்ளி) கொள்கையினை பிரயோகிக்கத் தவறிவிட்டது என

[32] உநீ (அஉ) விண்ணப்ப இல. 306/2001 அனுஷிகா *மாதவி ஜயதிலக மற்றும் ஏனையவர்கள் எதிர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் ஏனையவர்கள்*, உநீ (அஉ) 307/2001, உநீ அறிக்கைகள் 2004.10.25 நிஹால் ஜயசிங்க மற்றும் ராஜா பெர்ணான்டோ நீதிபதிகளின் இணக்கப்பாட்டுடன் நீதிபதி (கலாநிதி) ஷிரியானி பண்டாரநாயக்க அவர்களின் தீர்ப்பு.

குற்றஞ்சாட்டினர். இதன்படி கல்விக் கொள்கையானது மாணவர்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும் அது அவர்களுக்குப் பிரயோகிக்கப்படுதலும் வேண்டும் என்ற அவர்களது சட்டமுறையான எதிர்பார்ப்பை முறியடிக்கப்படும் வகையிலிருந்துள்ளது.

சட்டப்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது குறித்த ஆண்டின் போது மருத்துவ பீடத்திற்கு 900 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் கொள்கையை வெளியிடுவதற்குப் பணிக்கப்பட்டிருந்தது. இருந்தும் சட்டயாப்பு முறைப்படி அல்லாததுடன் முடிந்த முடிவாக இல்லாமல் ஒருதலைப்பட்சமாக 800 புள்ளியைத் தெரிவுசெய்தது. இது மனுதாரர்களைப் பல்கலைக்கழக அனுமதியிலிருந்து தடுத்தது. இது அரசியலமைப்பின் 12(1)ஆம் உறுப்புரையை மீறும் செயலொன்றாக நீதிமன்றம் கருதியது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வாதமானது வடக்கில் காணப்படும் நிலைமையினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை அனுப்புவதில் சிரமம் காணப்படுவதினால் முழு அளவான 900 மாணவர்களைத் தெரிவு செய்ய முடியாது போனதென்பதாகும். இதனை நீதிபதிகள் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறித்த ஆண்டிற்காக அதன் கல்விக் கொள்கையை வெளியிடும் பொழுது இந்த சிரமங்களைக் கருத்திற் கொண்டிருக்க வேண்டுமென்பதுடன் அத்தகைய கஷ்டங்களை பின்நோக்கிச் செயற்படும் வகையில் வாதாடுவதற்கு அனுமதிக்க முடியாது எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தத் தீர்ப்பானது, மீளாய்வுக் காலத்தின்போது சட்ட முறையான எதிர்பாப்புக் கோட்பாட்டின் ஏற்புடைமை அனுமதிக்கப்படாத இரண்டு தீர்ப்புகளுடனும் முரண்படும் வகையிலிருந்தது. உதாரணமாக *எச் என் டி சில்வா எதிர் கொழும்பு மாநகரசபை மற்றும் ஏனையவர்கள்* அத்துடன் *டாக்டர் எம் என் சிறிஸ்கந்தராஜா எதிர் சுகாதார சுதேச மருத்துவத் துறை அமைச்சின் செயலாளர்*[33] என்ற வழக்குகளிலாகும். முன்னைய வழக்கில், கொழும்பு மாநகர சபை பிரதி ஆணையாளர்

[33] உநீ (அ உ) விண்ணப்ப இல. 209/2001, உநீ அறிக்கைகள் 2004.10.21 பிரதம நீதியரசர் சரத் என் சில்வா மற்றும் விக்னேஷ்வரன் நீதிபதியின் இணக்கப்பாட்டுடன் ஷிரானி திலகவர்தன நீதிபதியின் தீர்ப்பு அத்துடன் உநீ (அ.உ) விண்ணப்ப இல. 490/2000, உநீ அறிக்கைகள் 2004.10.25 நிஹால் ஜயசிங்க மற்றும் ராஜா பர்ணான்டோ நீதிபதிகளின் இணக்கப்பாட்டுடன் கலாநிதி நீதிபதி ஷிரானி பண்டாரநாயக்கவின் தீர்ப்பு.

ஒருவர் தான் மாநகர ஆணையாளர் பதவிக்கு நியமிக்கப்படுவார் என்ற சட்டமுறையான எதிர்பார்ப்பைக் கொண்டிருந்ததை உயர் நீதிமன்றம் கவனத்திற்கொண்டு, அவரது தகைமைகள், நன்மதிப்பு மற்றும் மாநகர சபையில் அவரது முதிர்ச்சி என்பவற்றின்பால் அவர் இதற்குத் தகுதியுடையவராகமாட்டார் என அக்கோரிக்கையினைத் தள்ளுபடி செய்தது. அத்துடன் மாகாண அரச சேவைக்குச் சொந்தமான கொழும்பு மாநகர சபையின் நிரந்தரப் பதவியொன்றினை வகிக்க முடியுமாக இருப்பதற்கு மத்திய அரசாங்கத்தின் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மனுதாரர் நிரந்தரமாக விடுவிக்கப்படாதிருப்பதையும் நீதிமன்றம் கருத்திற் கொண்டது.

இதே போன்று இரண்டாவது வழக்கிலும். குடும்ப சுகாதார பணியகத்தில் பெண் நோய் மருத்துவ ஆலோசகர் பதவிக்கு தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் எதிர்வாதிகளினால் நியாயமற்ற முறையில் நிராகரிக்கப்பட்டது எனப்பட்டது. மனுதாரர் விண்ணப்பத்தைக் கையெழுத்தினால் சமர்ப்பித்துள்ளதுடன், விண்ணப்பிக்கும் பொழுது அவர் சபைச் சான்றுபடுத்தலுக்குத் தகுதியானவராக இருந்தார் என்பதுவும் குறிப்பிடப்படாததினால் விண்ணப்பம் பூரணமற்றது எனக் கருதிய நீதிமன்றம் இதனை சட்ட முறையான எதிர்பார்ப்பாகக் கொள்ள முடியாது எனக் கண்டது.

இந்த இரண்டு வழக்குகளிலும், மனுதாரர்கள் தாம் விண்ணப்பித்த பதவிகளுக்கு பதிலாகக் கடமை புரிந்துள்ளார்கள் என்பது தெளிவாக விளங்குகின்றது. இந்தக் காரணம், வழங்கப்பட வேண்டிய நிவாரணம் தாக்கம் செலுத்துமளவு மறுக்கப்பட்ட ஏனைய பிரதிபயன்களுக்கு எதிர்மாற்றுச் சுமையாகும்.[34]

---

[34] உரிமை ஒன்று சட்டமுறையற்றதாகவிருந்தால் அது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படக் கூடாது என பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நீதிமுறையான தீர்ப்புக்காக - *அமுன்புர சீலவங்ச தேரர் மற்றும் ஏனையவர்கள் எதிர் அரசாங்க சேவை ஆணைக்குழு மேலதிகச் செயலாளர் மற்றும் ஏனையவர்கள்*, உ.நீ.(அ.உ) உயர் நீதிமன்ற அடிப்படை உரிமை மனு இலக்கம் 575/2003, 2004.11.23 ஆம் திகதிய (உ.நீ) குறிப்பு மற்றும் அப்துல் முத்தலிப் பாரூக் எதிர் ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு (அ.சே.ஆ.) தலைவர் மற்றும் ஏனையவர்கள், உ.நீ.(அ.உ) உயர் நீதிமன்ற அடிப்படை உரிமை மனு இலக்கம் 508/2002, 2004.10.25 ஆம் திகதிய (உ.நீ) குறிப்பு என்பவற்றைப் பார்க்க.

4. மதம் மாற்றம் தொடர்பில் 2004ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கள்

கடந்த ஆண்டுகளில், சமயக் கட்டளைகளைக் கூட்டிணைக்க நாடும் சட்டமூலங்களின் அரசியலமைப்புத் தன்மையை நிர்ணயிக்கும் பொருட்டு உயர் நீதிமன்றம் கோரப்பட்டதன் பேரில், நடைமுறையில் குடியரசு நாட்டில் பௌத்த மதத்திற்கு முதலிடமளிக்கும் அரசியலமைப்பின் 9ஆம் உறுப்புரையின் மேலாதிக்கத்தின் மீது அழுத்தமுடைய குறிப்பிட்ட கோட்பாடுகளை நீதிமன்றம் விதித்தது.

உதாரணமாக, 'இலங்கை மென்ஸின்ஜன் புனிதர் பிரான்ஸிஸ் மூன்றாம் கட்டளைப் புனிதச் சிலுவை மாகாணப் போதனா அருட்சகோதரிகள் தலைப்பிலான ஒரு (கூட்டிணைப்பு) சட்டமூலம்'[35] சிந்தனை, மனசாட்சி மற்றும் மதம் ஆகியவற்றுக்கான சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்தும் அரசியலமைப்பின் 16 ஆவது உறுப்புரைக்கு மாத்திரமன்றி 09 ஆவது உறுப்புரைக்கும் முரண்படாத வகையில் உரோமன் கத்தோலிக்கக் கட்டளை ஒன்றைக் கூட்டிணைக்க நாடும் தனிநபர் சட்டமூலம் ஒன்றினை நீதிமன்றம் கண்டது. ஒருவர் சொந்த மதத்தைப் பிரசாரப்படுத்தவும், அனுட்டிக்கவும், பின்பற்றவும் அரசியலமைப்பு உத்தரவாதப்படுத்தும் வேளையில், கிறிஸ்தவ மதத்தைப் பிரசாரப்படுத்தல், பரப்புதல் நடவடிக்கையானது வழக்கில் இருக்கும் பௌத்த மதத்தையும் புத்தசாசனத்தையும் அவமானப்படுத்துவதாக அமையும் என்பதால் அதற்கு அனுமதிக்க

[35] 19/2003 ஆம் இலக்க உ.நீ. தீர்ப்பு - (கலாநிதி) ஷிராணி பண்டாநாயக்க, எச்எஸ் யாப்பா மற்றும் நிஹால் ஜயசிங்க ஆகியோரை உள்ளிட்ட நீதிபதிகள் குழாம்.

முடியாது என நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினர்.[36] ஒவ்வொரு பிரசையும் தானாகவோ அல்லது ஏனையவர்களுடன் இணைந்தோ அல்லது பொதுவாகவோ அல்லது தனியாகவோ தன் மதத்தைப் பிரசாரப்படுத்தும் அல்லது வணக்க நம்பிக்கையை ஏற்படுத்தும், அனுட்டிக்கும், பின்பற்றும், போதிக்கும் சுதந்திரத்தை உரித்தளிக்கும் பேரிலான 14(1) (உ) உறுப்புரை தாக்கத்தினைக் கொண்டுள்ளதா என இத்தீர்ப்புகளில் ஆராயப்பட்ட விடயம் கடந்த காலத்தையளாவிய ஒரு திருப்புமுனையாக மாறியது. மீளாய்வு ஆண்டானது சட்ட வரையறையினுள் விளங்கப்படுத்துமுகமாக நீடித்த அதிகரித்த சமய கருத்து மோதலொன்றைத் தெளிவுபடுத்தியது. "கட்டாய மதமாற்றல் தடுப்பு" சட்டமூலம் ஒன்றின் அரசியலமைப்புத் தன்மையை நிர்ணயிக்கும் பொருட்டு வருடத்தின் நடுப்பகுதியில் உயர் நீதிமன்றம் கோரப்பட்டது. நிர்ப்பந்தித்தல் அல்லது வசீகரித்தல் அல்லது மோசடிகள் ஆகிய வழிகளைப் பயன்படுத்தி ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மதம் மாற்றும் நடவடிக்கையையும் அதனுடன் சம்மந்தப்பட்ட அல்லது அதன்பாலான இடைநேர் சம்பவங்களையும் தடுப்பதற்குரிய ஏற்பாட்டிற்கு ஏனையவற்றுக்கிடையில் நோக்கமும் குறிக்கோள்களும்

---

[36] மக்கள் சுயதொழில்களை அடையும் அல்லது தொழில்வாய்ப்புக்களைப் பெறும் வகையில் அவர்களை இயலுமாக்கி அவர்களுக்கு உதவுதலை தன் குறிக்கோள்களுக்கு மத்தியில் உள்ளடக்கிய வணக்க நிலையம் ஒன்றை அமைக்க நாடிய *கிறிஸ்துவ சஹறனாய தொறட்டுவ வணக்க (கூட்டிணைந்த) நிலையம்* எனும் தலைப்பிலான சட்டமூலம் ஒன்று தொடர்பில், அது அரசியலமைப்பின் 10ஆம் உறுப்புரைக்கு முரணாக விளங்கியது எனக் கண்டு பிரதம நீதியரசர் சரத் சில்வா, சிராணி பண்டாரநாயக்க, அமீர் இஸ்மாயில் ஆகியோரை உள்ளிட்ட நீதிபதிகள் குழாம் ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட 2/2001 ஆம் இலக்க உ.நீ. தீர்ப்பு. சிந்தனை, மனச்சாட்சி, மதம் ஆகியவற்றுக்கான சுதந்திர விடயத்தில் இணைகின்ற குறித்த உணர்வினை எடுத்துக் காட்டி, ஒரு மதத்தைப் பின்பற்றல் மற்றும் அனுட்டித்தல்களுக்கு, காணக்கூடிய வர்த்தக, பொருளாதாரச் செயற்பாடுகளை இணைத்தல் அரசியலமைப்பு நடைமுறைகளுக்கு முரணானதாக அமையும் என நீதிமன்றம் கருத்து வெளியிட்டது. இது தொடர்பில் அதையொத்த நீதிமுறைக் கருத்துகளுக்கு *நியூவைன் ஹார்வெஸ்ட் மினிஸ்ட்ரீஸ்* எனும் தலைப்பிலான சட்டமூலம் ஒன்று தொடர்பில் பிரதான நீதியரசர் சரத் நந்த சில்வா மற்றும் எச்எஸ் யாப்பா, ரீபீ விஜேசூரிய ஆகியோர் உள்ளிட்ட நீதிபதிகள் குழாம் ஒன்றினால் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பான 2/2003 ஆம் இலக்க உ.நீ. விசேட தீர்ப்பையும் பார்க்க.

மேலோங்கியிருக்க வேண்டும் என எடுத்துரைக்கப்பட்டது [37] பிரதானமாக உண்மையான மதமாற்றங்களின் விளைவாக வாசகங்களின் விசாலத்தன்மை துஷ்பிரயோகிக்கப்படும் சாத்தியம் அதிகரித்தாலும் நேர்மையான நம்பிக்கை மாற்று நடவடிக்கை ஒன்றும் எடுத்துரைக்கப்படுகின்றது எனும் பேரில் சட்டமூலத்தின் அரசியலமைப்புத் தன்மைக்குச் சவாலாக இருபத்தொரு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.[38]

சட்டமூலத்திற்கு ஆதரவளித்த இருபத்தொரு எதிர்வாத மனுக்களையும் ஒன்றாகச் சேர்த்து இச்சவால்களை ஆழ்ந்து ஆராய்ந்த தீர்மானத்தில் நீதிமன்றம் அதன் ஒருசில வாசகங்களை நீக்கி அரசியலமைப்பிற்கு முரணானது எனப் பிரகடனப்படுத்திய வாசகங்களுக்கு மத்தியில் காணப்பட்ட வாசகங்கள், வாசகங்களான 3(அ) மற்றும் 3(ஆ) இன்னும் அதற்கு அவசியமாக தொடர்ந்து வரும் வாசகங்கள் நடைமுறைப்படுத்தலுடன் சம்மந்தப்படுகின்ற வாசகம் 4(ஆ) ஆகிய வாசகங்கள் ஆகும். அவ்வாசகங்கள் அத்தகைய மதமாற்றச் சட்டங்களை, ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறும் உண்மையினை பிரதேச செயலாளருக்கு அறியப்படுத்த "மதம் மாறுபவர், மதமாற்றும் கர்த்தா, சாட்சி ஆகியோரைத் தேவைப்படுத்தும். ஒருவர் தன் விருப்பில் சமயம் ஒன்றை தன்வசம் கொள்ள, அல்லது மதத்தை நம்ப அல்லது பின்பற்ற சுதந்திரம் உள்ளதுடன் ஒவ்வொருவருக்கும் சிந்தனை, மனசாட்சி ஆகியவற்றுக்கான சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்தும் 10ஆவது உறுப்புரையை மீறும் பொருட்டில் கட்டளையிடப்பட்டது. எனவே அரசியலமைப்பின் 84(2)ஆம் உறுப்புரை மூலம் விவரிக்கப்பட்டவாறான விசேட பெரும்பான்மையால் அவ்வாசகங்கள் நிறைவேற்றப்படவும் இன்னும் அரசியலமைப்பின் 83(அ) உறுப்புரை மூலம் ஆணை வழங்கும் மக்கள் தீர்ப்பு ஒன்றினால் அங்கீகரிக்கப்படவும் தேவைப்படுத்தப்படுகின்றன.

---

37 2-222/2004 ஆம் இலக்கங்களையுடைய உ.நீ. விசேட தீர்ப்புக்கள் - ரீபீ விஜேசூரிய, என்ஈ திஸாநாயக்க, ராஜா பெர்னாந்து ஆகியோரை உள்ளிட்ட நீதிபதிகள் குழாம்.

38 "நிர்ப்பந்தித்தல் அல்லது வசீகரித்தல் அல்லது மோசடி வழிகள் மூலம் கடுமையான வலுகட்டாய மத மாற்றல் அச்சுறுத்தலுக்கு இன்று பௌத்தர்களும், பௌத்தர் அல்லாதோர்களும் ஆளாகி வருகின்றனர் என மேலும் சுட்டிக்காட்டி 09-ஆம் உறுப்புரையின் மேலாதிக்கத்திற்கான பொதுவான ஒரு குறிப்பை சட்டமூலம் அதன் முகவுரையில் கொண்டிருந்தது.

'சட்டத்தரணிகளையும்' இன்னும் 'அமைச்சர் அதிகாரமளித்த ஏதேனும் ஆளொருவரையும்' உள்ளடக்கி, வாசகங்கள் மீறல் எனும் பேரிலான குற்றச்சாட்டு ஒன்று தொடர்பில் நீதிமன்ற நீதிவான் ஒருவர் முன்னிலையில் வழக்குகளைத் தாக்கல் செய்ய குறித்த பகுதி ஆட்களுக்கு தன்னிச்சையாக மரபுரீதியில் உரித்தளிக்கப்பட்ட தத்துவத்தின் பேரில் சட்டமூலத்தின் ஐந்தாம் வாசகம் எதிர்க்கப்பட்டது. உறுப்புரை 12(1) ஐ தன்னிச்சையான நியாயபூர்வமற்ற வகையில் மீறுகின்றது என வாசகம் தீர்மானிக்கப்பட்டது. ஏதேனுமொரு வழக்குத் தாக்கல் நடவடிக்கை குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டத்தின் 136ஆம் பிரிவிற்கிணங்கவும் சட்டமா அதிபரின் எழுத்திலான அனுமதிக்கமையவும் இருக்க வேண்டுமெனச் சிபாரிசு செய்யப்பட்டது.

மீண்டும், சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்தி நிறைவேற்றுவதற்கான நியதிகளை அல்லது ஒழுங்குவிதிகளை அமைச்சர் ஆக்கலாம் எனக் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் ஆறாவது வாசகமும் அரசியலமைப்பின் 76(1)ஆம் உறுப்புரையை மீறுவதாக அமைந்தது என்றும் அதில் அதிகமான அகல்தன்மையும் தெளிவின்மையும் காணப்பட்டது என்றும் தீர்மானிக்கப்பட்டது.[39]

வசீகரித்தல், நிர்ப்பந்தித்தல், மோசடி வழிகள் என்பன எதனைக் கருதின எனும் விளக்கப் பதங்களை சட்டமூலத்தின் எட்டாம் வாசகம் உள்ளடக்கியிருந்தது. எவரும் நிர்ப்பந்தித்தல் அல்லது வசீகரித்தல் அல்லது ஏதேனும் மோசடி வழிகளில் ஒரு நபரை ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மதம் மாற்றவோ அல்லது மதம் மாற்ற எத்தனிக்கவோ கூடாது எனவும் இன்னும் ஏதேனுமொரு நபர் அத்தகைய மதமாற்றல் நடவடிக்கைக்குத் துணை போகவோ

[39] பாராளுமன்றம் அதிகாரத்தைத் துறக்கவோ அல்லது ஏதேனும் வழியில் அதன் சட்டவாக்கத் தத்துவத்தைப் பாராதீனப்படுத்தவோ கூடாது என்பதற்கும் இன்னும் அது ஏதேனும் சட்டவாக்கத் தத்துவமொன்றின் மூலம் ஏதேனுமொரு அதிகாரத்தை ஏற்படுத்தவோ கூடாது என்பதற்கும் பயனுள்ளதாக இவ்வரசியலமைப்பு உறுப்புரை விளங்குகின்றது.

கூடாது எனவும் எடுத்துரைக்கும் சட்டமூலத்தின் இரண்டாம் வாசகத்துடன் தவிர்க்க முடியாததாக அது இணைக்கப்பட்டது.[40] 2ஆம் வாசகத்தின் அரசியலமைப்புத் தன்மையை நீதிமன்றம் அங்கீகரித்ததுடன் 'நிர்ப்பந்தித்தல்' இன்னும் 'மோசடி வழிகள்' எனும் பதங்கள் ஏற்கனவே குற்றவியல் தண்டனைக் கோவையில் விவரிக்கப்பட்டிருப்பதால் அவற்றை சட்டமூலத்தில் உள்ளடக்குதல் அதி விசேட முக்கியத்துவமல்ல எனும் கருத்தையும் வெளியிட்டது. எனினும், அது 'வலுகட்டாய' மத மாற்றல் பிரச்சினை தொடர்பில் குறிப்பாக வரவழைக்கப்பட்ட முக்கியமான புதிய ஒரு பதமாக விளங்கிய "வசீகரித்தல்" எனும் பத உள்ளடக்கம் பற்றி விமர்சிக்கவில்லை.

கட்டளையில் எட்டாவது வாசகத்திற்கு வலுவுள்ளதாக அமையும் எனும் குறித்த திருத்தங்களை சிபாரிசு செய்யும் வேளையில், சட்டமூலத்தின் அடிப்படைக் குறிக்கோள்கள் தொடர்பில் விவரிக்கப்படல் வேண்டுமெனும் விளக்கப் பதங்கள் அரசியலமைப்பிற்கு முரணாக நிலவி வருகின்றன என நீதிபதிகள் மேற்படி வாசகங்களை அங்கீகரிக்கவில்லை. வாசகங்களான 8(அ), 8(இ) மற்றும் 8(ஈ) ஆகிய வாசகங்களில் காணப்படும் 'தவறான தூண்டுதல்' எனும் பதத்திற்குப் பின்னால் ஒரு நபர் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறுவதற்கான நோக்கத்தின் இடைச்செருகல் அவசியத்தினை இச்சிபாரிசுகள் உள்ளடக்கிக் காணப்பட்டன. அது தவிர, வாசகம் 8(ஈ)இல் உட்சேரும் பதத்தின் பின்னால் 'வேண்டுமென்று' எனும் பதத்தின் இடைச்செருகலின் அவசியத்தினையும் அது சிபாரிசு செய்தது.

(இந்நோக்கத்திற்காக உளரீதியாகப் பலவீனமடைந்தோர் அடங்கலாக அட்டவணையில் வகுப்பீடு செய்யப்பட்ட ஏனைய

---

[40] பணரீதியில் அல்லது வேறு வகையில் ஏதேனும் அன்பளிப்பு அல்லது பாராட்டு வடிவில் ஏதேனும் தூண்டுதல் அளித்தல் இன்னும் வேறு வழியில் தொழில் அல்லது தொழிலில் பதவியுயர்வு வழங்குதல் ஆகியன வாசகம் 8(அ)(i) மற்றும் (ii) ஆகியவற்றில் 'வசீகரித்தல்' என விவரிக்கப்பட்டுள்ளது:. பலம் ஒன்றைப் பிரயோகித்தல், ஏதேனுமொரு வழியிலான அச்சுறுத்தல் அல்லது தீங்கு விளைவித்தல் அல்லது காயப்படுத்தல் மூலமான ஒரு செயல், மத அதிருப்தி மூல அச்சுறுத்தல், இன்னும் ஏதேனும் மதத்தை அல்லது மத நம்பிக்கையைத் தூசித்தல் ஆகியன வாசகம் 8(இ) இல் 'நிர்ப்பந்தித்தல்' என விவரிக்கப்பட்டுள்ளது:. 'தவறான அர்த்தம் கொள்ள வைத்தல்' அல்லது 'ஏதேனும் பிற மோசடி உபாயம்' உள்ளிட்ட செயல்கள் வாசகம் 8(ஈ) இல் "மோசடி வழிகள்" என விவரிக்கப்பட்டுள்ளது.

நபர்கள் பகுதியொன்றையும் இன்னும் சிறுபான்மையினரையும் உள்ளிட்ட) பெண்களை உள்ளடக்கும் சட்டமூலத்தின் நான்காம் வாசகத்திற்கான ஏற்பாடு தொடர்பில் சில மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட வாதமொன்றும் காணப்பட்டதுடன் 2ஆம் பிரிவை மீறும் வகையில் யாரேனும் தொடர்பில் குறிப்பீடு செய்யப்பட்ட அதிகபட்சத் தண்டணையானது நவீன நியதிச் சட்டமொன்றில் எதுவித இடத்தையும் வகிக்காத வழக்கொழிந்த வித்தியாசம் ஒன்றாகவும் காணப்பட்டது. எனினும், நீதிமன்றம் அதற்கு உடன்பட விரும்பவில்லை. நீதிபதிகள் தமது கருத்திற்கு ஆதரவாக (பெண்களின் முன்னேற்றத்திற்கான துணைச் சட்டம் ஆக்கப்படுவதற்கான விசேட ஏற்பாட்டை அனுமதித்த) அரசியலமைப்பின் 12(4) ஆம் உறுப்புரையை எடுத்துக் காட்டினர். பெண்கள் முன்னேற்ற வாதம் தன் தாழ்வுக்கெதிரான எதிரொலிகள் மூலம் வாதித்துத் தர்க்கித்த உள்ளடக்க விடயம் ஆண்களுக்கெதிரான பெண்களின் கிரகித்தறியும் ஆற்றல்களைக் காரணமாக வைத்து உத்தரவாதப்படுத்த முடியாது என்பதற்கான எதிர்வாதம் துரதிஷ்டவசமாக நீதிமுறைப் பரிகாரத்தைக் கண்டுகொள்ளவில்லை.

ஏனையவற்றுக்கிடையில் குடியரசு நாட்டின் உத்தியோகபூர்வ மதமாக பௌத்த மதத்தை ஆக்க நாடும் 'அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம்' எனும் தலைப்பிலான சட்டமூலம் தொடர்பில் மற்றுமொரு நீதிமன்றத் தீர்ப்பும் ஆண்டின் இறுதிப் பகுதியில் பிரகடனப்படுத்தப்பட்டது.[41] இச்சட்டமூலம் குடியரசு நாட்டின் உத்தியோகபூர்வ மதமாக பௌத்த மதத்தை ஆக்கிய (பௌத்த மதத்திற்கு முதலிடமளிக்கப்பட்டிருக்கின்றது என எதிர்த்து) அரசியலமைப்பின் 11ஆம் அத்தியாயத்தை நீக்கி (09ஆவது உறுப்புரையை வலுப்பெறச் செய்யும் வகையில்) அதற்குப் பதிலாக புதிய ஒரு அத்தியாயத்தைப் பிரதியீடு செய்தல் வேண்டுமென நாடியது. அது மேலும் 'புத்த சாசனத்துடன் சமாதானமாகவும், ஒற்றுமையாகவும் ஏனைய மதங்களையும் வணக்க வழிபாடுகளையும் பின்பற்றலாம்' என்றும் குறிப்பீடு செய்துள்ளது. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் மக்கள் தீர்ப்பொன்றின் மூலமான அங்கீகாரத்தையும் தேவைப்படுத்துகின்ற சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது என நீதிமன்றம் தீர்மானித்து அரசியலமைப்பின் 09ஆம் உறுப்புரையை நீக்க வேண்டிக் கொண்டது.

---

[41] உநீ தீர்ப்பு இல. 32/2004. நீதிபதிகளான ரி.பி. வீரசூரிய, ஷிராணி திலக்கவர்த்தன மற்றும் ராஜா பர்ணான்டோ என்பவர்களை உள்ளடக்கிய நீதிபதிகள் குழாம்.

5. அரசியலமைப்பின் 140ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கப் பரப்பில் அதன் நீதி முறைப் பொறுப்புகள்

மீளாய்வுக் காலத்தின் போது, அரசியலமைப்பின் 140ஆம் உறுப்புரையின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட எழுத்தாணை விண்ணப்பங்கள் பெருமளவில் அதிகரித்தன. பொதுவாக இவ்வாறான வழக்குகள் அடிப்படை உரிமை மீறல்கள் சம்பந்தமானவையாக இருந்தன. -சில அதிக சிக்கலானவை- அடிப்படை உரிமை மீறலுக்கு எதிரானதாக பொதுவாக இருப்பினும் எழுத்தாணை விண்ணப்பங்களின் உள்ளடக்கம் சட்ட உரிமை தொடர்பானவையாக இருந்தன. அடிப்படை உரிமைகள் பாதுகாப்பு மற்றும் எழுத்தாணை நிவாரணங்களினை வேண்டுதல் எனபவற்றுக்கிடையிலான உள்ளகத் தொடர்பு மிகவும் உறுதியாகியுள்ளது. அடிப்படை உரிமைகள் தொடர்பான அரசியல் அமைப்புப் பாதுகாப்பு தொடர்பான நீதிமுறை அவதானங்களினால் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் எழுத்தாணை நியாயாதிக்கம் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது சிறந்த அபிவிருத்தியைக் காட்டுகின்றது.

1995இல், பெரேரா எதிர் எதிரிசிங்க[42] வழக்கில் அரசியலமைப்பின் 126(3)ஆம் உறுப்புரையினால் தோற்றுவிக்கப்பட்ட எழுத்தாணை நியாயாதிக்கம் மற்றும் அடிப்படை உரிமைகள் என்பவற்றிற் கிடையிலான தொடர்பு என்ற கோட்பாடு எடுத்துக்காட்டப்பட்டது. அடிப்படை உரிமை மறுப்பொன்று சான்றாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் எழுத்தாணை விண்ணப்பமொன்றினை கேட்பதற்கான காரணம் முறையாக எழ முடியும். அத்தகைய விண்ணப்பம் உயர் நீதிமன்றத்தினால் பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

[42] (1995) 1 இசஅ 148 நீதிபதி மார்க் பர்ண்னான்டோவின் தீர்ப்பு 156 ஆம் பக்கம்

நியாயம் மற்றும் சமத்துவம் எனக் கருதக்கூடியவாறான அத்தகைய நிவாரணங்களை வழங்கலாம் அல்லது அத்தகைய பணிப்புரைகளை விடுக்கலாம்.[43]

இந்த வழக்கில் அத்தகைய நிகழ்வுகளை கவனத்தில் கொள்வதானது நீதிமுறையாக சிந்திக்கப்பட்டுள்ளது. எழுத்தாணை நியாயாதிக்கத்தினை நீதிமன்றம் தொடர்ந்தும் கொண்டிருந்த பொழுதிலும், மீளாய்வு மற்றும் நிவாரணம் தொடர்பான அதன் அதிகாரங்கள் பழைய உயர் உரிமை எழுத்தாணைகளுக்கு மட்டுப்படுத்தப்படக்கூடாது. இதற்கு முறையாக அரசியலமைப்பு கோட்பாடுகளும் அதன் ஏற்பாடுகளும், நிருவாகத் தற்றுணிபினையும் அதிஉயர் தன்மையையும் கட்டுப்படுத்தியுள்ள அதேவேளை ஆணையீட்டு எழுத்தாணைக்கு பொதுப்பணிகளின் இயல்பு மற்றும் நோக்கெல்லையை விரிவாக்கல் மற்றும் நீதித்துறை மீளாய்வு, நிவாரணங்களின் நோக்கெல்லை போன்றே பிழையான செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்களுக்கு யாதுரிமை எழுத்தாணை தடையுத்தரவு எழுத்தாணைக்குட்பட்ட விடயங்களும் விரிவாக்கப்படடுள்ளன.[44]

---

43 உறுப்புரை 126 (3) இவ்வாறு குறிப்பிடுகின்றது: *ஹேபியஸ் கோர்பஸ், யாதுரிமை எழுத்தானை, தடைப்பேரானை, தொடரப்பணிக்கும் பேரானை, ஆணையீட்டெழுத்தானை அல்லது உரிமை வினாப் பேரானை* போன்ற எழுத்தானைகளில் இயல்பிற்கேற்ப மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றினை விசாரிப்பதற்கான காரணம் எழும்போது அத்தகைய விண்ணப்பத்திற்கான திறத்தவரொருவரினால் அத்தியாயம் III அல்லது அத்தியாயம் IV இன் ஏற்பாடுகளின் வரம்பு மீறல் ஒன்று அல்லது வரம்பு மீறலையொத்த ஒன்று என முகத்தோற்றச் சான்றினை நீதிமன்றம் காணும்போது அத்தகைய நீதிமன்றம் விடயத்தை உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றின்பால் சார்த்துதல் செய்தல் வேண்டும்.

44 இந்தத் தீர்ப்பில் நீதிபதி பர்னான்டோவின் நியதிச் சட்டம் அல்லது ஒழுங்கு விதியினைப் போலவே பொதுவான சட்டத்துக்கு வெளியே உரிமையொன்று எழ முடியும் என்ற கூற்று குறிப்பிடத்தக்கதாகும். பொதுச் சட்டமொன்றினால், நியதிச் சட்டத்தினால் அல்லது ஒழுங்கு விதியினால் உரிமையொன்று உத்தரவாதமளிக்கப்படாவிட்டாலும் உறுப்புரை 12(1) சமத்துவம் மற்றும் சமமான நடத்தையினை உறுதிப்படுத்துவதை அவர் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளதைப் பார்க்கவும். இது உறுப்புரைகளான 3 மற்றும் 4(ஈ) இன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வழக்கின் விடயங்களைப் பொறுத்தவரை, உறுப்புரை 12 உடன் சேர்த்து வாசிக்கப்படும் விதிகள் மற்றும் பரீட்சை என்பன, பல்கலைக்கழகப் பட்டமொன்றினை வழங்குவதற்குப் பரீட்சார்த்தி உரிய தகுதியைப் பெற்றுள்ளார் என்ற உரிமையையும் அத்தகைய பட்டத்தினை எவ்வித பாரபட்சமுமின்றி வழங்குவது பல்கலைக்கழகமொன்றின் கடமையாகும் என்பதையும் வலியுறுத்துகின்றன.

2004இன் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றில்,[45] மேற்சொன்ன விடயம் மிகத்தெளிவாக ஆராயப்பட்டுள்ளது. நீதிபதி மார்க் பர்ணான்டோ இதனை திரும்பத் திரும்ப இவ்வாறு கூறுகிறார்.

> உறுப்புரை 140இனால் நீதித்துறையானது விளக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் "உரிமை பெற்ற" எழுத்தாணைகள் அல்லது "அதிவிஷேடமான நிவாரணங்கள்" என்பவற்றை வரையறுக்கவில்லை. ஆனால், யாதுரிமை போன்ற எழுத்தாணைகளின் இயல்புகளை ஒழுங்குபடுத்துவதற்கு அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்குட்பட்டதாக இருக்கின்றது.
>
> எமது அரசியலமைப்புக் கொள்கைகள் மற்றும் ஏற்பாடுகளின் உள்ளடக்கத்தை எடுத்துக்கொண்டால், இந்த "ஒழுங்குபடுத்தல்கள்" நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்துதல் மற்றும் துஷ்பிரயோகம் செய்தல் என்பவற்றிற்கு எதிரான பாதுகாப்பரண்களில் முக்கியமானவையாக விளங்குகின்றன. நிறைவேற்றுத் துறையினால் மேற்கொள்ளப்படும் அத்துமீறல் அல்லது தலையீடுகளுக்கு எதிரான உறுப்புரை 03 இனால் பாதுகாக்கப்படும் மக்கள் இறைமையை காப்பதற்கு முடியினாலும் அதன் முகவர்களினாலும் வழங்கப்படாத எந்த பாதுகாப்பையும் வழங்க நீதித்துறை பொறுப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியர் விசகுந்தரம் குணானந்தன் எதிர் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் ஏனையவர்கள்[46] வழக்கில் பல்கலைக்கழகங்கள் சட்டம் மற்றும் பொது நம்பிக்கைக் கேட்பாட்டு நியதிகளுக்கமைவாக பல்கலைக்கழக நியமனங்களின் பின்னணியில் நீதியாகவும், பக்கச்சார்பற்ற முறையிலும் செயற்பட வேண்டுமென பல்கலைக்கழக அதிகாரிகள் மீது விதிக்கப்பட்டுள்ள பொதுப் பணியை நீதிமன்றம் கலந்துறையாடியது. இந்த வழக்கில் சத்திர சிகிச்சைக்கு வருகை தரும் பேராசிரியர், யாழ் பல்கலைக்கழக சத்திர சிகிச்சைத் துறை முன்னாள் தலைவரும்,

---

[45] குறிப்பு 30இனைப் பார்க்க. தீர்ப்பின் 13ஆம் பக்கம்.

[46] மே.மு.நீ (எழுத்தாணை) விண்ணப்ப இல. 1559/2003 மே.மு.நீ அறிக்கைகள் 01.16.2004 நீதிபதி சலீம் மர்ஸூப் உடன் (தலைவர் / மே.மு.நீ) நீதிபதி எஸ் ஸ்ரீஸ்கந்தராஜாவின் தீர்ப்பு இந்தத் தீர்ப்பு தற்பொழுது உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டிலுள்ளது.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை நரம்பியற் துறை மதிப்பு ஆலோசகருமான ஒருவர், குறித்த பல்கலைக்கழகத்தில் நிரந்தர பதவியொன்று வழங்கப்படுவதாக உறுதியளித்து விடுக்கப்பட்ட அழைப்பினால் நாட்டுக்குத் திரும்பினார்.

பல்கலைக்கழத்தில் வருகைதரு பேராசிரியராக அவரது ஒப்பந்தம் காணப்பட்டு ஐந்து வருடங்களுக்கு மேலாக மீண்டும் நீடிக்கப்பட்டிருந்த பொழுதிலும் நிரந்தர பதவிக்கான அவரது விண்ணப்பம் ஏனைய அனைத்து வகையிலும் அவர் சிறந்த தகைமையைக் கொண்டிருந்ததுடன் குறித்த பதவி நிரப்பப்படாது தொடர்திருந்த சந்தர்ப்பத்திலும் மருத்துவ வெளிவாரிப் பட்டப்படிப்பு நிறுவகத்தினால் (PGIM) சபைச் சான்றிதல் பெறப்பட்டிருக்கவில்லை என்ற காரணத்தினைச் சுட்டிக்காட்டி தொடர்ந்தும் நிராகரிக்கப்பட்டது.

மனுதாரரினை உடனடியாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சத்திரசிகிச்சை துறை முதலாம் தர சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிக்கு நியமிக்குமாறு 1ஆம் எதிர்வாதியிலிருந்து 6ஆம் எதிர்வாதி வரைக்கும் பணிக்கும் ஆணையீட்டெழுத்தாணை ஒன்றினை வழங்குகையில் மேன்முறையீட்டு நீதிமன்றமானது, வெளிவாரிப் பட்டப்படிப்பு நிறுவகம் கொழும்பு பல்கலைக்கழக மூதவையின் உறுதிப்படுத்தலுக்குட்பட்டு, சபைச் சான்றிதழ் சிறப்புரிமையை வழங்குவதற்கு தீர்மானித்திருந்ததினை குறிப்பிட்டுக்காட்டியது. உயர் கல்வி நிறுவகங்களில் பதவியினரை நியமனம் செய்வதற்கான ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் நடபடிகளை துணைவிதிகளினால் கட்டளைச் சட்டத்தினை தயாரிப்பதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும்கூட மனுதாரரினை முதலாம் தர சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிக்கு நியமனம் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது இந்த வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலையில், நீதிமன்றமானது சபைச் சான்றிதழினை இன்றியமையாத முற்தேவைப்பாடொன்றாகக் கருதவில்லை என்பதுடன் மனுதாரர் அவரது நியமனத்திற்கு தகுதியுடையவர் எனப் பிரகடனப்படுத்தியது.

இந்த வழக்கானது அரசினால் செய்யப்பட்ட மறுப்புக்களைத் தள்ளுபடி செய்யும் நீதித்துறை தரத்தினை அறிவுறுத்துவதாக அமைகின்றது. அதாவது, மனுதாரரின் முறைப்பாடு பல்கலைக்கழகத்துடனான அவரது ஊழிய ஒப்பந்தத்தில் இருந்து எழுவதனால் எழுத்தாணை அதனை மறுத்துரைக்கவில்லை. மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆரம்பத்தில்

(நீதிபதி பீ.வி ஐயரத்ணவின் கட்டளை) பாதிக்கப்பட்டவருக்கு இடைக்கால நிவாரணக் கட்டளை ஒன்றை வழங்கியது. அதாவது, பொருத்தமான ஒருவர் அவ்விடத்திற்கு நியமிக்கப்படும் வரை மனுதாரர் நியமிக்கப்படுதல் வேண்டும் எனப்பட்டது. இந்த விடயம் ஊழிய ஒப்பந்தமொன்றுடன் தொடர்புள்ளபோதும், இந்த ஒப்பந்தம் பல்கலைக்கழக சட்ட ஏற்பாடுகளுக்கும் ஏற்புடையதாக இருப்பதுடன் மனுதாரரின் சட்டமுறையான எதிர்பார்ப்பையும் நியதிச் சட்டரீதியாகக் கோருவதற்கு முடியுமாக இருக்கிறது. எனவே இந்த கட்டளை எழுத்தாணை ஒன்றினை வழங்குவதன் மூலம் திருத்தப்பட முடியுமாக இருந்தது.[47]

2004ஆம் ஆண்டின் போது நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட சில முடிவுகளில் பல்கலைக்கழக ஒழுக்க விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டன. பொதுவான சில மனுதாரர்கள் சம்மந்தப்பட்ட இரண்டு குறிப்பிட்ட வழக்குகளில் வித்தியாசமான நீதித்துறை நோக்குகள் சான்றுபடுத்தப்பட்டன. பல்கலைக்கழக மாணவர்கள் வைத்தியர் ஒருவரையும், பெண் தாதிகளையும் தாக்கியது உட்பட ஒழுக்கக்கேடான இரண்டு நிகழ்வுகளுக்கு குற்றம் சாட்டப்பட்டனர். இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது அவர்களது உரிமை இயற்கை நீதிக்கு

---

[47] 2003.12.19ஆந் திகதிய இடைக்காலக் கட்டளை இந்த முழுமையான தீர்ப்பில் நீதிமன்றம் *டபிள்யு கே சீ பெரேரா எதிர் பேராசிரியர் தயா எதிரிசிங்க மற்றும் ஏனையவர்கள்* வழக்குத் தீர்ப்பு எடுத்துக் காட்டப்பட்டது. குறிப்பு 42 இனைப் பார்க்க. *ஹரீதர் முன்தி எதிர் மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் ஏனையவர்கள்.* குறிப்பு 30 மற்றும் 45இனைப் பார்க்க. தீர்ப்பு வழங்கப்பட்ட விடயங்களுடன் தொடர்பான காலத்தின்போதான தீர்வுகளில் முழுதுமாக ஒப்பந்த விடயங்களைச் சார்ந்ததாகவே இருந்தது. நீதிமன்றத்தின் எழுத்தாணை நியாயாதிக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை. *கலபத்தி மற்றும் ஏனையவர்கள் எதிர் கல்வி அமைச்சர் மற்றும் ஏனையவர்கள்.* மே.மு.நீ. (எழுத்தாணை) விண்ணப்ப இல. 1033/98இ மே.மு.நீ அறிக்கைகள் 2004.07.16 காமினி அமரதுங்க நீதிபதி. *எச் எம் ஐ கருணாரத்ன எதிர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஏனையவர்கள்.* மே.மு.நீ (எழுத்தாணை) விண்ணப்பம், மே.மு.நீ அறிக்கைகள் 2004.01.21 பீ விஜயரத்ன நீதிபதி. *ஷாமல் தர்ஷினி பர்ணாந்து எதிர் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை மற்றுமொருவர்,* மே.மு.நீ (எழுத்தாணை) விண்ணப்ப இல. 737/2002, மே.மு.நீ அறிக்கைகள் 2004.07.08, பீ விஜயரத்ன நீதிபதி.

முரணான வகையில் மீறப்பட்டது எனப்பட்டது. அதாவது:

(அ) விசாரணையின் போது சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பரீட்சிப்பதற்கான உரிமையும் அவர்களுக்கெதிரான சான்றுகளை வழங்கும் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்கான அனுமதியும் வழங்கப்படவில்லை.

(ஆ) சாட்சிகளின் பெயர் பட்டியல் மற்றும் வழக்குத் தொடர்வதற்கான ஆவணங்கள் என்பன அவர்களுக்கு வழங்கப்பட்டதுடன் அவர்களது சொந்த சாட்சியங்களை அழைப்பதற்கும் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

அவர்களுடைய விண்ணப்பங்களைக் கருத்திற்கொண்ட நீதிமன்றம் மாணவர்களின் சட்ட பிரதிநிதித்துவ உரிமை, அவர்களுக்கெதிராக வழங்கப்பட்டுள்ள கூற்றுக்களை நுண்ணாய்வு செய்வதற்கும் ஒரே சான்றில் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்குமான சந்தர்ப்பமொன்றை வழங்குவதையும் ஏற்றுக்கொண்டது. இதற்கு முன்னைய வருடத்தில் இன்னுமொரு நீதிபதிக் குழாமின் சட்ட நோக்கிற்கு முற்றிலும் முரண்பட்ட வகையில் இது இருந்தது. இங்கு பல்கலைக்கழக அதிகாரிகளினால் ஒழுக்காற்று விசாரணைகள் நீதியான முறையில் நடாத்தப்பட்டுள்ளதா? என்பதைக் காண்பதற்கு நீதிமன்றம் முன்வர வேண்டும். என எழுத்தாணை வழங்கப்பட்டிருக்கவில்லை. "விசாரணை நடவடிக்கைகளினால் நம்பிக்கையிழந்துள்ள" மனுதாரர்களான மாணவர்களின் கோரிக்கைகளுடன் இது இணங்குவதாக இருந்தது.[48]

பின்னைய சந்தர்ப்பங்களில் (2003இல் வழங்கப்பட்ட தீர்ப்பு) நீதிபதி ஷிராணி திலகவர்தன பின்வருமாறு கட்டளை விதித்தார்:

"ஒழுக்காற்று விடயமானது, வெளிப்படையாக நிலையற்ற

---

[48] *இராஜகருணா எதிர் ருஹுணு பல்கலைக்கழகமும் ஏனையவர்களும்* மே.மு.நீ (எழுத்தாணை) விண்ணப்ப இல. 1317/2002, மேமுநீ அறிக்கைகள் 2004.07.19 கே. ஸ்ரீபவன் நீதிபதியின் தீர்ப்பு. தற்பொழுது இது இரண்டு வழக்குகளாக மேன்முறையீட்டிலுள்ளது. *இராஜகருணா எதிர் ருஹுணு பல்கலைக்கழகம் மற்றும் ஏனையவர்கள் எதிர் ருஹுணு பல்கலைக்கழகம் மற்றும் ஏனையவர்கள்..* மே.மு.நீ (எழுத்தாணை) விண்ணப்ப இல. 1316/2002, மேமுநீ அறிக்கைகள் 2003.07.03 ஷிராணி திலகவர்த்தன நீதிபதியின் (தலைவர் / மே.மு.நீ) தீர்ப்பு.

சலனமானதொரு விடயமாக இல்லாது பல்கலைக்கழகத்தின் முழு மேற்பார்வையுடனும் கட்டுப்பாட்டிலும் இருக்கவேண்டியதொரு விடயமாகும்" மனுதாரர்களான மாணவர்கள் நீதிமன்றத்தின் கருத்தில் நிவாரணம் வழங்குவதற்கெதிராக நியாயமான அழுத்தத்தைக்கொண்ட காரணிகளாக இருந்த மருத்துவ பீடத்தின் அனைத்து மாணவர்களும் எதிர்வாதியான பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள் மற்றும் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதிமார்கள் அதேபோல் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் தொழில் புரியும் முச்சக்கரவண்டிச் சாரதிகள் என அத்தனை முடிவில்லாத சாட்சிகளின் நீண்ட பட்டியலை விசாரணை செய்யுமாறு கேட்டிருந்தனர்.

இதற்கு மாற்றமாக, 2004ஆம் ஆண்டில் நீதிபதி கே. ஸ்ரீபவன் அவரது முடிவினை வழங்கும் பொழுது மாணவர்களின் கல்வி விடயங்களுடன் தொடர்பான முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளில் சம்பந்தப்படும் எந்தவொரு விசாரணையும் செவ்வையான நீதி காண்பொன்றின் அனைத்து தேவைப்பாடுகளுக்கும் உட்பட்டதாக நடாத்தப்படுதல் வேண்டும். என்ற கருத்தினை கவனத்திற்கெடுத்திருந்தார். அவர் இவ்விடயத்தை இன்னும் உறுதியாக இவ்வாறு கூறினார்.

> பல்கலைக்கழகத்தின் ஒழுக்காற்று அதிகார எல்லையானது, கல்வி விடயங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கிடையில் வேறுபடுத்தி காண்பதற்கு முடியுமானதாக இருத்தல் வேண்டும். உதாரணமாக, பரீட்சைகளில் மாணவர்கள் சித்தியடைதல் அல்லது சித்தியடையாதிருத்தல் என்பதுவும் கல்விசாராத அல்லது ஒழுக்காற்று விடயங்களும் முன்னைய சந்தர்ப்பத்தில் இயற்கை நீதி கோட்பாடுகளானது, பொதுவான விடயங்களில் தெளிவாகப் பிரயோகிக்கப்படவில்லை. கல்வி சார் தீர்மானங்களின் மேலதிக விடயங்களில் தலையிடுவதை நீதிமன்றம் மறுக்கலாம். ஏனெனில், அவை விரிவுரையாளர்களினதும் பரீட்சகர்களினதும் பிரத்தியேகமான நியாயாதிக்கமாகும். எவ்வாறாயினும், கல்வி சாராத அல்லது ஒழுக்காற்று விடயங்களுக்கு வேறானதொரு அளவுகோலினை பிரயோகிக்கலாம். குற்றமொன்றிற்காக மாணவரொருவரை பல்கலைக்கழகமொன்றிலிருந்து அவர் பெற்றிருக்கும் பயிற்சியின் மூலம் உயர் தொழிலொன்றினைப்

புரிவதிலிருந்தும் அவரை தடுப்பதை உறுதிசெய்யும் வகையில் வெளியேற்றுவதாக இறுக்கலாம்.

இந்த விடயத்தை பல்கலைக்கழக ஒழுக்காறுடன் தொடர்புள்ள பிற்பட்ட வழக்கொன்றில் மீண்டும் வலியுறுத்திக் கூறினார். (சிந்தக்க விபுலன்க எதிர் கலாநிதி, சுஜீவ அமரசேன மற்றும் ஏனையோரும்[49]) இங்கு கூட, நியாயமாகவும் சிறந்த நம்பிக்கை மற்றும் முறையான காரணங்களின் அடிப்படையில் மாணவரொருவரை கண்டிப்பதற்கு அவரது அதிகாரத்தைப் பிரயோகிக்கவில்லை. என்பதற்காக பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவருக்கெதிராக யாதுரிமை எழுத்தாணை வழங்கப்பட்டது.

கே.எல்.டி. தயசேகர மற்றும் ஏனையவர்கள் எதிர் தேசிய மாணிக்கக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபை மற்றும் ஏனையவர்கள் வழக்கில்[50] எதிர்வாதியின் ஊழியர்களினால் அனுபவிக்க முடியுமான சிறப்புரிமைகள் மற்றும் சில தருவதாக அறிவிக்கப்பட்ட உரித்துக்களுடன் மாணிக்கக்கற்கள், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்ச்சி நிறுவனத்திற்கு நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள இருபத்தி நான்கு விண்ணப்பங்களையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் கவனத்திற்கெடுத்துக் கொண்டது. அத்தகைய குறைகள் எதனையும் தடைசெய்யும் 1993 ஆம் ஆண்டின் 50ஆம் இலக்கச் சட்டத்தின் (இச்சட்டத்தின் மூலம் 1ஆவது எதிர்வாதியான அதிகாரசபை உருவாக்கப்பட்டதுடன் 2ஆவது எதிர்வாதியான நிறுவகமும் தாபிக்கப்பட்டது 54 (2) (எ)ஆம் பிரிவின் சாசனத்தின் மூலம் அத்தகைய சிறப்புரிமைகளும் உரித்துக்களும் குறைக்கப்பட்டிருக்கக்கூடாது என மனுதாரர்கள் வாதிட்டனர். இதனைத் தொடர்ந்து 2ஆம் எதிர்வாதியினால் செய்யப்பட்ட குறித்த குறைப்பு சட்டமுறையற்றதாக இருந்ததுடன் சட்டரீதியான அதிகாரத்துடன் செய்யப்படவில்லை எனவும் கூறப்பட்டது.

அவர்களுடைய கருத்துப்படி, ஊழியர்களின் நலன்களைக் குறைப்பதானது அரசாங்கத்தின் கொள்கை மாற்றத்துடன் தொடர்பான ஒன்றாகுமென்பதுடன் அத்தகைய நன்மைகளைத் தொடர்ந்தும்

---

[49] மே.மு.நீ. (எழுத்தாணை) விண்ணப்ப இல. 95/2004, மே.மு.நீ அறிக்கைகள் 2004.09.16.

[50] மே.மு.நீ. (எழுத்தாணை) விண்ணப்ப இல. 393/2002, மே.மு.நீ அறிக்கைகள் 2004.04.27.

வழங்குவது கிடைப்பனவிலுள்ள நிதி நிலைமையில், பாதிப்பை ஏற்படுத்தும் என்ற நிலைப்பாட்டினை மனுதாரர்கள் கொண்டிருந்தனர்.

ஆணையீட்டெழுத்தாணையை மற்றும் குறிப்பிடப்பட்ட சிறப்புரிமைகளையும் வழங்கக் கட்டளையிடும் யாதுரிமை எழுத்தாணையொன்றினை வழங்குவதன் மூலம் தவறென்று வினா எழுப்பப்படும் தீர்மானங்களை இல்லாதாக்கும் விடயங்களில் நீதிபதி பீ.விஜயரத்ன 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்கச் சட்டத்தின் 54 (20) (ஏ) பிரிவை வலியுறுத்திக் கூறினார். இதில் நியதிச்சட்டமொன்றில் சேர்க்கப்பட்டுள்ள அரசாங்கக் கொள்கை பிரதிபலித்துக் காட்டப்பட்டுள்ளது. அத்தகைய சட்டம் எதிர்வாதிகள் அவர்களது முடிவை நியாயப்படுத்துவதற்கு ஏற்புடையதாகக் கருதிய அரசாங்கக் கொள்கையினைச் செயற்படுத்துவதற்காக வெளியிட்ட சுற்று நிருபங்களையும் மேலோங்கி இருக்கின்றது. அதேவேளை, இலாபம் உழைத்தல் என்ற விடயம் 2ஆவது எதிர்மனுதாரர் நிறுவகத்தின் செயற்பாட்டு இயல்பானது இலாபம் ஈட்டும் நிறுவனமொன்றாக இருக்கவில்லை என்ற காரணத்தினால் ஊழிய நிபந்தனைகளான சிறப்புரிமைகள் மற்றும் நன்மைகளினை வழங்குதலுடன் தொடர்புபடமாட்டாது.

அதேநேரம், தேர்தல்கள் நடத்துவதில் தாக்கம் செலுத்திய ஒரு கட்டளையில், ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவை அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்தின் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் நியதிகளின்படி தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிக்குமாறு நிர்ப்பந்திக்கும்படி

---

51 *பொது அக்கறை சட்டமன்றம் எதிர் சட்டமா அதிபர் மற்றும் ஏனையவர்கள்.* மே.மு.நீ. (எழுத்தாணை) விண்ணப்ப இல. 1396/2003, மே.மு.நீ அறிக்கைகள் 2003.12.17. நீதிபதி என். உடலகமவின் இணக்கப்பாட்டுடன் நீதிபதி கே. ஸ்ரீபவனின் தீர்ப்பு. அரசியலமைப்புப் பேரவையினால் சிபாரிசு செய்யப்பட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக இரண்டரை வருடங்கள் பிரச்சினையுடன் கழிந்தன. தவிசாளராக ஒருவரை பேரவையும் ஜனாதிபதியும் சிபாரிசு செய்ததனால் ஏற்பட்ட முட்டுக்கட்டையினால் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் செயற்பட முடியாமல் போனது. இதன் விளைவாக தற்பொழுதிருக்கும் தேர்தல்கள் ஆணையாளர் தொடர்ந்தும் அவரது பதவியில் இருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். பல தேர்தல்களை நடாத்தியும் மேற்பார்வை செய்தும் அனுபவம் கொண்ட அவர் தனது சுகாதார உடல் நலக்குறைவுக்கும் அப்பால் அரசாங்கத்தினதும் ஜனாதிபதி குமாரதுங்கவினதும் அழைப்பினால் தேர்தல்கள் ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

பொதுமக்கள் அக்கறை குழுவொன்றினால் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்ட விண்ணப்பமொன்றினை நீதிமன்றம் நிராகரித்தது.[51]

அரசியலமைப்பின் (17ஆவது திருத்தத்தினூடாக) உறுப்புரை 41(ஆ) ஆனது தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களின் நியமனம் பொதுச்சபைகளில் அரசியல் சார்பற்ற நியமனங்களினை உறுதிப்படுத்துவதற்கு 17ஆவது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அமைப்பொன்றான அரசியலமைப்புப் பேரவையினால் இது தொடர்பாக செய்யப்பட்ட சிபாரிசிற்கிணங்க ஜனாதிபதியினால் செய்யப்படுதல் வேண்டுமென பணிப்பாணை செய்கின்றது. மனுதாரர்களின் வாதமானது, அரசியலமைப்பின் 41(ஆ) உறுப்புரையில் உள்ளடக்கியுள்ள அடிப்படை விடயங்கள் தேர்தல்கள் ஆணைக்குழு நியமனம் தொடர்பில் ஜனாதிபதி பிணைப்பிலா அதிகாரங்களைச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்படக்கூடாது என்பதாகும்.

எனினும் நீதிமன்றமானது இந்த விடயத்தை ஏற்றுக்கொள்வதற்கு நாட்டம் கொள்ளவில்லை. இது தொடர்பான தடையாக இருப்பது அரசியலமைப்பின் உறுப்புரை 35 (1) ஆகும். ஏதாவது நீதிமன்றமொன்றில் ஜனாதிபதிக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகள் அல்லது அமைச்சரவை விடயங்கள் மற்றும் தேர்தல் மனுக்கள் போன்ற அரசியலமைப்பு ரீதியாக குறிப்பிடப்பட்ட சில வரையறுக்கப்பட்டவை விதிவிலக்காக, ஜனாதிபதியினால் அவரது தனிப்பட்ட அல்லது உத்தியோகபூர்வ நிலையில் செய்யப்பட்ட விடயமொன்று அல்லது செய்யாது விடப்பட்டவைகளுக்காக வழக்குகளைத் தாக்கல் செய்வதிலிருந்தும் ஜனாதிபதிக்கு "மறைப்பு பாதிப்பின்மை" (blanket immunity) ஒன்றினை இவ்வுறுப்புரை வழங்குகின்றது. தற்பொழுதைய இவ்வழக்கானது, குறித்த

---

52 இந்தச் சம்பவம், ஜனாதிபதியின் கட்டளைகளினால் கீழ் நிலை அலுவலர்களின் செயற்பாடுகள் எவ்வாறு நீதிமுறையானதாகக் கணிக்கப்படுகின்றன என்ற விடயத்தை வேறுபடுத்திப் பார்ப்பதற்குத் தேவைப்படுத்தியுள்ளது. அத்தகைய தலையீடுகள் பெரும்பாலும் அரசியலமைப்புக்கு முரணானதாகவே இருந்துள்ளது. குறிப்பாக, *கருணாதிலக எதிர் திசாநாயக்க மற்றும் சேனாசிங்க எதிர் கருணாதிலக* வழக்குகளைப் பார்க்க. குறிப்பு 28 இனைப் பார்க்க. அதேபோன்று *எம் என் டி பெரேரா எதிர் பாலபட்டபந்தி எதிர் கருணாதிலக*, குறிப்பு 26 இனைப் பார்க்க.

விதிவிலக்கெல்லைக்குள் வரமாட்டாது என்பதுடன் பிரிவு 35(1) இன் ஏற்புடைத்தாகும் தன்மையானது மனுவை சட்டத்தில் முறையாக நிறுவப்படாததொன்றாகக் கொண்டது.[52]

இந்தத் தீர்ப்பானது, அரசியலமைப்புரீதியான ஆளுகை நிலைகுலைந்த நிலையில் செயன்முறைப்படுத்தப்படும் பொழுதும் மிகத் தெளிவான சட்டமுறையற்றதாக காணப்படும் நிலையொன்றிற்கு மாற்றீடினை வழங்குவதற்காக முயற்சி செய்வதில் நீதிபதிகளை குறித்த வரையறுக்கப்பட்ட விடயமொன்றிற்கு வெளியே செல்வதற்கு அனுமதிக்காதவாறு நீதிமன்றங்கள் தம்மைத்தாமே அரசியலமைப்பு ஏற்பாடுகளினால் பிணித்துக் கொள்ளும் போதும் பிரசைகளின் பொறுக்க முடியாத மனக்கிளர்ச்சிகளை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது. தொடர்ந்தும் தப்பிக்க முடியாத இந்தப் பிரச்சினைக்குக் காணப்படும் ஒரேயொரு சட்டரீதியான தீர்வு என்னவெனில், நியமனதாரர்களை சிபாரிசு செய்வது தொடர்பாக, ஜனாதிபதிக்கும் அரசியல் அமைப்புச் சபைக்குமிடையிலான முட்டுக்கட்டை நிலையொன்றாகக் காணப்படும் உறுப்புரை 41(ஆ) இனைத் திருத்துவதாகும். சில காரணங்களைக் குறிப்பிட்டு அரசியல் அமைப்புப் பேரவை தனது சிபாரிசுகளை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என ஜனாதிபதி கேட்டுக் கொள்ளலாம். மீள்பரிசீலனையின் பின்னரும் பேரவை அதே சிபாரிசுகளைத்தான் செய்யுமாயின், ஜனாதிபதி குறித்த நியமனத்தை ஒரு மாதத்திற்குள் வழங்கத் தவறினால் சிபாரிசு செய்யப்பட்ட அந்த ஆள் முறையாக நியமிக்கப்பட்டவராகக் கருதப்படுவார்.[53]

6. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் (ICCPR) விருப்புத்தேர்வு வரைவேட்டின் கீழ் தனிநபர் தொடர்பாடல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவின் தீர்மானங்கள்

[53] எனினும், இந்த முட்டுக்கட்டையைத் தீர்த்துவிடும் வகையில் அரசியல் கட்சிகளினால் போதுமானளவு அக்கறை எடுக்கப்படவில்லை என்பது வெளிப்பாடாகும்.

விக்டர் ஐவன், சிங்கராசா ஆகிய வழக்குகளில் கருத்துக்களைக் கேட்டறிந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு, ஒப்பந்த உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கண்டறிந்தது இலங்கைக்கு கடுமையான பின் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.[54]

இந்த இரண்டு வழக்குகளும் கருத்துக்களை வெளியிடுவதற்கும், பிரசுரிப்பதற்குமான உரிமை, நீதியாக விசாரிக்கப்படுவதற்கான உரிமை ஆகியவற்றின் பாதுகாப்புடன் தொடர்புடைய அடிப்படை உரிமைப் பிரச்சினைகளாக உள்ளன. அதேவேளை இரண்டாவது வழக்கு நியதிச் சட்டப் புத்தகங்களில் திருத்தப்படாமல் சர்ச்சைக்குரிய வடிவில் காணப்படும் இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துடன் தொடர்புடைய கொடுமைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகின்றது.

ஆணைக்குழுவின் முன் இலங்கை அடிக்கடி விசாரணைக்காக எடுக்கப்படுகின்றது. குறிப்பாக நாட்டின் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை கேள்விக்குள்ளாக்கும் வழக்குகளின் மேன்முறையீடுகள் விசாரணைக்கு எடுக்கப்படுகின்றன. அதன் விளைவாக சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் நிபந்தனைகள் தொடர்பில் நாட்டின் நியாயாதிக்கத்துக்குட்பட்ட அனைத்து தனி நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயதத்தையும் அதன் விருப்புத் தேர்வு வரைவேட்டையும்,

---

54 பின்வரும் ஆய்வு எழுத்தாளர் 2004 செப்டம்பர் 5, 2004 செப்டம்பர் 12 ஆகிய திகதிகளில் வெளியான *சன்டே ரைம்ஸ்* பத்திரிகையில் "Focus on Right" என்ற கட்டுரையின் விரிவான விளக்கத்தை தருகிறது. *ஜகதீஸ்வரன் ஷர்மா* வழக்கு மற்றும் தொடர்பு இல 916/2000 இலங்கை 26/07/2002 (CCPR/C/75/D/916/2000 (சட்டவியல்) என்ற இலக்கத்தைக் கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கருத்துக்களைப் பார்க்கவும். *ஜயலத் ஜயவர்தன* வழக்கு. பின்னைய வழக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தனவுக்கு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து அவருக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் தொடர்பாக பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் விசாரணை செய்யத் தவறியமையினால் சமவாயத்தில் உள்ள ஒரு உரிமை மீறப்பட்டுள்ளது என்பது தொடர்பானதாகும். முன்னைய வழக்கில் 1990 இல் இராணுவத்தின் பொறுப்பில் இருந்த தனது மகன் காணாமல் போனது தொடர்பாக திருக்கோணமலையைச் சேர்ந்த ஒரு தந்தையால் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் ஆணைக்குழு இலங்கை அரசில் குற்றம் கண்டது.

இலங்கை அரசு முறையே 1980இலும் 1997இலும் ஏற்றுக் கொண்டுள்ளது. அதன் மூலம் இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் மூலம் நிவாரணம் கிடைக்காத ஒப்பந்த உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக தனிநபர்களிடமிருந்து முறைப்பாடுகளை ஏற்று விசாரணை செய்ய ஜெனீவாவிலுள்ள அதன் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இருப்பதாக ஏற்றுக் கொண்டதாக அமைகின்றது. அனைத்துத் தெற்காசிய நாடுகளும் அவ்வப்பொழுது ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக பொதுவான அறிக்கைகள் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டுள்ளன. எனினும் துணைக்கண்டத்தில் இலங்கையும், நேபாளமும் மாத்திரமே தனிப்பட்ட முறையில் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய தமது நாட்டு மக்களுக்கு அனுமதி வழங்குகின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் கருத்துக்களைக் கேட்டறிந்தமைக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் அவை பிறப்பிக்கப்பட்ட நாடுகள் தொடர்பில் சர்வதேச சட்டத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். அரசுகள் ஒரு தடவை சமவாயத்தையும் விருப்புத் தேர்வு வரைவேட்டையும் ஏற்றுக் கொண்டால் அந்நாட்டு மக்கள், அந்த சமவாயத்தை மீறும் அல்லது குறித்த நாடுகள் தொடர்பில் வரைவேடு செல்லுபடியாகும் தினத்துக்குப் பின் நடைபெறும் நிகழ்வுகள் அல்லது சட்டமூலங்களுடன் தொடர்புடைய தீர்ப்புக்கள், தவிர்ப்புக்கள், முன்னேற்றங்கள், நிகழ்வுகள் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு தனிநபர் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியும். ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்றைச் சமர்ப்பிக்க முன்னர் முறைப்பாட்டாளர் அனைத்து உள்நாட்டுப் பரிகாரங்களையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும். அத்துடன் அந்த விடயம் வேறொரு சர்வதேச விசாரணை அல்லது தீர்வுமுறையின் கீழ் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கவும் கூடாது.

இரண்டு தசாப்தங்களுக்கு முன் மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய ஒப்பந்தத்தை அங்கத்துவ நாடுகள் மீறுவது தொடர்பாக விசாரணை செய்வதற்கான ஸ்டார்ஸ்பேர்க் நிறுவனங்கள் (மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம், முன்னர் ஐரோப்பிய மனித உரிமைகள் ஆணைக்குழு) போன்ற பலம் வாய்ந்தவற்றில் தனிப்பட்ட கருத்துக்கோரலின் போது ஆணைக்குழுவின் பதினெட்டு அங்கத்தவர்களைக் கொண்ட ஜுரிமார் குழு தமது கருத்தைத்

தெரிவிக்காமல் தவிர்த்து கொண்டமையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். அண்மைக்காலத்தில் இந்த நிலை வரவேற்கத்தக்க விதத்தில் மாறியுள்ளது. (ஒப்பந்தத்தின் தொடர்பான உறுப்புரைகள் பற்றி அவ்வப்பொழுது வெளியிடப்படும்) பொது அறிக்கையிலும் இலங்கை தொடர்பான அண்மைக்காலத்தில் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக ஆணைக்குழு முன்வைக்கும் அதி பலமான கருத்துக்களிலும் இந்த மாற்றம் தென்படுகின்றது.

ஆனால் இவை அனைத்தும் இலங்கையின் தேசிய இறைமையுடன் தொடர்பற்றவை என்று கூறும் விமர்சகர்களின் நிலை என்ன? இந்த வினாவுக்கு எளிய ஆனால் தெளிவான விடைகள் உள்ளன. மோசமான நிருவாகங்களைத் தவிர்த்து, அடிப்படை மனித உரிமைத் தராதரங்களுக்கு நாடுகளைக் கட்டுப்படச் செய்யும் அளவுக்கு சர்வதேச சட்டப் பிரமாணங்கள் வளர்ச்சியடைந்திருப்பது நவீன காலத்தின் பெரிய சாதனைகளில் ஒன்றாகும். இந்த நியமங்களை உள்நாட்டுச் சட்டங்கள் அவமதிக்கின்றன எனக் கூறுவது இந்தக் கட்டுப்படுத்தல் விதிக்கான மன்னிப்பாக அமையமாட்டாது. இந்த உண்மைக்கு நாஸிச் சட்டங்களும், நீதிமன்றங்களும் அனுமதித்த அக்கிரமங்கள் போதுமான உதாரணமாகும். அவை சொற்கருத்தில் மிகவும் சட்டபூர்வமானவையாக இருந்தன. சில வருடங்களின் பின்னர் நாம் ஒரு சர்வதேச சட்ட நிர்வாக முறையைத் தோற்றுவித்தோம். அது நாடுகளுக்கு தேசிய இறைமை இருப்பினும் தனது பிரமாணங்களைப் பின்பற்றுமாறு நாடுகளை நிர்ப்பந்திக்கின்றது. இது எவ்வாறிருக்கின்றது எனின், உதாரணமாக, ஒரு நாட்டின் இறுதி நீதிமன்றம் அதன் கரைகளுக்கு அப்பால் பொறுப்புக் கூற வேண்டியுள்ளது. உள்நாட்டுச் சட்டமுறையில் அத்தகைய மேன்முறையீட்டுக்கு எந்த ஏற்பாடுகளும் இல்லை எனினும், தான் அத்தகைய சர்வதேச உரிமைகள் நியமங்களுக்கு கட்டுப்பட வேண்டும் என்று அந்த நாடு கருதுகின்றது.

இந்த இரு வழக்குகளிலும் இலங்கை அரசுக்கு எதிரான முறையில் தீர்ப்பு மாற்றியமைக்கப்பட்டு 2004இல் தீர்ப்பளிக்கப்பட்டது. முதலாவது வழக்கு ஒரு பத்திரிகை ஆசிரியரினாலும், இரண்டாவது வழக்கு 35 வருடத் தண்டனைக்காக இலங்கையின் பூஸா சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஒருவராலும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

முதலாவதும் மிகவும் பரீட்சயமானதுமான மேன்முறையீடு *ராவய* பத்திரிகையின் ஆசிரியரினால் செய்யப்பட்டது. இலங்கையின் சட்டமா அதிபர் 1993 முதல் 1998 வரையான காலப்பகுதியில் தன்மீது குற்றவியல் அவதூறுக் குற்றஞ்சுமத்தி உயர் நீதிமன்றத்தில் பல தடவைகள் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்ததாகவும் அதன் மூலம் சட்டத்தில் உள்ளவாறு குற்றவியல் அவதூறு வழக்குத் தொடர்வதற்கான தகவல்கள் உரிய முறையில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனக் கூறும் நியதிச் சட்டவழிகாட்டல்களின் கீழான தனது தற்றுணிபு அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தத் தவறிவிட்டார் என்றும் ஒப்பந்தத்தின் உறுப்புரை 19 இன் கீழான கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் உறுப்புரை 26 இன் கீழான சட்டத்தின் முன் சமமாக நடாத்தப்படுதல், சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுதல் என்பவற்றுக்கான தனது உரிமையும் மீறப்பட்டுள்ளதாகவும் அவர் வாதிட்டார். அவருக்கு எதிரான குற்றப்பத்திரங்கள் இரண்டு முன்னாள் சட்ட மா அதிபர்களான திலக் மாரப்பன, சரத் என். சில்வா ஆகியோரின் காலத்தில் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

சட்டமா அதிபருக்கு எதிராக தனது அடிப்படை உரிமைகள் மனுவொன்றைத் தாக்கல் செய்ய அனுமதி வழங்க உயர் நீதிமன்றம் மறுத்ததனால் உடன்படிக்கையின் உறுப்புரை 2(3) மீறப்பட்டுள்ளதாகவும் அதனால் தனக்கு சிறந்த பரிகாரம் கிடைக்காமல் தடுக்கப்பட்டுள்ளதாகவும் *ராவய* ஆசிரியர் எடுத்துரைத்தார்.[55]

சட்டமா அதிபர் *ராவய* ஆசிரியருக்கு எதிராக குற்றவியல் பத்திரம் தாக்கல் செய்வதில் தன்னிச்சையாக நடந்து கொண்டாரா? என்பதும் அது அவரது சமமாக நடாத்தப்படுவதற்கான அடிப்படை உரிமை (உறுப்புரை 12(1)), பிரசுரித்தல் உள்ளடங்கலான கருத்து வெளிப்பாட்டு, பேச்சுத் சுதந்திரத்துக்கான அடிப்படை உரிமை, அவரது சட்டபூர்வமான தொழில் ஈடுபடுவதற்கான அடிப்படை உரிமை (உறுப்புரை 14(1)(அ) என்பவற்றை மீறுகின்றதா என்பதுமே உயர் நீதிமன்றத்தின் முன் இருந்த பிரச்சினையாகும்.

---

[55] *விக்டர் ஐவன் எதிர் சரத் என். சில்வா* (1998) 1 இசஅ 301இ நீதிபதிகள் வடுகொடபிட்டிய, பண்டாரநாயக்கா ஆகியோருடன் இணைந்து நீதிபதி மார்க் பெர்ணாண்டோ வழங்கிய தீர்ப்பு.

இங்கு வழக்குத் தொடர்வதற்காகத் தடுத்தல் அல்லது குற்றப் பத்திரம் தாக்கல்செய்தல் அல்லது அவ்வாறு செய்ய மறுத்தல் என்பவற்றுக்கான சட்ட மா அதிபரின் தீர்மானம் கொள்கை ரீதியாக நோக்கப்பட முடியுமானதாக இருக்க வேண்டும் என்று நீதிமன்றம் வலியுறுத்துகின்றது. உதாரணமாக, சாட்சிகள் போதியதாக இல்லாமை, புலன்விசாரணைகள் நடாத்தப்படாமை, தீர்மானம் அரசியலமைப்பு ரீதியாக அனுமதிக்கப்படாத விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருத்தல் போன்றவை. அதனால் தீர்மானம் நியதிச் சட்ட நியதிகளால் வழி நடாத்தப்பட வேண்டும். தன்னிச்சையானதாக இருக்க முடியாது. மாறாக சில விசேடமான பொது அக்கறையும் பயன்களும் காணப்பட வேண்டும். எவ்வாறாயினும் புலன்விசாரணையில் ஏதாவது தவறு நிகழ்ந்து அதன் விளைவாக ஆகக் குறைந்தது அவருக்கு எதிராக ஒரு குற்றவியல் அவதூற்றுக் குற்றப் பத்திரமாவது தவறான முறையில் தாக்கல் செய்யப்பட்டிருப்பின் அது புலன்விசாரணையை மேற்கொண்டவர்களின் பக்கத்திலுள்ள தவறே அன்றி சட்ட மா அதிபரின் பக்கத்திலுள்ள தவறு அல்ல என்று நீதிபதிகள் கருதினர்.

எனினும் குற்றச்சாட்டு புலன்விசாரணை செய்யும் அதிகாரிகள் மீது சுமத்தப்பட வேண்டுமா அல்லது வழக்குத் தொடரும் அதிகாரிகள் மீது சுமத்தப்பட வேண்டுமா என்பது முக்கியமல்ல. அதற்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் என்று அந்த நேரத்தில் வாதிடப்பட்டது. இந்த வழக்கில் சட்ட மா அதிபர் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால் தவறான புலன்விசாரணைகளை அடிப்படையாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பின்

[56] இந்த ஆய்வுப் பகுதி "சட்டத்தை நியாயப்படுத்தல்: கடந்த ஐம்பது வருடங்களில் இலங்கை சட்டத் தொழிலின் பொதுப்பொறுப்பு" என்ற ஆய்வுக் கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டதாகும். இந்தக் கட்டுரை இலங்கையில் சட்டம், நீதி, நிருவாகம் என்பவற்றின் ஐம்பது வருடப்பூர்த்தியை நினைவு கூர்வதற்காக 2001இல் சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அறநிலையத்திற்காக எழுதப்பட்டதாகும். வழக்கு வழிகாட்டல் மற்றும் நியாயமான விசாரணை தொடர்பில் சட்ட மா அதிபரின் பொதுப் பொறுப்புடமையுடன் தொடர்புடைய கோட்பாடுகள் பற்றிய முழுமையான விளக்கத்துக்கு சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அறநிலைய ஆய்வு 15 இல.211 (மே 2005)இல் வெளியாகியுள்ள ஆக்கங்களையும் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தினால் வெளியிடப்பட்ட Journal of International Law என்ற சஞ்சிகையையும் பார்க்கவும்.

அதன் முதற் பொறுப்பாளி அரசாங்கமாகும். உண்மையில் உயர் நீதிமன்றம் அதற்கு அப்பால் தொடர விரும்பவில்லை. அது நீதிமன்றத்தின் தலையீட்டை அனுமதிப்பதற்காக சட்ட மா அதிபரின் பக்கத்தில் நிகழ்ந்துள்ள "குற்றமுள்ள புறக்கணிப்பையும் கவனமின்மையையும்" அனுமதிப்பதாகவே அமைந்தது.[56]

உயர் நீதிமன்றம் அந்த மனு தொடர்பில் கூறிய பொதுவான காரணத்துடன் அல்லது அதற்காக அதன் இறுதி முடிவுடன் முரண்படவில்லை என்பதை சரியான நோக்கத்திற்காக நோக்குவது பொருத்தமானதாகும். மாறாக மொத்தத்தில் வேறுபட்ட காரணங்கற்பித்தலில் இருந்து ஒப்பந்த உரிமை மீறல் எழுந்துள்ளதாக ஆணைக்குழு கருதியது.

ஆணைக்குழு குற்றவியல் அவதூற்றுக் குற்றப் பத்திர விநியோகம் பற்றியும் சட்ட மா அதிபரின் தடை உத்தரவு வழங்கும் தீர்மானம் ஒப்பந்த உரிமைகளை மீறியுள்ளதா என்பது பற்றியும் ஆராய்வதன் மூலம் "உண்மைகள் என்ற அடர்ந்த காட்டை" ஆராய விரும்ப வில்லை.

அதற்குப் பதிலாக ஆணைக்குழு *ராவய* ஆசிரியருக்கு எதிராக 1996, 1997ஆம் ஆண்டுகளில் குற்றவியல் அவதூறுக்காக செய்யப்பட்ட மூன்று குற்றப்பத்திரங்கள் பல வருடங்களாக முடிவுறாமல் இருந்தமை உடன்படிக்கையின் உறுப்புரை 14 இன் பந்தி 3(இ)ஐ (தேவையற்ற காலதாமதமின்றி விசாரிக்கப் படுவதற்கான உரிமை) மீறுவதாக அமைகின்றது என்ற தனது கண்ணோட்டத்துக்குள் தன்னை மட்டுப்படுத்திக் கொண்டது. மேலும் அவர் வழக்குகளை முடிப்பதற்கு முயற்சி செய்த போதும் கால

---

[57] தொடர்பு இல 909/2000 இலங்கை 26/08/2004 (CCPR/C/81/D/909/2000 (சட்டவியல்) விக்டர் என்ற இலக்கத்தைக் கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கருத்துக்களைப் பார்க்கவும்.- *விக்டர் ஜவன்* வழக்கு. தேவையற்ற காலதாமதமின்றி விசாரிக்கப்படுவதற்கான உரிமை தொடர்பான உள்நாட்டுச் சட்டவியலுக்கு *ஜயசிங்க எதிர் சட்டமா அதிபர்* (1994) 2 இசஅ 74ஐப் பார்க்கவும். அதில் சம்பளமின்றி இடைநிறுத்தப்பட்ட ஒரு தொழிலாளியின் ஒழுக்காற்று நடிவடிக்கை வழக்கு காலதாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று பிரகடனப்படுத்தப்பட்டது. உறுப்புரை 13(3) இல் கூறப்பட்டுள்ள நியாயமான விசாரணை என பொதுவான ஒரு உரிமை மாத்திரமே உள்ளது அது தவிர இந்த உரிமைக்கு அரசியலமைப்பில் தெளிவான எந்தவொரு உத்தரவாதமும் இல்லை.

தாமதம் அவரை நிச்சயமற்ற நிலைக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கியது. அது தைரியமின்மையை ஏற்படுத்தியது. அது உடன்படிக்கையின் உறுப்புரை 19 (கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை) உடன் சேர்த்து மீறியுள்ளது. அதனை உறுப்புரை 2(3) (போதிய பரிகாரம் பெறுவதற்கான உரிமை) உடன் சேர்த்து வாசிக்க வேண்டும்.[57]

இரண்டாவது கருத்துக் கோரல் *சிங்கராசா வழக்கில்*[58] நடைபெற்றது. அது 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க (திருத்தப்பட்ட) பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகளைத் திருத்துமாறு அரசுக்கு ஏகமனதாகக் கட்டளையிடுவதனால் முக்கியம் பெறுகின்றது. அந்தப் பிரிவுகள் உடன்படிக்கையின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள நீதியான விசாரணை என்பதுடன் ஒத்திசைவதாக இல்லை. குறிப்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 16(2) விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது. அது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரிடம் சுயமாகச் செய்யப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை நிறுவும் பொறுப்பை விசேட ஏற்பாட்டுச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒருவர் மீது விதிக்கின்றது.

இந்த மனு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்ட ஒருவருடன் தொடர்புடையதாகும். அவர் ஒரு உதவிப்பொலிஸ் அத்தியட்சகரின் முன்னிலையில் வழங்கிய குற்றஒப்புதலை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அவருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளாக இருக்கும்போது சந்தேகநபரிடம் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு தட்டச்சு செய்யப்பட்ட ஒரு ஆவணத்தில் கையொப்பமிடுமாறு வேண்டியிருக்கின்றார். அதனை மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் மொழிபெயர்த்து தட்டச்சு செய்திருந்தார். அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் இந்த சந்தர்ப்பத்தில் ஒரு உரைபெயர்ப்பாளராகச் செயற்பட்டுள்ளார். அந்த வாக்குமூலம் தனக்கு விளங்காததால் சிங்கராசா அதில் கையொப்பமிட மறுத்துள்ளார். அப்போது அந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அந்தத் தட்டச்சு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் தனது பெருவிரல் அடையாளத்தைப்

---

[58] தொடர்பு இல 1033/2004 இலங்கை 26/08/2004 (CCPR/C/81/D/1033/2001 (சட்டவியல்) என்ற இலக்கத்தைக் கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கருத்துக்களைப் பார்க்கவும்.- *சிங்கராசா* வழக்கு.

பலாத்காரமாகப் பதித்ததாக அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

சிங்கராசாவுக்கு சட்டரீதியான பிரதிநிதிகள் இருக்கவில்லை. அவர் தான் குற்ற ஒப்புதல் வாக்குமூலமொன்றில் கையொப்பமிட நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் பின்னர் அது வலுக்கட்டாயமாக எடுக்கப்பட்டது என்றும் பிரிவு 16(2)இன் வாசகங்களின் கீழ் அது சுயமாகச் செய்யப்பட்டதல்ல என்றும் நிறுவவேண்டி இருந்ததாகவும் அது தனக்கு சுமையாக அமைந்ததாகவும் வாதிட்டார். பிரிவு 16(2)ஐ நிறைவேற்றுவது சாத்தியமற்றதாக இருந்தது. அதனால் தன்னைச் சித்திரவதை செய்த அதே பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிட அவர் நிர்ப்பந்திக்க்கப்பட்டுள்ளார்.[59]

உயர் நீதிமன்றத்தில் உண்மை விளம்பல் விசாரணையின்போது அந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஏற்கத்தக்கது என்றும் அது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 16(1)க்கு இயைந்தது என்றும் நீதிமன்றம் தீர்மானித்தது. ஒரு உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் தரத்தைவிடக் குறையாத தரத்திலுள்ள ஒரு பொலிஸ் அதிகாரியின் முன்னிலையில் செய்யப்படும் ஏற்கத்தக்க எந்தவொரு கூற்றையும் அது சுயேச்சையாகச் செய்யப்பட்டது என்று விளக்குகின்றது. "(ஒப்புதல் வாக்கு மூலம் வழங்கியவரின்) உடலில் காயங்களின் தழும்புகள் தென்படுகின்றன" என்பதை அவதானித்த நீதிமன்றம் இந்த

---

[59] உயர் நீதிமன்றத்தில் அவரது வழக்கு விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்ட சட்ட மருத்துவ அறிக்கை அவர் தனது முதுகில் உள்ள தழும்புகளைக் காட்டினார் என்றும் அவரது இடது கண்ணின் விழியில் காயம் ஏற்பட்டிருக்கின்றது என்றும் அதனால் அவரது கண்பார்வை நிரந்தரமாக அற்றுப் போயுள்ளது என்றும் உறுதிப்படுத்தியது. மேலும் "நெஞ்சின் இடதுபுறப் பின்பகுதியிலும் கண்ணிலும் உள்ள காயங்கள் மொட்டையான ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டதனால் ஏற்பட்டது என்றும் மார்பின் நடுப்பின் பகுதியில் உள்ள காயம் சில வேளை கூரிய ஆயுதத்தால் தாக்கியதால் ஏற்பட்டிருக்கக் கூடும்" என்றும் அந்த அறிக்கை கூறியது.

[60] இலங்கையின் சட்டபூர்வமாக அமைக்கபட்ட அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு சட்டவிரோதமான வழிமுறைகள் மூலம் சதிசெய்தமைக்காகவும், அந்த நோக்கத்தை அடைவதற்காக நான்கு இராணுவ முகாம்களைத் தாக்கியமைக்காகவும் *1989 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க அவசரகாலச் சட்ட (நாளாவித ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) ஒழுங்கு விதிகளின் பிரிவு 23(அ). 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க பொதுப்பாதுகாப்பு (திருத்தச்) சட்டம்* என்பவற்றின் கீழ் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

நிகழ்வுக்கு முன்னர் அல்லது பின்னர் வழங்கப்பட்ட தண்டனைகளின் காயங்களே அவை என ஏற்றுக்கொண்ட போதும், குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டது. அவர் தான் அடிக்கப்படுவது பற்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நீதவான் உட்பட யாருக்கும் முறையிடத் தவறியிருந்தார். சிங்கராசா குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டு 1995இல் ஐம்பது வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.[60]

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அவரது மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டாலும் அவரது தண்டனை குறைக்கப்பட்டது. அதன் பின்னர் 2000ஆம் ஆண்டு ஜனவரியில் மேன்முறையீட்டுக்கான விசேட அனுமதியை நிராகரித்தது. அந்த முடிவை சிங்கராசா ஜெனீவாவில் உள்ள ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்தார்.

அவர் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிடவும் அதன் விளைவாக அதன் சுயேச்சைத் தன்மையை நிறுவவும் நிர்ப்பந்திக்கப்பட்டதனால் உடன்படிக்கையின் உறுப்புரை 14இன் 3(ஏ)பந்தியிலுள்ள அவரது உரிமைகள் மீறப்பட்டுள்ளதா என்பதே கேள்வியாக இருந்தது. ஐக்கிய நாடுகள் ஆணைக்குழு இந்தக் கேள்விக்குச் சாதமாகப் பதிலளித்தது. அதன்போது அது தனது சட்ட முறையைச் சுட்டிக்காட்டியது. அது எந்தவொரு நபரும் "தனக்கு எதிராகச் சாட்சி சொல்லவோ அல்லது குற்றத்தை ஒப்புக் கொள்ளவோ நிர்ப்பந்திக்கப்பட முடியாது" என்ற விதியைக் கொண்டுள்ளது. குற்ற ஒப்புதல் வாக்கு மூலமொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் விசாரணை செய்யும் அதிகாரிகள் குற்றஞ்சாட்டப்பட்டவரின் மீது எந்தவொரு நேரடியான அல்லது மறைமுகமான உடலியல் அல்லது உளவியல் கொடுமைகளும் செய்யாத நிலையில்தான் அது விளங்கப்பட வேண்டும்.

வழக்குத் தொடர்பவர்கள் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வலுக்கட்டாயமின்றிச் செய்யப்பட்டது என்று நிறுவவேண்டும் என்று இந்தக் கொள்கையில் முழுமையாகக் கருதப்பட்டுள்ளது. இங்கு கவனிக்கவேண்டியது, இலங்கை அரசு வாதாடியது போன்று குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்திற்கான பலாத்காரத்தின் ஆரம்பம் மிகக் குறைந்ததாகவும் விரும்பாமல் செய்யப்பட்டதற்கான சாத்தியம் குறைவாகவும் இருந்தாலும் கூட அது நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவர் பக்கம் சாய்வதற்குப் போதுமானதாகும். அது

வாக்குமூலம் அளித்தவரின் மீது சுமையாகவே இருந்திருக்கும். இது திருப்தியானதாக இருக்கமாட்டாது. ஆணைக்குழுவின் காரணம் உறுதியானதாக இருந்தது.

> அனைத்து நிலைமைகளிலும் சித்திரவதை மற்றும் மோசமாக நடாத்துதல் தொடர்பான மனுக்களை மருத்துவச் சான்றிதழின் (குறிப்பாக விசாரணையும் அதனைத் தொடர்ந்து குற்ற ஒப்புதலும் நிகழ்ந்து ஒரு வருடத்துக்கு மேல் கழிந்ததன் பின்னர் பெறப்பட்டவை) பூரணமற்ற தன்மைகளின் அடிப்படையில் தள்ளுபடி செய்வதற்கான நீதிமன்றங்களின் விருப்பம் இந்த ஆரம்பம் ஏற்கத்தக்கதாக இல்லை என்பதையே காட்டுகின்றது. மேலும் வாக்குமூலம் அளித்தவர் மோசமாக நடாத்தப்பட்டது தொடர்பாக நீதவானிடம் முறையிடத் தவறியமையின் காரணத்தால் அவரின் குற்றச்சாட்டுகள் நம்பகத்தன்மை குறைந்தவை என்று நீதிமன்றங்கள் ஊகிக்க முனைந்தன. பொலிஸ் தடுப்புக்காவலுக்கு அவர் திருப்பி அனுப்பப்படுவார் என்ற வெளிச்சத்தில் இந்த ஊகம் தெளிவாக உறுதிப்படுத்த முடியாதது என்று ஆணைக்குழு கருதுகின்றது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 2இன் பந்தி 3 (எந்தவொரு நபரும் தனக்கு எதிராகச் சாட்சி சொல்லவோ குற்றத்தை ஒப்புக்கொள்ளவோ நிர்ப்பத்திக்கப்படக்கூடாது" என்ற பெயரிலான) சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாய உறுப்புரை 7 என்பவற்றுடன் சேர்த்து சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாய உறுப்புரை 14இன் கீழ் அவரது உரிமை மீறப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு கருதியது. ஒப்பந்தத்தின் கீழ் நீதியான விசாரணைக்கு வழங்கப்பட்டுள்ள உத்தரவாதத்துடன் ஒத்திசையாத பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் பிரிவுகளைத் திருத்துமாறு அரசுக்கு கட்டளையிட்டது.

மேலும் 6825/1994 ஆம் இலக்க வழக்கில் குற்றத் தீர்ப்புக்கும் உயர் நீதிமன்றத்தினால் ஒப்புதல் வழங்கியவரின் மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டமைக்கும் இடையிலான தாமதம் (1995 செப்டம்பர் 29 இலிருந்த 2000 ஜனவரி 28 வரை) சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாய உறுப்புரை 14இன் பந்தி 3(இ), 5 என்பவற்றில் உள்ள உரிமைகளை மீறுவதற்குக் காரணமாக

அமைந்துள்ளது என்று தீர்மானிக்கப்பட்டது. அது வழக்குத் தீர்ப்பொன்றை காலதாமதமின்றி மீள்பரிசீலனை செய்வதற்கான உரிமையை மீறுகின்றது.

விடுதலை செய்தல் அல்லது மீளவிசாரித்தல் மற்றும் நட்டஈடு என்பவை அடங்கலாக சிங்கராசாவுக்கு சிறப்பானதும் பொருத்தமானதுமான பரிகாரம் வழங்கப்பட வேண்டும் என அரசு கட்டாயப்படுத்தப்பட்டது. எதிர்காலத்தில் இத்தகைய மீறல்களைத் தவிர்க்க வேண்டும் என்றும் கண்டனத்துக்குள்ளாகிய பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் பிரிவுகள் சமவாயத்துக்கு இயைந்த வகையில் மாற்றப்படுவதை உறுதி செய்யுமாறும் வழிகாட்டல் வழங்கப்பட்டது.

விக்டர் ஐவன், சிங்கராசா ஆகியோரின் வழக்குகளும் சமவாயத்தினை இலங்கை மீறியுள்ளதாக ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவினால் தீர்க்கப்பட்ட ஏனைய வழக்குகளும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உதவியை நாடுவது பொருத்தமானது என்று இலங்கை உயர் நீதிமன்றம் நினைத்த வழக்குகளுக்கு ஆதாரமாக அமைந்தன. உள்நாட்டு அரசியலமைப்பு ஆவணத்தின் ஏற்பாடுகளை விரிவுபடுத்தும் போது அரசின் கடப்பாட்டினால் உருவான அதன் கடமைகளுக்கும் ஆதாரமாக அமைந்தன.

மிக முக்கியமாக *வீரவன்ச எதிர் சட்டமா அதிபர்*[61] வழக்கில் நீதி மன்றம் பின்வருமாறு துணிச்சலாகக் கூறியது;

> தனிப்பட்ட சுதந்திரம் பறிக்கப்பட்ட ஒரு நபருக்கு நீதித்துறையை நாடும் உரிமை இருக்கின்றது. அந்த உரிமை மறுக்கப்பட்ட, தடுப்புக்காவலில் உள்ள ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறையீடு செய்யும் அளவுக்கு தற்போது சர்வதேச மட்டத்தில் அந்த உரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது.
>
> இந்த நீதிமன்றம் உடன்படிக்கையின் ஏற்பாடுகளை கவனத்தில் எடுக்க வேண்டுமா? வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். உறுப்புரை 27(15) "சர்வதேச சட்டத்தின் கௌரவத்தையும் நாடுகளுக்கிடையிலான கொடுக்கல்

[61] (2000) 1 இசஅ 387 பக்கம் 409

வாங்கல் ஒப்பந்தக் கடப்பாடுகளையும் பேணுவதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டும்" என்று கூறுகின்றது. அதே போன்று தனது சொந்தக் குடிமக்களுடனான தொடர்புகளிலும் குறிப்பாக அவர்களது சுதந்திரம் தொடர்பான விடயங்களில் சர்வதேச சட்டத்தையும் ஒப்பந்தக் கடப்பாடுகளையும் அரசு மதிக்க வேண்டும் என்று அது உணர்த்துகின்றது. சர்வதேச சட்டம் வேண்டுகின்ற பாதுகாப்புக்களின் பயன்களை அவர்களுக்கு வழங்குவது அரசின் கடமையாகும்.

7. முடிவுரை

ரொனால்ட் டுவோர்க்கின் தன்னால் மென்மையாக உருவாக்கப்பட்ட திருவாளர் நீதிபதி ஹேர்குலிஸ் "அதிஉயர் மனிதத் திறன், கற்றல், பொறுமை, மதிநுட்பம் என்பவற்றைத் தாராளமாகப் பெற்றுள்ள, இருக்கும் சட்டவளங்களை ஆக்கபூர்வமாகப் பொருட்கோடல் செய்வதன் மூலம் தன் முன்கொண்டுவரப்படும் கடினமான வழக்குகளைத் தீர்த்து வைக்கும் நீதி உடையணிந்த தத்துவ மன்னர் ஆவார் என்ற கோட்பாட்டின் மூலம் .....[62]

எவ்வாறாயினும் அத்தகைய கடுமையான பூரணத்துவத்தை நீதித்துறை ஆட்கள் மீது விதிப்பதைத் தவிர்க்கும் போது அல்லது உண்மையில் சட்டத்தை ஒரு சாத்தியமற்ற "இணைப்பற்ற வலையாக"[63] கருதும் போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும், உயர் நீதிமன்றத்தினதும் முடிவுகளில் குறிப்பாக பொதுச்சட்டத் துறையில் உள்ளது போன்று நீதித்துறைச் சிந்தனைக்கு ஆதரவளிப்பதற்காக உரிமைகளின் முரணில்லாத சீரான நியாயப்படுத்தலை எதிர்பார்ப்பது நியாயமானதே.

இந்தக் கோணத்தில் இருந்து 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டுச் சட்டவியலை நோக்கும் போது அரசியலமைப்பின்

---

[62] ஆர். டுவோர்கின், *உரிமைகளைக் கடுமையாக எடுத்தல்* (கேம்பிரிஜ்: ஹாவார்ட் பல்கலைக்கழக அச்சகம், (1977) 116-117

[63] மேலே குறிப்பிட்டதே.

உரிமைகள் அத்தியாயத்தின் மேலுறையை விரிவுபடுத்துவதற்கு சில நீதிபதிகளின் நிதானமான முயற்சியை அவதானிக்க முடியுமாயினும் இந்த முன்னேற்றங்கள் ஒரு ஒழுங்கமைப்பில் இருக்கவில்லை. அத்தகைய முடிவுகள் பற்றிய (சார்பான அல்லது எதிரான) கல்வித்துறை ஆய்வுகள் சிதறியவையாகவும் கல்வித்துறைக் கலந்துரையாடலுக்கும் நீதிமுறைச் சிந்தனைக்கும் இடையிலான இன்றியமையாத இடைத் தொடர்பு விடயத்தில் மோசமான விளைவுகளை உருவாக்குவதாகவும் இருப்பது கவலைக்குரியதாகும். அந்த இடைத்தொடர்பு உறுதியான சக்திமிக்க சட்டவியலுக்கு அத்தியவசியமான முன் தேவைப்பாடாகும்.

மேலும் வழக்குகளில் சிறந்த ஆவணப்படுத்தல் காணப்படுவதில்லை. அதனால் நீதிமுறைக் காரணங்கூறலையும் அல்லது தள்ளுபடிக்கான காரணத்தையும் உறுதிப்படுத்துவதற்காக வேண்டி வழக்குகளைத் தொடர்வதற்கான அனுமதிகளை நீதிமன்றம் நிராகரிக்கின்றது. இலங்கையில் சட்டத்துறையினதும், நீதித்துறையினதும் உரிய தொழிற்பாடு தொடர்பில் சிவில் சமூகத்தின் விமர்சனப் போக்கு தொடர்ந்தும் ஒரு தேவையாக உள்ளது. அத்தகைய ஆக்கபூர்வமான அரசியல் சார்பற்ற ஈடுபாடு இதுவரை நிகழவில்லை.

வேறு ஒரு கோணத்தில் நோக்கும் போது சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் விடயத்தில் இலங்கையின் கடமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவின் நேரடித் தலையீடு பலருக்குப் பிடிக்காத முறையில் உள்நாட்டு நீதித்துறை நிறுவனங்களுக்கு அப்பால் முறைப்பாடுகளை ஏற்பதனைக் குறிக்க முடியும்.

எவ்வாறாயினும், குறித்த வழக்குகளில் உள்நாட்டு நீதிமன்றங்கள் மக்களின் நம்பிக்கையைப் பெறத் தவறும்போது, இலங்கை விரும்பி இணைந்துகொண்ட சர்வதேச சட்டத்தின் இன்றியமையாத கடமைகளினால் உருவான, வேறு இடங்களில் உள்ள கண்காணிப்புச் செயன்முறைகளை அவர்கள் நாடுவதைத் தவிர்க்க முடியாது. மிகவும் குறிப்பாக 2004ஆம் ஆண்டு தொடர்பாக விளக்கப்பட்டது போன்று இது நாம் நன்றாகப் பழக்கப்பட வேண்டிய ஒரு தீர்க்கப்படாத உண்மையாகும்.

III

வாக்களிப்பதற்கான உரிமை

அசங்க வெலிக்கல்

1. இலங்கையின் வாக்குரிமைக்கான அரசியலமைப்பு மற்றும் சட்ட வரையறைகள்.

உலகளாவிய வளர்ந்தோர் வாக்குரிமை தொடர்பில் 1931ஆம் ஆண்டின் டொனமூர் அரசியலமைப்பு வரை பின்னோக்கிச் செல்லும் நீண்ட வரலாறு இலங்கைக்கு உள்ளது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் பிரதிநிதித்துவமும் பொறுப்புக்கூறும் தன்மையும் கொண்ட அரசாங்கத்துக்கான ஒரு ஆரம்ப நடவடிக்கையாக இந்தக் கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. உண்மையில் அதற்கு முன்னரும் சொத்துரிமைத் தகைமைகளின் கீழ் வாக்குரிமைகள் வழங்கப்பட்டன. அடிப்படையில் ஜனநாயக ஆவணங்கள் என்றவகையில் 1947, 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளின் அரசியல் யாப்புக்களால் வடிவமைக்கப்பட்ட தேர்தல் பிரநிதித்துவ அரசியல், சுதந்திரத்துக்குப் பின்னர் நாட்டின் பிரச்சனைகளின் அடிப்படையாக இருந்த போதும் அவை வாக்குரிமையின் மூலம் பலப்படுத்தப்பட்டன.

---

* எல்எல்பீ, இணை-ஆய்வாளர், சட்ட மற்றும் அரசியலமைப்புப் பிரிவு, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.

இலங்கைக் குடியரசில் தற்போது அமுலில் உள்ள 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழ் இறைமை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த இறைமை அரசாங்க அதிகாரங்கள், அடிப்படை உரிமைகள், உறுப்புரை 3இன் வாசங்களின் படியான வாக்குரிமை என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. அந்த உறுப்புரை மிகவும் கடினமான செயன்முறைகளின் கீழ் திருத்தப்பட இயலுமான அரசியலமைப்பின் பாதுகாப்பு ஏற்பாடாக உள்ளது. உறுப்புரை 4(உ) இன் கீழ் வாக்குரிமைக்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. அது மக்களின் இறைமை பயன்படுத்தப்பட வேண்டியதுடன் பிரயோகிக்கப்பட வேண்டிய முறைக்கான ஒரு தெளிவான விளக்கமாகவும் உள்ளது. ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு என்பவற்றில் தகுதியுள்ள பதிவு செய்யப்பட்ட குடிமக்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த முடியும்.

அத்தியாயம் XIV வாக்குரிமை, தேர்தல்கள் என்பவற்றை விளக்குகின்றது. அத்துடன் அது அத்தகைய வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான வரையறைகளையும் விளக்குகின்றது. அதில் தெரிவுசெய்யும் உரிமைகள், வாக்காளருக்குரிய தகுதியீனங்கள், பொதுப் பதவிகளுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான தகைமைகள், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை, தேர்தல்களை நிருவகிக்கும் செயன்முறைகள் என்பன விளக்கப்பட்டுள்ளன.

இந்த அரசியலைப்பு உறுப்புரையால் வடிவமைக்கப்பட்ட, உதவியாக அமையும் நிலையியற் சட்டங்களின் தொகுதியொன்று உள்ளது. அது தேர்தல்களையும் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பையும் நிருவகிக்கின்றது. அது செயலொழுங்குகளை ஏற்படுத்துகின்றது. அது 14ஆம் 15ஆம் 17ஆம் திருத்தங்களால் திருத்தப்பட்டவாறான அத்தியாயம் XIV இல் உள்ளடங்கியுள்ள அரசியலமைப்புக் கருத்துக்களை விருத்தி செய்கின்றது. 13 ஆவது திருத்தத்தின் கீழ்

அதிகாரப்பகிர்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த நிலையியற் சட்டங்கள் மாகாணசபைத் தேர்தல்களையும் கட்டுப்படுத்துகின்றது.[1]

இலங்கை அரசியலமைப்பின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் அத்தியாம் III உம் ஒன்றாகும். அது உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிப்பதன் மூலம் நேரடியாகச் செயற்படுத்தக்கூடிய அடிப்படை உரிமைகளை வடிவமைத்துள்ளது. அது வாக்களிப்பதற்கான உரிமையைத் தெளிவாக ஏற்கவில்லை. எவ்வாறாயினும் பேச்சுச் சுதந்திரம் கருத்துச் சுதந்திரம் என்பவற்றுக்கான உரிமை ஒரு கட்டாயமான அடிப்படை உரிமையாகவுள்ளது (உறுப்புரை 14 (1)(அ)). கருத்துச் சுதந்திரத்தில் வாக்களிப்பதற்கான உரிமையும் அடங்கும் என உயர் நீதிமன்றம் பொருள்கோடலின் மூலம் ஏற்றுக்கொண்டுள்ளது.

கருணாதிலக எதிர் திசாநாயக்கா (இல: 01) வழக்கில் ஒரு மாகாண சபைக்கான தேர்தலை தாமதப்படுத்தும் விதத்தில் தேர்தல் ஆணையாளர் மேற்கொண்ட தற்றுணிபுத்தடை மனுதாரரின் கருத்துச் சுதந்திரத்தின் ஓர் அங்கமான வாக்களிப்பதற்கான உரிமையை மீறியுள்ளதாக நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. நீதிமன்றத்தின் சார்பில் தீர்ப்புக் கூறும்போது நீதிபதி மார்க் பர்ணாண்டோ பின்வருமாறு கூறினார்.

உறுப்புரை 14(1) (அ) பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரங்களை வலியுறுத்தும்போது அது பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரங்களின் *அனைத்து* வடிவங்களுக்கும் உத்தரவாதமளிக்கின்றது. அகராதியின் அடிப்படையில் "பேச்சு" என்பது 'X' என்பதையும்

[1] 1981ஆம் ஆண்டின் திருத்தப்பட்டவாறான 1ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்: 2004ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாட்டுகள்) சட்டம். 1981ஆம் ஆண்டின் திருத்தப்பட்டவாறான 15ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம். 1988ஆம் ஆண்டின் திருத்தப்பட்டவாறான 2ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம். 1946 ஆம் ஆண்டின் திருத்தப்பட்டவாறான 53ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம். 1981ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புச் சட்டம். மேலும் பார்க்க: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் *வாக்களிப்பதற்கான உரிமை மற்றும் தேர்தல் மனுக்களுடன் தொடர்புடைய சட்டங்கள்* (கொழும்பு: CPA 2000).

கருத்துவெளிப்பாடு என்பது 'Y' என்பதையும் குறிக்கும் என்றும் அதனால் பேச்சும், கருத்து வெளிப்பாடும் என்பது 'X+Y' என்பதற்குச் சமன் என்ற அடிப்படையில் உறுப்புரைகளின் எல்லைகளை யாரும் வரையறுக்கமுடியாது. "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" "சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுதல்" "பிரசுரித்தல் உள்ளிட்ட பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம்" போன்ற கோட்பாடுகள் அடங்கிய அரசியலமைப்பு ரீதியாக வலியுறுத்தப்பட்ட அடிப்படை உரிமைகள் அறிக்கையொன்று அரசியலமைப்பின் அத்திவாரமான அடிப்படை ஜனநாயகக் கோட்பாடுகளினதும் சட்டவாட்சியினதும் வெளிச்சத்தில் பரந்த அடிப்படையில் பொருட்கோடல் செய்யப்பட வேண்டும்..... (ஒரு) தேர்தல் என்பது பதவிக்குப் போட்டியிடும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொகுதி வேட்பாளர்கள் மத்தியில் நடைபெறும் போட்டிகளைக் கொண்டதாகும். அத்தகைய வேட்பாளர்களில் தான் விரும்புபவரைத் தெரிவு செய்யும் உரிமை வாக்காளருக்கு உண்டு. ஏனெனில் ஒரு சனநாயக முறையொன்றில் தன்னை ஆள்பவர்களை அல்லது தனக்குச் சேவைசெய்பவர்களை அவரே தெரிவு செய்யவேண்டும். அதனால் ஒரு வாக்காளர், வேட்பாளர்கள் பற்றியும், கடந்த காலத்தில் பதவி வகிக்கும்போது அவர்கள் செய்த சேவைகள் பற்றியும் எதிர்காலத்தில் பதவிக்கான அவர்களது பொருத்தப்பாடு பற்றியும் தனது கருத்தை வெளியிட முடியும். அத்தகைய கருத்துக்களை வாய்மொழியாகக் கூறுவது "பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாடு" என்பதில் அடங்கும் என்பது தெளிவானதாகும். உதாரணமாக பதவியில் இருக்கும் காலத்தில் ஒரு தொகுதி வேட்பாளர்களின் செயற்பாடு மிகவும் மோசமானதாக இருந்தால் அவர்களை மீண்டும் தெரிவு செய்யக் கூடாது என்று அல்லது அடுத்த தொகுதியினர் மீளத் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்று வேட்பாளர்களிடம் நேரடியாகக் கூறினாலும் அல்லது ஏனைய வாக்காளர்களுக்குக் கூறினாலும் அது தெளிவாக "பேச்சு மற்றும் கருத்துவெளிப்பாடு" என்ற வட்டத்தில் அடங்கும். மேலும் "பேச்சு மற்றும் கருத்துவெளிப்பாடு" என்பது வாய்மொழியாக மட்டுமன்றி இன்னும் பல வடிவங்களில் அமையமுடியும் என்பதில் சந்தேகமில்லை. எனினும் சராசரி வாக்காளன் அவ்வாறு கருத்து வெளியிட முடியுமானவனாக இருக்க வேண்டும் என்பது முக்கியமாக இருப்பினும், அது வேட்பாளர்களை நேரடியாக பதவியில் அமர்த்தவோ அல்லது அவர்களைப் பதவியில் இருந்து நீக்கவோ

முடியாது. மேலும் அந்த வாக்காளன் அடுத்த வாக்காளர்களை வாதித்து வழிப்படுத்துமளவுக்கு ஆர்வமுள்ளவராக இல்லாதிருக்கவும் முடியும். மாறாக, ஒரு வாக்காளன் தனது கருத்தை வெளியிடுவதற்கான மிகவும் சக்திவாய்ந்த முறை, வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று இரகசியமான முறையில் தனது வாக்குச் சீட்டில் அடையாளமிடுவதாகும். அது அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் அபாயம் குறைந்ததாக இருக்கும். *தனது வாக்கை அளிப்பதன் மூலம் ஒரு குடிமகன் இரண்டு வேட்பாளர்களுக்கிடையிலான தனது தெரிவை அமைதியாகவும் இரகசியமாகவும் வெளியிடுவது, ஒரு அரசியல் மேடையில் ஆவேசமாகப் பேசுவதைவிடக் குறைந்தளவில் "பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப்" பயன்படுத்துவதாக அமையமாட்டாது.* மாறாக அதனைக் கட்டுப்படுத்துவது அரசியலமைப்பின் அத்திவாரத்தையே உடைப்பதாக அமையும்.[2]

2. வாக்களிப்பதற்கான உரிமைமை மதிப்பது தொடர்பில் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகள்.

அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கத்தைப் பயன்படுத்தும்போது, ஒப்பந்தத்தின் கீழான சர்வதேச கடமைகள், குடிமக்கள் தொடர்பில் அரசைக் கட்டுப்படுத்துவதற்காக உயர் நீதிமன்றம் மேற்கோள் காட்டியுள்ளது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் (ICCPR) உள்ளிட்ட வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாக்கின்ற அதிகமான சர்வதேச ஏற்பாடுகளில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 25, அரசியலில் பங்குபற்றுதல் மற்றும் குடியுரிமை என்பவற்றுடன் தொடர்புடைய அதிகமான உரிமைகளை வழங்குகின்றது. அதில்

---

[2] கருணாதிலக்க எதிர் திசாநாயக்கா (இல: 01) (1999) எஸ்எல்ஆர் 157 173-4 இல். வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது

வாக்களிப்பதற்கான உரிமை தெளிவாக உள்ளடக்கப்பட்டுள்ளது.[3]

அண்மைக்காலத்தில் *முதலமைச்சரின் வழக்கில்* உயர் நீதிமன்றம் பின்வருமாறு கூறியது.

> வாக்காளர்களைச் சந்தித்து அவர்களது ஆதரவைப் பெற்ற நபர்கள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான வாக்காளர் பெருமக்களின் உரிமை இங்கு தொடர்புபடுகின்றது..... அது ஒவ்வொரு குடிமகனும் நேரடியாக அல்லது *சுதந்திரமாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலம்* பொது விவகாரங்களில் பங்குபற்றுவதற்கான உரிமையை வழங்குகின்ற சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 25 உடன் இணங்கிச் செல்கின்றது.[4]

---

[3] *குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின்* உறுப்புரை 25 பின்வருமாறு கூறுகின்றது. ஒவ்வொரு குடிமகனுக்கும் உறுப்புரை 2 இல் கூறப்பட்டுள்ள பாகுபாடுகள் எதுவுமின்றியும் நியாயமற்ற கட்டுப்பாடுகள் இன்றியும் அ) நேரடியாக அல்லது சுதந்திரமாகத் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் ஊடாகப் பொது விவகாரங்களில் பங்கேற்கவும் ஆ) உலகலாவிய, சம வாக்குப் பலத்தால் வாக்காளர்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு உத்தரவாதமளிக்கும் வகையில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் காலத்துக்குக் காலம் நடாத்தப்படும் நீதியான தேர்தல்களில் வாக்களிக்கவும் வாக்களிப்பு மூலம் தெரிவுசெய்யப்படவும் (இ) சமத்துவம் தொடர்பான பொது நியதிகளின் கீழ் தனது நாட்டின் அரச சேவையில் சேரவும் உரிமையும் வாய்ப்பும் உண்டு. பார்க்க எஸ்.ஜோசப்,ஜே.ஸ்சல்ட்ஸ் மற்றும் எம். காஸ்டன், *குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தம்: வழக்குகள், சாதனங்களும் விளக்கமும்.* (ஒகஸ்போர்ட்: ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அச்சகம், 2000), அத்தியாயம் 22.

[4] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (உத்தரவாத) லிமிட்டெட் மற்றும் இன்னொன்றும் எதிர் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவும் ஏனையோரும் (2003). 1 எஸ்எல்ஆர். 277 291இல். வலியுறுத்தல் அதன் மூல வடிவில் உள்ளது. நீதிமன்றம் அறிக்கையில் பொருளியல், சமூக, கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தம் என்ற வகையில் அரசியல் குடியியல் மற்றும் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 25ஐ மேற்கோள் காட்டுகின்றது.

3. தேர்தல்களையும் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பையும் நடாத்துவதற்கான செயன்முறைகள்

2001ஆம் ஆண்டின் இறுதியில் அரசியலமைப்பின் 17ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. அது *பலவற்றுக்கு மத்தியில்*, இலங்கையில் தேர்தல்கள் நடாத்தப்படும் நடைமுறையில் அடிப்படை மாற்றங்களைச் செய்வதை நோக்காகக் கொண்டிருந்தது. அத்தியாயம் XIV என்ற தலைப்பில் புதியதொரு அத்தியாயம் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது. அது தேர்தல்கள் ஆணையாளர் என்ற பழைய பதவியை இல்லாதொழித்தது. அதற்குப் பதிலாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவை ஏற்படுத்தியது. தேர்தல்கள் அரசியல் சார்பற்ற விதத்தில் நடாத்தப்பட வேண்டும் என்ற தேவையே 17ஆவது திருத்தத்திற்கான அடிப்படைத் தூண்டுதலாக அமைந்தது.

புதிய சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழு, அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசின் அடிப்படையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டியிருந்தது. "ஏதாவது உத்தியோகங்களில் அல்லது நிருவாகத்துறையில் அல்லது கல்வித்துறையில் சிறந்து விளங்குகின்றவர்களிலிருந்து" நியமன அங்கத்தவர்களை அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசு செய்ய வேண்டியிருந்தது.[5] இந்த ஆணைக்குழுவின் குறிக்கோள் "சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களையும் சர்வசன வாக்கெடுப்புக்களையும் நடாத்துவதாகும்".[6]

தேர்தல்கள், சர்வசன வாக்கெடுப்பு என்பவற்றுடன் தொடர்புடைய சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கில் ஆணைக்குழுவுக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு அரசியல் கட்சியின் அல்லது வேட்பாளரின் வெற்றியைத் தூண்டுவதற்காக அல்லது தடுப்பதற்காக அரசின் அல்லது கூட்டுத்தாபனத்தின் அசையும் சொத்துக்களை அல்லது அசையாச் சொத்துக்களைப் பயன்படுத்துவதைத் தடைசெய்வதன் மூலம் பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பக்கச்சார்பற்ற மற்றும் நீதியான தேர்தல் தொடர்பான விளம்பர ஆற்றலெல்லையை உறுதிப்படுத்தும்

---

[5] உறுப்புரை 103(1)

[6] உறுப்புரை 103(2)

நோக்கில் ஊடகங்களுக்கு ஆணைக்குழு வழிகாட்டல்களை வழங்க முடியும். அத்தகைய வழிகாட்டல்களை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் அல்லது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மீறுமிடத்து, தேர்தல் முடியும் வரை தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அரசியல் அல்லது ஏனைய நிகழ்ச்சிகளின் முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்பதற்கு ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியை நியமிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உள்ளது. மேலும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடாத்துவதற்கு பொலிசாரையும் ஆயுதப்படைகளையும் பயன்படுத்தும் அதிகாரமும் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு எதிராக உத்தியோகப் பொறுப்பு தொடர்பில் வழக்குத் தொடர முடியாதவாறு தனிப்பட்ட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. எனினும் ஆணைக்குழுவின் சட்டப்பாதுகாப்பு உயர் நீதிமன்றத்தின் ஆணைகளுக்கும் அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கத்துக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தேர்தல் மனுக்கள் தொடர்பான நியாயாதிக்கத்துக்கும் உட்பட்டதாகும்.

2004 ஏப்ரலில் நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது தேர்தல்கள் ஆணைக்குழு நிறுவப்பட்டிருக்கவில்லை. 17ஆவது திருத்தச் சட்டத்தின் -பிரிவு 27- ஒரு பாதுகாப்பு வாசகம், ஆணைக்குழு நிறுவப்படும் வரை அதன் அதிகாரங்களை திருத்தத்திற்கு முன்னர் பதவியில் இருந்த தேர்தல்கள் ஆணையாளர் பயன்படுத்த முடியும் எனக் கூறுகின்றது. அதனால் வார்த்தையளவில் முதற்சந்தர்ப்பத்தில் 17 ஆவது திருத்தத்தின் தேர்தல்கள் தொடர்பான ஏற்பாடுகள், தேர்தல் ஆணைக்குழு இல்லாத நிலையில் அமுலாக்கப்பட்டன. அதன் அதிகாரங்களைத் தேர்தல் ஆணையாளர் பயன்படுத்த வேண்டியவராக இருந்தார். இது பற்றிப் பின்னர் ஆராயப்படும்.

4. பொதுக் கொள்கை விவாதத்தில் தேர்தல் மறுசீரமைப்புக்கள் - தேர்தல் மறுசீரமைப்புக்கள் பற்றிய பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கை. (ஜனவரி 2004)

தற்போதைய தேர்தல் முறையில் செய்யப்பட வேண்டிய மறுசீரமைப்புக்கள் பற்றி ஆராய்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர் திரு. தினேஷ் குணவர்தன தலைமையில் அனைத்துக்

கட்சிகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று 2003 ஆகஸ்ட் மாதத்தில் நியமிக்கப்பட்டது. பாராளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றுக்கான தேர்தல்களுடன் தொடர்புடைய சட்டங்களில் செய்யப்பட வேண்டிய மறுசீரமைப்புக்களையும் அதற்கிணங்க அரசியலமைப்பில் செய்யப்பட வேண்டிய திருத்தங்களையும் ஆணைக்குழு முன்வைக்க வேண்டும் என்று ஆணைக்குழுவின் விசாரணை நியதிகள் கூறுகின்றன. தெரிவுக்குழு அரசியல் கட்சிகளிடமிருந்தும் சிவில் சமூகத்திடமிருந்தும் கருத்துக்களை கோரியது. அது தேர்தல் மறுசீரமைப்புடன் தொடர்புடைய பரந்த விடயங்களைக் கொண்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவற்றில் சிலவாகும்.

1. தபால்மூல வாக்களிப்பு, அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதற்கான வரையறைகள், தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்வதற்கான காலக்கெடு, தேர்தல் திகதிகளைத் தீர்மானித்தல், வாக்களிப்புக்களை ரத்துச் செய்தல், தேர்தல் மனுக்கள் தொடர்பான நடவடிக்கை முறை என்பவை உள்ளிட்ட தேர்தல் மறுசீரமைப்புக்கள்.

2. பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை.

3. வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டையை அறிமுகப்படுத்துதல்.

4. இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரங்களை அறிமுகப்படுத்துதலும் தேர்தல் இடாப்புக்களை கணனி மயப்படுத்துதலும்

5. வாக்குரிமை மற்றும் தேர்தல்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் குழுவொன்றை நிறுவுதல்

6. வேட்பாளர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனம்.

7. பெண்களின் பிரதிநிதித்துவம்.

2004 ஆம் ஆண்டு ஜனவரியில் சமர்பித்த தனது இடைக்கால அறிக்கையில்[7] இந்த விடயங்களில் அதிகமானவை தொடர்பில் பல தற்காலிகப் பிரேரணைகளைத் தெரிவுக்குழு முன்வைத்தது. பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துக்களில் அதிகமானவை தேர்தல் மறுசீரமைப்பு ஒரு "கலப்பு முறை" வடிவில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதாக இருக்கவேண்டும் என்றும் அது "எளிய தேர்தல்" முறையின் தன்மைகளையும் கொண்டிருக்க வேண்டும் என்றும் கூறுகின்றன என்று தெரிவுக்குழு புறக்குறிப்பிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். எவ்வாறாயினும் "ஏற்கப்பட வேண்டிய முறையின் வடிவங்களும் விபரங்களும்" மேலும் ஆய்வு செய்யப்பட வேண்டும் என எண்ணியதால் தெரிவுக்குழு இது தொடர்பில் குறிப்பான பிரேரணைகளை முன்வைக்கவில்லை.

2004 இல் தேர்தலுடன் தொடர்புடைய அபிவிருத்திகளை நோக்கும் போது வாக்களிப்பதற்கான தகைமையாக தேசிய அடையாள அட்டையை அறிமுகப்படுத்த வேண்டும் என்று இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டுள்ளமை மிக முக்கியமானதாகும். இந்த மறுசீரமைப்புக்குத் தேர்தல் அதிகாரிகள் மத்தியிலும் அரசியல் கட்சிகள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் கொள்கையளவில் பலத்த ஆதரவு இருந்தது. எவ்வாறாயினும் 2004 அக்டோபரில் இது தொடர்பான சட்டவரைபை அரசாங்கம் சமர்ப்பித்தபோது அதனை அமுல்படுத்துவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் தோன்றின. வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான பொதுவான சட்டத்தேவையாக அதனை நீதியான முறையில் அறிமுகப்படுத்த முன்னர் அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியிருந்தன. இது தொடர்பாக கீழே ஆராயப்பட்டுள்ளது.

05. தேர்தல் ஆணைக்குழு நிறுவப்படாமையும் 17ஆவது திருத்தத்தின் பிரிவு 27இன் அமுலாக்கமும்.

நாம் ஏற்கனவே கூறியது போல், 17ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் 2004 ஏப்ரலில் நடைபெறும் என அறிவிக்கப்படும் போது தேர்தல்

[7] தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கை (2004 ஜனவரி), பாராளுமன்றக் கூட்டத்தொடர் 24, ஐந்தாவது பாராளுமன்றம் (இரண்டாவது அமர்வு)

ஆணைக்குழு நிறுவப்பட்டிருக்கவில்லை. அதற்குக் காரணம் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரை நியமிப்பதற்கான அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசு தொடர்பில் ஜனாதிபதிக்கும் அரசியலமைப்புப் பேரவைக்கும் இடையிலான கருத்து முரண்பாடாகும். மீள்பரிசீலனை செய்யுமாறு கூறி ஜனாதிபதி அந்தச் சிபாரிசினை அரசியலமைப்புப் பேரவைக்கு திருப்பி அனுப்பினார். பின்னர் அது ஜனாதிபதியின் மறுப்புக்கு அடிப்படையாக அமைந்த குற்றச்சாட்டுக்களை (முக்கியமாக பக்கச்சார்பான அரசியற்கட்சி) விசாரித்தது. அந்த மறுப்பில் எந்த நியாயமும் இல்லை எனத் தீர்மானித்த அரசியலமைப்புப் பேரவை அதனை ஜனாதிபதிக்கு திரும்பவும் சமர்ப்பித்தது. எவ்வாறாயினும் நியமனத்தை மேற்கொள்ள ஜனாதிபதி தொடர்ந்தும் மறுத்தார். அதனால் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் *ஏனையவற்றுக்கும்* நியமிப்பதற்காக அரசியலமைப்புப் பேரவை சிபாரிசு செய்யும் ஒருவரை நியமிக்க மறுக்கும் அதிகாரம் சட்டவாக்கங்களின் படி ஜனாதிபதிக்கு இருக்கின்றதா? என்ற வினா எழும்பியது.

"*(அரசியலமைப்புப்) பேரவையின் சிபாரிசின் அடிப்படையிலன்றி* இந்த உறுப்புரையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு ஆணைக்குழுவினதும் தலைவராக அல்லது உறுப்பினராக எந்தவொரு நபரையும் நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது.) என்று உறுப்புரை 41 ஆ (1) கூறுகின்றது. அவசியப்படுமிடத்து அத்தகைய நியமனத்திற்கான சிபாரிசுகளை மேற்கொள்ள வேண்டும் என்று அரசியலமைப்புப் பேரவை மீது ஒரு கடமையை உறுப்புரை 41 ஆ(3) விதிக்கின்றது. அதனால் இந்தச் செயற்பாட்டின் முழுமையான ஆரம்ப கர்த்தா அரசியலமைப்புச் சபையாகும். தேர்தல் ஆணைக்குழுவுக்கான நியமனங்களுக்கான 1ஆம் பந்தி, 2ஆம் பந்தி என்பவற்றின் அடிப்படையில் நற்சாட்சிப்பத்திரங்களை வழங்கும் ஏக மத்தியஸ்தரும் அதுவே.

ஜனாதிபதிக்கு ஒரு போதும் முழுமையான அதிகாரமில்லை, மாறாக நாட்டின் தலைவர் என்ற வகையில் சிபாரிசுகளின் அடிப்படையில் வெறுமனே நியமனங்களை மேற்கொள்ளும் சம்பிரதாயப்பணியையே அவர் மேற்கொள்ள வேண்டும். அதனால் தேர்தல் ஆணைக்குழுவின் நியமனங்கள் தொடர்பில் . ஜனாதிபதிக்கு மறுக்கும் தற்றுணிபு இருப்பதாகக் கருதப்படவில்லை என்பது ஏற்பாட்டு வாசகங்களிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது.

அரசியலமைப்புப் பேரவையை பக்கச்சார்பற்ற பிரபலமான நபர்களைக் கொண்ட பிரதிநிதிகளின் குழுவாக உருவாக்கியதன் பிரதான சட்டத்துறை நோக்கம், அரசியல் நடிகர்களிடமிருந்து குறித்த சில விடயங்களுடன் தொடர்புடைய நியமன அதிகாரங்களை அச்சபைக்கு வழங்குவதாகும். தேர்தல்களின் நிருவாகத்திற்காகப் பலமான அதிகார வரையறைகளுடன் தேர்தல் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. அதன் சுயாதீனத்தன்மை இந்தப் புதிய நியமன முறையின் மூலமே பாதுகாக்கப்பட வேண்டும் என்று கருதப்பட்டது. ஒரு அரசியல் கட்சியின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரியாகவும் உள்ள ஜனாதிபதி புதிய குழுவிற்கான நியமனங்களை மேற்கொள்வதற்கான தற்றுணிபைத் தொடர்ந்தும் வைத்திருப்பாராயின் அது உறுப்புரை 41(ஆ) வின் அனைத்துத் திட்டங்களையும் மறுப்பதாகவும் அமையும். எவ்வாறாயினும் 17 ஆவது திருத்தத்தின் வாசகத்தையும் உயிரோட்டத்தையும் மீறியதனால் இன்றுவரை தேர்தல் ஆணைக்குழு நிறுவப்படாமல் இருக்கின்றது.

எவ்வாறாயினும் தேர்தல் ஆணைக்குழு நிறுவப்படாமல் இருப்பதனால் 17ஆவது திருத்தத்தின் பிரிவு 27(2) அது சட்டமாக்கப்பட்டதிலிருந்து தேர்தல் ஆணையாளராகப் பதவி வகிப்பவருக்கு தேர்தல் ஆணைக்குழு நிறுவப்படும் வரை அதன் அதிகாரங்களைப் பயன்படுத்த அனுமதிக்கின்றது. அதனால் 2004 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலை நடாத்துவது தொடர்பில், ஆணைக் குழுவின் அதிகாரங்களை தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்கா கொண்டிருந்தார். அது 2004 ஆம் ஆண்டில் பல் சுவாரஷ்யமான சட்டப் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. குறிப்பாகத் தேர்தல் பிரச்சாரத்தில் அரச ஊடகங்களின் பங்கு பற்றியும் வாக்குரிமையில் அதன் தாக்கம் பற்றியும் பிரச்சினைகள் எழுந்தன. இரண்டாவது பிரச்சினை (நிறுவப்படாத) தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களைத் தேர்தல் ஆணையாளர் பயன்படுத்துவது தொடர்பில் சட்டங்களை நீதி முறை மீளாய்வு செய்தல் மற்றும் தவிர்ப்புக்களைச் செய்தல் என்பவற்றுக்கான மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும், உயர் நீதிமன்றத்தினதும் நியாயாதிக்கம் தொடர்பானதாகும். இந்த இரண்டாவது விடயம் 2004 ஆம் ஆண்டின் வாக்குரிமை மற்றும் பிரதிநிதித்துவத்துடன்

தொடர்புடைய பெரும் சர்ச்சைக்குரிய விடயமான பாராளுமன்றத்துக்கான தேசியப்பட்டியல் உறுப்பினர்களின் நியமனம் தொடர்பாகவே முக்கியமாக எழுப்பப்பட்டது.

6. அரச ஊடகங்களின் பங்கு

ஏற்கனவே கூறப்பட்டது போல், உறுப்புரை 104ஆ(5) தேர்தல் ஆணைக்குழுவுக்குப் பொதுவாக அனைத்து ஊடகங்களையும் குறிப்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தையும், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தையும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை வழங்குகின்றது. ஏதாவது ஒரு தேர்தலை அல்லது கருத்துக் கணிப்பை நடாத்தும் போது சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானது எனக் கருதுமிடத்து எந்தவொரு ஒலி / ஒளி பரப்பையும் நடாத்துபவருக்கு அல்லது ஒரு பத்திரிகை உரிமையாளருக்கு அல்லது வெளியீட்டாளருக்கு அத்தகைய பொருத்தமான வழிகாட்டல்களை பிறப்பிப்பதற்கான அதிகாரம் உறுப்புரை 104ஆ(5)(ஆ) வின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உள்ளது. "உப பந்தி (அ) வின் கீழ் தங்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு வழிகாட்டலுக்கும் இணங்கிச் செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்." என்று உறுப்புரை 104ஆ(5)(இ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் தலைவர்கள் மீது என்று ஒரு கடமையை விதிக்கின்றது. அந்த அரச ஊடகங்களில் ஒன்று அத்தகைய வழிகாட்டல்களை மீறுமாயின் "...ஆணைக்குழு ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியை நியமிக்க முடியும்... அவர் தனது நியமனத் திகதியில் இருந்து தேர்தல் முடியும் வரை அனைத்து அரசியல் ஒளி/ஒலிபரப்புக்களினதும் அல்லது தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தும் என ஆணைக்குழு கருதுகின்ற எந்தவொரு ஒளி/ஒலிபரப்பினதும் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அல்லது இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின்) முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்பார்...". ஒரு தகுதிவாய்ந்த அதிகாரி முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்றுள்ள ஒரு காலப்பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அல்லது

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் அந்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய எந்தவொரு தொழிற்பாட்டையும் தவிர்க்க முடியாது.

உறுப்புரை 104ஆ(5)(இ) இல் கூறப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அதிகாரியின் அதிகாரங்கள் 2002 ஆம் ஆண்டின் 3ம் இலக்க தகுதிவாய்ந்த அதிகாரச் (அதிகாரங்களும் தொழிற்பாடுகளும்) சட்டத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. பிரிவு 2ன் உப பிரிவு 16 இன் கீழ் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வானொலிச் சேவையையும், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தொலைக்காட்சி சேவையையும் பொதுமக்களின் விருப்பம், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடாத்துதல், உயர்தரத்திலான நிகழ்ச்சிப்படுத்தல் என்பவற்றைக் கவனத்தில் எடுத்து மேற்பார்வை செய்யவும் கட்டுப்படுத்தவும் அதிகாரம் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கூட்டுத்தாபனங்கனின் அனுமதிச் சட்டத்தின் கீழ் அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் தொழிற்பாடுகளையும் தகுதிவாயந்த அதிகாரி பொறுப்பேற்பார்.[8] அவர் முகாமையுடன் தொடர்புடைய விடயங்களை மட்டுமன்றி நிகழ்ச்சியாக்கம், தயாரிப்பு, விளம்பரம், விடய உள்ளடக்க விதிமுறைகள் என்பவற்றையும் பொறுப்பேற்பார். அந்தச் சட்டத்தின் பிரிவு 3 இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் என்பன தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை மட்டுமன்றி[9] சிறந்த இரசனை, ஒழுக்கம், சமநிலை, சரியான தன்மை, பக்கச் சார்பின்மை, பொதுமக்களின் விருப்பம் என்பவற்றுடன் தொடர்புடைய, ஏற்பாடுகளில் கூறப்பட்டுள்ள நிலையியல் நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துமாறும் தகுதிவாய்ந்த அதிகாரியை வேண்டுகின்றது.

இலங்கையில் வழமையாக நிகழ்வது போன்று 2004ஆம் ஆண்டிலும் தேர்தல் பிரச்சாரத்தில் அரச ஊடகங்களின் பங்கு சர்ச்சைக்குரியதாகவே இருந்தது. தேர்தல்கள் ஆணையாளர்

---

[8] 1966ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம் மற்றும் 1982ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டம்.

[9] உறுப்புரை 104ஆ(5)(அ)

2004ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஊடகங்களுக்கான வழிகாட்டல்களைப் பிறப்பித்தார். பிரச்சாரக் காலத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினதும், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினதும் நடத்தை அரசியலமைப்பிலும் நிலையியற் சட்டத்திலும் கூறப்பட்டுள்ள சமநிலை மற்றும் பக்கச் சார்பின்மை என்பவற்றின் தரத்திலிருந்து விலகுவதாகத் தென்பட்டது. அதனால் பிரச்சாரத்துக்கான இறுதி வாரத்தில் இந்த இரண்டு நிறுவனங்களும் வழிகாட்டல்களைப் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியைத் தேர்தல் ஆணையாளர் நியமித்தார்.

தனது வழிகாட்டல்களை அலட்சியப்படுத்துகின்றதாகக் கருதப்பட்ட குறித்த சில செய்திகளையும் அரசியல் நிகழ்ச்சிகளையும் பொறுப்பேற்பதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரைத் தேர்தல் ஆணையாளர் நியமித்த போது அடிப்படை உரிமைகள் மனுவொன்றை உயர் நீதிமன்றத்தில் 2004 மார்ச் 31 ஆந் திகதி தாக்கல் செய்ததன் மூலம் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் நீதியானதும் சமநிலையானதுமான செய்திப்படுத்தலுக்கான தேர்தல் ஆணையாளரின் வழிகாட்டல்களை மீறியுள்ளது. மனுதாரர்கள் அந்த வழிகாட்டல்களையும் தகுதிவாய்ந்த அதிகாரியின் நியமனத்தையும் இடைநிறுத்துவதன் மூலம் இடைக்கால நிவாரணம் வழங்குமாறு கோரினர். உயர் நீதிமன்றம் அதனை நிராகரித்தது.

இந்த நிகழ்வுகள் அனைத்தும் அரச ஊடக நிறுவனங்கள் பொதுசன ஐக்கிய முன்னணியின் அடிப்படை அங்கமாக உள்ளன என்பது போன்று சட்ட நடைமுறைகள் செயலிழந்து நின்ற உண்மையைக் காட்டுகின்ற முக்கிய குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும். அது சிலவேளை எதிர்பாராத விதமாகவேனும் அரச ஊடக நிறுவனங்களுக்கும் அவற்றைக் கட்டுப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான தொடர்பை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. இந்த விவகாரம் அதிகமாகக் குத்திக்காட்டும் கல்விசார் அல்லது அரசியல் விமர்சனத்தைவிடப் பலமாக எமது அரச ஊடக நிறுவனங்களின் முழுமையான பிழையான தன்மையை நிரூபித்துக் காட்டியது. இருப்பினும் 17 ஆவது திருத்தத்தின் (மூலமும் அதன்விளைவாக வந்த அனுமதிச் சட்டம், 2002 ஆம் ஆண்டின் 3ம் இலக்க தகுதிவாய்ந்த அதிகாரி (அதிகாரமும் தொழிற்பாடுகளும்) சட்டம் என்பவற்றின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைத் தேர்தல் ஆணையாளர் பயன்படுத்தியமை கட்சி அரசியல் அக்கறைகளை அனுசரிப்பதற்காக அரச ஊடக

நிறுவனங்களைப் பயன்படுத்துவதை நியாயப்படுத்துவதற்கான முயற்சியைத் தடுப்பதற்குப் போதுமானதாக அமையவில்லை என்பதே உண்மையாகும்.

7. சட்டசபைக்கான நியமன அங்கத்துவக் கோட்பாடும் தேசியப்பட்டியலும்

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலைத் தொடர்ந்து வந்த மாதங்களில் தேசியப்பட்டியலுக்கான நியமனப் பிரேரணைகளும் நியமனங்களும் சட்டரீதியானதல்ல எனக் கூறிப் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. தேசியப் பட்டியல் நியமன விடயத்தில் அரசியலமைப்பு வரையறைகள் வரலாற்றில் பரவலாகத் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளன. அதனால் சட்டசபைக்கான நியமன அங்கத்துவக் கோட்பாட்டுக்கு ஆதாரமாக அமைகின்ற அரசியல் நியாயங்களை விளக்குவது, குறித்த பிரச்சினை தொடர்பான விவாதத்துக்கு நுழைவாயில் என்ற வகையில் பயனுள்ளதாக அமையும்.

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் சிலோனின் செனட் சபையில் அரைவாசிப் பகுதியினர் அல்லது 15 பேர் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையொன்றின் கீழ் ஒரு மாற்று வாக்கு வழிமுறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஏனைய 15 அங்கத்தவர்களும் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். பொறுப்புக் கூறும் அரசாங்கத்தில் அவர்கள் அமைச்சரவையால் நியமிக்கப்படுவர். பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் சட்டவாக்கத்தினரை இவ்வாறு நியமிப்பதற்கான நியாயம் சோல்பரி ஆணைக்குழுவின் அறிக்கையில் காணப்பட்டது.[10]

இதன் பிரதான நோக்கம் "அவசரமானதும் ஒழுங்காக ஆராயப்படாததுமான சட்டங்கள் நியதிச் சட்டப்புத்தகங்களில் சேர்க்கப்படுவதைத்"[11] தவிர்ப்பதும் "சிந்தனைக்கும் ஆய்வுக்கும் கால அவகாசம் கொடுக்கும் நோக்கத்துக்காக"[12] காலதாமதத்தில்

---

[10] சிலோன்: அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றிய ஆணைக்குழுவின் அறிக்கை (1945 செப்டம்பர்) .6677: அத்தியாயம் XIV

[11] மேற்குறித்தது, பந்தி 295

[12] மேற்குறித்த குறிப்பைப் பார்க்க பந்தி 304

குறுக்கீடு செய்வதுமாகும். அத்துடன் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை நியமன அங்கத்தவர்கள் மூலம் பலப்படுத்த முடியும் என்றும் வாதிடப்பட்டது. மேலும் நியமன அங்கத்தவர்கள் சமூகத்தில் புகழ் பெற்றவர்களாகவும் தொழில்துறையில் விசேடமானவர்களாகவும் இருப்பார்கள் என்றும் சொல்லப்பட்டது. அவர்கள் "பொதுமக்களின் அரசியல் கல்விக்குப் பங்களிப்புச் செய்ய" முடியும். உயர் அறிவுத்தரத்தையும் விவகாரங்கள் பற்றிய பரந்த அனுபவத்தையும் கொண்ட இந்தப் புகழ்பெற்ற தனிநபர்கள் குழப்பங்கள் நிறைந்த ஒரு பாராளுமன்றத் தேர்தல் மூலம் அரசியல் வாழ்வில் நுழைய விருப்பமற்றவர்களாக இருக்க முடியும். ஆனால் கட்சி அல்லது சமூகப் பிணைப்புக்கள் அவர்கள் மீது குறைவாகவே திணிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட முடியும். அத்துடன் அவர்கள் தமது கருத்துக்களைச் சுதந்திரமாகவும், வெளிப்படையாகவும் வெளியிடக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். அவர்களது தேர்தல் எதிர்பார்ப்புக்களினால் ஏற்படக் கூடிய பின்விளைவுகளைக் கவனத்தில் எடுக்கத் தாம் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாக அவர்கள் உணரக் கூடாது.[13] ஆணைக்குழு மேலும் கூறியதாவது "பெரும்பான்மையினரின் செயற்பாட்டினால் அச்சுறுத்தப்படுவதாக சரியாகவோ பிழையாகவோ உணர்பவர்கள் இரண்டாவது சபையை, ஒரு அவசரமான சட்டத்தை தாமதப்படுத்துவதற்கான கருவியாக மட்டுமன்றி எரியும் பிரச்சினைகளை அமைதியான சூழ்நிலையில் கையாள்வதற்கான ஒரு வழிமுறையாகவும் கருதுவார்கள்.[14]

அதனால் நியமன மூதவையினர் (செனட்டர்கள்) சட்டவாக்கச் செயற்பாட்டில் கீழ்ச் சபையின் ஆய்வு செய்யும் தன்மையை அல்லது நிதானமான தொழிற்பாட்டை முன்னேற்ற வேண்டும் என்றும் அத்தகைய கருத்துக்கள் பிரபலமற்றவையாக இருப்பினும் அவற்றுக்குப் பொதுவிவாதத்துக்கான அதிகாரக் குரலையும் காரணத்தையும் சேர்க்க வேண்டும் என்றும் போதிய தேர்தல் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிராத சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்றும் இறுதியாக பெரும்பான்மைக்கு எதிரான கருவி என்ற வகையில் மூதவையின் தொழிற்பாட்டைப் பலப்படுத்த வேண்டும் என்றும்

---

13 சிலோன்: அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றிய ஆணைக்குழு. பந்தி 296

14 மேற்குறித்தகுறிப்பைப் பார்க்க பந்தி 298

எதிர்பார்க்கப்பட்டனர். சோல்பரி முதவை முடிவடையும் போது பெறுமதிமிக்க இந்த நோக்கங்களில் எதனையும் அடைந்திருக்கவில்லை. அதனால் தான் ஜெனிங் 1953இல் அதனைக் கடுமையாக விமர்சித்தார். "ஒருவிடயத்தில் மாத்திரமே எதிர்பார்ப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சோல்பரி ஆணைக்குழுவின் இந்தப் பிரேரணையை எதிர்ப்பது தொடர்பான கருத்துப் பரிமாற்றம் 1945 இல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது "அது எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்தாது" என்பதனால் அதனை ஊக்கத்துடன் எதிர்ப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டது."[15]

1972ஆம் ஆண்டினதும் 1978ஆம் ஆண்டினதும் அரசியலமைப்புக்களின் கீழ் தனிச் சட்டவாக்க சபைகளே காணப்பட்டன. அவற்றில் சட்டவாக்கத்தினரை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் இருக்கவில்லை. எனினும் தற்போதைய அரசியல் அமைப்பில் 1988 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட 14ஆவது திருத்தத்தின் (பின்னர் 15ஆவது திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்டது) மூலம் ஏற்படுத்தப்பட்ட உறுப்புரை 99(அ) அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் ஒரு குறித்த தொகை தேர்ந்தெடுக்கப்படாத உறுப்பினர்களைப் பாராளுமன்றத்துக்கு நியமிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றது. கட்சிகளுக்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கை அக்கட்சிகள் தேர்தலில் பெறும் வாக்குகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது.

நியமனக் கோட்பாட்டை மீள் அறிமுகம் செய்ததன் நோக்கமும் குறிக்கோளும் அரசியலமைப்பில் தெளிவாக இல்லாவிடினும் உறுப்புரை 99அ வின் நான்காம் பந்தியில், ஆகக் குறைந்தது ஒரு நோக்கமாவது நிறைவேற வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்த உறுப்புரை "இனரீதியான அல்லது வேறுவகையான எந்தவொரு சமூகத்திலிருந்தும் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதன் தேசிய சனத்தொகை விகிதாசாரத்துக்கு ஈடானதாக இருக்கின்றதாகவும்! தேசிய சனத்தொகை விகிதாசாரத்துக்கு ஈடான முறையில் அனைத்துச் சமூகங்களும் பிரதிநிதித்துவம் செய்யப்படும் விதத்தில் நிகழ்வதை நடைமுறைச் சாத்தியமான முறையில் உறுதிப்படுத்துமாறும்

[15] ஐ.ஜெனிங்ஸ் இலங்கையின் அரசியலமைப்பு 3ஆம் பதிப்பு (ஒக்ஸ்போர்ட்: ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அச்சகம்,1953), 99.

(நியமனத்துக்காக பிரேரிக்கும் கட்சியை) வேண்டுவதை உறுதிப்படுத்துமாறு தேர்தல் ஆணையாளரை வேண்டுகின்றது." இந்தத் தேவைப்பாடு முழுமையாகத் தேவையற்றதாகும். ஏனெனில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம், அரசியல் கட்சிகள் தமது நியமனப் பிரேரணைகளில் ஓரளவுக்கு இன, மதப் பல்வகைமையை உறுதிப்படுத்த நிர்ப்பந்திக்கின்றது. அத்துடன் அது மதம், இனம், பிரதேசம் என்பவற்றின் அடிப்படையிலான கட்சிகளின் வளர்ச்சியையும் தூண்டுகின்றது. மறுபுறம் இந்தத் திட்டத்தின் கீழ் மலாயர்கள், பறங்கியர்கள் போன்ற மிகவும் சிறிய சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் எதனையும் பெறுவதில்லை.

ஒரு பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் வாக்குரிமை முக்கியமான அரசியல் பெறுமானத்தைக் கொண்டுள்ளது. குறைந்தது சோல்பரி ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள நோக்கங்களில் ஒன்றையாவது கொண்டிருக்குமாயின் அதில் சட்டசபை நியமன அங்கத்துவ முறைக்கான வரையறைகளைப் பாதுகாக்க முடியும். கனேடிய சமஷ்டியில் மூதவை நியமிக்கப்படுகின்றது. (அதனால் கடுமையான நம்பகத்தன்மைப் பிரச்சினையை அது எதிர்நோக்குகின்றது) அதன் அரசியலமைப்பு பின்பற்றப்பட வேண்டிய பெறுமானங்களையாவது கூறியுள்ளது. மத்திய அரசில் பிராந்தியப் பிரதிநிதித்துவம் போன்ற சமஷ்டித் தேவைகளை அது உள்ளடக்கியுள்ளது. அவ்வாறிருந்தும் அந்த நோக்கங்கள் நிறைவேறாமை பிரச்சினையாகவுள்ளது.

இலங்கையில் நியமனத்துக்காக முன்மொழியப்படுபவர்களின் பெயர்கள், தேர்தலுக்கு முன் கட்சியால் சமர்ப்பிக்கப்படும் தேசியப்பட்டியலில் இடம்பெற்றிருக்க வேண்டும் அல்லது அந்தப் பொதுத் தேர்தலில் (தோல்வியடைந்த) வேட்பாளராக இருக்க வேண்டும் என்பதே ஒரே தேவைப்பாடாகும்.

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்ட போது பாராளுமன்றம் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட 196 உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று உறுப்புரை 62 இல் கூறப்பட்டிருந்தது. எனினும் அரசியலமைப்பில் செய்யப்பட்ட 14 ஆவது திருத்தம் (1988) இந்த எண்ணிக்கையை 225 வரை அதிகரித்தது. இத்திருத்தத்தின் மூலம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய உறுப்புரை 99அ வின்படி, மேலதிக 29

ஆசனங்களும் தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் பெற்ற மொத்த வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் பங்கிடப்படுவர். தேர்தல் ஆணையாளர் இவ்வாறு ஒவ்வொரு கட்சிக்கும் கிடைக்கும் ஆசனங்களைத் தீர்மானித்த பின்னர், அந்தக் கட்சிகளின் பொதுச் செயலாளர்கள் தேசியப்பட்டியலில் உள்ள வேட்பாளர்களிலிருந்து (அல்லது வேட்புமனுவில் உள்ள தெரிவு செய்யப்படத்தவறியவர்களிலிருந்து) பெயர்களை முன்மொழிவர்.

உறுப்புரை 99அ வில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளின்படி *வேட்புமனுத்தாக்கல் செய்யும் காலத்துக்குள்* தேசியப்பட்டியலில் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்யப்பட்டு வேட்புமனுத்தாக்கல் செய்யும் காலக்கெடு முடைவடைந்தவுடன் தேர்தல் ஆணையாளர், அந்தப் பட்டியல்களை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும். அத்துடன் அந்தப்பட்டியல்களை சிங்கள, தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ஏற்பாடுகள் பயனுள்ளவையாகும். 14ஆவது திருத்தத்தின் மூலம் எமது அரசியலமைப்பில் சட்டசபைக்கான நியமன அங்கத்தவர் கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தச் செயற்பாடு முடியுமானவரை ஜனநாயகத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்பதற்காக கட்சிகளிலிருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்களை மட்டுமன்றி, தேர்தலின் பின்னர் நியமிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளவர்களைப் பற்றியும் வாக்காளர்கள் அறிந்திருப்பதைத் தேர்தல் ஆணையாளர் உறுதிப்படுத்த வேண்டும் எனக்கூறுகின்றது.

ஏற்கனவே விளக்கப்பட்டதுபோல், தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் தேர்தல் ஆணையாளர் மேலதிக ஆசனங்களைக் கட்சிகள் மத்தியில் பகிர்ந்தளிப்பதுடன் அது தொடர்பான அறிவித்தலையும் வெளியிடுவார். தேர்தல் ஆணையாளரின் இந்த அறிவித்தல் வெளியாகி ஒரு வாரத்திற்குள் மேலதிக ஆசனங்களைப் பெறத் தகுதியான கட்சிகள் தேசியப்பட்டியலிலிருந்து அல்லது தேர்தலுக்கான வேட்புமனுவில் பெயர் குறிப்பிடப்படுபவர்களிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டியவர்களை முன்மொழிய வேண்டும். வாக்காளர்களால் நிராகரிக்கப்பட்டவர்களை முன்மொழிய அனுமதிக்கின்ற பின்னைய

ஏற்பாடு பின்னோக்கிச் செல்லும் தீவிர நிலையாகும். எனினும் அது குறைந்தது கட்சிகளால் முன்மொழியப்பட முடியுமான ஆட்களின் வருகையையாவது வரையறுக்கின்றது.

அவ்வாறு முன்மொழியப்படும் நபர்களின் வகைகளைப் பொறுத்தவரை உறுப்புரை 99அ வின் மூலம் விதிக்கப்பட்டுள்ள முதலாவது நிபந்தனை, உறுப்புரைகள் 90, 91 என்பவற்றின் வாசகங்களுக்கு இணங்க அத்தகைய நபர்கள் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்பதாகும். இரண்டாவது நிபந்தனை ஏற்கனவே விளக்கப்பட்டது. அதாவது வேட்புமனுத் தாக்கல் செய்யும் காலத்தில் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களில் (நேரடியாகத் தெரிவு செய்வதற்கான வேட்பாளர்களின் பட்டியலில் அல்லது தேசியப்பட்டியலில்) முன்மொழியப்படுபவர்களின் பெயர்கள் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதாகும்.

உறுப்புரை 99அ வின் மூன்றாம் பந்தி இதனை மிகத் தெளிவாக விளக்குகின்றது. அதனால் உறுப்புரை 99அ வைப் பொருள்கோடல் செய்யும் போது ஒன்றின் விதப்பு மற்றயதன் விலக்காக அமையும் *(expression unius est exclusion alterius)* என்ற ஒப்புரவு விதியைப் பயன்படுத்த வேண்டும். அதன் தேவைப்பாடுகளை வலுக்குறைப்புச் செய்வது சட்ட ரீதியில் சாத்தியமற்றதாகும்.[16] ஒருவரின் பெயர், ஒரு கட்சி தேர்தல் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கும் இரண்டு பட்டியல்களில் ஒன்றிலாவது இடம்பெற்றிருக்காவிட்டால் தேர்தலின் பின்னர் பாராளுமன்றத்துக்குப் பிரேரிக்கப்பட அவர் தகுதியற்றவராவார்.

எவ்வாறாயினும் உறுப்புரை 99அ வின் துணைச் சட்டமான 1981ஆம் ஆண்டின் திருத்தப்பட்டவாறான 1ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், கட்சிகள் தமது சுயநலத்துக்குப் பயன்படுத்தும் விதத்தில் இடைவெளியை வழங்குவதற்குத் தந்திரமாக வரையப்பட்டதாகவே தோன்றுகின்றது. இந்தச் சட்டத்தின் பிரிவு 64 இன் மொழிக் கருத்து ஒரு தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவி

---

[16] இந்த ஒப்புரவு விதியின் விளக்கத்துக்கு பார்க்க *தோம்ஸன் எதிர் ஹில்* (1870) எல் ஆர் சிபி 564: *கேரலா கல்விச் சட்டமூலம்* (1958) அகில இந்திய அறிக்கை 956 உச்ச நீதிமன்றம்: *காரியப்பர் எதிர் விஜேசிங்க* (1967) 70 என்எல்ஆர் 49.

விலகுமிடத்து குறித்த கட்சி தனது உறுப்பினர்களில் *யாரையாவது* முன்மொழிவதன் மூலம் அந்த வெற்றிடத்தை நிரப்ப முடியும் எனக் கூறுவதாகத் தோன்றுகின்றது. வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் பிரிவு 64ஐ இவ்வாறு மொழியடிப்படையில் பொருள்கோடல் செய்வது அரசியலமைப்பு வழங்குகின்ற தற்றுணிபைவிடப் பரந்ததொரு தெரிவை அரசியல் கட்சிகளுக்கு வழங்குவதாக அமையும். வேட்புமனுவில் இடம்பெற்ற அல்லது தேர்தலுக்கு முன்னர் பிரசுரிக்கப்பட்ட தேசியப் பட்டியலில் உள்ள பெயர்களையே தெரிவுசெய்ய முடியும் என்று அரசியலமைப்பு கூறுகின்றது. உண்மையில் பிரிவு 64இற்கான இந்தப் பொருள்கோடலை அடிப்படையாகக் கொண்ட கேடுவிளைவிக்கும் செயற்பாடுகளுக்கு அரசியல் கட்சிகள் மத்தியில் பரவலான அங்கீகாரம் கிடைத்துள்ளது. 2004ஆம் ஆண்டிலும் அதுவே நடந்தது. தேசியப்பட்டியல்கள் தேர்தலுக்கு முன் பிரசுரிக்கப்பட வேண்டுமென்ற அரசியலமைப்புத் தேவைப்பாட்டை தவிர்ப்பதற்கு அரசியல் கட்சிகளை அனுமதிப்பதன் மூலம் பிரிவு 64, இலங்கையின் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தையும் தேர்தல் நடைமுறைகளையும் ஆட்டங்காணச் செய்கின்றது. இந்த ஏற்பாடு இலங்கை வாக்காளர்களின் புண்ணியத்தால் கட்சியின் படிமுறை அதிகார அமைப்பைப் பலப்படுத்துகின்றது.

எவ்வாறாயினும், மாகாண சபைகள் சட்டத்தின் ஒதுக்கீட்டு ஏற்பாட்டின்[17] கீழான ஒரு நியமனத்தின் சட்டபூர்வத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கிய அண்மைக்கால வழக்கொன்றில், பதவி விலகல்கள் மூலம் உருவாகும் வெற்றிடங்களை அரசியல் கட்சிகள் தமது உறுப்பினர்களில் யாரையாவது நியமிப்பதன் மூலம் நிரப்ப முடியாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. கட்சியின் வேட்புமனுப் பத்திரங்களில் பெயர் குறிப்பிடப்பட்டவர்களில் ஒருவரைத்தான் நியமனத்துக்கு முன்மொழிய முடியும் எனக் கூறிய மனுதாரரின் நிலைப்பாட்டை நீதிமன்றம் ஆதரித்தது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பைப் புறத்தொதுக்கும் போது நீதிபதி மார்க் பர்ணான்டோ பின்வருமாறு கூறினார்:

> அரசிலமைப்பு ஏற்பாடுகள் அல்லது நிலையியற் சட்ட

---

17 *மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் சரவணமுத்து எதிர் திஸாநாயக்கா, வீரவன்னி மற்றும் ஏனையோர்.* உயர் நீதிமன்றம் மேன்முறையீடுகள் இல: 26/2002, 27/2002, உயர் நீதிமன்ற அறிக்கை 27.05.2003

ஏற்பாடுகள் பொருட்கோடல் செய்யப்பட வேண்டியதாகக் காணப்பட்டு, அதற்குச் சாத்தியமான இரண்டு வகைப் பொருள்கோடல்கள் காணப்பட்டு, ஜனநாயகக் கோட்பாடுகளுடன் அதிகம் இணங்கிச் செல்கின்ற ஒன்றுக்குப் பதிலாக, அரசியலமைப்பில் அல்லது வேறு ஒரு நிலையியற் சட்டத்தில் ஜனநாயக விரோதமானதாகத் தோன்றுகின்ற வேறு ஏற்பாடுகள் இருப்பதாகக் காரணம் காட்டி ஜனநாயக விரோத விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு பொருள்கோடலை நீதிமன்றம் ஏற்றுக்கொள்வதை நியாயப்படுத்த முடியாது.[18]

8. 2004 ஏப்ரலில் நடைபெற்ற பொதுத் தேர்தலைத் தொடர்ந்து செய்யப்பட்ட தேசியப் பட்டியல் நியமனப் பிரேரணைகள்.

எவ்வாறாயினும் 2004ஆம் ஆண்டின் தேர்தல் பிரச்சார காலத்தில் முன்னாள் பிரமரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான திரு. ரட்னசிரி விக்ரமநாயக்காவின் பெயர் சுதந்திர ஐக்கிய முன்னணியின் வேட்புமனுவிலோ, தேசியப்பட்டியலிலோ இடம்பெறவில்லை என்பது தெரியவந்தபோது நிகழப் போகும் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. எவ்வாறாயினும் திரு. விக்ரமநாயக்கா சுதந்திர ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியலில் முதலாவது பெயராகக் கருதப்பட வேண்டும் எனக் கூறும் ஒரு பத்திரிகைச் செய்தியை பெப்ரவரி மாதத்தில் ஜனாதிபதி வெளியிட்டார்.[19] பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவுடன் பதவி விலகி உண்மையான வேட்பாளர்களுக்கு வழிவிடும் பொம்மை வேட்பாளர்களின் பெயர்களை பட்டியலில் நுழைக்கும் செயற்பாடு பற்றி இச்சந்தர்ப்பத்திலும் சிந்திக்கப்பட்டது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

எதிர்பார்க்கப்பட்ட திரு. விக்ரமாநாயக்கா அவரது பெயர் கட்சியால் நியமனத்துக்கு முன்மொழியப்பட்ட போது தேர்தல் ஆணையாளர் அதனை ஏற்று அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகப் பிரகடனப்படுத்தினார். இந்த நியமனத்துக்கு எதிராகத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி பல மனுக்கள் மேன்முறையீட்டு

---

18 மேற்குறித்த தீர்ப்பின் 10 ஆம் பக்கம்

19 டேய்லி மிரர், 2004.பெப்ரவரி 26 ஆந் திகதி

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தைச் சேர்ந்த திரு. ரொஹான் எதிரிசிங்க ஆகியோரினால் தாக்கல் செய்யப்பட்டன. இந்த கட்டுரை எழுதப்படும் போது அந்த வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

பிரதிவாதிகள் சார்பில் முதனிலை ஆட்சேபனைகள் பல்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்பட்டன. குறிப்பாக உறுப்புரை 104எ தொடர்பான விடயத்தை விசாரிப்பதற்கான நியாயாதிக்கம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு இருக்கின்றதா? இந்த விடயம் அரசியலமைப்புக்கான பொருள்கோடலுடன் தொடர்புபட்டதா? அவ்வாறாயின் கேள்வியை தீர்ப்புக்காக உறுப்புரை 125இற்கு ஏற்ப உயர் நீதிமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டன.

9. உறுப்புரை 104ஏ இன் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கம்

அடிப்படையில் (திருத்தப்பட்ட உறுப்புரை 141 செல்லுபடியாகும் ஆட்கொணர்வு ஆணையைத் தவிர) ஆணை பிறப்பிக்கும் நியாயாதிக்கம் அரசியலமைப்பின் உறுப்புரை 140இன் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தேர்தல் ஆணைக்குழு விடயத்திலும் 17ஆவது திருத்தத்தின் பிரிவு 27இன் கீழ் தேர்தல் ஆணையாளர் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களைப் பயன்படுத்துவது தொடர்பிலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் பறிக்கப்பட்டுள்ளது என்று வாதிக்கும் போது 17ஆவது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட உறுப்புரை 104ஏ ஐ ஆதாரம் காட்டி வாதிட்டனர். தேர்தல் ஆணைக்குழு தனது அதிகாரங்களைப் பயன்படுத்தும் போது எழும் ஏதாவது விடயங்கள் தொடர்பான உறுப்புரை 140 இன் கீழான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை உயர் நீதிமன்றம் பயன்படுத்த வேண்டும் என உறுப்புரை 104ஏ கூறுகின்றது. எனவே தேர்தல் ஆணைக்குழு நிறுவப்படாமல் இருக்கும்போது தேர்தல் ஆணையாளர் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் உறுப்புரை 104ஏ ஐப்

பிரயோகிக்க முடியுமா? என்ற வினா எழுகின்றது. அது அவ்வாறு பிரயோகிக்கப்பட்டால், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பான அடிப்படை ஆணை பிறப்பிக்கும் நியாயாதிக்கத்துக்குரிய நீதிமன்றம் உயர் நீதிமன்றமே. மாறாக மேன்முறையீட்டு நீதிமன்றமல்ல.

உறுப்புரை 104ஏ (உறுப்புரை 104 அ (அ) உடன் சேர்த்து வாசிக்க) இல் உள்ள நியாயாதிக்கப் பிரச்சினை *கனி எதிர் தயானந்த திஸாநாயக்கா* வழக்கில் (2004)[20] உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகளைக் கொண்ட குழுவினால் தீர்க்கமாகத் தீர்க்கப்பட்டதாகவே தோன்றுகின்றது. இந்த வழக்கில், கொழும்பு மாநகர சபைக்கான 2002ஆம் ஆண்டின் உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்களில் ஒருவர், வாக்குகளை மீள எண்ண மறுத்தமைக்காக தேர்தல் ஆணையாளரின் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஆணையீட்டெழுத்தாணை (Mandamus) மற்றும் மறு பரிசீலனைக்கு உட்படுத்துமாறு உறுதிகேள் (Certiorari) எழுத்தாணைகளைப் பிறப்பிக்குமாறு கோரினார்.

தேர்தல் ஆணையாளரதும் அவரது உத்தியோகத்தர்களதும் சார்பில் ஆஜரான பிரதி வழக்கறிஞர் உறுப்புரை 104(ஏ) இல் உள்ள நியாயாதிக்கத்துக்கு *ஏனையவற்றுடன்* முதனிலை எதிர்ப்பை முன்வைத்தார்.[21] அதனை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. மேன்முறையீட்டின் போது உறுப்புரை 104(ஏ) தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் கூறிய காரணத்தை உயர் நீதிமன்றம் நிராகரித்தது. நீதிமன்றத்தின் சார்பில் பேசிய நீதிபதி மார்க் பெர்ணாண்டோ பின்வருமாறு கூறினார்

> 'தேர்தல் ஆணைக்குழு' என்பது 'நிறுவப்படவிருக்கும் தேர்தல் ஆணைக்குழுவைக்' குறிக்கும் என்றும் அது ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களையோ தேர்தல் ஆணையாளரையோ குறிக்காது என்ற அடிப்படையின் மீது தான் குறித்த ஏற்பாடுகளின் பொருள்கோடல் ஆரம்பிக்க வேண்டும்.....[22] என்றும் அத்துடன் உறுப்புரை 104ஏ உறுப்புரை 104அ(அ)உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும் என்றும்

---

20 *கனி எதிர் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா*, (2004) 1 எஸ்எல்ஆர் 17 (உயர் நீதிமன்றம்)

21 மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு, 2002 ஒக்டோபர் 17, அறிவிக்கப்படவில்லை.

22 *கனி எதிர் தயானந்த திஸாநாயக்கா*, ... தீர்ப்பின் பக்கம் 26

அந்த இரண்டு ஏற்பாடுகளையும் சேர்த்து வாசிக்கும்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஆணை பிறப்பிக்கும் நியாயாதிக்கத்தின் ஒரு பகுதி இந்த நீதிமன்றத்துக்கு வழங்கப்படுவதற்கான தெளிவான எண்ணம் புலப்படும். அவை தேர்தல் ஆணைக்குழு தனது அதிகாரங்களைப் பயன்படுத்துவதனால் எழும் எந்தவொரு விடயத்துக்கும் தேர்தல் ஆணைக்குழு உறுப்புரைகள் 104(ஏ) 126(1) 130 என்பவற்றின் கீழ் அடங்காத இறுதியானதும் நீதிமுறை மீளாய்வில் இருந்து பாதுகாக்கப்பட்டதுமான தீர்மானம் எடுத்தல், வழிகாட்டல்கள், செயற்பாடுகள் என்பவற்றை நீதிமுறை மீளாய்வு செய்தல் என்பனவாகும். இந்த உறுப்புரைகள் தேர்தல் ஆணையாளரினது அல்லது அவரது உத்தியோகத்தர்களது செயற்பாடுகளுக்கும் தவிர்ப்புக்களுக்கும் செல்லுபடியாகமாட்டாது.[23] வேறுவகையில் கூறுவதானால், தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களைத் *தேர்தல் ஆணைக்குழுவே* பயன்படுத்தும்போது மாத்திரம்தான், உறுப்புரை 104(ஏ) அதனை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கு அப்பாற்பட்டதாக மாற்றும். தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களை *வேறு ஒருவர்* பயன்படுத்துவது தொடர்பில் உறுப்புரை 104(ஏ) செல்லுபடியாகாது. "ஆணைக் குழுவைத் தவிர" என்ற வாசகம் வரையறுக்கும் வாசகமாக உள்ளது. அந்த அதிகாரங்களைத் தேர்தல் ஆணையாளர் பயன்படுத்துவது தொடர்பில் அந்த உறுப்புரை 104(ஏ) செல்லுபடியாக வேண்டும் எனப் பாராளுமன்றம் எண்ணியிருந்தால் அந்த வரையறுக்கும் சொற்களை அது நீக்கியிருக்கும். அவ்வாறு வரையறுக்கும் சொற்களை நீக்கியிருந்தால் உறுப்புரை 104(ஏ) ஐ "...ஆணைக்குழுவுக்கு அரசியலமைப்பினால் அல்லது வேறு ஒரு சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்துவதனால் உருவாகும் எந்தவொரு விடயம் தொடர்பிலும்" என்று "ஆணைக்குழுவினால்" "அதன் மீது" என்ற சொற்களை நீக்கிவிட்டு வாசிக்க வேண்டும்.[24]

உயர் நீதிமன்றம் 17ஆவது திருத்தத்தின் பிரிவு 27இன் கருத்தை

---

[23] மேற்குறித்த குறிப்பைப் பார்க்க, வலியுறுத்தல் மூலப்பிரதியில் உள்ளது.

[24] மேற்குறித்த குறிப்பைப் பார்க்க, தீர்ப்பின் 26 ஆம் 27 ஆம் பக்கங்கள், வலியுறுத்தல் மூலப்பிரதியில் உள்ளது.

பின்வருமாறு விளக்கியது:

> (17ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின்) பிரிவு 27(2) ஒரு மாற்று ஏற்பாடாகும். அது அக்காலத்தில் (அ) (முன்னய சட்டங்களின் கீழ்) தேர்தல் ஆணையாளர் என்ற பதவியினதும் (ஆ) தேர்தல் ஆணைக்குழுவினதும் அதிகாரங்களைப் பயன்படுத்தவும் தொழிற்பாடுகளை மேற்கொள்ளவும் தேர்தல் ஆணையாளருக்கு அனுமதியளிக்கின்றது. அதேநேரம் பிரிவு 27(2) தேர்தல் ஆணையாளர் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களைப் பயன்படுத்த அனுமதிக்கின்றது. அது அத்தகைய பயன்பாட்டை அல்லது அத்தகைய பயன்பாடாகக் கருதப்படும் ஒன்று தேர்தல் ஆணைக்குழு அதிகாரத்தைப் பயன்படுத்தியதாக அமையமாட்டாது. அதற்கு உறுப்புரை 104ஏ(1) சிறந்த உதாரணமாக அமைகின்றது: அது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஆணைபிறப்பிக்கும் நியாயாதிக்கத்தை பயன்படுத்த உயர் நீதிமன்றத்துக்கு அனுமதியளிக்கின்றது. உயர் நீதிமன்றம் அவ்வாறு ஆணைபிறப்பிக்கும்போது அது உயர் நீதிமன்றம் தனது நியாயாதிக்கத்தைப் பயன்படுத்தியதாகவே அமையும். உயர் நீதிமன்றம் அவ்வாறு நியாயாதிக்கத்தைப் பயன்படுத்துவது மேன்முறையீட்டு நீதிமன்றம் பயன்படுத்திய நியாயாதிக்கமாக அமையவோ அல்லது அவ்வாறு கருதப்படவோ முடியாது. அதேபோன்றுதான் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களைத் தேர்தல் ஆணையாளர் பயன்படுத்தியமை தேர்தல் ஆணையாளர் பயன்படுத்தியதாகவே அமையும்.[25]

இதற்கிணங்க, ரட்னசிரி விக்ரமநாயக்காவின் நியமனம் தொடர்பில் தாக்கல் செய்யபட்ட வழக்குகளில் பிரதிவாதிகளால் எழுப்பப்பட்ட நியாயாதிக்கம் தொடர்பான முதனிலை ஆட்சேபனைகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் 2004 ஜுலை 7ஆந் திகதியைக் கொண்ட தீர்ப்பில் நீதிபதி மர்ஸுப் (தலைவர்- மேன்முறையீட்டு நீதிமன்றம்) பின்வருமாறு கூறினார். "*(கனி)* வழக்கில் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு இந்த நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்துகின்றது.

---

[25] மேற்குறித்த குறிப்பைப் பார்க்க, தீர்ப்பின் 28ஆம் பக்கம்.

தேர்தல் ஆணைக்குழு நிறுவப்படும் வரை தேர்தல் ஆணையாளரை மேற்பார்வை செய்யும் நியாயாதிக்கத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் பயன்படுத்தும் என்று அத்தீர்ப்பு கூறுகின்றது."[26]

10. அரசியலமைப்பின் பொருட்கோடலும் உறுப்புரை 125 உம்.

மேன்முறையீட்டு நீதிமன்றம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கப் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 64 இன் பிரயோகம் பற்றி கவனத்தில் எடுத்திருக்க வேண்டும் என்ற உண்மையின் அடிப்படையில் அது அரசியலமைப்பின் உறுப்புரை 99அ க்கான பொருட்கோடலையும் அவசியம் உள்ளடக்க வேண்டும் என்று பிரதிவாதிகள் சார்பில் முதனிலை மறுப்பு முன்வைக்கப்பட்டது. அது அவ்வாறிருப்பின் மேன்முறையீட்டு நீதிமன்றம் அரசியலமைப்பு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்புக்காக உயர் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். ஏனெனில் அரசியலமைப்பின் பொருட்கோடல் அந்த நீதிமன்றத்தின் முழுமையானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கத்துக்கு உட்பட்டதாகும்.[27]

மேன்முறையீட்டு நீதிமன்றம் 2004 ஜுலை 7ஆந் திகதியைக் கொண்ட தனது தீர்ப்பில் இந்த மறுப்பை நிராகரித்தது. நீதிபதி மர்ஸுப் (தலைவர் - மேன்முறையீட்டு நீதிமன்றம்) பின்வருமாறு கூறினார்:

> இந்த விண்ணப்பத்தின் விசாரணை மற்றும் தீர்ப்பு வழங்கும் போக்கில் அரசியலமைப்பின் பொருட்கோடலுடன் தொடர்புடைய ஏதாவது பிரச்சினைகள் எழும் என்று எதிர்வு கூறுவதற்குரிய நேரம் இன்னும் வரவில்லை..... அத்துடன் அரசியலமைப்பின் பொருட்கோடலை வேண்டுகின்ற ஏதாவது ஒரு பிரச்சினையை அல்லது பிரச்சினைகளை உயர் நீதிமன்றத்துக்குத் தீர்ப்புக்காகச் சமர்ப்பிக்கும் அதிகாரம் உறுப்புரை 125(1)இன் மூலம் இந்த நீதிமன்றத்துக்கு

---

[26] *எதிரிசிங்க எதிர் தேர்தல் ஆணையாளரும் ஏனையோரும்*, மேன்முறையீட்டு நீதிமன்றம் விண்ணப்ப இல: 799/2004 (அறிவிக்கப்படவில்லை) தீர்ப்பின் 6ஆம் பக்கம்.

[27] உறுப்புரை 125(1)

> வழங்கப்பட்டுள்ளது. அத்தகையதொரு பிரச்சினை அல்லது பிரச்சினைகள் உண்மையாகப் பொருட்கோடலுக்காக எழுப்பப்படும் போது மாத்திரமே அவற்றைப் பொருட்கோடலுக்காகச் சமர்ப்பிக்க முடியும். பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 64(5) இற்கான பொருட்கோடலுக்கு அரசியலமைப்பில் உள்ளதாகக் கூறப்படும் 'தெரிவுக் கொள்கை' (elective principle) ஐப் பிரயோகிக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புவதாக மனுதாரர் சார்பில் கற்றறிந்த சட்டத்தரணி சமர்ப்பித்துள்ளவற்றிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. இது, ஒரு சாதாரண பாராளுமன்றச் சட்டத்துக்கான பொருட்கோடலுக்கு சில அரசியலமைப்புக் கோட்பாடுகளையும், ஏற்பாடுகளையும் பிரயோகிப்பதுடன், தொடர்புபடுகின்றது என்று இந்த நீதிமன்றம் கருதுகின்றது. இந்த வழக்குகளில் இதுவரை அரசியலமைப்பை பொருட்கோடல் செய்வது தொடர்பான பிரச்சினைகள் எழவில்லை என்பது இந்த நீதிமன்றத்தின் கருத்தாகும்...[28]

அதனால் (மேன் முறையீட்டு நீதிமன்றம் செய்வதற்குத் தகுதியுள்ள) வெறுமனே அரசியலமைப்பைப் பிரயோகித்தலுக்கும் (உறுப்புரை 125(1) செல்லுபடியாகும்) அரசியலமைப்பின் *பொருட்கோடலுக்கும்* இடையிலான வேறுபாடு விளக்கப்பட்டது. பிரதிவாதிகள் உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்வதற்கு அனுமதிகோருவதன் மூலம் *ஏனையவற்றுடன்* இந்தக் கண்டு பிடிப்பையும் எதிர்த்தார்கள். பிரிவு 64(5)இன் பொருட்கோடல் உறுப்புரை 99அ வையும் மேற்கோள் காட்டுவதனால் அது உறுப்புரை 99அ இன் பொருட்கோடலுடனும் தொடர்புபடுகின்றது என்று அவர்கள் வாதிட்டார்கள். மனுதாரர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பிரிவு 64(5) இற்கான குறித்த பொருட்கோடல் உயர் நீதிமன்றத்தின் முக்கியத்துவத்துடன் வெறுமனே உறுப்புரை 99அ பிரயோகிப்பதாக இருக்கமுடியாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் உறுப்புரை 125(1) அமுலாக்கப்பட்ட முறை தொடர்பான நீதிமுறை அதிகாரத்துக்கு முந்திய நிலையைக் கவனத்தில் எடுப்பது பயனுள்ளதாக அமையும். *பில்லி மோரியா எதிர் காணி அமைச்சர்* (1978-79,80) என்ற வழக்கில் பிரதம

---

[28] *எதிரிசிங்ஹ எதிர் தேர்தல் ஆணையாளர்,* ..... தீர்ப்பின் 8 ஆம் பக்கம்

நீதியரசர் சர்வானந்தா பின்வருமாறு கூறினார்:

> அரசியலமைப்புப் பிரச்சினைகள் தொடர்பில் கட்டளை பிறப்பிக்குமாறு சட்டத்தரணி எம்மை வேண்டியிருந்தார். வழக்கு விவாதத்தின் போது அரசியலமைப்பின் பொருள்கோடல் தொடர்பான பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளையில் இருந்து தெளிவாகின்றது. அரசியலமைப்பின் பொருள்கோடலுடன் தொடர்புடைய எந்தவொரு பிரச்சினையும் இந்த நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட வேண்டும் என்று உறுப்புரை 125 கூறுகின்றது. சட்ட வழக்கின்போது எழுகின்ற "அரசியலமைப்பின் பொருள்கோடலுடன் தொடர்புடைய எந்தவொரு வினாவும்" என்பதனையே உறுப்புரை 125 இங்கு நாடுகின்றது. கட்சிக்காரர்களுக்கிடையில் நடைபெறும் எந்தவொரு எதிர் வழக்கிலும் உண்மையான பிரச்சினைகளை அல்லது சர்ச்சைகளைத் தீர்மானிக்கும் போது அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கான பொருள்கோடல் அவசியப்படும் என்பதையே இது எதிர்வு கூறுகின்றது. ஒரு தரப்பினர் ஒரு அரசியலமைப்பு ஏற்பாட்டினை வெறுமனே ஆதாரமாகக் காட்டுவது அரசியலமைப்பின் பொருள்கோடல் தொடர்பான கேள்வியை உருவாக்கும் என்றில்லை. மாறாக வாதிடும் கட்சிக்காரர்கள் மத்தியில் பொருள்கோடல் தொடர்பில் சர்ச்சை காணப்பட வேண்டும். உண்மையான பிரச்சினைகள் தொடர்பில் அரசியலமைப்பின் பொருள்கோடல் தேவைப்படும் வழக்குகளில் மட்டுமே உறுப்புரை 125 செல்லுபடியாகும் என்று விளக்கப்பட வேண்டும் என்பதற்காக அவ்வாறு வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. அத்தகைய கேள்வி குறித்த தரப்புக்கள் மத்தியில் ஒரு பிரச்சினையாக நேரடியாக எழுப்பப்பட வேண்டும்...[29]

---

[29] *பில்லிமோரியா எதிர் காணி அமைச்சர்* (1978-79-80) எஸ்எல்ஆர் 1, 16-17ஆம் பக்கங்கள் வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது.

அதேபோன்று *மஹிந்தசோம எதிர் மைத்திரிபால சேனாநாயக்க மற்றும் ஏனையவர்கள்* வழக்கில் (1996) விண்ணப்பத்தின் கருத்து தொடர்பில் குறித்த தரப்புக்களால் முன்வைக்கப்பட்ட வாதங்களை வர்ணித்துவிட்டு இடைக்கால நிவாரணம் வழங்கும்போது நீதிபதி குணவர்தன பின்வருமாறு கூறினார். "அரசியலமைப்பின் உறுப்புரை 154ஆ(8)(இ)யின் கீழ் செயற்படும்போது ஆளுநருக்கு தற்றுணிபு அதிகாரம் இருக்கின்றதா என்ற ஒரு சட்டப் பிரச்சினை எழுப்பப்பட்டது. பிரதிவாதிகளுக்குத் தமது எதிர்ப்புக்களைத் தாக்கல் செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கி, முழு வாதத்தையும் கேட்டதன் பின்னர்தான் அதனைத் தீர்மானிக்க முடியும்"[30]

அதனால் மேன்முறையீட்டு நீதிமன்றம் அத்தகைய கேள்வி தொடர்பாக வினவும்போது மாத்திரமே உயர் நீதிமன்றம் அரசியலமைப் பொருள்கோடல் பற்றிய பிரச்சினைகளை ஆராய வேண்டும் என்ற கூற்றுக்குப் பலமான மேன்முறையீட்டு ஆதாரம் உள்ளது. உறுப்புரை 125(1) அரசியலமைப்பின் பொருள்கோடல் தொடர்பில் உயர் நீதிமன்றத்துக்குப் பூரணமான நியாயாதிக்கத்தை வழங்குகின்றது என்பதில் சந்தேகமில்லை. எனினும் வழக்கொன்றின்போது எழுகின்ற அரசியலமைப்புக்கான பொருள்கோடல் தொடர்பான எந்தவொரு கேள்வி தொடர்பாகவும் உயர் நீதிமன்றத்தின் ஆலோசனை கோருவதற்கான நடைமுறைகளையும் அது விளக்குகின்றது. கோரிக்கையின் சாராம்சம் தொடர்பில் கட்சிக்காரர்களின் முழுமையான சமர்ப்பணங்களின் பின்னர் தான் அவ்வாறு ஆலோசனை கூற முடியும். அப்போது தான் வெறுமனே அரசியலமைப்புக் கொள்கைளையும் அல்லது ஏற்பாடுகளையும் பிரயோகிப்பது எதிர்க்கப்பட்டாலும் அரசியலமைப்பின் பொருள்கோடல் தொடர்பான கேள்வி உண்மையில் இருக்கின்றதா என்பதை மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானிப்பதற்கு அவகாசம் கிடைக்கும். அதற்கிணங்க, அரசியலமைப்பின் பொருள்கோடல் பற்றிய அத்தகையதொரு கேள்வி தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆலோசனை கேட்கும் விடயங்கள் மாத்திரமே உயர் நீதிமன்றத்துக்கு உரித்தாகின்றன.

---

[30] *மஹிந்தசோம எதிர் மைத்திரிபால சேனாநாயக்கவும் ஏனையோரும்* (1996) எஸ்எல்ஆர் 1, 366(மேமுநீ) பக்கம் 366

அரசியலமைப்பு உறுப்புரை 125(1) கூறும் இக்கருத்தை 1978 ஆம் ஆண்டின் உயர் நீதிமன்ற 64(1) விதி பலப்படுத்துகின்றது. அது பின்வருமாறு கூறுகின்றது:

> நீதி நிர்வாகத்தினை மேற்கொள்ள அல்லது நீதித்துறை அல்லது தோற்றமளவிலான நீதித்துறைத் தொழிற்பாடுகளைச் செய்ய சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள வேறு ஏதாவது நீதிமன்றம் அல்லது நியாய சபை அல்லது ஏனைய நிறுவனங்கள் அரசியலமைப்பின் உறுப்புரை 125(1) இன் கீழ் உயர் நீதிமன்றத்தின் கருத்தை வேண்டும்போது அந்த நீதிமன்றம் அல்லது நியாய சபை அல்லது நிறுவனம்-
>
> (அ) தீர்ப்புக் கூற வேண்டிய கேள்வியைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் உயர் நீதிமன்றத்துக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு, விதி 64(1) அரசியலமைப்பின் பொருள்கோடல் தொடர்பான பிரச்சினைகள் நீதிமன்றத்துக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கின்றது. அதற்கிணங்க, இந்த வழக்கில் அரசியலமைப்பின் பொருள்கோடலுடன் தொடர்புடைய குறித்த கேள்விகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் உயர் நீதிமன்றத்துக்கு வழங்கவில்லை என்ற அடிப்படையில் உறுப்புரை 125(1)இன் ஏற்பாடுகள் அமையவில்லை என்று வாதிடப்பட முடியும். அவ்வாறு வழங்கப்பட்ட பின் குறித்த விடயம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் முழுமையான நியாயாதிக்கத்துக்குள் அது வரும்.

எவ்வாறாயினும் அனுமதி வழங்கும் போது உயர் நீதிமன்றம் பிரதிவாதிகளால் தூண்டப்பட்டது. பிரிவு 64(5)தொடர்பில் மனுதாரர்களின் வாதம் உறுப்புரை 99அ வின் பொருள்கோடலுடன் தொடர்புபடுவதைத் தவிர்க்க முடியாது. அதற்கான முழுமையானதும் பூரணமானதுமான நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்திடமே உள்ளது. அரசியலமைப்பின் பொருள்கோடலுடன் தொடர்புடைய பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்காக வடிவமைக்குமாறு நீதிமன்றம் சட்டதரணியை வேண்டியது.

11. 2004 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டமூலத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான ஒரு நிபந்தனையாக வாக்காளர்கள் செல்லுபடியான ஆள் அடையாளத்தைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அந்தச் சட்டமூலம் கூறுகின்றது. தேர்தல்கள் (விசேட ஏற்பாட்டுச்) சட்டமூலத்தின் பிரதான நோக்கம் ஒரு வாக்காளர் தனக்கு ஒரு வாக்குச்சீட்டு வழங்கப்படுவதற்கு முன்னர் தனது அடையாளத்தை நிரூபிக்கக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணமொன்றைச் சமர்ப்பிப்பதைக் கட்டாயப்படுத்துவதாகும் (2ஆம் 3ஆம் வாசகங்களைப் பார்க்க). அதற்கிணங்க, அந்தச் சட்டமூலம் பாராளுமன்றத் தேர்தல்கள் (பகுதி II), ஜனாதிபதித் தேர்தல் (பகுதி III), மாகாண சபைத் தேர்தல் (பகுதி IV) உள்ளூராட்சி மன்றத் தேர்தல் (பகுதி V) என்பவற்றுடன் தொடர்புடைய சட்டத்திலும் சர்வசன வாக்கெடுப்பில் வாக்களிக்கும் முறையிலும் திருத்தங்களை ஏற்படுத்தியது.

இந்தச் சட்டமூலம் நாட்டின் நலன் தொடர்பில் அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டியது என்று அமைச்சரவை அத்தாட்சிப்படுத்தியது. அது அரசியலமைப்புக்கு முரணானதா இல்லையா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அதனை ஜனாதிபதி அரசியலமைப்பின் உறுப்புரை 122இன் அடிப்படையில் உயர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்தார். தனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டமூலத்தின் அரசியலமைப்புக்கு ஏற்ற தன்மை என்பது அது (அ) அரசியலமைப்பின் உறுப்புரை 4 (உ) இல் வழங்கப்பட்டுள்ள வாக்குரிமைக்கு எதிராக அமைகின்றதா என்றும் (ஆ) ஒவ்வொரு மனிதனுக்கும் சட்டத்தின் மூலம் சமபாதுகாப்பு வழங்கும் உறுப்புரை 12(1) க்கு அது முரண்படுகின்றதா என்றும் ஆராய்வதாகும் என்று உயர் நீதிமன்றம் கருதியது.

முதலாவது கேள்விக்கு தீர்ப்பு வழங்கும்போது பிரதம நீதியரசர் சில்வா, நீதிபதி யாபா நீதிபதி உடலகம ஆகியோரைக் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழு பின்வருமாறு கூறியது. "...வாக்காளராக இருப்பதற்குத் தகுதியுள்ள ஒவ்வொரு குடிமகனும் தேர்தல்களிலும் கருத்துக் கணிப்பிலும் வாக்குரிமையைப் பயன்படுத்த முடியும் என அரசியலமைப்பு உத்தரவாதமளிக்கின்றது. ஒருவரின் பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்க வேண்டும் என்பது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான முன் தேவைப்பாடாகும். *எமது பார்வையில் இந்த உத்தேச திருத்தம் ஆள்மாறாட்டதுக்கு எதிரான மற்றும் பாதுகாப்பாகவும் உள்ளது. அத்துடன் வாக்காளர் பட்டியலில் உண்மையாகப் பெயர் இடம்பெற்றுள்ளவர்களுக்கு வாக்களிப்பதற்கான வாக்குச் சீட்டு வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதன் மூலம் வாக்குரிமையின் பயன்பாட்டை அதிகரிக்கின்றது."*[31] நீதிமன்றம் அரசியலமைப்பின் உறுப்புரை 93 ஐயும் ஆதாரமாகக் காட்டியது. அது வாக்களிப்பு சுதந்திரமானதாகவும், சமமானதாகவும், இரகசியமானதாகவும் இருக்கவேண்டும் என்றும் கூறுகின்றது. இந்த உத்தேச திருத்தம் இந்தத் தேவைப்பாடுகளை வலுப்படுத்துகின்றது.

இறுதியாக இந்தச் சட்டமூலம் உறுப்புரை 12(1) உடனும் ஒத்திசைவதாகக் கருதி நீதிமன்றம் பின்வருமாறு கூறியது.

இந்தத் திருத்தத்தின் கட்டாயமான பின்விளைவு ஒரு அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணத்தின் மூலம் ஆளடையாளத்தை நிரூபிக்கத் தவறும் ஒருவருக்கு வாக்குச் சீட்டு வழங்கப்படமாட்டாது என்பதாகும். *இவ்வாறு சட்டம் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணத்தின் மூலம் ஆளடையாளத்தை நிரூபிக்க முடியுமானவர்களையும் அவ்வாறு ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியாதவர்களையும் வேறுபடுத்துகின்ற..... அதன் நோக்கம் ஆள்மாறாட்டத்தைத் தடுப்பதாக இருப்பதனாலும் அது புரியக் கூடிய பிரமாணங்களின் அடிப்படையில் செய்யப்பட்டிருப்பதனாலும் இந்த வேறுபாடு நியாயமானது என்று நாம் கருதுகின்றோம்."*[32]

---

[31] மீயுயர் நீதிமன்றம் (எஸ்டி) இல: 24/2004, ஹன்ஸார்ட், 2004 ஆகஸ்ட் 17, 1191-1192, வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது.

[32] மேற்குறித்த குறிப்பைப் பார்க்க, ... 1192 வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது.

இந்தச் சட்டமூலம் முழுவதிலும் செல்லுபடியான ஆவணம் என்ற வாசகமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மாறாகத் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, போன்ற குறிப்பிட்ட வகையான அடையாள அட்டைகளைக் குறிக்கவில்லை. "செல்லுபடியான அடையாள ஆவணம்" என்பது "அவற்றை வைத்திருப்பவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய, இலங்கை அரசினால் ஏதாவது ஒரு சட்டத்தின் அடிப்படையில் ஏதாவது ஒரு நோக்கத்துக்காக வழங்கப்பட்ட எந்தவொரு ஆவணத்தையும் குறிக்கும்" என்று சட்டமூலத்தின் வாசகம் 3 விபரிக்கின்றது. உண்மையில் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் "....கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம், தபால் அடையாள அட்டை போன்ற ஆவணங்கள் இந்த வரைவிலக்கணத்தின் எல்லைக்குள் அடங்கும்"[33] என்று கூறி இந்த வாசகத்தின் பரந்த தன்மையைத் தெளிவுபடுத்திக் காட்டியது.

முகத்தோற்றமளவில் இந்தச் சட்டமூலத்தில் அல்லது அது அரசியலமைப்புக்கு ஒத்திசைவானது என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் எதிர்க்கப்பட வேண்டிய எதுவும் இருப்பதாகத் தென்படவில்லை. தேர்தலில் ஆள்மாறாட்டம் செய்தல் என்று அழைக்கப்படும் தீச்செயல் இலங்கையில் பரவலாக தேர்தல் துஷ்பிரயோகம் நிகழ்கின்ற ஒரு வடிவமாகும். அதனைத் தடுப்பதற்கான வழிமுறையாக வாக்காளர் இடாப்பில் உள்ள ஒரு பெயருக்குரிய செல்லுபடியான அடையாள அட்டையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற தேவைப்பாட்டை தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு நிலையம் (CMEV) போன்ற தேர்தல் அவதானிப்புக் குழுக்கள் மட்டுமன்றி தேர்தல் ஆணையாளரும் ஆதரித்தார். மேலே கூறப்பட்ட தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான தெரிவுக்குழுவும் தனது இடைக்கால அறிக்கையில் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான தகைமையாக தேசிய அடையாள அட்டையை அறிமுகப்படுத்த வேண்டும் என்று சிபாரிசு செய்திருந்தது. அத்துடன் இதனை நடைமுறைப்படுத்துவதற்காக அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என முன்மொழிந்தது.[34]

---

[33] மேற்குறித்த குறிப்பைப் பார்க்க 1191

[34] பாராளுமன்றக் கூட்டத் தொடர் இல: 24, ...

நுணுக்கமாக ஆராயும்போது உத்தேச சட்டம் கொள்கையளவில் பயனுள்ளதாக இருப்பினும் அதனை உடனடியாக அமுல் நடாத்தினால், இலங்கையின் பெருந்தொகையான வாக்காளர்கள் மீது மோசமான பின்விளைவுகளை அது ஏற்படுத்தும் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்தல் சட்டம் மூன்று தசாப்தங்களாக அமுலில் இருந்தபோதும் 3,873,276 குடிமக்கள் அல்லது இலங்கையின் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களில் 30% வீதத்தினர் (பதிவு செய்யப்பட்ட 12,920,719 வாக்காளர்களில் 4 மில்லியன் பேர்) அடையாள அட்டை இல்லாதவர்களாக இருக்கின்றனர். 2004 ஏப்ரல் பொதுத் தேர்தல் புள்ளி விபரங்களின் படி தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள் வட மாகாணத்தில் அதிகளவில் இருந்தனர். கிழக்கு மாகாணத்திலும் ஊவா, மத்திய மாகாணங்களில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலும் அதைவிடச் சற்றுக் குறைவான தொகையினர் அடையாள அட்டை இல்லாதவர்களாக இருந்தனர். உதாரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 644,279 வாக்காளர்களில் எவருக்குமே அல்லது 0% வீதத்தினருக்கு அடையாள அட்டை இருக்கவில்லை. முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை.

இந்தப் பிரதேசங்களில் பிரச்சினை மிகவும் மோசமானதாக இருப்பினும் அது அவர்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்ட ஒன்று அல்ல. உதாரணமாக மத்திய அரசிற்கு மிகவும் நெருக்கமாகவுள்ள மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் 239,225 பேரும் கம்பஹாவில் 314,461 பேரும் களுத்துறையில் 143,067 பேரும் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களாக உள்ளனர்.

இந்தத் தொகை தேசிய அடையாள அட்டையுடன் மாத்திரம் தொடர்பானது என்றும் இந்தச் சட்டமூலம் ஏதாவொரு வடிவில் அரசினால் வழங்கப்பட்ட எந்தவொரு அடையாள ஆவணத்தையும் கருதுகின்றது என்று கூறப்படும் வாதம் பிரச்சினைக்குரியதாகும். ஏனெனில் உத்தியோக பூர்வ ஆளடையாளத்தின் அடிப்படை வடிவமான தேசிய அடையாள அட்டை கிராமப் புறங்களிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கிலும் குறைவாக

உள்ளமை கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம் போன்ற ஏனைய ஆவணங்கள் மிகவும் குறைவாக இருப்பதையே காட்டுகின்றன. அதனால், சட்டமூலம் அதன் மூல வடிவில் உடனடியாக அமுலாக்கப்பட்டிருந்தால் அது இலங்கை வாக்காளர்களில் 30%தினரின் வாக்குரிமையைப் பறித்திருக்கும் என்பதே முழுமையான வெளிப்படையான உண்மையாகும்.

அதனால்தான் தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான தெரிவுக்குழு (தேர்தல் ஆணையாளரும் - தெரிவுக்குழு அவரது சிபாரிசுகளை ஏற்றுக்கொண்டது) வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான தகைமையாக தேசிய அடையாள அட்டையை அறிமுகப்படுத்தினால் புதிய யுகத்திற்கான முன் நிபந்தனையாக, வாக்காளராகப் பதியப்படத் தகுதிபெற்றுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் தேசிய அடையாள அட்டை வழங்கப்படுவதற்கான உத்தரவாதம் வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்று கடுமையாக வலியுறுத்தினர். உண்மையில் ஆணைக்குழு "...தேசிய அடையாளஅட்டை வழங்கப்படாதவர்களுக்கு *ஆறு மாதங்களுக்குள்* அதனை வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை அமுலாக்கத் தேவையான நடவடிக்கைகளை ஆட்பதிவு ஆணையாளர் எடுக்கவேண்டும் என்று சிபாரிசு செய்தது".[35] தேர்தல் ஆணையாளரின் சிபாரிசுகளை ஏற்றுக்கொண்ட தெரிவுக்குழு, புதிய யுகம் ஆரம்பிக்க முன்னர் பாரிய நிருவாகச் செயற்பாடொன்றின் மூலம் எந்தத் தரத்திலாவது ஒவ்வொரு வாக்காளருக்கும் ஒரு தேசிய அடையாள அட்டை இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பாராயும் நடவடிக்கை யொன்றினை பிரேரித்தது. உண்மையில் இந்தப் பிரச்சினை தொடர்பான தெரிவுக்குழுவின் சிபாரிசுகள் அனைத்தும், ஒவ்வொரு வாக்காளரும் தேசிய அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே முன்வைக்கப்பட்டன.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் இது தொடர்பில் அதிகம் நியாயப்படுத்தப்பட முடியாததாகும். அதனுடன் இணங்கிச் செல்வதை உறுதிப்படுத்தும் விதத்தில் அது ஆட்பதிவு ஆணையாளருக்கு சட்ட இசைவுத் தாமதத்தை வழங்கவோ ஒரு

[35] தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கை (2004 ஜனவரி). 45-46 வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது.

துரித நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தேவையான பாரியளவிலான நிதி ஒதுக்கீட்டை வழங்கவோ இல்லை. தற்போது தேசிய அடையாள அட்டை வைத்திருக்காதவர்களுக்கு அதனை வழங்க வேண்டுமாயின் மேலதிகமாக 190 மில்லியன் ரூபாய் தேவைப்படுவதாக உத்தியோகபூர்வமற்ற மதிப்பீடுகள் கூறுகின்றன.

இந்த நிலையில், எதிர்க் கட்சிகள் (குறிப்பாக, ஐக்கிய தேசியக் கட்சியும், மலையக தமிழ்க் கட்சிகளும்) இந்தச் சட்டத்தில் தெரிவுக்குழு மட்டத்திலான திருத்தங்களை அறிமுகப்படுத்த முனைந்தன. இதன் நோக்கம் *ஏனையவற்றுடன்*, இலங்கையில் வாக்குரிமையைக் கொண்டுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் செல்லுபடியாகும் அடையாள ஆவணம் இருப்பதாகத் தேர்தல் ஆணைக்குழுவும், பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் கொண்டுள்ள அரசியல் கட்சிகளும் திருப்தியடையும் வரை உத்தேச சட்டத்தைப் பிரயோகிப்பதையும் நடைமுறைப்படுத்துவதையும் தடுப்பதாகும். இந்த முயற்சிக்குப் பதிலளிக்கும் விதத்தில் அரசாங்கம் தனது நலனுக்காக எதிர்க்கட்சிகளின் கருத்துக்களையும் உள்ளடக்கும் விதத்தில் திருத்தங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காகப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் கொண்டுள்ள கட்சிகளின் கூட்டம் ஒன்றைக் கூட்டியது.

அதன் விளைவாக 2004ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பொது ஏற்பாடுகளைக் கொண்ட ஒரு புதிய பகுதி 1 இல் விட்டுக் கொடுப்புக்கள் காணப்பட்டன. அச்சட்டம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு ஒரு வருடம் முடிவடையும் வரை (2005 நவம்பர் 18) அது அமுலுக்கு வரமாட்டாது என்ற விஷேட ஏற்பாட்டை அச்சட்டத்தின் பிரிவு 1 கொண்டுள்ளது. அக்காலப்பகுதிக்குள் அடையாள அட்டைகளை விநியோகிக்கத் தேவையான அனைத்து நிருவாக ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணைக்குழு திருப்திகரமாகப் பூர்த்தி செய்யவேண்டும் என்று பிரிவு 2(1) கூறுகின்றது.[36] வாக்குரிமையைக் கொண்டுள்ள அனைவரும் அடையாள அட்டை பெறுவதிலிருந்தும் அவர்களது வாக்குரிமையைப் பயன்படுத்துவதிலிருந்தும் தடுக்கப்படமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டது. இந்த ஏற்பாடுகள் தொடர்பான தனது திருப்தியை உறுதிப்படுத்தும்

[36] 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம், பிரிவு 14.

அறிவித்தலொன்றை தேர்தல் ஆணைக்குழு அரசாங்க வர்த்தமானியில் வெளியிட வேண்டும். தேர்தல் ஆணைக்குழு தனது அத்தாட்சிப்படுத்தல் அறிவித்தலை வெளியிட முன்னர் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் கொண்டுள்ள அரசியல் கட்சிகளின் கருத்துக்களை உரியமுறையில் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று பிரிவு 2(1) க்கான சரத்துக்கள் ஆணைக்குழுவை வேண்டுகின்றன. மேலும் தேவையான நிருவாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதை ஒரு சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துமாறு ஆட்பதிவு ஆணையாளரைத் தேர்தல் ஆணைக்குழு கோரவேண்டும் என்று பிரிவு 2(2)இன் கீழ் எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரிவு 4 ஒரு பொருட்கோடல் வாசகமாகும். அது "செல்லுபடியான அடையாள அட்டை" என்ற பிரயோகத்தைத் தெளிவுபடுத்துகின்றது. அது, ஏதாவது ஒரு சட்டத்தின் கீழ் ஏதாவது ஒரு நோக்கத்திற்காக இலங்கை அரசினால் வழங்கப்பட்ட வைத்திருப்பவரை உறுதிப்படுத்தக் கூடிய எந்தவொரு ஆவணத்தையும் குறிக்கும். "...அத்துடன் எந்தவொரு அடையாள ஆவணமும் இல்லாத ஒரு நபரின், கிராம உத்தியோகத்தரினால் அல்லது அவசியப்படுமிடத்து தோட்டக் கண்காணியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அந்த நபர் வசிக்கும் பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் அல்லது தேர்தல் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படத்தையும் அது உள்ளடக்கும்".

இந்த ஏற்பாடு தெளிவாக மலைநாட்டின் பெருந்தோட்டத்துறையில் உள்ள வாக்காளர்களுக்குப் பயனளிக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டதாகும். அவர்களில் மிகப் பெரும்பாலானோர் இதுவரை உரியமுறையில் பதிவு செய்யப்படாதவர்களாவர். அதற்கு முக்கியமான காரணம், பதிவுசெய்வதற்குத் தேவையான அடிப்படை ஆவணங்கள் அவர்களிடம் காணப்படாமையாகும். கடந்தகாலத்தில் வாக்குரிமையற்றவர்களாகவும், நாடற்றவர்களாகவும் இருந்தது போன்ற மோசமான அவமானங்களுக்கு உள்ளான இந்த சமூகத்தின் சிக்கலான நிலை அதி கவனத்துடன் நோக்கப்படவேண்டும். எவ்வாறாயினும் ஒரு அடிப்படைக் கொள்கைப் பிரேரணை என்ற வகையில் இந்தச் சட்டத்தின் நோக்கம் ஒவ்வொருவரும் சரியான அடையாள அட்டையைப் பெற்றிருப்பதை உறுதிப்படுத்துதல் என்பதாக இருக்க வேண்டும். தோட்டக்

கண்காணி போன்ற தனியார் துறையினர் மூலம் மக்கள் அனைவரினதும் புகைப்படங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற வகையிலான பிரத்தியேகமான ஏற்பாடுகள் நீண்டகாலம் நிலைக்கக் கூடாது.

இந்தச் சட்டமூலம் தொடர்பில் அரசாங்கம் பின்பற்றிய செயலொழுங்கு தொடர்பாக இன்னொரு வினாவும் எழுப்பப்பட வேண்டும். தேர்தல் மறுசீரமைப்பு இலங்கையில் குறைந்தது கடந்த ஒரு தசாப்த காலமாக நிகழ்ச்சிப் பத்திரத்தில் இருந்து வந்துள்ளது. இந்த விவாதத்தில் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான ஒரு தேவையாக தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்துதல் என்ற கொள்கை சிக்கல் குறைந்ததாகவுள்ளது. அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் தேர்தல் மோசடிகளைக் கையாள்வதற்கு இது சிறந்த வரவேற்கத்தக்க நடவடிக்கை என்று உடன்படுகின்றனர். அவ்வாறிருக்கும் போது அரசாங்கம் ஏன் அந்தச் சட்டமூலத்தை ஒரு முக்கிய சட்டமூலம் எனக்கூறி அவசரமானது என்ற போர்வையின் நறுமணத்துடன் இரகசியமாக உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பியது?[37]

இந்தச் சட்டமூலம் சட்டமாக்கப்பட முன்னரான மீளாய்வுக்கு சாதாரண முறையில் உட்படுத்தப்பட்டிருந்தால் உயர் நீதிமன்றம் முழுவாதத்தினதும் பயன், அதனைச் சட்ட மூலமாக்குவதனால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாகக் கூறப்பட்ட பிரச்சினைகளில் சிலவற்றைக் கவனத்தில் எடுத்திருக்கும். இந்தப் பிரச்சினைகளை இங்கு எழுப்புவது பொருத்தமானதாகும். ஏனெனில் உறுப்புரை 122இன் பயன்பாடு இலங்கையில் இந்தக் கலந்துரையாடலின் வட்டத்திற்கு அப்பாற்பட்ட பெரியதொரு சர்ச்சையாகும்.

12. வடக்கிலும் கிழக்கிலும் பொதுத் தேர்தல்

அண்மைக் காலத்தில் நடைபெற்ற தேர்தல்களில் மிகவும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலாக 2004ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல் உலகலாவிய ரீதியில் வர்ணிக்கப்பட்டது. பிரச்சாரக் காலத்தில் வடக்கு கிழக்கில் நிலவிய நிலைமைகள் மட்டுமே ஒரு களங்கமாக அமைந்தன.

[37] உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பை ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் மாத்திரமே அறிவிக்க வேண்டும் என்று உறுப்புரை 122(1)(இ) தெளிவாகக் கட்டளையிடுவதைக் கவனிக்க.

அப்பிரதேசங்களில் அச்சுறுத்தல்களும், கட்டாயப்படுத்தல்களும் பல்வேறு கொலைகள் உள்ளிட்ட உடல் ரீதியான வன்முறைகளும் இடம்பெற்றன.

தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு நிலையம் போன்ற சுதந்திர அவதானிப்பாளர்களின் அவதானம் பின்வருமாறு அமைந்தது:

> வடக்கிலும் கிழக்கிலும் நிலவிய அதிகரித்த ஸ்திரமற்ற நிலை அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கு கடுமையான தடையாக அமைந்தது. நேரடியான அச்சுறுத்தல்கள், பொதுவாக நிலவிய அச்சநிலை, கட்டாயப்படுத்தல்கள் என்பவற்றின் காரணமாகப் பல வேட்பாளர்கள் போட்டியில் இருந்து விலகிக் கொண்டார்கள். அத்துடன் தேர்தல் தினத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அல்லாத பல வேட்பாளர்கள் வாக்குச் சாவடிகளுக்கான முகவர்களை நியமிப்பது ஒரு பிரச்சினையாக மாறியது. அனைத்து வேட்பாளர்களும் வடக்கு கிழக்கு முழுவதிலும் பிரச்சாரம் செய்ய முடியுமாக இருப்பது "ஒரு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு முக்கியமானது" என்ற தனது நிலைப்பாட்டை தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு நிலையம் இந்தச் சூழ்நிலையில் மீள வலியுறுத்தியது. அத்துடன் "இலங்கையிலுள்ள ஒவ்வொரு வாக்காளனும் தனது வாக்கை அளிப்பதற்கு முடியுமாக இருக்க வேண்டும் என்பதுடன் போட்டியிடும் கட்சிகளிலிருந்தும் மற்றும் வேட்பாளர்களிலிருந்தும் தாம் விரும்புபவர்களைச் சுதந்திரமாகவும், நீதியாகவும் தெரிவு செய்யவும் முடியுமாக இருக்க வேண்டும்" என்ற தனது நம்பிக்கையைத் திரும்பத் திருப்பச் சொன்னது."[38]

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் (LTTE) ஆதரவைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான வேட்பாளர்களுக்கும்

[38] தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைகள் பற்றிய தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு நிலையத்தின் இறுதி அறிக்கை. 2004 ஏப்ரல் 5ஆந் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தல்.

கட்சிகளுக்கும் எதிராகவே அதிகமான அச்சுறுத்தல்களும் தாக்குதல்களும் நடாத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE) வடக்குக்கிழக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு வெளியிலும் உணரத்தக்க அரசியல் அதிகாரத்தைக் கொண்டுள்ளனர். வடக்கு கிழக்கின் ஆட்சியில் ஒரு நிறுவன ரீதியான பங்கு இருக்க வேண்டும் என்ற எல்.டி.டி.ஈ யின் அவாவும் அப்பிரதேசத்தில் ஏறக்குறைய சக்தி வாய்ந்த அரசு அல்லாத அரசியல் செயற்பாட்டாளர் என்றவகையில் அதற்கு உண்மையாகவுள்ள அதிகாரமும் தேர்தலின் சட்டபூர்வத் தன்மை தொடர்பிலும் சுதந்திரமானதும், நீதியானதுமான பிரச்சாரத்துக்கான சூழ்நிலைகள் தொடர்பிலும் பெரும் சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன. சுதந்திரமானதும், நீதியானதுமான பிரச்சாரத்துக்கான நிபந்தனைகள் எல்.டி.டி.ஈ யின் செல்வாக்கின் கீழுள்ள பிரதேசங்களில் கேள்விக்குள்ளாகின்றன.

13. இலங்கையில் தேர்தல் மறுசீரமைப்பு பற்றிய சிந்தனை

2004 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலின்போது, அரசியலமைப்புக்குப் புறம்பான முறைகள் மூலம் அரசியலமைப்பில் முக்கியமான இரண்டு மாற்றங்களைச் செய்வதற்கான மக்கள் ஆணையைப் பெற்றுக்கொள்வதிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முக்கிய கவனம் செலுத்தியது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியை ஒழிப்பது, தற்போதைய தேர்தல் முறையை மறுசீரமைத்தல் என்பனவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்வைத்த இரண்டு அரசியலமைப்புச் சீர்திருத்தங்களாகும். எனினும் இந்தத் திருத்தங்களின் சுருக்கம் என்ன என்பது இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை. இலங்கையில் நடைபெறுகின்ற அரசியலமைப்பை மறுசீரமைத்தல் தொடர்பான விவாதங்களின் மையக்கருத்தாக உள்ள தேர்தல் முறை முக்கியத்துவம் குறைந்ததல்ல. ஏனெனில் அதிக தீமை பயக்கும் தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ மாதிரி மறுசீரமைப்பை வேண்டி நிற்கின்றது.

இலங்கையில் தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான கல்விசார் விவாதங்களும் அரசியல் விவாதங்களும், சில வருடங்களாக நடைபெற்று வருகின்றன. எனினும் தற்போதைய நிலையில் பிரச்சினைகளின் பல்வகைத் தன்மையை இனங்காண்பது முக்கியமானதாகும். அவ்வாறு செய்யும்போது அந்த விவாதத்தின் கொள்கை ரீதியான கவனம் கட்டாயம், ஒரு குறித்த வடிவம் (அதாவது நிறுவனக் கட்டமைப்பு) தொடர்பானது என்பதை ஆரம்பத்தில் திரும்பக்கூறுவது பயனுள்ளதாக அமையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் பெறுமானமாகவும் ஒரு குறிக்கோளாகவும் உள்ள பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் இலங்கை போன்ற ஆழமான பிளவுகளைக் கொண்ட, இன அரசியல் கெடுபிடிகளைப் பண்பாகக் கொண்ட சமூகங்களில் ஜனநாயகமும், அது தொழிற்படும் முறையும் இயல்பாகவே பிரச்சினையான விடயங்களாகும். பெரும்பான்மை ஆட்சி என எளிய முறையில் அறியப்பட்டுள்ள ஜனநாயகமானது, எண்ணிக்கையில் பெரிய குழுக்களின் நிலையான ஆதிக்கத்தைப் பலப்படுத்தி நிறுவனமயப்படுத்த உதவுகின்றது. அது சமூகத்தில் உள்ள எண்ணிக்கையில் சிறிய குழுக்களை அரசியல் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் இருந்து புறக்கணிக்கப்படுகின்றன. அதனால் புறக்கணிக்கப்பட்ட குழுக்களின் பக்கத்திலுள்ள அரசியல் நிறுவனங்களின் மீதான பற்று குறைவடைகின்றது. இலங்கையில் உள்ள சுய நிர்ணயத்திற்கும், பிரிந்து செல்வதற்குமான பிரச்சினைகளும் இன ரீதியான கோரிக்கைகளும் அரசாங்கம் தொடர்பில் அரசியலமைப்பில் காணப்படும் கட்டமைப்புக்கும், அரசியலிலுள்ள பல்லின அரசியல் தன்மைக்கும் இடையிலான முரண்பாட்டினால் உருவாகின்றது. ஜனநாயகத் தொழிற்பாடுகளுக்கு தேர்தல் முறை அத்தியாவசியமானது. இந்த நாடு 1931 முதல் 1989 வரை எளிய பெரும்பான்மை முறையின் கீழ் தொழிற்பட்டபோது அது, ஜனநாயகம் பெரும்பான்மையை அடிப்படையாகக் கொண்டது என்ற வகையில் பெரும்பான்மையினரின் கருத்தைப் பிரதிபலித்த அதேவேளை, சிறுபான்மையினர் தொடர்பில் பாகுபாடு தொடர்பான கருத்துக்களை நிறுவனமயப்படுத்திப் பலப்படுத்தியது.

1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் சாதகத் தன்மைகளில் ஒன்று அது விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்தியமையாகும். எமது நாடு போன்ற பல்கலாசாரத்தைக் கொண்ட சமூகங்களில், வேற்றுமையில் ஒற்றுமையை உறுதிப்படுத்த அவசியமான,

இனங்களுக்கு இடமளித்தலுக்கான அரசியலமைப்புச் சாசனங்களில், விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் ஒன்றாகும். இந்த முறை சிறுபான்மைக் குழுக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதன் மூலம், அக்குழுக்கள் சட்டவாக்க நிறுவனங்களில் அங்கம் வகிப்பதனை மட்டுமன்றி, சிறுபான்மையினரின் நலன்களையும் அக்கறைகளையும் கூடுதலாகக் கவனத்தில் எடுக்கவும் அரசாங்கங்களை நிர்ப்பந்திக்கின்றன.

பெரியளவிலான பெரும்பான்மையைத் தடுப்பதன் மூலமும் அதன் மூலம் பொறுப்பற்ற, கொடிய அரசாங்கங்களையும் தடுப்பதன் மூலமும், விகிதாசாரப் பிரதிநிதித்துவம் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்குவதனையும் நிதானப் போக்கையும் கவனமான முடிவையும் உறுதிப்படுத்துவதனாலும் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்தக் காரணிகள் அனைத்தும் அரசாங்கத்தின் ஜனநாயகத் தன்மையை அதிகமாகக் கொண்ட கலாசாரத்தைத் தூண்டுகின்றன.

விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்பது பிரநிதித்துவ ஜனநாயகத்தின் ஒரு அடிப்படை அரசியல் கோட்பாடு என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. இலங்கையில் தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்டதொரு கலந்துரையாடலுக்கான திருப்புமுனையாக அதனை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று அது வேண்டுகின்றது. இந்தக் கொள்கையின் அடிப்படையில் இலங்கைக்கான நடைமறைக்குகந்ததும், நீதியானதுமான தேர்தல் முறையொன்றினை வரைய முடியும்.

ஜோன் ஸ்டுவார்ட் மில் என்பவர் பிரதிநிதித்துவ 1861இல் *"அரசாங்கம் தொடர்பான கருத்துக்கள்"* என்ற நூலில் கூறிய அவதானம் இலங்கையில் தற்போது நிலவும் சூழ்நிலைக்கான எதிர்வு கூறலாக உள்ளது. அவர் பின்வருமாறு கூறுகிறார்:

> ஜனநாயகம் என்பதற்குள் அதிகம் வேறுபட்ட இரு கருத்துக்கள் கலந்துள்ளன. ஜனநாயகம் தொடர்பான வரைவிலக்கணத்தின் படி தூய ஜனநாயகம் என்பது அனைத்து மக்களும் சம அளவு பிரதிநிதித்துவம் பெறுகின்ற, அனைத்து மக்களாலும் ஆளப்படுகின்ற, அனைத்து மக்களினதும் அரசாங்கமாகும். குறிப்பாகப் பிரதிநிதித்துவம்

செய்யப்படுகின்ற பெரும்பான்மை மக்களால் வெறுமனே ஆளப்படும் அனைத்து மக்களினதும் அரசாங்கத்தையே ஜனநாயகம் குறிக்கும் என்று பொதுவாக நினைக்கிறார்கள். அதனை இதுவரை நடைமுறைப்படுத்தியுள்ளார்கள். முதற் கருத்து அனைத்துக் குடிமக்களினதும் சமத்துவத்துக்கு ஒத்ததாகவுள்ளது. இரண்டாவது கருத்து அதனை அரிதாகவே கொண்டுள்ளது. அது நாட்டில் எந்தவொரு இடத்திலும் செல்வாக்குடையவர்களாக இருக்கும் எண்ணிக்கை அடிப்படையில் அதிகமாகவுள்ளோருக்கு வரப்பிரசாதங்களை வழங்கும் ஒரு அரசாங்கமாகும். இது தான் சிறுபான்மையினரின் வாக்குரிமையைப் பறிப்பதற்காகத் தற்போது வாக்குகள் பெறப்படும் முறையின் தவிர்க்க முடியாத விளைவு.

எனவே கடந்தகாலத்தில் விடப்பட்ட தவறுகள் எதிர்காலத்திலும் திரும்பச் செய்யப்படாமல் இருப்பதை உறுதி செய்வதுதான் தேர்தல் முறையை மறுசீரமைக்கும் போது எதிர்நோக்கப்படும் சவாலாகும்.

14. எளிய பெரும்பான்மை முறையும் (FPP) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையும் (PR)

எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறை பிரித்தானியர் இலங்கையில் விட்டுச்சென்ற ஒரு முறையாகும். அந்தத் தேர்தல் முறை டொனமூர் அரசியலமைப்பின் கீழ் 1931 முதல் 1948 வரையும் சோல்பரி அரசியலமைப்பின் கீழ் 1948 முதல் 1972 வரையும் முதலாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ் 1972 முதல் 1978 வரையும் தற்போதைய அரசியலமைப்பு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை அறிமுகப்படுத்தும் வரை நடைமுறையில் இருந்தது.

ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்றத்துக்கான தேர்தல்கள் தொடர்ந்தும் இந்தத் தேர்தல் முறையின் கீழ் நடைபெறுகின்றது. இந்த முறையின் கீழ் ஒப்பீட்டளவில் சிறிய தேர்தல் தொகுதியொன்றில் அதிக எண்ணிக்கையான வாக்குகளைப் பெறும் வேட்பாளர் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார். அதனால் ஏனைய வேட்பாளர்கள் இணைந்து பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை வெற்றிபெற்ற வேட்பாளர் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருப்பினும் பின்னையவர் தான்

தேர்ந்தெடுக்கப்படுவார். உண்மையில் அந்தத் தேர்தல் தொகுதியிலுள்ள அதிகமான மக்கள் வெற்றிபெறும் வேட்பாளருக்கு எதிராக வாக்களித்திருக்க முடியும் என்ற அடிப்படையில் இந்த முறை ஜனநாயக விரோதமானது என்று விமர்சகர்கள் கூறுகின்றனர்.

எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறை வாக்காளர்களுக்கும் அவர்களது பிரதிநிதிகளுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்துகின்றது. அது எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறையின் ஒரு சாதகத்தன்மையாகும். எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறையின் தேர்தல் தொகுதிகளின் இடப்பரப்பு ஒப்பீட்டளவில் சிறியதாகவே இருக்கும். ஒரு பிரதிநிதி தன்னைத் தெரிவுசெய்தவர்களுடன் தொடர்ச்சியான முறையில் நேரடித் தொடர்புகளை வைத்திருக்கவேண்டும். அப்போதுதான் அவர்களது ஆதரவு அவருக்குத் தொடர்ச்சியாகக் கிடைக்கும்.

எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறையின் ஒரு ஜனநாயகத் தன்மை அது இரண்டு அல்லது மூன்று கட்சிகளைக் கொண்ட அரசியல் முறையொன்றை ஏற்படுத்துவதும் பலமான பாராளுமன்றப் பெரும்பான்மையை ஏற்படுத்துவதுமாகும். அதனால் ஸ்திரமான அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறை பொருத்தமானது என்று அடிக்கடி கூறப்படுகின்றது. ஒரு தேர்தல் முறையை வடிவமைக்கும் போது ஸ்திரத்தன்மையைக் கவனத்தில் எடுக்கும் அதேநேரம் நீதி, சமமான பிரதிநிதித்துவம் போன்ற புறக்கணிக்க முடியாத வேறு விடயங்களும் இருக்கின்றன என்று ஞாபகத்தில் வைத்திருப்பது முக்கியமானதாகும்.

பலமான பெரும்பான்மைகளுக்கு வழியமைக்கும் போது எளிய தேர்தல் முறை குறைந்தது இரண்டு காரணங்களினால் திருப்தியற்றதாக அமைகின்றது. முதலாவது, எளிய தேர்தல் முறை மக்களின் எண்ணங்களை அதிகளவில் திரிபுபடுத்துகின்றது. அதாவது, உண்மையில் அரசியல் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் வழங்கப்பட்ட வாக்குகளின் விகிதாசாரம் அவை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆசனங்களின் விகிதாசாரத்துடன் ஒத்ததாக இல்லை. சில சந்தர்ப்பங்களில் 50% வாக்குகளைப் பெறாத கட்சிகள் முன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கங்களை அமைத்ததை நாம் கண்டிருக்கிறோம். உதாரணமாக (அட்டவணையைப் பார்க்கவும்) 1970 ஆம் ஆண்டின் பொதுத்

தேர்தலில் ஐக்கிய முன்னணி (UF) மொத்த அளிக்கப்பட்ட வாக்குகளில் 49% ஐப் பெற்றது. அது பாராளுமன்றப் பிரதிநிதித்ததுவத்தில் 77% ஐ அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றது. 1977 ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலில் 51% வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் 83% ஆசனங்களை அல்லது ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பெற்றது.

பாராளுமன்றத் தேர்தல் - 1970

கட்சி	வாக்குகள்	ஆசன-ங்கள்	வாக்கு-களின் %	ஆசனங் களின் %
ஐக்கிய முன்னணி	2,440,476	116	49	77
ஐக்கிய தேசியக் கட்சி	1,895,341	17	38	11
சமஷ்டிக் கட்சி	345,727	13	5	9
தமிழ் காங்கிரஸ்	115,567	3	2	2
மக்கள் ஐக்கிய முன்னணி	46,571	0	0.93	0

பாராளுமன்றத் தேர்தல் - 1977

கட்சி	வாக்குகள்	ஆசன-ங்கள்	வாக்கு-களின் %	ஆசனங் களின் %
ஐக்கிய தேசியக் கட்சி	3,175,991	140	51	83
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி	1,683,753	8	30	5
தமிழர் விடுதலைக் கூட்டணி	399,043	18	6	11
லங்கா சமசமாஜக் கட்சி	227,548	0	4	0
கம்யூனிஸ்ட் கட்சி	159,326	0	3	0
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்	35,743	1	0.5	0.6

ஜனநாயகப் பெறுமானங்களின் நோக்கில் கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகளுக்குப் பொருத்தமானதாக அமையாத இந்த வகையான பாரியளவு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாததாகும் என்பதற்கு அதுவே ஆதாரமாக அமைகின்றது.

மேலும், பலமான பெரும்பான்மை மூலம் மிதமிஞ்சிய நம்பிக்கை கொண்ட அரசாங்கங்கள், கூட்டு அரசாங்கங்களைவிட எதேச்சாதிகாரம் கொண்டவையாக மாறுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். கூட்டு அரசாங்கங்கள் சட்டசபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுக்களையும், அக்கறைகளையும் அதிகம் பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கும். அவற்றின் ஆதரவு கிடைக்கும் என்று அரசாங்கம் நினைக்க முடியாது.

இலங்கையில் எளிய பெரும்பான்மைத் தேர்தல் மூலம் மூன்றில் இரண்டு அல்லது அதனைவிடக் கூடுதலான பெரும்பான்மையுடன் அரசாங்கங்கள் உருவாக்கப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவை ஜனநாயகத்துக்கு விரோதமான முறையில் செயற்பட முனைந்ததை நாம் அவதானித்துள்ளோம். இந்தச் செயற்பாடுகளில் கட்சியின் நலனுக்காக அரசியலமைப்பைத் திருத்துதல், மக்களின் வாக்களிப்பதற்கான உரிமையில் தலையிடுதல் போன்ற அதி தீவிர செயற்பாடுகளும் அடங்குகின்றன.

1970-77களில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒரு உயர் சட்டசபை (தேசிய அரச பேரவை) யை உருவாக்கும் ஒரு அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியது. அது பெரும்பான்மை உறுப்பினர்கள் மீது பிரதம மந்திரி மேலாதிக்கம் செலுத்துவதற்கு வழி செய்தது. மேலும் அது நீதித்துறையின் அந்தஸ்த்தைக் குறைத்து அதன் சுதந்திரத்தைப் பலவீனப்படுத்தியது. ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் பெறும் வெற்றிபெற்று அதிகாரத்துக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், சகல அதிகாரங்களும் பொருந்திய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதிப் பதவியை ஏற்படுத்தி, பாராளுமன்றத்தைப் பலவீனப்படுத்தியது. அத்துடன் அதற்கு தனது பெரும்பான்மை மூலம், தனது பதவிக்காலத்தையே நீடிக்கும் வகையில் அரசியலமைப்புத் திருத்தங்களை அறிமுகப்படுத்தவும் முடிந்தது. இந்த வகையான செயற்பாடுகள் ஏற்கத்தக்கவையல்ல என்பது தெளிவானதாகும். தேர்தல் முறையை மாற்றியமைக்கும் போது தேர்தலில் வெளியிடப்பட்ட மக்களின் கருத்துக்களில் கவனம் செலுத்துகின்ற ஒரு முறையை அறிமுகப்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும். மாறாக அரசாங்கத்தில் உள்ள ஒரு கட்சியின் வசதியில் கவனம் செலுத்தக் கூடாது.

எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறை தொடர்பான இந்த விமர்சனங்களுக்கு கொள்கையளவில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் பதிலளிக்கின்றது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் அடிப்படை நோக்கம் ஒரு தேர்தலில் போட்டியிட்ட ஒவ்வொரு அரசியல் கட்சியும் அல்லது குழுவும் பெற்ற வாக்குகளின் விகிதாசாரத்துக்கு ஏற்ப அரசியல் நிறுவனங்களில் பொருத்தமான பிரதிநிதித்துவம் வழங்குவதை முடியுமானவரை உறுதிப்படுத்துவதாகும். விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஜனநாயகத் தன்மை கூடியது மட்டுமன்றி, இலங்கை போன்ற பல்லினங்களைக் கொண்ட ஒரு நாட்டில் அரசியல் நிறுவனங்களில் குழுக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான ஒரு அத்தியாவசியமான ஒரு வழிமுறையாகவும் உள்ளது. விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்பது ஒரு கோட்பாடு என்பதையும் அதனை அடிப்படையாகக் கொண்ட ஒன்றிலிருந்து மற்றையது வித்தியாசப்படும் பல முறைகள் இருக்கின்றன என்பதையும் இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமானதாகும். உலகில் நேரடித் தேர்தல்கள் நடைபெறும் 211 அரசுகளும் சுயாட்சிகளும் உள்ளன. அவற்றில் 75 விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் சில வடிவங்களையும் 68 எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறையையும் பயன்படுத்துகின்றன.

15. இலங்கையின் விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை: விமர்சனங்களும் பதில்களும்.

இலங்கையின் தற்போதைய தேர்தல் முறை 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. அது விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இலங்கையின் தேர்தல் முறை தனிமாற்று வாக்கைப் (Single Tranferable Vote) பயன்படுத்தும் கட்சிப் பட்டியல் முறையாகும். அதாவது முதலில் அரசியல் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். அக்கட்சிகள் ஒவ்வொன்றும் வேட்புமனு தாக்கல் செய்யும் காலத்தில் ஒரு வேட்பாளர் பட்டியலை வெளியிடும். ஒரு வாக்காளர் கட்சிக்கு வாக்களித்த பின்னர் தான் தெரிவு செய்த கட்சியின் பட்டியலில் உள்ள வேட்பாளர்களில் அதிக பட்சமாக மூன்று பேருக்கு விருப்பு வாக்குகளை அளிக்க முடியும். இதனை தனிமாற்று வாக்கு (STV) என்று அழைப்பர். இந்த முறை வாக்காளரின் விருப்பத்தை வலுப்படுத்துகின்றது.

தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை 1989 இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அது முதன் முதலாகப் பாராளுமன்றத் தேர்தலில் பயன்படுத்தப்பட்டதிலிருந்து நான்கு முக்கியமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. முதலாவதாக, இந்தத் தேர்தல் முறையின் கீழ் ஒரு தனிக்கட்சி பெரும்பான்மையைப் பெறுவது சிரமமானதாக இருப்பதனால் அரசாங்கத்தின் செயற்திறன் குறைவதற்கு அது காரணமாக அமைகின்றது. அதனால் தேர்தலின் பின்னர் பாராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மைக் கட்சிகள் தற்காலிகமாக ஒன்றிணைய வேண்டி ஏற்படுகின்றன. அது ஊழல் நிகழ்வதற்கும் திரைக்குப் பின்னால் பேரம் பேசுதலுக்கும் வழியமைக்கின்றது. கூட்டு அரசாங்கங்களில் சிறிய அரசியல் கட்சிகள் குறிப்பாக இனங்களை அடிப்படையாகக் கொண்ட கட்சிகள் அபரிமிதமான அளவு செல்வாக்கைப் பெறுகின்றன என்று விமர்சிக்கப்படுகின்றது.

இந்த விமர்சனம் முற்றிலும் உண்மையானதல்ல. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை சிறிய கட்சிகளுக்கு பிரநிதித்துவம் வழங்குகின்றன அவ்வாறு வழங்காதவிடத்து அவற்றுக்கு பிரதிநிதித்துவம் இல்லாமல் போகும். கூட்டு அரசாங்கங்கள் மோசமானவையாக இருக்கவேண்டும் என்பதில்லை. அவை சகல தரப்பினரையும் உள்ளடக்கியிருக்கின்றன அத்துடன் முழுமையாக பக்கச்சார்புள்ள முடிவுகள் எடுக்கப்படுவதைச் சிரமமாக்குகின்றன. அது சட்டசபையில் பெரும்பான்மையை உறுதிப்படுத்துகின்றது. அதாவது அரசாங்கத்தில் ஒரு கட்சி மாத்திரம் இருக்கமாட்டாது. அரசியல் முடிவுகளை எடுக்கும்போது பல்வகையான அக்கறைகளையும் கவனத்தில் எடுக்கவேண்டும். குறிப்பாக சிறுபான்மையினரின் அக்கறைகளைக் கவனத்தில் எடுக்கவேண்டும். மேலும், "சிறுபான்மைப் பிரதிநிதித்துவம்" என்பது இன ரீதியான அல்லது மத ரீதியான சிறுபான்மைகளுடன் மட்டும் தொடர்புபட்டதல்ல என்பதை நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். இலங்கையின் அரசியல் முறையில், நன்றாக நிலைபெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியையும் சிறீலாங்கா சுதந்திரக் கட்சியையும் தவிர ஏனைய கட்சிகள் அனைத்தும் தொகுதிவாரியான தேர்தல் முறையால் பாதிப்புக்குள்ளாகின்றன. மக்கள் விடுதலை முன்னணி (JVP) ஜாதிக ஹெல உருமய (JHU) போன்ற சிங்களவர்களினதும் பௌத்தர்களினதும் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்களைக் கொண்ட கட்சிகள், பல

தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய பெரிய மாவட்டத் தேர்தல் தொகுதியைக் கொண்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவம் இல்லாதவிடத்து தமது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை பாரியளவில் இழக்க வேண்டியேற்படும். விருப்புத் தெரிவு வாக்குமுறையும் புதிய (கனிஷ்ட) பங்காளிகள் தேர்தல் கூட்டமைப்புக்களில் அதிகமான செல்வாக்குப் பெற்று அக்கூட்டமைப்புக்களில் அதிக பிரபலமடைந்து வெற்றி பெற உதவுகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியில் (UPFA) போட்டியிட்ட ஜேவிபியினர் சில மாவட்டங்களில் அவ்வாறு வெற்றி பெற்றார்கள்.

இரண்டாவது விமர்சனம், விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தில் வேட்பாளர்கள் தொகுதிவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. மாறாக பெரிய பரப்பைக் கொண்ட தேர்தல் மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகளும் குழுக்களும் சமர்ப்பிக்கின்ற வேட்பாளர் பட்டியலில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதனால் வாக்காளருக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையிலான தொடர்பை அது அழித்துவிட்டது எனக் கூறுகின்றது. இந்தக் கூற்று உண்மையானதாகும்.

இதனுடன் தொடர்புடையதாக இன்னொரு விமர்சனமும் முன்வைக்கப்படுகின்றது. அதாவது வேட்பாளர்கள் பாரிய பரப்பைக் கொண்ட தேர்தல் மாவட்டங்களில் பிரச்சாரம் செய்ய வேண்டியவர்களாக இருப்பதனால் இந்த முறை வேட்பாளர்களுக்கு அதிக செலவை ஏற்படுத்துகின்றதுடன் பதவிக்குப் போட்டியிடுவதில் இருந்து வேட்பாளர்களை மனம் தளரச் செய்கின்றது என்று விமர்சிக்கப்படுகின்றது. இந்த விமர்சனம் ஓரளவுக்கு உண்மையாக இருப்பினும் நடைமுறையில் இலங்கையின் அரசியல் கட்சிகள் தமது வேட்பாளர் பட்டியல்களை ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள தேர்தல் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கின்றன என்பதை நாம் முக்கியமாகக் கவனத்தில் எடுத்தல் வேண்டும். இந்த முறையின் மூலம், வேட்பாளர்கள் தமது அதிகமான பிரச்சாரங்களையும் அரசியல் செயற்பாடுகளையும் மிகவும் சிறிய தேர்தல் தொகுதியிலேயே செய்கின்றனர். மாறாக முழு மாவட்டத்திலும் செய்வதில்லை. உண்மையில் அரசியல் கட்சிகளின் அமைப்பாளர்கள் தேர்தல் தொகுதி அடிப்படையிலேயே நியமிக்கப்படுகிறார்கள். மாறாக தேர்தல் மாவட்டங்களுக்காக

நியமிக்கப்படுவதில்லை. உதாரணமாக ரவி கருணாநாயக்கா கோட்டை தேர்தல் தொகுதிக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் ஆவார். அந்தத் தொகுதிக்கான சுதந்திர ஐக்கிய முன்னணியின் அமைப்பாளர் அர்ஜுனா ரணதுங்கா ஆவார். அவர்கள் இருவரும் கொழும்பு மாவட்டத்துக்கான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாவர்.

இலங்கையின் விகிதாசாரத் தேர்தல் முறை தொடர்பில் முன்வைக்கப்படும் மற்றுமொரு விமர்சனம் விருப்புத்தேர்வு வாக்குத் தொடர்பானதாகும். விருப்புத்தேர்வு வாக்குகளைப் பெறுவதற்கான போட்டி, கட்சிகளுக்கிடையில் மட்டுமன்றி கட்சிகளின் உள்ளேயும் பயங்கரமான மோதல்களை உருவாக்குகின்றது என்றும் அது தேர்தல் வன்முறைகளுக்கும் முறைகேடான செயல்களுக்கும் காரணமாக அமைகின்றது என்றும் கூறப்படுகின்றது. விருப்புத்தேர்வு வாக்கை அளிப்பதற்கான ஏற்பாடு இலங்கையின் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் காணப்படும் ஒரு சாதகமான தன்மையாகும். அது கட்சியின் பட்டியலில் எந்த வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதை வெளியிடும் வகையில் விருப்புத்தேர்வு உரிமையை விரிவுபடுத்துகின்றது. விருப்புத்தேர்வு வாக்குமுறை கட்சிகளுக்குள் எதிர்ப்புக்களைத் தூண்டுகின்றது என்ற முடிவு உண்மையானதல்ல என்பதை அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. கட்சிகளுக்கிடையிலான தீவிர போட்டியும் அதன் விளைவாக ஏற்படும் வன்முறைகளும் திருப்தியற்ற எமது அரசியல் கலாசாரத்தின் விளைவாகவே ஏற்படுகின்றது. மாறாக இந்தத் தேர்தல் முறையின் காரணமாக ஏற்படுவதல்ல.

நான்காவதாக, மிகவும் கூடுதலான விகிதாசாரப் பிரதிநிதித்துவம் வழங்கக் கூடியதும் நீதியானதும் கட்சி ஆதிக்கத்தை இல்லாதொழிக்கக் கூடியதுமான முறையில் தற்போதைய தேர்தல் முறை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்ற விமர்சனமும் முன்வைக்கப்படுகின்றது. இலங்கைக்குப் பொருத்தமானது என நீண்டகாலமாக முன்மொழியப்பட்டு வருகின்ற விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் முறை ஜேர்மனியக் கலப்பு முறையாகும். அது எளிய பெரும்பான்மை முறையினதும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தினதும் தன்மைகளைக் கொண்டுள்ளது.

16. ஜேர்மனியத் தேர்தல் முறை

ஜேர்மனியத் தேர்தல் முறையின் பிரதான கவர்ச்சித் தன்மை அது குறித்த கட்சிகள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கு மிகவும் ஏற்றவிதத்தில் சட்டசபைப் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவதாகும். அத்துடன் அது, எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறையில் காணப்படுகின்ற வாக்காளருக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையிலான நெருக்கமான தொடர்பைத் தூண்டும் சாதகத் தன்மையையும் உள்ளடக்கியுள்ளது. ஜேர்மனிய மாதிரியினால் தூண்டப்பட்டுப் பல்வேறு வகையான மறுசீரமைப்புப் பிரேரனைகள் அடிக்கடி முன்வைக்கப்பட்டாலும் கடந்த தசாப்தத்தில் முன்வைக்கப்பட்ட (முன்னைய பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் முன்வைக்கப்பட்ட பிரேரனைகள் மற்றும் முன்னைய பாராளுமன்றத்தின் தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான தெரிவுக் குழுவின் முடிவுகள் போன்ற) இந்தப் பிரேரனைகள் ஜேர்மனிய மாதிரியின் முக்கிய அம்சங்களில் இருந்தே எடுக்கப்பட்டுள்ளன.

ஜேர்மனிய சமஷ்டித் தேர்தல் முறையின் கீழ் வாக்காளர்களுக்கு இரண்டு வாக்குகள் உள்ளன. ஜேர்மனிய சமஷ்டிச் சட்ட சபையான பண்டஸ்டக்கின் (Bundestag) உறுப்பினர்களில் அரைவாசிப் பகுதியினர் எளிய பெரும் பான்மைத் தேர்தல் முறையின் கீழ் 328 தொகுதிகளில் இருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எஞ்சிய 328 ஆசனங்களும் கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட மாகாணங்களுக்கான வேட்பாளர் பட்டியலுக்கு இணங்க விகிதாசார முறைப்படி பகிரப்படும்.

இரண்டு வாக்குகளில் ஒன்று தொகுதிக்கான பிரதிநிதிக்கும் மற்றையது ஒரு அரசியல் கட்சிக்கும் வழங்கப்படும். ஒரு வாக்காளர் தொகுதியிலும் பட்டியலிலும் உள்ள இரு வித்தியாசமான கட்சிகளுக்கு வாக்களிக்க முடியும். கட்சிகள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையின் (அதாவது ஒவ்வொரு கட்சியினதும் பட்டியலுக்கு வழங்கப்பட்ட வாக்குகளின்) அடிப்படையில் ஆசனங்கள் தேசிய மட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவை Niemeyer முறை எனப்படும் ஒரு சிக்கலான கணித வாய்ப்பாட்டின் அடிப்படையில் கணிக்கப்படும். அது ஒவ்வொரு அரசியல் கட்சியும் பெற்ற வாக்குகளின் நூற்றுவீதத்துக்கு மிகவும் பொருத்தமான விகிதாசார அடிப்படையில் ஆசனங்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துகின்றது.

இது இவ்வாறு தீர்மானிக்கப்பட்ட பின்னர், அந்த எண்ணிக்கையில் இருந்து ஒரு கட்சி ஏற்கனவே வென்றுள்ள தொகுதி ஆசனங்களின் எண்ணிக்கை கழிக்கப்படும். எஞ்சும் ஆசனங்கள் கட்சியின் பட்டியலில் இருந்து நிரப்பப்படும். இலங்கையில் இருப்பது போல், ஒரே கட்சியின் பட்டியல் தொடர்பில் விருப்புத் தெரிவு வாக்கு வழங்கும் உரிமை வாக்காளருக்கு இல்லை. ஜேர்மனிய கட்சிப் பட்டியல் ஒரு தேசியப் பட்டியலாகவும் இல்லை. கட்சிகள் ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்தனியான பட்டியல்களை சமர்ப்பிக்கின்றன. மேலும் இலங்கையில் போலன்றி, தேர்தலின் பின்னர் நியமனத்துக்கான பெயர்களைப் பட்டியலில் இருந்து முன்மொழியும் தற்றுணிபு அதிகாரம் கட்சிகளுக்கு இல்லை. பட்டியலில் உள்ள பெயர்களின் ஒழுங்குவரிசை தேர்தலுக்கு முன்னர் தீர்மானிக்கப்படுகின்றது. அந்த ஒழுங்கு வரிசைப்படியே கட்சிகளுக்கான ஆசனங்கள் நிரப்பப்படுகின்றன. இலங்கையில் தற்போது நடைபெற்றுவருகின்ற, கட்சிகள் பட்டியலில் இருந்தும் பட்டியலுக்கு வெளியில் இருந்தும் வேட்பாளர்களைத் தெரிவு செய்து சட்டசபைக்கு நியமிக்க முன்மொழியும் கேலிக் கூத்து இத்திட்டத்தில் இல்லை.

சில போது ஒரு கட்சி பெற்ற வாக்குகளின் அடிப்படையில் கணிப்பீடு செய்யும் போது அக்கட்சி பெறும் ஆசனங்களின் எண்ணிக்கை அக்கட்சி தொகுதிகளில் வென்ற ஆசனங்களின் எண்ணிக்கையைவிடக் குறைவானதாக இருக்கமுடியும். அத்தகைய சந்தர்ப்பங்களில் மேலதிக பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொள்வதற்காக சட்டசபையின் அங்கத்தவர் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

இவ்வாறு ஜேர்மனியத் தேர்தல் முறையானது, எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறை மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை என்பவற்றின் சிறந்த தன்மைகளைக் கொண்ட ஒரு கலப்பு முறையை ஏற்படுத்துகின்றது. மேலும் அது தேர்தல் நடைமுறைகளில் அரசியல் கட்சித் தலைமைகளின் பொருத்தமான பங்கு, ஸ்திரத்தன்மைக்கான தேவை, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் முடியாவிட்டாலும் அதிகமான சந்தர்ப்பங்களில் நீதியான பிரதிநிதித்துவம் வழங்குதல், சமூகத்திலுள்ள பணயப் பொருளாளர்கள் போன்ற விடயங்களையும் கவனத்தில் எடுக்கின்றது.

IV

வீட்டு வன்முறைத்தடுப்புச் சட்டமூலம் மற்றும் பெண்கள் உரிமைச் சட்டமூலம் என்பவை பற்றிய ஆய்வு

அம்பிகா சற்குணநாதன்

1. அறிமுகம்

இன்று பால்நிலை சமத்துவம் சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை என சர்வதேச மனித உரிமைகள் சட்டம் ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கையில் பெண்களின் உரிமைகள் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும் அதிகமான பெண்கள் இன்றும் பாகுபாட்டுக்கும் வன்முறைக்கும் உட்படுத்தப்படுகின்றனர். அத்தோடு சமூகத்தில் பெண்களுக்கு உரிய அந்தஸ்த்தும் வழங்கப்படுவதில்லை.

இலங்கை, பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான ஒப்பந்தத்தில் CEDAW கைச்சாத்திட்டுள்ளது. அதனால் CEDAW இன் ஏற்பாடுகளை மீறுகின்ற செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது

---

* மூத்த ஆய்வாளர்/இணைப்பாளர், மனித உரிமைகள் மற்றும் அரசியலமைப்பியல் நிகழ்ச்சித்திட்டம், சர்வதேச இனைத்துவ கற்கை நெறிகளுக்கான நிலையம்,கொழும்பு.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் அதன் மீது கடமையாகின்றது. சர்வதேச பெண்ணுரிமைச் சட்டம் என அழைக்கப்படும் இந்த ஒப்பந்தம் அதிகமான விடயங்களை உள்ளடக்கிய விரிவானதொரு ஆவணமாகும். அது சமூகத்திலும் குடும்பத்திலும் "ஆண்களினதும் பெண்களினதும் பாரம்பரிய நிலைகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மத்தியில் முழுமையான சமநிலையை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் மாற்றமொன்று தேவைப்படுகின்றது'' என்று கூறுகின்றது. அரசுகள் "அனைத்து வழிமுறைகள் மூலமும் தாமதமின்றி பெண்களுக்கெதிரான பாகுபாட்டை ஒழிக்கும் கொள்கையொன்றை ஏற்கவேண்டும்." என்று CEDAW வின் உறுப்புரை 2 வேண்டுகின்றது. அது "பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை ஏற்படுத்தும் எந்தவொரு செயலையும் தடுப்பதுடன் அரச நிறுவனங்களும் அதிகார சபைகளும் இந்தக் கடமைக்கு இணங்க நடப்பதை உறுதிப்படுத்த வேண்டும்" என்ற கடப்பாட்டை உள்ளடக்கியுள்ளது. மேலும் "பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை ஏற்படுத்துகின்ற நடைமுறையிலுள்ள சட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும், வழக்காறுகளையும், செயற்பாடுகளையும் திருத்துவதற்கான அல்லது அவற்றை நீக்குவதற்கான சட்டங்களை உருவாக்குதல் உள்ளிட்ட அவசியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்." என்று CEDAW அரசுகளை வேண்டுகின்றது. எனவே இலங்கை CEDAW இல் கைச்சாத்திட்டு இருப்பதனால் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதனையும் மேம்படுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்துவது அதன் கடமையாகும்.

இந்த அத்தியாயம் வீட்டு வன்முறைத் தடுப்புச் சட்டமூலம், பெண்ணுரிமைச் சட்டமூலம் ஆகிய இரு சட்டமூலங்கள் தொடர்பாக ஆராய்கின்றது. அவை இரண்டும் இலங்கையில் உள்ள பெண்களின் உரிமைகள் தொடர்பான சட்ட வரையறைகளை பலப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளன.

2. பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

இலங்கைப் பெண்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் ஒரு விடயமாக வன்முறை உள்ளது. பெண்களுக்கு எதிராக மொத்தம் 2155 சிறு குற்றச் செயல்கள் நிகழ்ந்துள்ளதாக 2003 ஆம் ஆண்டின் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. சிறு குற்றச்செயல்கள் என்ற பிரிவில் பாலியல் துன்புறுத்தல்களும், ஏனையவற்றுடன் உடற் காயங்களை

ஏற்படுத்தும் தாக்குதல்களும், தண்டனைகளும் ஏனையவையும் அடங்குகின்றன.[1] பாலியல் வல்லுறவு, கொலை, கொலை முயற்சி, கடுமையான உடற்காயங்கள், கடுமையான பாலியல் துஷ்பிரயோகம், தகாத பாலியல் உறவு போன்ற 1506 பாரசாரமான குற்றங்கள் 2003ஆம் ஆண்டில் நிகழ்ந்துள்ளன.[2] இந்தப் புள்ளிவிபரங்களில் வீட்டு வன்முறை தனியானதொரு பிரிவாக நோக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

3. வீட்டு வன்முறையுடன் தொடர்புடைய தேசிய சட்ட நெறிமுறைகள்

இலங்கையில் வீட்டு வன்முறை பற்றிய தனியான சட்டங்கள் இல்லாதிருப்பதோடு, தண்டனைச் சட்டக் கோவை, வீட்டு வன்முறையை குற்றவியல் குற்றமாகக் கருதுவதுமில்லை. அதனால் வீட்டு வன்முறை தொடர்பான வழக்குகள் பிரிவு 324(தாக்குதல்) பிரிவு 311 (மோசமாகக் காயப்படுத்தல்) போன்ற பிரிவுகளின் கீழ் தொடரப்படவேண்டியுள்ளன. எனினும் இந்த ஏற்பாடுகள் மிகவும் அரிதாகவே பயன்படுத்தப்படுகின்றன. பெண்கள் வீட்டு வன்முறை நிகழ்வுகள் தொடர்பாக முறைப்பாடு செய்வதை சமூக நிலமைகள் தடுக்கின்றன. அவ்வாறு முறைப்பாடு செய்தாலும் உரிய நிறுவனங்கள் அவற்றை முக்கியமானதாகக் கருதுவதில்லை. அல்லது முறைசாராத மத்தியஸ்தச் செயற்பாடுகளைப் பயன்படுத்தி இந்த வழக்குகளை தீர்க்கின்றன.[3] 1995ஆம் ஆண்டில் தண்டனைச் சட்ட கோவையில் செய்யப்பட்ட திருத்தங்கள் "கடுமையான காயம்" என்பதன் வரைவிலக்கணத்தை விரிவுபடுத்தினாலும் அது பெண்களுக்கு எதிரான வன்முறையை குற்றமாகக் கருதுவதில்லை. இந்தத் திருத்தங்கள் சிறிய உடற்காயங்களுக்கு ஆளானவர்களையும் உளவியல் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டவர்களையும் கவனத்தில் எடுக்கவில்லை.[4]

---

1 பொலிஸ் திணைக்களப் புள்ளிவிபரங்கள்- 2003

2 மேற்குறித்த குறிப்பைப் பார்க்க.

3 அமீனா ஹுஸைன், சிலநேரங்களில் இரத்தம் படிந்திருக்காது: இலங்கையின் கிராமப்புறங்களில் வீட்டுவன்முறையும் பாலியல் வல்லுறவும் (கொழும்பு: இனக் கற்கைளுக்கான சர்வதேச நிலையம், 2000) 11

4 மேற்குறித்த குறிப்பைப் பார்க்க.

விவாகரத்துச் சட்டமும் இலங்கையில் வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டர்களைப் பாதுகாப்பதில் தாக்கம் செலுத்துகின்றது. இலங்கையில் "தவறு இன்றிய" விவாகரத்துக் கோட்பாடு நடைமுறையில் இல்லாததால் விவாகரத்துக் கோருபவர் வன்ம உறவறுத்தல், முறையற்ற உடல் உறவு அல்லது குணப்படுத்த முடியாத மலட்டுத்தன்மை என்பவற்றின் அடிப்படையிலேயே விவாகரத்துக் கோரவேண்டியுள்ளது.[5] இது விவாகரத்துக் கோரும் பெண்களுக்கு ஒரு பெரும் சுமையாக அமைகின்றது. மேலும் அவர்கள் சமூகத்தில் அவமானத்திற்குள்ளாவது மட்டுமன்றி ஆண்களுக்குச் சார்பான சட்டமுறையுடன் கொடுக்கல் வாங்கல் செய்ய வேண்டியவர்களாகவும் உள்ளனர். வன்ம தீய மனத்துடன் உறவறுத்தல் என்பதற்கான வரைவிலக்கணம் வாழ்க்கைத் துணையின் துஷ்பிரயோகத்தையும் உள்ளடக்குவதால் இந்த அடிப்படையில் விவாகரத்து கோருவது சாத்தியமாகின்றது. எனினும் அதனை நிரூபிப்பது பெண்களுக்கு இன்னுமொரு பெரும் சுமையாக அமைகின்றது. அவள் உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து ஏற்படும் என்ற பயத்தின் காரணமாக தான் கணவனின் வீட்டிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டதாக நிரூபிக்க வேண்டும். சட்ட ரீதியான பிரிவு காணப்பட்டு இரண்டு வருடங்களின் பின்னர் அதனை விவாகரத்தாக மாற்ற முடியுமாயினும்[6] இந்த விடயத்திலும் விவாகரத்துக் கோரும் தரப்பினர் வழக்காளியுடன் வாழ்வது அபாயகரமானதாகவும் சகிக்க முடியாததாகவும் உள்ளது என்றும் இந்த நிலை எதிராளியின் சட்டபூர்வமற்ற நடத்தையால் ஏற்பட்டது என்றும் நிறுவவேண்டும் என்று முற்தீர்ப்புச் சட்டம் கூறுகின்றது.[7]

4. சர்வதேச மனித உரிமைகள் தராதரமும் உண்மையான அக்கறை பற்றிய கோட்பாடும்

பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை ஒழிப்பதற்கான குழு 1992இல் பொதுச் சிபாரிசு 19ஐ ஏற்றுக்கொண்டது. அது பெண்களுக்கு எதிரான வன்முறை ஒரு மனித உரிமை மீறலாக அமையும் என

---

5 1907ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க திருமணக் கட்டளை (பொது)ச் சட்டம், பிரிவு 19

6 1977ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான குடியியல் வழக்குச் சட்டம், பிரிவு 608.

7 ஹுஸைன் 13

ஏற்றுக்கொள்கின்றது. "உரிமைகள் மீறப்படுவதைத் தடுப்பதில் அல்லது விசாரணை செய்வதிலும் வன்முறைகளுக்கு தண்டனை வழங்குவதிலும் அரசுகள் உண்மையான அக்கறையுடன் செயற்படத் தவறுமாயின் தனிப்பட்ட செயற்பாடுகளுக்கான பொறுப்பை அரசும் ஏற்க வேண்டும்"[8] என்று அது வலியுறுத்துகின்றது. பின்வருவன உள்ளிட்ட பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளிலிருந்து பெண்களைச் சிறந்த முறையில் பாதுகாப்பதற்கு அரசுகள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான சிபாரிசுகளை அக்குழு முன்வைத்தது:

- ஏனையவற்றுடன் குடும்பத்தில் நடைபெறும் துஷ்பிரயோகம் மற்றும் வன்முறை, வேலைத்தளத்தில் நிகழும் பாலியல் மற்றும் பாலியல் தொல்லைகள் என்பவை உள்ளிட்ட அனைத்து வகையான வன்முறைகளில் இருந்தும் பெண்களைப் பாதுகாப்பதற்காகத் தண்டனைகளை வலுவூட்டுதல், குடியியல் பரிகாரங்கள், நட்டஈட்டு ஏற்பாடுகள் என்பன உள்ளிட்ட செயற்திறனுள்ள சட்ட நடவடிக்கைகள்.
- ஆண்களினதும் பெண்களினதும் பணிகள் மற்றும் அந்தஸ்த்து தொடர்பான மனோநிலையை மாற்றியமைப்பதற்கான பொதுத்தகவல் மற்றும் கல்வி நிகழ்ச்சிகள் உள்ளிட்ட தடுப்பு ஏற்பாடுகள்.
- வன்முறையால் பாதிக்கப்பட்ட அல்லது வன்முறை ஆபத்தை எதிர்நோக்குகின்ற பெண்களுக்கு புகலிடம் வழங்குதல், ஆலோசனைச்சேவை வழங்குதல், புனர்வாழ்வு நடவடிக்கைகள், உதவிச் சேவைகள் உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள்.

உண்மையான அக்கறை பற்றிய கோட்பாடு Velasquez Rodriquez[9] வழக்கில் அமெரிக்க மனித உரிமைகள் நீதிமன்றத்தின் தீர்ப்பின்

---

[8] பொதுச் சிபாரிசு 19 (9). 11வது அமர்வு, 1992. http://www.un.org/womenwatch/daw/cedaw/recommendations/recomm.htm#recom19

[9] அமெரிக்க மனித உரிமைகள் நீதிமன்றம்.1988 Ser.C.No:4,9 மனித உரிமைகள் சஞ்சிகை. 212(1988) ஹென்றி ஜே.ஸ்டீனர், பிலிப் அல்ஸ்டன் ஆகியோரின் *சட்டம் அரசியல், ஒழுக்கம் என்பவற்றில் சர்வதேச மனித உரிமைகள்* என்ற நூலில் மேற்கோள்காட்டப்பட்டது. (ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அச்சகம் 2000), 881-887.

மூலம் விரிவடைந்துள்ளது. அரசின் கடமை தொடர்பான சர்வதேச தரத்திலான ஒரு அதிகார பூர்வமான பொருட்கோடலாக உள்ள இந்தத் தீர்ப்பு, தனியாரின் செயற்பாடுகள் விடயத்தில் அரசின் பொறுப்பு பற்றி வலியுறுத்துகின்ற மிகவும் முக்கியமானதொரு தீர்ப்பாகும். உண்மையான அக்கறைத் தேவைப்பாடானது தனியார் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதியளவு பரிகாரம் வழங்குதல், நடைமுறைப்படுத்துதல் ஆகிய கடமைகளையும் உள்ளடக்கியுள்ளது. எனவே பெண்களுக்கு எதிரான வன்முறைச் செயல்களைக் குற்றமாகக் கருதித் தடைசெய்கின்ற சட்டமுறையொன்று இருப்பது மாத்திரம் போதுமானதல்ல. அரசாங்கம் அத்தகைய நிகழ்வுகள் விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படுவதை "செயற்திறன் மிக்க முறையில் உறுதிப்படுத்துவதற்கான" தனது கடமைகளைச் செய்ய வேண்டும். வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க அரசாங்கம் மேற்கொள்ளும் நிகழ்ச்சிகளும் பொலிஸாரும் ஏனைய அரச உத்தியோகத்தர்களும் செய்கின்ற விசாரணை முறைகளும் ஏனைய நடவடிக்கைகளும் உண்மையான அக்கறைக் குறிகாட்டிகளாக அமையும்.

5. இலங்கையின் 3ம், 4ம் காலப்பகுதிகளுக்கான அறிக்கை தொடர்பான CEDAW குழுவின் இறுதி அவதானங்கள்[10]

இலங்கையின் 3ம், 4ம் காலப்பகுதிகளுக்கான அறிக்கை தொடர்பான இறுதி அவதானத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை, இலங்கைப் பெண்கள் எதிர்நோக்குகின்ற மிகவும் கடுமையான ஒரு பிரச்சினை என CEDAW குழு ஏற்றுக் கொண்டுள்ளது. விஷேட சட்டம் உருவாக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தும் போது ஆணைக்குழு திருமணத்திற்குப் பிந்திய கற்பழிப்பை குற்றமாக்கு மற்றும் வீட்டு வன்முறை தொடர்பான முறைப்பாடுகளுக்கு பொலிஸார் "சிறப்பாகவும் உணர்வுபூர்வமாகவும்" நடவடிக்கை எடுக்கத் தவறியமை போன்ற விஷேடமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டியது. அது முன்னைய யுத்தப் பிரதேசங்களில் பெண்களுக்கு எதிராகப் புரியப்படும் வன்முறைகளையும் கோடிட்டுக்காட்டுவதுடன்

[10] இணையத்தளம் http://www.umn.edu/humanrts/cedaw/srilanka2002.html

பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது உரிமைகள் தொடர்பாக விழிப்பூட்டவும் பரிகாரம் பெறுவதற்கான வழிமுறைகளை அதிகரிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியது.

6. வீட்டு வன்முறைத் தடுப்புச் சட்டமூலம்

6.1 நோக்கங்கள், வரைவிலக்கணங்கள், மொழிநடை

இலங்கையிலுள்ள மகளிர் குழுக்களால் விடுக்கப்பட்ட தொடர்ச்சியான வேண்டுகோள்களைத் தொடர்ந்து 2004 நவம்பர் 19ம் திகதி வீட்டு வன்முறைத் தடுப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் சமர்ப்பித்தது. அரசாங்கத்தின் இந்த முயற்சி பாராட்டத்தக்கதாக இருந்தாலும் இந்தச் சட்டமூலம் போதுமானதல்ல. ஏனெனில் அது வீட்டு வன்முறை தொடர்பான முழுமையான அணுகுமுறையைக் கொண்டிருக்கவில்லை. இந்தச் சட்டமூலத்தின் தலைப்பு "எந்தவொரு வீட்டு வன்முறையையும் தடுப்பதற்கும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் அல்லது நிகழ்வுக்கானது" என்று நீண்டதாக இருந்தாலும், பாதுகாப்புக் கட்டளைகளைப் பிறப்பித்தலில் மாத்திரமே அது கவனம் செலுத்துகின்றது. முதலாவது அல்லது சில வீட்டு வன்முறைச் செயற்பாடுகள் நிகழ்ந்த பின்னர் தான் பாதுகாப்புக் கட்டளைகள் பொதுவாகப் பிறப்பிக்கப்படுகின்றன என்பதை இங்கு நினைவு கூர்வது பொருத்தமாகும். எனவே இந்தச் சட்டமூலமானது வீட்டு வன்முறையை ஒரு குற்றவியல் குற்றமாகக் கருதுவதற்குப் பதிலாக ஒரு வீட்டு வன்முறை நிகழ்ந்த பின்னர் பாதிக்கப்பட்டவரைப் பாதுகாப்பதாகவே உள்ளது. எனவே இந்தச் சட்டமூலம் வீட்டு வன்முறை ஒரு கொடூரக் குற்றம் என்ற செய்தியைக் கொண்டதாக இருக்காது.

மேலும், சட்டமூலத்தின் எளிய மொழிநடையில் விளக்கம் வழங்கப்படவில்லை. அதனால் பொதுமக்கள் அதனைப் புரிந்துகொள்ள முடியாதுள்ளது. எந்தவொரு வீட்டு வன்முறைத் தடுப்புச் சட்டமும் செயற்திறன்மிக்கதாக இருப்பதற்கு அதனைப் பரப்புவதும் பொது மக்களுக்கு அறிவூட்டுவதும் அத்தியாவசியமானதாக இருப்பதனால் சட்டமூலத்துடன் தெளிவான புரிந்து கொள்ளக்கூடிய வழிகாட்டியொன்று வெளியிடப்பட வேண்டும்.

பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான ஐக்கிய நாடுகள் விஷேட பிரதிநிதி "வீட்டு வன்முறைச் செயல்கள் பற்றிய சாத்தியமான விரிவான வரைவிலக்கணத்தைப்"[11] பயன்படுத்த வேண்டும் எனச் சிபாரிசு செய்துள்ளார். இந்தச் சட்ட மூலத்தில் வீட்டு வன்முறை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணம் இந்தக் கூற்றின் அடிப்படையில் வெற்றிகரமானதாக இல்லை. இந்தச் சட்டமூலத்தில் வீட்டு வன்முறை என்பது "அட்டவணை 1இல் உள்ள குற்றமொன்றுக்கு காரணமாக அமையும் எந்தவொரு செயலையும் எந்தவொரு உணர்வுரீதியான துஷ்பிரயோகத்தையும் குறிக்கும்."[12] அட்டவணை 1இல் தண்டனைச் சட்டத்தின் அத்தியாயம் XVI இல் உள்ள அனைத்துக் குற்றங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றில் கொடூர காயம், கருக்கலைப்பு என்பனவும் அடங்குகின்றன. பிரிவு 327 கொள்ளை, குற்ற அச்சுறுத்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. பரந்ததொரு வரைவிலக்கணத்திற்குப் பதிலாக தண்டனைச் சட்டத்திலுள்ள குற்றங்கள் பலவற்றுக்கு உள்ளடக்கியமை வீட்டு வன்முறையை ஒரு குற்றவியல் குற்றமாக ஏற்றுக் கொள்வதில் உள்ள தயக்கத்தையே காட்டுகின்றது.

6.2 வீட்டு வன்முறையைத் தடுப்பதற்குத் தேவையான ஏனைய நடவடிக்கைகள்

ஏற்கனவே கூறப்பட்டது போல் இந்தச் சட்டமூலம் பாதுகாப்பு ஏற்பாடுகளிலேயே கவனம் செலுத்துகின்றது. அது வீட்டு வன்முறையைத் தடுப்பதிலும் வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதிலும் பங்களிக்கக் கூடிய ஏனைய விடயங்களைப் புறக்கணிக்கின்றது. உதாரணமாக மருத்துவ சேவை வழங்குநர்கள் வீட்டு வன்முறை நிகழ்வுகளை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ய வேண்டும் என்று இந்தச் சட்டம் கட்டாயப்படுத்தவோ வீட்டு வன்முறை தொடர்பான முறைப்பாடுகள் விடயத்தில் பொலிஸார் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான வழிகாட்டல்களை வழங்கவோ இல்லை. இந்த விடயத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தொடர்பான

---

[11] பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி, ராதிகா குமாரசுவாமி, E/CN.4/1997/47இ 1997 பெப்ரவரி12இ 18

[12] வீட்டு வன்முறைத் தடுப்புச் சட்ட மூலம் பிரிவு 22

ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தைப் பின்பற்ற வேண்டும். அரசுகள் புதிய சட்டங்களையும் வன்முறையால் பாதிக்கப்படுபவர்களுக்கு பரிகாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் உருவாக்குவதுடன் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தப் பிரகடனம் கோருகின்றது.

- பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான தேசிய திட்டங்களை வகுத்தல்
- நீதிபதிகளுக்கும் சட்டத்தரணிகளுக்கும் பொலிஸாருக்கும் பயற்சி வழங்குதல்
- வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிச் சேவைகளை நிறுவுதல். (புகலிடங்கள், சட்ட உளவியல் ஆலோசனைச் சேவைகள்)[13]

தனியான குடியியல் வழக்கு அல்லது குற்றவியல் வழக்குத் தொடர்வதற்கான பாதிக்கப்பட்ட நபரின் உரிமையைப் பறிக்கவில்லை என இந்தச் சட்டமூலம் கூறினாலும்[14] இந்தச் சட்டவாக்கமானது முழுமையானதாகவும் குடியியல் மற்றும் குற்றவியல் பரிகாரங்களை வழங்கக் கூடியதாகவும் இருப்பதற்குப் பதிலாக வீட்டு வன்முறையின் ஒரு பக்கத்தையே - அதாவது பாதுகாப்புக் கட்டளைகளைப் பிறப்பித்தலையே - கையாள்கின்றது என்பது கவனிக்கப்படவேண்டும். உண்மையில் சட்டவாக்கமானது பின்வரும் ஏற்பாடுகள் மீது கவனம் செலுத்த வேண்டும்.

- திரும்பத் திரும்ப செய்யப்படும் குற்றங்களுக்கும் அத்துமீறிய தாக்குதல்களுக்கும் ஆயுதப் பயன்பாட்டுக்கும் அதிகபட்சத் தண்டனை வழங்குதல்.
- தண்டனை வழங்குவதற்கான தெளிவான வழிகாட்டல்கள்.
- பிணக்குத் தலையீட்டு நிலையங்கள், உடனடி மருத்துவப் பராமரிப்பு போன்ற அவசர சேவைகள்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கும் தவறிழைத்தவர்களுக்கும் சிகிச்சை வழங்கல்

---

[13] உறுப்புரை 4, பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்புப் பிரகடனம், இணையத்தளம் http://www.un.org/documents/ga/res/48/a48r104.htm.

[14] வீட்டு வன்முறைத் தடுப்புச் சட்ட மூலம் பிரிவு

6.3 நிலையியல்

இந்தச் சட்டமூலத்திற்கு இணங்க வீட்டுவன்முறையால் பாதிக்கப்பட்ட நபரும் பாதிக்கப்பட்ட நபரின் சார்பில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும் மாத்திரமே பாதுகாப்புக் கட்டளை ஒன்றைக் கோரி விண்ணப்பிக்க முடியும்.[15] தீங்கு அல்லது வன்முறை நிகழும் என்ற பயத்தின் காரணமாக விண்ணப்பிக்க முடியாதிருக்கும் ஒரு பாதிக்கப்பட்ட பெண்ணின் சார்பில் விண்ணப்பிக்க இந்தச் சட்ட மூலம் யாரையும் அனுமதிப்பதில்லை. வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களின் அக்கறை தொடர்பில் ஒரு பாதுகாப்புக் கட்டளையைக் கோரி விண்ணப்பிக்கப் பிறரை அனுமதிக்கும் விதத்தில் ஏற்பாடுகள் உருவாக்கப்படுவது அவசியமாகும்.

6.4 தண்டனைகளும் தடைகளும்

இந்தச் சட்ட மூலத்தின் அமுலாக்கல் ஏற்பாட்டில் உள்ள தண்டனைகள் பலவீனமானவையாகவும் வன்முறைச் செயல்களை ஏற்படுத்தக்கூடியனவாகவும் உள்ளன. உதாரணமாகப் பாதுகாப்புக் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் கைது செய்யும் அதிகாரத்தை இந்தச் சட்டமூலம் வழங்குவதில்லை. அதனால் ஒரு நீதிமன்றம் ஒரு பாதுகாப்புக் கட்டளையை அல்லது இடைக்காலப் பாதுகாப்பு உத்தரவைப் பிறப்பிக்கும் போது பிரதிவாதியைக் கைது செய்வதற்கான உத்தரவைப் பிறப்பிப்பதற்கு அதிகாரமளிக்கும் ஒரு கட்டளையொன்றையும் இடவேண்டும். அத்தகைய கைது செய்தல் உத்தரவை நிறைவேற்றுவதை இடைநிறுத்துவதானது எந்தவொரு தடை அல்லது நிலைமை, கடமைகள், விதிக்கப்பட்ட கட்டளைகளுடன் இணங்கக் கூடியதாக இருக்க வேண்டும். இந்தக் கைது செய்தல் உத்தரவாத பாதுகாப்பு உத்தரவு புறத்தொகுக்கப்படும் வரை அல்லது நிறைவேற்றப்பட்ட பின்னர் ரத்துச் செய்யப்படும் வரை நடைமுறையில் இருக்கும். அதனால் ஒரு இடைநிறுத்தல் உத்தரவானது பாதுகாப்புக் கட்டளை அல்லது இடைக்காலக் கட்டளை மீறப்படுமிடத்து பாதிக்கப்பட்ட நபர் மீண்டும் நீதவான் நீதிமன்றத்தில் அந்தக் கட்டளையை நடைமுறைப்படுத்துமாறு கோரி வழக்குத் தொடர்வதனைத் தடுக்கும். ஒரு இடைநிறுத்தப்பட்ட கைது செய்தல் உத்தரவு

[15] வீட்டு வன்முறைத் தடுப்புச் சட்ட மூலம் பிரிவு 2

பிறப்பிக்கப்பட்டால், ஒரு இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளை அல்லது பாதுகாப்புக் கட்டளை மீறப்பட்டவுடன் பிரதிவாதியைக் கைது செய்ய பொலிசாருக்கு முடியும். அதனால் பாதிக்கப்பட்ட நபருக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்கும். வீட்டு வன்முறை என்பது சட்டத்தின் எல்லைக்கு அப்பாற்பட்ட ஒரு தனிப்பட்ட செயலாக இன்றும் கருதப்படக் கூடிய, பாதிக்கப்பட்டவருக்கு சொற்ப பரிகாரங்கள் கிடைக்கின்ற, உணர்ச்சியற்ற மிருகத்தன்மை கொண்ட ஒரு சட்ட முறையுடன் கொடுக்கல் வாங்கல் செய்யவேண்டியுள்ளது. இலங்கையில் இது ஒரு மிகக் கொடிய நடைமுறையாகத் தென்பட்டாலும் பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பை அத்தகைய ஒரு வழிமுறையின் மூலம் மாத்திரமே உத்தரவாதப்படுத்த முடியும்.

6.5 பொது

இந்தச் சட்டமூலம் விண்ணப்பதாரரினதும் பிரதிவாதியினதும் அந்தரங்கத்தைப் பாதுகாக்கக் கூடிய ஏற்பாடுகளைக் கொண்டதாக இல்லை. அதனால் பகிரங்கப்படுத்தப்படுவோம் அல்லது சமூகத்தினால் கேலி செய்யப்படுவோம் என்ற பயத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் குற்றங்கள் தொடர்பாக அறிவிக்க தயங்கக் கூடும். எனவே நீதிமன்றத்தின் செயற்பாடுகள் பொதுமக்கள் அறியக்கிடைக்காமல் மறைவானதாக இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் சேர்ப்பது முக்கியமானதாகும். அத்துடன் விண்ணப்பதாரியினதும் பிரதிவாதியினதும் அந்தரங்கத்தைப் பாதிக்கக் கூடிய ஊடக நிறுவனங்களையும் தனிநபர்களையும் தடுக்கும் தண்டனை ஏற்பாடுகளும் சேர்க்கப்பட வேண்டும்.

வீட்டுவன்முறையைத் தடுப்பதிலும் வன்முறையால் பாதிகப்பட்டவர்களைப் பாதுகாப்பதிலும் பொதுக் கல்வியும் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளும் தவிர்க்கமுடியாத பங்குவகிக்கின்றன. அதனால் பொது மக்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சு, மகளிர் விவகார அமைச்சு போன்ற அரச நிறுவனங்களைக் கட்டாயப்படுத்தக் கூடிய ஏற்பாடுகள் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பது முக்கியமானதாகும்.

7. பெண்ணுரிமைச் சட்டமூலம்

1992 ஆம் ஆண்டில் ஏற்கப்பட்ட பெண்ணுரிமைச் சாசமானது அரசியல் மற்றும் குடியியல் உரிமைகள், குடும்பத்தில் உள்ள உரிமைகள், பொருளாதாரச் செயற்பாடுகளுக்கும் பயன்களுக்குமான உரிமைகள், கல்வியும் பயிற்சியும் பெறுவதற்கான உரிமைகள், சுகாதாரத்துக்கான உரிமை, சமூகப் பாகுபாட்டிலிருந்தும் பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட வன்முறையில் இருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமை என்பன தொடர்பான பிரிவுகளைக் கொண்டுள்ளன. இரண்டாம் பகுதி பெண்கள் தொடர்பான தேசிய குழுவொன்றை நிறுவுவதில் கவனம் செலுத்துகின்றது. இந்த சாசனம் சட்ட ரீதியான பிணைப்பை ஏற்படுத்தும் ஒரு ஆவணமல்ல. மாறாக அது பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கு அரசாங்கம் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை விளக்கும் ஒரு ஆவணமாகும். பெண்கள் பற்றிய தேசியக் குழுவின் தொழிற்பாடுகளில் பால் வேறுபாடு காட்டுதல் தொடர்பான முறைப்பாடுகளை உரிய பொருத்தமான நிறுவனங்களுக்கு அனுப்புதல், உரிய நிறுவனங்களால் எடுக்கப்பட்ட அவதானிப்புப் பணிகள், பெண்ணுரிமை தொடர்பான சட்டவாக்க அபிவிருத்திக் கொள்கைகளின் தாக்கத்தை மதிப்பிடுதல் என்பனவும் அடங்கும். பெண்ணுரிமைச் சட்டமூலமானது இந்தத் தேசிய குழுவை மேலதிக அதிகாரங்களுடன் தேசிய பெண்ணுரிமை ஆணைக்குழுவாக மாற்றுவதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கையாகும்.

மகளிர் விவகார அமைச்சு 2004 ஆம் ஆண்டில் பெண் உரிமைச் சட்டமூலத்தை (இலங்கை) பொதுமக்களின் பார்வைக்கு வைத்து பொதுமக்களின் கருத்துக்களையும் பிரேரணைகளையும் கோரியது. சில விடயங்கள் தொடர்பில் சர்ச்சைகள் தோன்றியதனால் மகளிர் விவகார அமைச்சு பல்வேறு தனிநபர்களையும் நிறுவனங்களையும் ஒன்று கூட்டி கூட்டமொன்றை நடாத்தியது. அந்தச் சட்டமூலத்தில் பாரிய திருத்தங்களை மேற்கொள்ள அக்கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது. அதற்கிணங்க, சட்டமூல வரைபை மீளாய்வு செய்வதற்கு ஒரு தொழில்நுட்பக்குழு உருவாக்கப்பட்டது. பெண்கள் தொடர்பான தேசிய குழு பேராசிரியர் சாவித்திரி குணசேகர, கலாநிதி மரியோ கோமஸ், திருமதி \செல்வி மனோரி முத்தட்டுவேகம, திருமதி\செல்வி குமுதினி சாமுவேல்,

திருமதி\செல்வி சைரீன் சிரிவர்தன, கலாநிதி தீபிக்கா உடகம ஆகியோரை அக்குழுவின் அங்கத்தவர்களாக நியமித்தது.[16] அச்சட்ட மூலத்தின் திருத்தப்பட்ட தொகுப்பு தேசிய பெண்கள் ஆணைக்குழுவினால் 2004 நவம்பர் 10ந் திகதி குழுவுடன் நடாத்தப்பட்ட கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.[17] இந்த அத்தியாயத்தின் இந்தப் பகுதி அந்தச் சட்டமூலம் பற்றிய சுருக்கமான விளக்கத்தைக் கூறி அச்சட்ட மூலத்தின் 2004 பெப்ரவரி நகல் வரைபுடன் தற்போதைய (2004 நவம்பர்) வரைபை ஒப்புநோக்கி விளக்குகின்றது.

7.1 சட்டமூலத்தின் நோக்கங்கள்

சட்டமூலத்தின் பிரிவு 2 சட்டத்தின் நோக்கங்களை விளக்குகின்றது. பெப்ரவரி மாத நகல்வரைபின் பிரிவு 2 நவம்பர் மாத நகல் வரைபில் கூறப்பட்ட நோக்கங்களைவிட குறைவான நோக்கங்களைக் கொண்டிருந்தது. பெப்ரவரி மாத நகல்வரைபில் இந்தப் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள உரிமைகளை நடைமுறைப்படுத்துவதும் "இலங்கையின் பெண்கள் சாசனத்தின் வரைவேற்பாடுகளுடன் இந்தச் சட்டத்தின் அட்டவணையிலும் இலங்கை அங்கம் வகிக்கும் பெண்ணுரிமை தொடர்பான சர்வதேச சட்டங்களிலும் விளக்கப்பட்டுள்ளது போன்று இணங்கிச் செல்லும் விதத்தில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவித்து முன்னேற்றுதல் எவ்வாறாயினும் தற்போதைய நகல்வரைபு மிகவும் விரிந்ததொரு அணுகுமுறையைக் கொண்டுள்ளது. தற்போதைய நகல்வரைபின் பிரிவு 2 பின்வருவன சட்டத்தின் நோக்கங்கள் எனக் கூறுகின்றது:

i. சமத்துவத்துக்கும் பாகுபாடுகாட்டப்படாமல் இருப்பதற்குமான உரிமையையும் அரசியலமைப்பில் பெண்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள ஏனைய அடிப்படை உரிமைகளையும் பலப்படுத்தி அமுலாக்குதல்

ii. இலங்கை ஏற்றுள்ள பெண்ணுரிமை தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகளிலும் ஏனைய சர்வதேச தரங்களிலும்

---

16 2004 பெப்ரவரி பெண்ணுரிமைச் சட்டமூல நகல்வரைபு தொடர்பான தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை. 2004 நவம்பர் 16

17 மேற்குறித்த குறிப்பைப் பார்க்க.

அங்கீகரிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுதல்.

iii. 1993 ஆம் ஆண்டின் பெண்கள் சாசனத்தால் உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமைகளை நடைமுறைப்படுத்துதல்

iv.. அரசாங்கத்தின் அனைத்து நிறுவனங்களும் இந்தச் சட்டமூலத்தில் ஏற்கப்பட்டுள்ள உரிமைகளை மதித்து, ஊக்குவித்துப் பாதுகாத்து முன்னேற்றுவதை உறுதிப்படுத்துதல்

v. இந்தச் சட்ட மூலத்தில் ஏற்கப்பட்டுள்ள உரிமைகளை மதித்து, ஊக்குவித்துப் பாதுகாத்து முன்னேற்றுமாறு நீதித் துறையை வேண்டுதல்

vi. அனைத்து நிறுவனங்களும் தனிநபர்களும் இந்தச் சட்டமூலத்தில் ஏற்கப்பட்டுள்ள உரிமைகளை மதித்து, ஊக்குவித்துப் பாதுகாத்து முன்னேற்றுவதை உறுதிப்படுத்துதல்.

vii. பெண்களின் உரிமைகளையும் இந்தச் சட்டமூலத்தில் ஏற்கப்பட்டுள்ள உரிமைகளை மதித்து, ஊக்குவித்துப் பாதுகாத்து முன்னேற்றுவதற்கு என அதிகாரம் வழங்கப்பட்ட பெண்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழுவொன்றை நிறுவுதல்.

7.2 ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

இந்தச் சட்டமூலம் பெண்கள் தொடர்பான ஆணைக்குழுவொன்றை நிறுவுகின்றது. அது 9 அங்கத்தவர்களைக் கொண்டிருக்கும்.[18] அவர்கள் அரசியலமைப்புச் சபையின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள்.[19] இந்தச் சட்டமூலத்தின் பெப்ரவரி மாத நகல் வரைபில் அரசியலமைப்புச் சபையின் அனுமதியுடன் அங்கத்தவர்களை நியமிக்கும் அதிகாரம் அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்தது.[20] அது அரசியல்

[18] பிரிவு 4 (அ)

[19] மேற்குறித்த குறிப்பைப் பார்க்க.

[20] பெண்ணுரிமைச் சட்ட மூலம் பிரிவு 4(2) பெப்ரவரி நகல்வரைபு

மயமாக்கத்துக்கான சாத்தியத்தைக் கொண்டிருந்ததால் வெளிப்படையான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காகவும் தன்னிச்சையான நியமனங்களைத் தடுப்பதற்காகவும் அந்தப் பிரிவு திருத்தியமைக்கப்பட்டது. மேலும் தனிப்பட்ட பதவிகள் திறமையின் அடிப்படையில் நிரப்பப்படுவதையும் ஆணைக்குழு குறித்த திறன்களையும் பின்னணியையும் கொண்டவர்களின் சேர்க்கையாக அமைவதனையும் உறுதிப்படுத்தும் விதத்தில் அங்கத்தவர்கள் குறித்த துறைகளில் 'சிறந்து விளங்குபவர்களாகவும்' பெண்களின் உரிமைகளையும் பால்நிலை சமத்துவத்தையும் முன்னேற்றுவதற்காக உழைத்ததற்கான நிரூபிக்கக் கூடிய சான்றுகளையும் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்றும் சட்டமூலத்தின் தற்போதைய வடிவமைப்பின் பிரிவு 4(ஆ) தெளிவாக விளக்குகின்றது. குறித்த துறைகளின் பட்டியல் சட்டம், அபிவிருத்திப் பொருளியில் ஆகிய துறைகள் முதல் சூழல், ஊடகவியல் ஆகிய துறைகள் வரை நீண்டுசெல்கின்றன.

கடந்த காலத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு, அரச கருமமொழிகள் ஆணைக்குழு போன்ற ஏனைய ஆணைக்குழுக்களின் செயற்திறன்மிக்க செயற்பாடுகளும் சிறப்பான தொழிற்பாடுகளும் ஆணைக்குழுவுக்காக பகுதி நேரத்தில் மாத்திரம் செயற்படும் உறுப்பினர்களினால் பாதிக்கப்பட்டன.[21] இதனைக் கவனத்தில் எடுத்து ஆகக் குறைந்தது மூன்று உறுப்பினர்களாவது முழுநேரம் வேலை செய்யப்படுபவர்களாக இருக்க வேண்டும் என்று இந்தச் சட்டமூலம் நிபந்தனை விதிக்கின்றது.[22]

இந்தச் சட்டமூலத்தின் பெப்ரவரி மாத நகல் வரைபு, குறித்த சில விடயங்களை[23] அடிப்படையாகக் கொண்டு ஒரு அங்கத்தவரை நீக்கும் அதிகாரத்தை அமைச்சருக்கு வழங்குகின்றது.[23] அவ்வாறு பதவி நீக்கிய பின்னர் அந்த இடத்துக்கு இன்னொருவரை அமைச்சர் நியமிக்க முடியும்.[24] ஒரு அரசியல்வாதியிடம் அதிகாரத்தை

---

21 அம்பிகா சற்குணநாதன், 'இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழு': மனித உரிமைகள் நிலை 2000(கொழும்பு: சட்டமும் சமூகமும் நம்பிக்கை நிதியம், 2000)

22 பெப்ரவரி நகல் வரைபு, பிரிவு 4(இ)

23 மேற்குறித்த குறிப்பைப் பார்க்க, பிரிவு 6(1)(அ)-(ஈ)

24 மேற்குறித்த குறிப்பைப் பார்க்க, பிரிவு 6(2)

வழங்குவது ஆணைக்குழுவின் சுதந்திரத்தையும் பக்கச்சார்பற்ற தன்மையையும் பாதிக்கும் என்பதனாலும் அரசியல் சூழ்ச்சிகளுக்கு வழிவகுக்கும் என்பதனாலும் அத்தகைய நிகழ்வுகளைத் தடுக்கும் நோக்கில் சட்ட மூலத்தின் தற்போதைய வரைபு பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. பொருத்தமற்ற மனோநிலையில் இருப்பவர் என ஒரு நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்தப்படுதல்[25] அல்லது ஒழுக்கக் கேடான ஒரு குற்றத்தில் ஈடுபட்டதாகத் தீர்மானிக்கப்படுதல் போன்ற குறித்த சில காரணங்களுக்காக ஜனாதிபதி ஒரு அங்கத்தவரைப் பதவி நீக்க முடியும் என சட்டமூலத்தின் பிரிவு 5 கூறுகின்றது.[26] ஏனைய சந்தர்ப்பங்களில் ஒரு அங்கத்தவரை நீக்கும் செயற்பாடு 'நிரூபிக்கப்பட்ட துர்நடத்தை அல்லது பொருத்தமின்மையின் அடிப்படையில் பதவி நீக்கம் செய்ய வேண்டும் எனக் கூறி (சமுகமளிக்காதவர்கள் உள்ளிட்ட) உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் ஆதரவைக் கொண்ட ஒரு வேண்டுகோளின் பின்னர் பதவி நீக்கக் கட்டளை இடுவதாக அமைய வேண்டும்.[27] அத்தகையதொரு வேண்டுகோளுக்கான தீர்மானம் அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல் மொத்தப் பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் ஒன்றிற்குக் குறையாத தொகையினர் கைச்சாத்திட்டு துர்நடத்தை அல்லது பொருத்தமின்மை தொடர்பான முழு விபரங்களும் விளக்கப்படும் வரை சபாநாயகரினால் ஏற்கப்படவோ அல்லது பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படவோ மாட்டாது" என்று அப்பிரிவு மேலும் விளக்குகின்றது. ஆணைக்குழுவின் அங்கத்தவர் ஒருவரை பதவி நீக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குமுறையானது உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரை பதவி நீக்குவதற்கான அதே ஒழுங்குமுறையாகும் என அப்பிரிவு கூறுவதையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.[28]

---

25 பிரிவு 5(1)(அ)(4)

26 பிரிவு 5(1)(அ)(5)

27 பிரிவு 5(1)(ஆ)

28 பிரிவு 5(2)

7.3 ஆணைக்குழுவின் அதிகாரங்களும் தொழிற்பாடுகளும்

பிரிவு 8 ஆணைக்குழுவுக்குப் பின்வரும் அதிகாரங்களை வழங்குகின்றது:

(அ) பெண் உரிமைகள் மீறப்பட்ட நிகழ்வுகள் அல்லது நிகழப் போகும் உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை நடாத்துதலும் அறிக்கை கோரலும்

(ஆ) பெண்களின் உரிமைகள் தொடர்பான பகிரங்க விசாரணைகளை நடாத்துதல்.

(இ) ஏதாவது ஒரு நீதிமன்றத்தில் தேங்கி நிற்கின்ற பெண் உரிமை மீறல் அல்லது நிகழப் போகும் உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளில் குறித்த நீதிமன்றத்தின் அனுமதியுடன் தலையிடுதல்.

(ஈ) பெண்களுக்கு அதிகாரம் வழங்குவதற்கான நிகழ்ச்சிகளையும் பெண் உரிமைகள் முன்னேற்றத்துக்கான நிகழ்ச்சிகளையும் நடாத்துதல்

(உ) பிராந்திய அலுவலகங்களை நிறுவுதல்

(ஊ) உயர் நீதிமன்றத்தினால் அல்லது வேறு ஏதாவது ஒரு நீதிமன்றத்தினால் ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் அந்த நீதிமன்றம் பாரப்படுத்திய ஏதாவது ஒரு விடயத்திற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

(எ) ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்வதனால் நபருக்கு ஏற்பட்ட செலவுகளுக்கு ஈடான ஒரு தொகைப் பணத்தை வழங்குதல் தனது தற்றுணிவு அதிகாரத்துக்கு உட்பட்டவகையில் பாதிக்கப்பட்ட நபருக்கு வழங்குதல்.

(ஏ) பெண்ணுரிமை சாசனத்தையும் இந்தச் சட்டத்தினால் ஏற்கப்பட்ட ஏனைய உரிமைகளையும் நடைமுறைப்படுத்த தொடர்புடைய நிறுவனங்கள் தமது அதிகாரத்துக்குட்பட்ட வகையில் எடுத்த நடவடிக்கைகள் தொடர்பாக வருடாந்த அறிக்கைகள் கோருதல்.

(ஐ) தனது செயற்பாடுகள் தொடர்பாகவும் தனது நோக்கங்கள் தொடர்பான கிடைக்கப் பெறுபவை தொடர்பாகவும் ஒவ்வொரு வருடமும் பாராளுமன்றத்துக்கு குறைந்தது ஒரு அறிக்கையாவது சமர்ப்பித்தல்.

ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளில் பெண் உரிமை தொடர்பான மீறல்கள், நிகழப்போகும் மீறல்கள் என்பவற்றை விசாரித்து புலன்விசாரணை நடாத்துதல், சட்டரீதியான பரிகாரம் வழங்குதல், இணக்கம் செய்தல், மத்தியஸ்தம் வகித்தல்[29], அவதானித்தல், சட்டவாக்கத்தையும் கொள்கைகளையும் அரசின் ஏனைய நிறுவனங்களின் செயற்பாடுகளையும் பெண் உரிமையில் அவற்றின் தாக்கத்தையும் மதிப்பீடு செய்தல்[30], பெண் உரிமைகளை மதித்தல், ஊக்குவித்தல், பாதுகாத்தல், முன்னேற்றுதல், நிறைவேற்றுதல் என்பன தொடர்பில் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குதல்,[31] சர்வதேச பிரமாணங்களுடன் இயைந்து செல்லத்தக்கவகையில் தேசிய சட்டங்களிலும் கொள்கைகளிலும் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பான சிபாரிசுகளை அரசாங்கத்துக்கு முன்வைத்தல்,[32] நிறுவனங்கள், சபைகள், அதிகாரசபைகள் என்பன பொதுக் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் விதத்தில் ஒருங்கிணைத்தலும் முறைப்பாடுகளைக் கையாளுவதில் தொடர்பில் ஒத்துழைப்பை வளர்த்தலும்,[33] சர்வதேச உடன்படிக்கைகளுடன் அரசு ஒத்திசைந்து செல்வதை அவதானித்தல்,[34] பெண் உரிமைகள் தொடர்பில் முறைசாராப் பிரிவினர் உள்ளிட்ட தனியார் வியாபார நிறுவனங்களினதும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களினதும் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் அவதானித்தல்[35] என்பன அடங்குகின்றன.

சாட்சிகளை வரவழைத்தல்,[36] ஆணைக்குழுவின் முன் ஆஜராகத் தவறுபவர்களுக்கு[37] அல்லது சான்றுகளைச் சமர்ப்பிக்கத் தவறுபவர்களுக்கு[38] எதிராக நடவடிக்கை எடுத்தல் ஆகிய மேலதிக

---

29 பிரிவு 7(ii)

30 பிரிவு 7(iii) (அ)

31 பிரிவு 7(iii) (ஆ)

32 பிரிவு 7(iii) (உ)

33 பிரிவு 7(iii) (ஈ)

34 பிரிவு 7(ii) (ஏ)

35 பிரிவு 7(iv)

36 பெண்ணுரிமைச் சட்டமூலம், அட்டவணை ஐஐ பிரிவு 1(இ)

37 மேற்குறித்த குறிப்பைப் பார்க்க, அட்டவணை ஐஐ பிரிவு 18

38 மேற்குறித்த குறிப்பைப் பார்க்க, அட்டவணை ஐஐ பிரிவு 18(2)(ஈ)

அதிகாரங்கள் ஆணைக்குழுவின் புலன்விசாரணை நடாத்தும் அதிகாரத்துக்கு உறுதுணையாக அமைகின்றன.

பெப்ரவரி மாத நகல் வரைபில் செய்யப்பட்ட பல்வேறு முன்னேற்றகரமான திருத்தங்கள், பெண் உரிமைச் சட்டமூலத்தின் தற்போதைய வரைபை பெண் உரிமையைப் முன்னேற்றிப் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு சட்ட ஆவணமாக மாற்றியுள்ளன. உதாரணமாக, பாதிக்கப்பட்ட நபருக்கு அல்லது அவர் சார்பில் முறைப்பாடு செய்பவருக்கு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்வதற்கு ஏற்பட்ட செலவுக்கு ஈடான ஒரு தொகைப் பணத்தை வழங்கும் அதிகாரத்தை பெப்ரவரி மாத நகல் வரைபு ஆணைக்குழுவுக்கு வழங்கவில்லை. இது தற்போதைய நகல் வரைபில் ஏற்கப்பட்டுள்ளது. பிரிவு 8 (g) ஆணைக்குழு அத்தகைய கொடுப்பனவுகளை மேற்கொள்வதனைச் சாத்தியமாக்குகின்றது.

தற்போதைய வரைபின் பிரிவு 8(2) ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் ஒரு நீதித்துறைக் கட்டளையின்படி அல்லது வேறு முறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எந்தவொரு பெண்ணும் இருக்கும் எந்தவொரு தடுத்துவைக்கப்பட்ட இடத்திலும் நுழைந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்ணின் தடுப்புக்காவல் நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான முறையில் பரிசோதனை நடாத்தவோ அல்லது விசாரணை நடாத்தவோ முடியும். மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை ஒத்த இந்த அதிகாரமானது தடுப்புக் காவலில் உள்ள பெண்கள் அனுபவிக்கும் வன்முறைகளைத் தடுப்பதற்கு பெண்கள் தொடர்பான ஆணைக்குழுவின் சக்தியை பாரியளவில் அதிகரிக்கின்றது.

ஆணைக்குழுவுக்கு குறிப்பிடத்தக்க புலன்விசாரணை அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆணைக்குழு தானாக அல்லது தனக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பெண்களின் உரிமை மீறல்கள் அல்லது நிகழப்போகும் உரிமை மீறல்கள் தொடர்பாக புலன்விசாரணை செய்ய முடியும்.[39] 'தமது சுய அக்கறையில் செயற்படுபவர்களால்[40] செய்யப்பட்ட முறைப்பாடுகளை

[39] பிரிவு 10 (அ)(1) மற்றும் (2)

[40] பிரிவு 10 (2) (அ)

மட்டுமன்றி 'இன்னொரு நபரின் சார்பில் செயற்படும் எந்தவொரு நபரினதும்[41] 'ஒரு குழுவின் அல்லது வகுப்பினரின் அங்கத்தவராக அல்லது அக்கறையில் தொழிற்படும் எந்தவொரு நபரினதும்''[42] 'பொது அக்கறை தொடர்பில் செயற்படும் எந்தவொரு நபரினதும்'[43] அல்லது 'தனது அங்கத்தவர்களின் அக்கறைகள் தொடர்பில் தொழிற்படும் ஒரு சங்கத்தின்'[44] முறைப்பாடுகளையும் விசாரணை செய்வதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்தப் பிரிவு நிலையியற் கோட்பாட்டை விரிவுபடுத்துகின்றது. இது வரவேற்கத்தக்கதாகும். ஏனெனில் அது பொது அக்கறை வழக்குகளைத் தூண்டுவதுடன் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னேற்றவும் சிவில் சமூகத்துக்கும் உரிமைகள் தொடர்பான குழுக்களுக்கும் அதிகம் செயற்திறனுள்ள வழிமுறைகளை வழங்குகின்றன.

பிரிவு 10(2) நடைமுறையிலுள்ள சட்டத்தின் எல்லைகளை விரிவுபடுத்துகின்றது. அது அரசினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் செயற்பாடுகளை விசாரணை செய்ய ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கின்றது. தற்போது நடைமுறையிலுள்ள ஆணைக்குழுக்களின் அதிகாரங்கள் நிறைவேற்று அல்லது நிருவாகச் செயற்பாட்டினால் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல்களை விசாரணை செய்வதற்கு என மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பிரிவு 10(2) இலங்கையில் மனித உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் தொடர்பான ஒரு முக்கியமான படிமுறையாகும். அது அரச சார்பற்றவர்களை உரிமை மீறல்களுக்கு பொறுப்பாக்குவதுடன் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் முதல் பெண்களின் பொருளாதார உரிமைகள் வரையான அரச சார்பற்றவர்களின் செயற்பாடுகைள விசாரணை செய்ய ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கின்றது. ஆணைக்குழு ஒரு உரிமை மீறல் நிகழ்ந்திருப்பதாகக் காணுமிடத்து அதனை மத்தியஸ்தத்துக்கு முன்வைப்பதுடன்[45] மேலும் உரிமைகள்

---

41 பிரிவு 10 (2) (ஆ)

42 பிரிவு 10 (2) (இ)

43 பிரிவு 10 (2) (ஈ)

44 பிரிவு 10 (2) (உ)

45 பிரிவு 12 (2)

மீறப்படுவதைத் தடுக்கும் நோக்கில் குறித்த நிறுவனத்துக்கு அல்லது தனிநபருக்கு சிபாரிசுகளைச் செய்யும்.[46] அல்லது உரிமையை மீறிய நபருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சிபாரிசு செய்யும்.[47] பெண்களின் உரிமைகளை மீறுகின்ற செயற்பாடுகள்[48] அல்லது தீர்மானங்களைப் பொறுத்தவரையில் அந்தத் தீர்மானத்தை மீளாய்வு செய்யுமாறு அல்லது செயற்பாட்டை மாற்றுமாறு[49] ஆணைக்குழு சிபாரிசு செய்ய முடியும். அல்லது பெண்களின் உரிமைகளை மீறுகின்ற தீர்மானத்துக்கான அல்லது செயலுக்கான காரணங்களைக் கோர முடியும்.[50]

ஆணைக்குழு சிபாரிசுகளை வழங்கிய நிறுவனம் அல்லது தனிநபர்கள் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு எடுத்த நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு ஆணைக் குழுவுக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று பிரிவு 12(7) வேண்டுகின்றது. சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தாதவிடத்து என்ன செய்யப்படும் என்பது தொடர்பில் இந்தச் சட்டமூலம் ஓரளவு தெளிவற்றதாக உள்ளது. ஆணைக்குழு 'குறித்த செயல் தொடர்பாக..... 'ஆணைக்குழுவின் அறிக்கையில் அடங்கியுள்ள சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துமாறு' மேல் நீதிமன்றம் கட்டளையிட முடியும்.[51] ஆணைக்குழுவின் சிபாரிசுகளுக்கு நிறுவனங்கள் தலைவர்கள் பதிலளிக்காத சந்தர்ப்பங்களில் மாத்திரம் மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்க ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டதற்கான காரணம் தெளிவானதாக இல்லை.[52] அதனால் தனிநபர்கள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தாத நிகழ்வுகளின் போது ஆணைக்குழுவுக்கு உள்ள பரிகாரங்கள் இந்தச் சட்டமூலத்தில் விளக்கப்படவில்லை.

---

46 பிரிவு 12(3)(iii)(அ)

47 பிரிவு 12(3)(iii)(ஆ)

48 பிரிவு 12(4) (அ) மற்றும்(ஆ)

49 பிரிவு 12(4) (இ)

50 பிரிவு 12(4) (ஈ)

51 பிரிவு 12(8) (1)

52 பிரிவு 12(8) (2)

7.4 ஆணைக்குழுவின் நிதி

இந்தச் சட்டமூலத்தின் பெப்ரவரி மாத நகல் வரைபில், ஆணைக்குழுவின் நிதி ரீதியான சுதந்திரம் பிரிவு 41(2) மூலம் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. அதில் பயன்படுத்தப்பட்ட 'முடியும்' என்ற சொல் பாராளுமன்றம் ஆணைக்குழுவின் நிதிக்கு வாக்களிப்பதனை பாராளுமன்றத்தின் தற்றுணிபுக்குட்பட்டதாக மாற்றியது. ஆணைக்குழு நிதிக் கட்டுப்பாடுகளை எதிர்கொண்டால் ஆணைக்குழுவின் செயற்திறனும் நடைமுறைத்தன்மையும் பாதிக்கப்படும் என்பதை உணர்ந்து அப்பிரிவு திருத்தியமைக்கப்பட்டதுடன் 'முடியும்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'வேண்டும்' என்ற சொல் சேர்க்கப்பட்டது.[53] அது பாராளுமன்றம் ஆணைக்குழுவின் நிதிக்கு சார்பாக வாக்களிப்பதைக் கட்டாயப்படுத்துகின்றது. இது 'தேசிய நிறுவனம் தனது செயற்பாடுகளை ஒழுங்காக நடாத்துவதற்குப் பொருத்தமான அடிப்படையைக் குறிப்பாக போதியளவு நிதியீட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும்'[54] எனக் கூறுகின்ற பாரிஸ் கோட்பாடுகளுடன் இணைந்து செல்கின்றது.

7.5 வரைவிலக்கணம்

இந்தச் சட்டமூலத்தில் 'பெண் உரிமை' என்பதற்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணம் பொருத்தமான அளவு விரிவானதாகவுள்ளது. அது சர்வதேச, தேசிய சட்ட தரங்களில் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள உரிமைகளைக் கொண்டுள்ளது. அவற்றில் பின்வருவன அடங்குகின்றன:

i. சமத்துவத்திற்கும் பாகுபாடுகாட்டப்படாமல் இருப்பதற்குமான உரிமையும் ஆணைக்குழுவினால் ஒரு பெண்ணுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள ஏனைய அடிப்படை உரிமைகளும்

ii. 1993 ஆம் ஆண்டின் பெண்கள் சாசனத்தில் அடங்கியுள்ள உரிமைகள்

---

53 பிரிவு 19(2)(அ)

54 மனித உரிமைகளை முன்னேற்றிப் பாதுகாப்பதற்கான தேசிய நிறுவனங்களின் அந்தஸ்த்துடனும் தொழிற்பாடுகளுடனும் தொடர்புடைய பாரிஸ் கோட்பாடுகள். இணையத்தளம் http://www.unhchr.ch/html/menu6/2/fs19.htm.#annex

iii. பெண்களுக்கு எதிரான பாகுபாட்டின் அனைத்து வடிவங்களையும் ஒழிப்பதற்கான ஒப்பந்தத்திலும் இலங்கை அங்கீகரித்து கைச்சாத்திட்டுள்ள பெண்களின் உரிமை தொடர்பான ஏனைய சர்வதேச உடன்படிக்கைகளிலும் ஆவணங்களிலும் உள்ள உரிமைகள்.

8. முடிவுரை

சட்ட மறுசீரமைப்பின் மூலம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் விருத்தி செய்யவும் அண்மைக்காலத்தில் அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகள் வரவேற்கத்தக்கவையாகும். அவை பாதுகாக்க நினைக்கின்ற விடயங்களுக்கு சட்டத்தின் நடைமுறை ரீதியான பயன்கள் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய பல விடயங்களை அவை எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கையின் சட்டமுறைமை கடந்தகாலத்தில் அதிகளவில் மறுசீரமைப்புகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தாலும் பெண்களின் அந்தஸ்த்து உயர்த்தப்படவில்லை. கொள்கையளவில் சமத்துவம் எய்தப்பட்டுள்ளது. எனினும் முழுமையான சமத்துவத்தில் இருந்து நாங்கள் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றோம்?. பெண்களின் அந்தஸ்த்து சட்ட மறுசீரமைப்பில் மாத்திரம் முழுமையாகத் தங்கியிருக்கவில்லை. ஏனைய சமூக- பொருளாதாரக் காரணிகளும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தாக்கம் செலுத்துகின்றன. அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கூடிய விதத்திலும் சமூக பொருளாதார நிலைமைகளை மாற்றியமைப்பதில் பங்களிக்கக் கூடிய விதத்திலும் சட்டம் உருவாக்கப்படவேண்டும். அந்த வகையில் பெண்களின் உரிமை தொடர்பான சட்டமூலமானது பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னேற்றவும் எடுக்கப்பட்ட தூய முயற்சிக்கு ஓர் உதாரணமாகும். மறுபக்கத்தில், வீட்டு வன்முறைத்தடுப்புச் சட்டமூலமானது சட்டத்தின் செல்லுபடியாகும் தன்மை பற்றியோ பெண்கள் எதிர்நோக்குகின்ற சமூக பொருளாதார நிலைகள் பற்றியோ கவனத்தில் எடுக்காது வெறுமனே சர்வதேசக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அரசாங்கம் உருவாக்கிய சட்டத்துக்கு உதாரணமாகவுள்ளது. அதனால் இலங்கை அரசாங்கம் பாரம்பரிய சமத்துவத்துக்குப் பதிலாக முழுமையான சமத்துவத்தில் கவனம் செலுத்தவேண்டும்.

அத்துடன் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைச் செயற்திறனுள்ள முறையில் கையாளக்கூடிய ஒரு வழிமுறைக்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவ்வழிமுறை சட்டத்தின் முன் சமமாக நடாத்துவதில் மட்டுமன்றி சட்டத்தின் உண்மையான பிரயோகத்திலும் கவனம் செலுத்தக் கூடிய ஒரு முறையாக இருக்க வேண்டும். அதன் அணுகுமுறை வரலாற்று ரீதியான, சமூக பொருளாதாரரீதியான, கலாசாரரீதியான உண்மைகளைக் கவனத்தில் எடுக்க வேண்டும். அத்துடன் முறைசார்ந்த, நிறுவனம் சார்ந்த சமத்துவமின்மையை ஒழிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

V

மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை

*ஆர். கே. டபில்யூ. குணசேகர**

1. அறிமுகம்

விவிலிய கிறிஸ்தவ சமய ஆலயங்கள் (Evangelical Christian Churches), மற்றும் உத்தேச சட்டவாக்க மாற்றங்களின் எழுச்சியினால் தூண்டப்பட்ட மதவழிபாட்டுச் சுதந்திரம் பற்றிய விவாதமானது ஒரு புதிய விடயமல்ல. சில வருடங்களாக தமது சுற்றுப்புறங்களில் வெளியிடங்களைச் சேர்ந்தோரினால் புதிய கிறிஸ்தவ ஆலயங்கள் தாபிக்கப்பட்டு வந்துள்ளதுடன் திறந்த அல்லது வாடகைக்கு வாங்கப்பட்ட வீடுகளில் அல்லது அறைகளில் வழிபாட்டுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன என்று பௌத்த இந்து மதங்களைச் சார்ந்த பொது மக்களினால் எதிர்ப்புக்கோஷங்கள் எழுப்பப்பட்டன. சில விடயங்களில் அது அமெரிக்க வரலாற்றை நினைவூட்டுவதாக இருந்தது. அங்கு ஓர் அந்நியன் ஒரு புதிய நகருக்குச் சென்று ஒரு எளிய மண்டபத்தை நிர்மாணித்து நகர மக்களை கிறிஸ்தவ மத வழிபாட்டுக்கு இட்டுச் செல்வார். எனினும் ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு வந்த மக்கள் கிறிஸ்துவின்

---

* சட்டத்தரணி

கருத்துக்களால் கவரப்பட்டிருந்தனர். ஆனால் இங்குள்ள நிலமை அவ்வாறானதல்ல இங்கு கிறிஸ்தவம் உட்பட பல மதங்கள் நிலைபெற்றுள்ளன. வித்தியாசமானவர்களாக உள்ள சீடர்களைக் கவர்வதில் ஆலயங்கள் ஆர்வம் காட்டுகின்றன. அவை திறந்த நுட்பமற்ற முறைகளில் மக்களை கிறிஸ்தவத்துக்கு மதமாற்றம் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். அல்லது கிறிஸ்தவத்தின் பிரிவுகளை மாற்றுவதில் ஈடுபட்டுள்ளனர். சில துன்புறுத்தும் சம்பவங்கள் கவனிக்காமல் விடப்பட்டுள்ளன. கொழும்புக்கு அண்மையிலுள்ள உள்ளூராட்சி மன்றமொன்று சுமார் பத்து வருடங்களுக்கு முன் கிறிஸ்தவ சமயக்குழுவொன்றுக்கு கூட்ட மண்டபமொன்றினை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கியது எனது ஞாபகத்திற்கு வருகிறது. அங்கு ஆராதனைக் கூட்டங்கள் நடைபெறுவதாக தெரியவந்தபோது மிகச் சாதாரண காரணம் ஒன்றினைக் காட்டி அனுமதி இரத்துச்செய்யப்பட்டது. கட்டட அனுமதியொன்றுக்கான புதிய விண்ணப்பப் படிவம் ஒன்றைப் பெறுவதற்கான கோரிக்கை ஒன்று நிராகரிக்கப்பட்டது. பிரதேசத்தில் செல்வாக்குமிக்க பௌத்தர்கள் அந்த ஆலயத்தின் செயற்பாடுகளை எதிர்த்தமையே அவ்வாறு நிராகரிக்கப்பட்டமைக்கான காரணமாகும். அந்தப் பிரதேசத்தில் செல்வாக்குச் செலுத்திய பௌத்தர்கள் அந்த தேவாலயத்தின் செயற்பாடுகளை எதிர்த்தார்கள் என்பதே நடந்த உண்மையாகும். குறித்த தேவாலயம் கோபமடைந்த பௌத்தர்களால் அடுத்துள்ள நகரத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட ஒன்றாகக் கூறப்பட்டது. அவர்கள் கூறினர், என்னிடம் நம்பிக்கை இழந்த ஒரு வழக்கே இருந்ததுடன் அது ஒரு பத்திரம் வழங்கப்பட்டு விண்ணப்பம் முறையாக பரிசீலிக்கப்படும் என்ற உத்தரவாதத்துடன் தீர்க்க முடிந்தமை மகிழ்ச்சியாக இருந்தது.

குறுகிய கால இடைவெளியில் இந்த ஆலயங்கள் நகரங்களில், கிராமப் புறங்களில், பெருந்தோட்டங்கள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள், அகதி முகாம்களுக்கு அருகில் என நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தோற்றம் பெற்றன. அவை கட்டடச் சுவர்களில் தடிப்பாக எழுதப்பட்ட பலவகையான பெயர்களைக் கொண்டிருந்தன. அவை ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவையாக தோற்றமளித்ததுடன் மதப் போதகர் ஒருவரினால் உணர்வூட்டப்பட்டது. அவற்றை ஒன்றிணைக்கும் காரணியாக பிரார்த்தனைகளும் பைபிள் வாசித்தலும் காணப்பட்டன.

கிறிஸ்தவ வழிபாட்டின் பாரம்பரிய வடிவங்களில் இருந்து வேறுபடுத்தி அறியப்படும் விவிலிய கிறிஸ்தவ நம்பிக்கை (Evangelism)யானது புதியதொன்று அல்ல. அதற்கு முன்னர் சில தேவாலயங்கள் நிறுவப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தன. கொள்கையைப் பரப்புவதற்கான அவர்களது செயற்பாடுகளில் தலையீடு இருக்கவில்லை. சிலபோது எரிச்சலூட்டக்கூடியவையாக மட்டுமே கருதப்பட்டன. எனினும் தேவாலயங்கள் பல்கிப் பெருகியமையும் முறையான கட்டமைப்பு காணப்படாமையுமே வித்தியாசமாக இருந்தது. இதனால் கிறிஸ்தவர்களல்லாதவர்கள் மட்டுமன்றி பாரம்பரிய தேவாலயங்களைச் சேர்ந்த கிறிஸ்தவர்களும் கவரப்பட்டார்கள். அண்மையில் மத்திய மேற்கைச் சேர்ந்தவர்கள் மத்தியில் பிரச்சாரக் கூட்டமொன்றில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் உறையாற்றும் போது இந்தக் கட்டுரையின் (ஆசிரியர் செவிமடுத்தது) தான் கிறிஸ்தவனாகத் "திரும்பப் பிறந்ததாக" பெருமையுடன் கூறினார். அவர் தான் இளைஞனாக இருக்கும் போது பழக்கப்பட்ட மது அருந்தும் பழக்கத்தை கைவிடுவதற்கு உதவியதற்காக திறமைமிக்க புனிதரான பில்லி கிரஹமுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார். முன்மாதிரி வாழ்க்கையும் மோசமான பழக்கங்களைக் கலைதலும் விவிலிய நம்பிக்கையுடன் சேர்ந்து பரவின. நிலைத்துள்ள கிறிஸ்தவ தேவாலயங்களின் சம்பிரதாயங்களையும் பாதிரிமார்களின் நிர்வாகமுறையும் ஓரளவு அவமதிக்கின்ற புதிய கிறிஸ்தவத்துக்கான தமது எதிர்ச் செயற்பாடுகள் என்ன என்பதில் அந்த ஆலயங்கள் நிச்சயமற்றிருந்தமை ஆச்சரியத்துக்குரியதல்ல. எனினும் மதமாற்றங்களை வெற்றிகரமாகச் செய்த வழிமுறையும் ஏனைய கொள்கைகளை பின்பற்றுவோரின் உரிமைகள் விடயத்தில் காட்டப்பட்ட வித்தியாசமற்ற தன்மையும் சந்தேகமின்றி ஆத்திரமூட்டுபவையாக இருந்தன. குறிப்பாக பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தின.

2. கூட்டிணைப்புச் சட்ட மூலங்கள்

நாட்டில் காணப்படுகின்ற மத சகிப்புத்தன்மையின் உயிரோட்டத்தினால் உயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய கடுமையான மோதல்கள் தடுக்கப்பட்டன. ஆனால் கிறிஸ்தவத்தை நசுக்க வேண்டும் என்ற மனோநிலை காணப்பட்டது. சில வருடங்களாக இயங்கி வந்த ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தை கூட்டிணைப்பதற்கான சட்டமூலம் தடுக்கப்பட்டதுதான் வழமைக்கு மாறாக உருவான முதலாவது சவாலாக அமைந்தது. சமய நிறுவனங்களையும் ஏனைய சங்கங்களையும் கூட்டிணைத்தல் அரசாங்கத்தினால் செய்யப்படுவதில்லை மாறாக தனிப்பட்ட உறுப்பினர்களின் பிரேரணைகளாகவே நிறைவேற்றப்பட்டுள்ளன. அதுவே பொதுவான முறையுமாகும். தனிநபர் சட்டமூலங்களை சட்டமாக்குவதை பாராளுமன்றம் கட்டுப்படுத்தும் விதத்தில் பாராளுமன்ற நிலையியற் கட்டளைச் சட்டங்கள் மூலம் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.[1]

"கிறிஸ்தவ சஹனயே தொரடுவ பிரார்த்தனை நிலையம்" (கூட்டிணைப்பு) என்ற தலைப்பைக் கொண்ட சட்டமூலம் ஒன்று 2001 ஆம் ஆண்டு தனிநபர் சட்டமூலமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது அது ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டு பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் கால அவகாசம் வழங்கப்பட்டது. இது குறித்த சட்டமூலத்தின் முதலாவது வாசிப்பாக இருந்தது. ஒரு பிரசை அச்சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது என 121ஆம் இலக்க உறுப்புரையின் கீழ் வழக்குத் தொடுத்தார். உயர் நீதிமன்றம் ஒரு அரசாங்கச் சட்டமூலத்துக்கும், தனிப்பட்ட உறுப்பினரின் சட்ட மூலத்துக்கும் இடையிலான வேறுபாட்டை ஆராயாது அந்த முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டது.

---

1. 47ஆம் 48ஆம் இலக்க நிலையியற் கட்டளைகளைப் பார்க்கவும். இரண்டாவது வாசிப்பின் பின்னர் சட்டமூலம் நிலையியற் குழுவிடம் அல்லது தெரிவுக் குழுவிடம் ஒப்படைக்கப்படும். அக்குழு "சட்டமூலத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களையும் குற்றச்சாட்டுக்களையும் நிரூபிக்குமாறு வேண்டுவதன் மூலம் அந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படவேண்டும் என்பதனைக் காட்ட முடியும். ...." மேலும் அவசியம் என நினைக்குமிடத்து வாய்மொழி மற்றும் ஏனைய சான்றுகளை எடுக்கவும் முடியும். சட்டமூலத்தின் வாசகங்கள் மற்றும் பாராளுமன்றத்துக்கான அறிக்கைகள் தொடர்பில் குழுவுக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் ஆரம்ப கட்டத்தில் சட்டமூலமும் அறிமுகப் பிரேரணையும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்ட போது அது பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டமை முக்கிய விடயமாகும்.

ஏதாவது ஒரு பயனை அடைய வேண்டுமாக இருந்தாலேயன்றி யாரும் பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் கூட்டிணைப்பதற்கு முயற்சிக்கமாட்டார்கள் என்பது தற்போது நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அறநிறுவனங்கள், சமய, சமூக நிறுவனங்கள் விடயத்தில் எடுகோளாக கொள்ளப்பட வேண்டிய ஒரு அம்சமாகும். அத்தகைய பயன்கள் அரசியலமைப்புக்கு முரணானவையா என்பது இதற்கு முன்னர் உயர் நீதிமன்றத்தை தொந்தரவு செய்வதாக இருக்கவில்லை. ஆனால் தற்போது அது நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய ஒரு அம்சமாக மாறியுள்ளது.

குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் நிதி சேகரிக்கவும் அதனை செலவிடவும் அந்தப் பிரார்த்தனை நிலையத்துக்கு சட்ட ரீதியான உரிமை வழங்கும் சட்டம் உருவாக்கப்படும். அத்துடன் நோக்கங்கள் சமயசார் தூய நோக்கங்களாக இல்லாதவிடத்து தங்களது மதத்தை மாற்றிக் கொள்ளுமாறு தனிநபர்கள் மீது முறையற்ற அழுத்தம் பிரயோகிக்கப்படலாம் என்றும் நீதிமன்றம் காரணம் கூறியது. 10ஆம் இலக்க உறுப்புரையினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் தான் விரும்பும் ஒரு மதத்தை அல்லது நம்பிக்கையை ஏற்றுக்கொள்வதற்கான சுதந்திரமானது,[2] "விருப்பம் என்பது ஒருவர் தனது சிந்தனையையும் மனச்சாட்சியையும், சுதந்திரமாகப் பயன்படுத்துவதன் மூலம் உருவாக வேண்டும் என்பதையும் எந்தவகையிலாவது விருப்பத்தைக் கொச்சைப்படுத்தும் எந்தவொரு கவர்ச்சிக் காரணிகளும் இருக்கக் கூடாது என்பதை அடிப்படை நியதியாகக் கொண்டுள்ளது" என நீதிமன்றம் கூறியது.[3] குறித்த நிலையம் வர்த்தக பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை சங்கத்தின் அதிகாரங்கள் அனுமதிக்கின்றன என்று கூறப்பட்டிருப்பதானது இந்த வாதத்துக்கு ஆதரவாக அமைந்தது. இத்தகைய அதிகாரங்களைக் கொண்ட வேறுபட்ட மதச் சங்கங்கள் கடந்த காலத்தில் கூட்டிணைக்கப்பட அனுமதி வழங்கப்பட்டிருந்தது என்ற உண்மை நீதிமன்றத்தின் முன்வைக்கப்பட்டுள்ள சட்டமூலத்தின் ஏற்பாடுகள்

---

2. ஒவ்வொரு நபரும் தான் விரும்புகின்ற மதத்தை அல்லது நம்பிக்கையை வைத்திருப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கான சுதந்திரம் அடங்கலாக சிந்தனை, மனச்சாட்சி, மதம் என்பவற்றுக்கான சுதந்திரத்துக்கு உரித்துடையவர்களாவர்.

3. மீ.உ.நீ. தீர்ப்பு இல 2/2001

அரசியலமைப்புக்கு முரணானதா என்று பரிசீலிப்பதனை நீதிமன்றம் மறுப்பதற்கான காரணமாக அமையவில்லை. அரசியலமைப்பின் 14(1) (உ)[4] ஆம் இலக்க உறுப்புரையில் ஒவ்வொரு குடிமகனும் தனியாக அல்லது பிறருடன் சேர்ந்து ஒரு மதத்தைப் பின்பற்றவும், வணக்க வழிபாடுகளில் ஈடுபடவும், அனுஷ்டிக்கவும் சுதந்திரம் இருப்பதாக உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. இது 14(1) (ஏ)[5] ஆம் இலக்க உறுப்புரையினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள சுதந்திரத்திலிருந்து வேறுபட்டதாகும் என்று நீதிமன்றம் கூறியது. பல வருடங்களாக நிலவி வருகின்ற உணர்ச்சிபூர்வமான சுதந்திர சிந்தனையின் போக்குக்கு எதிராகச் சென்று மதச் செயற்பாடுகள் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளுக்கான ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு பிரார்த்தனை நிலையத்துடன் அல்லது அதன் செயற்பாடுகளுடன் தொடர்புடைய உண்மைகளை விசாரிக்காது பெறப்பட்டது என்பது பாராளுமன்றத் தெரிவுக்குழு அல்லது நிலையியற் குழு கவனத்தில் எடுத்திருக்க வேண்டிய மிக முக்கியமானதும் தீர்க்கமானதுமான அம்சமாகும். உண்மையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ள சட்டப் பிரச்சினையுடன் நேரடியான எந்தத் தொடர்பையும் கொண்டிருக்கவில்லை என்று கூறி ஆட்சேபகரினால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களை பரிசீலனை செய்யவேண்டிய அவசியமில்லை என்ற கருத்தை நீதிமன்றம் கூறியது. அதனால் குறித்த தீர்ப்பு அனுமானத்தின் அடிப்படையில் ஒருபக்கம் சார்ந்ததாக இருந்தது. ஒரு தனிப்பட்ட அங்கத்தவரின் சட்ட மூலத்தை குறிப்பாக ஒரு சங்கத்தை கூட்டிணைப்பதற்கான

4. "...தானாக அல்லது பிறருடன் சேர்ந்து, பகிரங்கமாக அல்லது தனிப்பட்டமுறையில், தனது மதத்தை அல்லது நம்பிக்கையை வணக்க வழிபாடுகள், அனுஷ்டானங்களின் மூலம் மற்றும் செயற்பாடுகள், போதனைகள் மூலம் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரம்.

5. "தானாக அல்லது பிறருடன் சேர்ந்து எந்தவொரு சட்ட ரீதியான தொழிலிலும் உயர் தொழிலிலும் வர்த்தகத்திலும் வியாபாரத்தில் மற்றும் நிறுவனத்தில் ஈடுபடுவதற்கான" பிரசையின் சுதந்திரம் மதச் சங்கமொன்றின் நடைமுறைக்கு முரணான அதிகாரம் பற்றி குறுகிய பொருள்கோடலுக்கு மாற்றமாக இந்திய அரசியலமைப்பின் உறுப்புரை 25(2) (அ) ஒரு மதச் சங்கம் "எந்தவொரு பொருளாதார, நிதி, அரசியல் அல்லது ஏனைய மதச்சார்பற்ற செயற்பாடுகளிலும் ஈடுபடமுடியும். அவை மதச்செயற்பாட்டுடன் இணைந்ததாக இருக்கவும் முடியும்" என்று ஏற்றுக்கொள்கின்றது எனினும் அந்த செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கான அல்லது கட்டுப்படுத்துவதற்கான உரிமையை அரசுக்கு வழங்குகின்றது.

சட்டமூலத்தை விசாரணைக்கு எடுப்பதற்கு முன் பாராளுமன்றக் குழு நடைமுறைகள் நிறைவுபெற்றிருக்க வேண்டும் என்று உரிய நேரத்தில் முன்வைக்கப்பட்டது. இக்கட்டத்தில் நீதிமன்றம் தீர்ப்புக் கூற மறுத்திருக்க முடியும். எனினும், இக்கருத்து கவனத்தில் எடுக்கப்படவில்லை.

இரண்டு வருடங்களின் பின்னர் "நியு வைன் ஹார்வெஸ்ட் மினிஸ்டிரீஸ் (கூட்டிணைப்பு)" என்ற தலைப்பைக் கொண்ட சட்டமூலமும் இதே போன்று ஆட்சேபனைக்கு உள்ளாகியது. முதல் சட்டமூலத்தைப் போலல்லாது நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்படும் ஆட்சேபனைகளை கவனத்தில் எடுக்க வேண்டும் என்று வாதிக்கக் கூடிய விதத்தில் சட்ட மூலத்துக்குச் சார்பான மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. மத சுதந்திரம் என்பது குறித்த மதத்தின் முன்னேற்றத்துக்கும் பரவலுக்கும் உதவுகின்ற பொருளாதாரச் செயற்பாடுகளை உள்ளடக்கியதல்ல என்று ஆட்சேபனையாளர்கள் வாதாடினார். அப்போது தனது நம்பிக்கைகளையும் கோட்பாடுகளையும் செயற்பாடுகளையும் முன்னேற்றுவது ஒவ்வொரு மதத்தினதும் முக்கிய பகுதியாகும். மதத்தையும் தொழிலையும் கவனத்தில் எடுக்காது மக்களின் சமூக பொருளாதார நிலமைகளை முன்னேற்றும் மனிதாபிமான நோக்கங்கள் அனைத்து மதங்களினதும் செயற்பாடுகளில் அடங்குகின்றன [6] என்று எதிர்த்து வாதாடப்பட்டது.

அத்தகைய "முன்னேற்றங்கள்" குறித்த சமயத்தைப் பின்பற்றும் மக்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகவும் ஏனைய மதங்களைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படாமலும் இருப்பின் நீதிமன்றம் அதற்கு இணங்கியிருக்கக் கூடும் என்று தோன்றக்கூடும். "சமூக பொருளாதார நிலமைகளை முன்னேற்றும் செயற்பாட்டின் விளைவாக உருவாகும் கவர்ச்சியானது அரசியலமைப்பின் 10ஆம் உறுப்புரைமூலம் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் பெற்றிருக்கவேண்டிய மதத்தை அல்லது நம்பிக்கையை அனுஷ்டிக்கும் சுதந்திரத்தைப் பாதிக்கும்.[7]

6. மீ.உ.நீ. தீர்ப்பு இல : 2/2003 இலிருந்து

7. மேற்குறிப்பிட்ட மூலத்திலிருந்து

சில மாதங்களின் பின்னர் "மென்ஸிஜனிலுள்ள (Menzingen) புனித பிரான்சிஸ் மூன்றாவது பிரிவின் புனித சிலுவையின் மாகாண போதனா சகோதரிகள் (கூட்டிணைப்பு)" என்ற தலைப்பைக் கொண்ட சட்டமூலம் 10ஆம் உறுப்புரையுடன் முரண்படுகின்றது[8] என்று கூறி இடைநிறுத்தப்பட்டது. பொருட்களையும் ஏனைய நன்மைகளையும் வழங்கி மேற்கொள்ளப்படும் கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் பௌத்த சமயத்தின் இருப்புக்கே பாதிப்பாக அமையும் என்று வாதாடிய ஆட்சேபனையாளர் முதற்தடவையாக 9ஆம் உறுப்புரையை தனக்கு ஆதரவாக மேற்கோள்காட்டினார்.[9] ஒரு மதத்தைப் பரப்புவதோ (14(1) (உ)ஆம் உறுப்புரையிலுள்ள) மதத்தைப் பிரச்சாரம் செய்வதற்கான உரிமை என்பதில் உள்ளடக்கப்படவில்லை என்பதே நீதிமன்றம் கூறும் காரணமாக உள்ளது போல் தோன்றுகின்றது. மென்ஸிகென் பிரிவினை கூட்டினைப்பதற்கு அனுமதி வழங்குவது பௌத்த சமயத்தைப் பாதுகாக்கும் அரசின் கடமையுடன் முரண்படும் சட்டமொன்றை உருவாக்கும் என்று நீதிமன்றம் நினைக்கின்றதா? அவ்வாறாயின் பொருட்கோடல் மதச்சுதந்திரத்தை முறையற்ற விதத்தில் கட்டுப்படுத்துகின்றது.

இந்தத் தீர்ப்பு முதற்தடவையாக சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் (ICCPR) உறுப்புரை 18 (2)ஐயும் மதமாற்றத்தை நிகழ்த்துவதாக வலுக்கட்டாயத்தைப் பயன்படுத்துவதை தடுக்கும் சட்டத்தையும் மேற்கோள் காட்டியது.[10] அன்பளிப்புக்கள் அல்லது வேறு சட்ட ரீதியான நன்மைகள் மூலம் மதமாற்றுவதை நோக்காகக் கொண்ட சில விடயங்களில்

8. மீ.உ.நீ. தீர்ப்பு இல: 19/2003

9. இலங்கைக் குடியரசு பௌத்த மதத்துக்கு முதன்மையான இடத்தை வழங்குவதுடன் அதற்கிணங்க உறுப்புரைகள் 10 மற்றும் 14(1) (உ) என்பவற்றால் அனைத்து மதங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் அதேவேளை பௌத்த சாசனத்தை பாதுகாத்துப் போஷிப்பது அரசின் கடமையாகும்"

10. இந்த உறுப்புரை மத சுதந்திரம் தொடர்பாக மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தின் UDHR உறுப்புரை 18ஐ விரிவுபடுத்திச் சேர்க்கப்பட்டதாகும். "தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை வைத்திருப்பதற்கான அல்லது ஏற்றுக்கொள்வதற்கான தனது சுதந்திரத்தைப் பலவீனப்படுத்தும் வலுக்கட்டாயத்துக்கு ஒருவரும் உட்படுத்தப்படக் கூடாது.

வலுக்கட்டாயத்தையும் உள்ளடக்க முடியும் என்று பொருட்கோடலின் போது முன்வைக்கப்பட்டது. தீர்ப்பின் போது ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றத்தின் கிரேக்க வழக்குகள்[11] தொடர்பான தீர்ப்புக்களும் இந்திய உச்ச நீதிமன்றத்தின் *ஸ்டானிஸ்லவ்ஸ் எதிர் மத்திய பிரதேச*[12] அரசு வழக்கு தொடர்பான தீர்ப்பும் மேற்கோள் காட்டப்பட்டன. இந்தத் தீர்ப்புக்கள் மதமாற்றத் தடைச் சட்டங்களுக்கான பொருட்கோடல்களாகும். மாறாக கூட்டிணைப்பு வழக்குகளுடன் தொடர்பு பட்டவைகளாக இருக்கவில்லை.

இந்த இறுதித் தீர்ப்பிலுள்ள புதிய விடயம் உயர் நீதிமன்றம் உறுப்புரை 9ஐ எவ்வாறு நோக்கியது என்பதாகும். எமது அரசியலமைப்பில் ஒரு மதத்தைப் பிரச்சாரம் செய்வதற்கான அடிப்படை உரிமைக்கு உத்தரவாதமளிக்கப்படவில்லை என்ற உண்மையை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.[13] அதனால் "ஒருவர் இன்னொருவரை தனது மதத்துக்கு மாற்றுவதற்கு "முயற்சிகளை" மேற்கொள்வாராயின் அந்த நடவடிக்கை பௌத்த சாசனத்தின் இருப்புக்கே தடையானதாகக் கருதப்படும்" இங்கு "முயற்சிகள்" என்பதன் மூலம் நீதிமன்றம் பொருள் உதவிகளையும் கல்வி, சுகாதாரம், ஏனைய சமூக சேவைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய நன்மைகளையும் நாடியுள்ளது.

இந்தத் தீர்ப்பு 9ஆம் 10ஆம் உறுப்புரைகளில் உள்ள மதச் சுதந்திரத்தின் பரப்பை தவறான முறையில் குறைத்துள்ளது. ஏனெனில் சிந்தனை, மனசாட்சி மதச் சுதந்திரம் என்ற கோட்பாட்டில்

---

11. *கொக்கினாகிஸ் எதிர் கிரீஸ் (1994)* 17 EHRR 397, *லரிஸிஸ் எதிர் கிரீஸ்* (1998) 27EHRR 329

12. AIR 1977 உச்ச நீ 908

13. "மதத்தை சுதந்திரமாக ஏற்றுக்கொள்வதற்கான, செயற்படுத்துவதற்கான மற்றும் பிரச்சாரம் செய்வதற்கான உரிமைக்கு இந்திய அரசியலமைப்பின் உறுப்புரை 25(1) உத்தரவாதமளிக்கின்றது. ஸ்டானிஸ்லாங்ஸ் தீர்ப்பு, பிரச்சாரம் செய்வது என்பது கண்டிப்பாக மதம் மாற்றுவதற்கான உரிமையைக் குறிக்காது, மாறாக ஒருவர் தனது மதத்தின் கருத்துக்களைத் தெளிவுபடுத்துவதன் மூலம் பரிமாற்றம் செய்வதை அல்லது பரப்புவதையே குறிக்கும் என்று பொருள்கோடல் செய்தது.

அனைத்து மதங்களும் கொள்கைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் போது சில தோற்றப்பாடுகளைக் கட்டுப்படுத்தும் உரிமையை கொண்டிருப்பது அரசின் தேவையாக இருந்தது. இதுவே 14 (1) (e) உறுப்புரையின் தொழிற்பாடாகும். அதனை 15(7)[14] உறுப்புரையுடன் சேர்த்து வாசித்துப் பார்க்கவும். எமது அரசியலமைப்பின் 10ஆம் உறுப்புரையில் மத சுதந்திரம் ஒரு முழுமையான உரிமையாகவே உள்ளது. விஷேட பெரும்பான்மையினால் உருவாக்கப்பட்டு அபிப்பிராய வாக்கெடுப்பொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படும் ஒரு சட்டத்தின் மூலமே அன்றி அதனைக் கட்டுப்படுத்த முடியாது.[15] இந்தியாவின் நிலமை அவ்வாறில்லை. அங்கு மதச் சுதந்திரம் வித்தியாசமாக விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் அங்கு மதச் சுதந்திரம்

14. உறுப்புரை 14இல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் தேசிய பாதுகாப்பு, பொதுமக்களின் நலனையும் ஒழுக்கத்தையும் பொது ஒழுங்கை பாதுகாப்பது தொடர்பில் அல்லது ஏனையோரின் உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்குமுள்ள அங்கீகாரத்தையும் மதிப்பையும் பாதுகாப்பதற்காக, அல்லது ஒரு ஜனநாயக சமுதாயத்தின் பொது நலத் தேவைப்பாடுகளை அடைவதற்காக சட்டத்தினால் முன்வைக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படும். சூழ்நிலைகளின் காரணமாக ஒரு கட்டுப்பாடு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றதா என்பதை தீர்மானிப்பதில் குறிப்பிட்டளவு திருப்தியை அரசாங்கம் கொண்டிருப்பதாக நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும். அடிப்பமை உரிமைகளை குறைப்பதற்கான உரிமை நீதிமன்றங்களுக்கு வழங்கப்படவில்லை. "இது இலங்கையில் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கான அரசியலமைப்புப் பாதுகாப்புக்கள்" என்ற உரையில் ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி. சில்வா கூறிய கருத்தாகும். (இலங்கை முஸ்லிம் சங்கத்தில் நிகழ்த்தப்பட்ட உரை) மூன்று தீர்ப்புக்களைப் பகுப்பாய்வு செய்த அவர் உயர் நீதிமன்றம் அடிப்படை உரிமைகள் மீதும் சுதந்திரங்கள் மீதும் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு முற்பட்டதன் மூலம் அரசியலமைப்பை பொருள்கோடல் செய்யும் வரையறைகளுக்கு அப்பால் சென்றுள்ளதாகக் கூறினார். உண்மையில் அது சட்டவாக்கத்துறையின் தொழிற்பாடாகும்.

15. உறுப்புரை 83

முழுமையான உரிமையாகவும் இல்லை.[16]

கூட்டிணைக்கப்பட முடியாது போனமை கிறிஸ்தவ தேவாலயங்களின் செயற்பாடுகளை தடுத்து நிறுத்தமாட்டாது என்பது தெளிவான விடயம். கிறிஸ்தவம் ஏனைய மதங்களில் செய்யும் மதமாற்றத்தை தடுத்து நிறுத்துவதற்கான மதமாற்றத் தடை குற்றவியல் சட்டத்துக்குச் சார்பான தூண்டுதல்கள் காணப்பட்டன. கிறிஸ்தவத்தின் பழைய வரலாறு எவ்வாறிருப்பினும் சிலபோது ஒரு கடமையாகக் கருதப்படும், அவிசுவாசிகளை மதமாற்றம் செய்யும் உரிமையைப் பயன்படுத்தி செய்யப்படும் கிறிஸ்தவப் பிரச்சாரத்திற்கு

16. உறுப்புரை 25, மனச்சாட்சிக்கான சுதந்திரம், மதத்தை சுதந்திரமாக ஏற்றுக்கொள்ளல், செயற்படுதல், பிரச்சாரம் செய்தல் என்பன (1) பொது ஒழுங்குக்கும் (கவனிக்க - தேசிய பாதுகாப்பு உள்ளடக்கப்படவில்லை) ஒழுக்கம் மற்றும் நலனுக்கும் இந்தப் பகுதியின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் உட்பட்டதாகும். மதத்தை சுதந்திரமாக ஏற்பதற்கும் செயற்படுத்துவதற்கும் பிரச்சாரம் செய்வதற்குமான சுதந்திரம் அனைவருக்கும் சம அளவில் உரித்தானதாகும். (குறிப்பு: இந்திய அரசியலமைப்பில் மதத்தை வெளிக்காட்டுவதற்கான சுதந்திரம் தனியாக விளக்கப்படவில்லை என்பதைக் கவனிக்க) *ராம்ஜி லால் மோடி எதிர் உத்தர் பிரதேஷ் அரசு* AIR 1957 உச்ச நீதிமன்றம் 620 என்ற வழக்கில் மதச்சுதந்திரம் பொது ஒழுங்குக்கும் அது போன்றவற்றுக்கும் கட்டுப்பட்டதாகும் என்று உச்ச நீதிமன்றம் தெளிவாகக் கூறியது. அதனால் "மதச் சுதந்திரம் பொது ஒழுங்கைப் பேணுவதில் எந்தவொரு தொடர்பையும் கொண்டிருக்காது என்றோ மதத்துடன் தொடர்புடையதாக சட்டத்தினால் உருவாக்கப்படும் ஒரு குற்றம் பொது ஒழுங்கின் அக்கறைகளுக்காக உருவாக்கப்பட்டது என்று எச்சந்தர்ப்பத்திலும் கூறவோ முடியாது" *அருன் கோஷ் எதிர் மேற்கு வங்காள அரசு* AIR 1970 உச்ச நீ 1228 என்ற வேறொரு வழக்கில் தனிப்பட்ட ஒருவரைப் பாதிக்காததாக ஒரு விடயம் சமூகத்தின் தற்போதைய வாழ்வுக்குத் தொந்தரவாக அமையும் எனின், அது பொது ஒழுங்குக்கான அச்சுறுத்தலாகக் கருதப்படும் என்று கருதியது. சமூகத்தின் மனச்சாட்சியின் படி கண்டிக்கத்தக்கதான ஒரு முறையில் ஒரு மதத்தில் இருந்து இன்னொரு மதத்துக்கு மாறுவதை தடைசெய்வதன் மூலம் பொது ஒழுங்கிற்கான இடைஞ்சல்களை தவிர்ப்பதை நோக்காகக் கொண்டுள்ள அரச சட்டங்களை நியாயப்படுத்துவதற்காக அரசாங்கம் இந்தத் தீர்வுகளை உச்ச நீதிமன்றம் மேற்கோள் காட்டியது. இது மதத்தை கட்டுப்படுத்துவதாகக் கருதப்படவில்லை. மாறாக பொது ஒழுங்கு மீறல்களுக்காக அரசின் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதாகவே கருதப்பட்டது. (அரச சம்பந்தப்பட்ட விடயம்) மேலே (கூறப்பட்ட) இந்திய மதமாற்றத் தடைச் சட்டம் மதச் சுதந்திரத்தின் மீதான அரசியலமைப்புசார் வரையறைகளின் கீழ் வருகின்றதா என்று இந்திய உச்ச நீதிமன்றம் ஆராய்ந்து பார்த்திருக்கலாம். மதச் சுதந்திரம் ஏனைய அரசியலமைப்புக்களில் தனியானதொரு அம்சமாக இருப்பினும் பிரச்சாரம் செய்தல் பொது ஒழுங்கு அல்லது வேறு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவே கருதப்படும். கிரேக்க அரசியலமைப்பு பின்வருமாறு கூறுகின்றது. "வழிபாட்டுச் சடங்குகளை நிறைவேற்றுவது பொது ஒழுங்கை அல்லது பொது ஒழுக்கத்தைப் பாதிப்பவையாக அமையக்கூடாது" (உறுப்புரை 13(2)) பிரார்த்தனைகள், வணக்கங்கள், சமய சேவைகள் போன்றவற்றை "அரசின் பௌதீக ஒருமைப்பாட்டையும் தேசத்தின் ஒற்றுமையையும் தகர்க்கும் நோக்கில் செய்யமுடியாது" என்று அரசியலமைப்பு கூறுகின்றது. உறுப்புரை 14 (1) *லைலா ஷாஹீன் எதிர் துருக்கி* (2004 ஜூன் 29) என்ற வழக்கில் ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் அரசாங்க உயர்கல்வி நிறுவனங்களில் இஸ்லாமிய தலைமறைப்பு முந்தானை அணிவதனை அரசியலமைப்பில் மத சார்பற்ற கோட்பாட்டினைக் கொண்ட சுற்றுநிருபத்தினால் நியாயப்படுத்துவதனாலும் அது அரசுக்கு வழங்கப்பட்டுள்ள விருப்புக்கான எல்லையில் அமைவதனாலும் ஏற்றுக்கொண்டது.

சில வரையறைகள் இருப்பதாக தற்போது தேவாலயங்களின் கோட்பாடுகள் ஏற்றுக்கொண்டிருப்பதாக வாதிடப்பட்டது. இந்த வரையறைகளை மீறுவது அந்த மதமாற்றங்களை நேர்மையற்றவையாக மாற்றும் பலத்தைப் பிரயோகித்தல், ஏனைய மதங்களின் சின்னங்களை நாசம் செய்தல் போன்றவற்றை தடைசெய்தமை வரையறைகளை ஏற்படுத்துவதன் தொடக்கமாக இருந்தது. அதனைத் தொடர்ந்து ஏனைய வடிவங்களும் நவீன காலத்துக்கு மிகவும் பொருத்தமான முறையில் தடைசெய்யப்பட்டன. வஞ்சனை செய்தல், ஏமாற்றுதல் ஆகிய சொற்பிரயோகங்கள் மதமாற்றும் விடயத்தில் வித்தியாசமான கருத்துக்களைக் கொண்டிருக்க முடியும். "கவர்ச்சி" என்பது கடைசி வழிமுறையாக உள்ளது. அது நேர்மையற்ற மதமாற்றமானது உடலியல் பலாத்காரத்தின் மூலம் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்று வலியுறுத்தியது. எனினும் அதுவும் கூட அதிக சர்ச்சைக்குரிய விடயமாகவே உள்ளது. குறித்ததொரு மதத்தைப் பாதுகாக்கும் நிலைப்பாட்டில் உள்ளவர்களைப் பொருத்தவரை "கவர்ச்சி" என்பது மதமாற்றத் தடைச் சட்டத்தின் பிரதான அம்சமாகும். அவர்கள் அரசியல் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அனைத்து மதங்களுக்குமான சுதந்திரம் என்ற உரிமையை மீறுவதைத் தடுப்பதற்காக அதனை குறுகிய நோக்கில் வரையறுத்துள்ளனர். மதமாற்றம் செய்வதற்காக கவர்ச்சியைப் பயன்படுத்துவது முதன் முதலாக கிரேக்கத்தில் ஒரு பாரம்பரிய கிறிஸ்தவ தேவாலயத்தை பாதுகாக்கும் நோக்கில் தடைசெய்யப்பட்டது. தற்போது அது கிறிஸ்தவத்தின் புதிய வடிவமொன்றின் அமைப்பிலிருந்து ஏனைய மதங்களைப் பாதுகாப்பதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பது ஆச்சரியத்துக்குரியதாகும்.

மேலே குறிப்பிட்டது போல, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் உறுப்புரை 18 ஒரு நபரின் மதத்தை மாற்றுவதற்கு வலுக்கட்டாயத்தைப் பயன்படுத்தவதனைத் தடைசெய்து மதப் பிரச்சாரத்துக்கு வரையறைகளை ஏற்படுத்தியுள்ளது. வலுக்கட்டாயம் என்பது வரையறை செய்யப்படாததினால் அது போலியான விடயங்களை மட்டுமின்றி கவர்ச்சியையும் உள்ளடக்கக் கூடிய ஒழுக்காரீதியான

வலுக்கட்டாயத்தையும் உள்ளடக்கும் என்று வாதிட முடியும்.[17] இதே உறுப்புரையை அனைத்து வகையான சகிக்காமைகளையும் மத அடிப்படையிலான ஒதுக்குதலை ஒழிப்பதற்கான பிரகடனமும் கொண்டுள்ளது. எனினும் மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்கான ஐரோப்பிய மாநாடு அதனைக் கொண்டிருக்கவில்லை. அதனால் நேர்மையான மதமாற்றம் எது? நேர்மையற்ற மதமாற்றம் எது? என்ற பிரச்சினை தவிர்க்கப்படுகின்றது.

வலுக்கட்டாயத்தைப் பிரயோகிப்பதைத் தடுக்கும் சட்டம் ஒருவரின் மதத்தை பாதுகாப்பதற்கான உரிமையை ஏற்றுக்கொள்கின்றது. ஒருவர் தனது மதத்தை மாற்றிக்கொள்வதற்கான அல்லது ஒரு மதத்தை ஏற்றுக்கொள்வதற்கான சுதந்திரம் மதச்சுதந்திரம் என்பதில் அடங்கியிருப்பினும் ஒருவர் தனது மதத்தை பாதுகாப்பதற்கான சுதந்திரம் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. எனினும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் பொது அறிக்கை இல 22 ஒரு மதத்தை சார்ந்திருப்பதற்கான அல்லது ஏற்றுக் கொள்வதற்கான சுதந்திரம் என்பதிலிருந்து ஒருவர் தனது மதத்தை அல்லது நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கான உரிமையைப் பிரிக்க முடியாது எனக் கூறுகின்றது. அதன் மூலம் ஏதாவது ஒரு வடிவிலான வலுக்கட்டாயத்துக்கும் ஒருவரின் தற்போதைய மதத்துக்கும் அல்லது நம்பிக்கைக்கும் இடையில் தொடர்பு ஏற்படுத்தப்படுகின்றது.

3. பலாத்கார மதமாற்றத் தடைச் சட்டமூலம்

மதமாற்றத் தடைச்சட்டம் ஒன்று உருவாக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு பொதுமக்கள் கலந்துரையாடலொன்றை உருவாக்கியுள்ளதுடன் செய்தித் தாள்களின் வாசகர்கள்

17. கிரேக்க அரசியலமைப்பு மதமாற்றத்தைத் தடைசெய்ய முன்னரும் மதமாற்றத்தில் ஈடுபடுவது ஒரு குற்றவியல் குற்றமாகவே இருந்தது. (உறுப்புரை 13(2) ஐப் பார்க்கவும்)மதமாற்றம் என்பது "ஏதாவது ஒரு வகை ஊக்குவிப்பு அல்லது மானசீக ஆதரவு அல்லது பொருள் உதவி வழங்குவதாக வாக்குறுதியளிப்பதன் மூலம் அல்லது, அடுத்த மனிதன் அனுபவமற்ற தன்மையை அல்லது நம்பிக்கையை, தேவையை, அறிவின்மையை மற்றும் வஞ்சகமற்ற தன்மையை சாதகமாகப் பயன்படுத்துவதன் மூலம் நம்பிக்கைகளை தகர்க்கும் நோக்கில் வேறு மதமொன்றின் தூண்டுதலைக் கொண்ட ஒருவரின் மத நம்பிக்கையில் ஊடுறுவுவதற்கு நேரடியாக அல்லது மறைமுகமாக முயற்சிப்பது" என்று வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. "கவர்ச்சி" அல்லது "ஊக்குவிப்பு" என்ற சொற்களைக் கொண்ட சட்டங்களைக் கொண்டதாக இந்திய மாநிலங்கள் உள்ளன.

அத்தகையதொரு சட்டத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் ஊக்கத்துடன் எழுதுகின்றனர். சிங்கள செய்தித்தாள்களில் எழுதும் அதிகமான எழுத்தாளர்கள் மதமாற்றத் தடைச் சட்டத்துக்கு ஆதரவாக எழுதுகின்றனர். பௌத்த சாசன ஜனாதிபதி ஆணைக்குழு 2003இன் இறுதிக்காலாண்டில் வெளியிட்ட தனது அறிக்கையில் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 110 கிறிஸ்தவச் சங்கங்களின் பட்டியலை வெளியிட்டது. அத்துடன் ஒவ்வொரு மதத்தினதும் பிரதிநிதிகள் அடங்கிய மதங்களுக்கிடையிலான ஆலோசனைக் கவுன்சில் ஒன்று புதிய மிஷனரி அல்லது அடிப்படை வாத குழுக்களைப் பதிவு செய்வதற்கு அந்தக் கவுன்சிலின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்தது. (சன்டேடைம்ஸ் 04, ஜனவரி 2004). கத்தோலிக்க பிஷப்மார்களின் மாநாடு மதமாற்றத் தடைச் சட்டமொன்று இருக்கக் கூடாது என்பதற்கு காரணம் கூறும் போது "ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்துக்கு 'முறைகேடான' முறையில் மதமாற்றம் செய்யப்படுவதனால் தான் இந்த நிலை உருவாகியிருப்பதை நாம் அறிவோம். மதம் மாற்றுவதற்கு சட்டரீதியான ஆசைகாட்டுதலைப் பயன்படுத்துவதனை நாமும் முற்றாக நிராகரிக்கின்றோம் (ஐலன்ட் 2004 ஜனவரி 17). அதேவேளை சிவில் உரிமைகளுக்கான இயக்கம் 2004 ஜனவரி 25ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையொன்றில் மதமாற்றத் தடைச்சட்டம் உருவாக்கப்படக்கூடாது என்பதற்கான பின்வரும் காரணங்களை முன்வைத்தது.

> ஒருவர் தனது மதத்தை அல்லது நம்பிக்கையை பிரச்சாரம் செய்வதற்கு அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள உரிமையைப் பாதுகாத்துக் கொண்டு "முறைகேடான" வழிமுறைகள் மூலம் மதமாற்றம் செய்தல் என்பதனை சட்டரீதியாக வரைவிலக்கணப்படுத்த முயற்சிப்பது நடைமுறைச் சாத்தியமானதோ விரும்பத்தக்கதோ அல்ல. அவ்வாறானதொரு சட்டம் கட்டாயமாக மேலெழுந்தவாரியாகவே வரைவிலக்கணப்படுத்தப்பட வேண்டும். தான் பிறந்த மதத்தை கைவிட்டு தான் விரும்பும் இன்னொரு மதத்தை தழுவுவதை எமது சமூகம் எப்போதும் ஏற்றுக் கொண்டே வந்துள்ளது. மக்கள் தமது மதத்தை பல்வேறு காரணங்களுக்காக மாற்றிக் கொள்கிறார்கள். சிலபோது அது தனிப்பட்ட காரணமாக இருக்கும். சிந்தனைகளினதும் நம்பிக்கைகளினதும் ஆழத்தை சட்டத்தினால் ஊடுருவிப் பார்க்க முடியாது.

மதமாற்றத் தடைச் சட்டமொன்றுக்கு அனுசரனை வழங்கப் போவதில்லை என்பது தெளிவாகிய போது சிறிது காலத்துக்கு முன் பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டிருந்த பௌத்த பிக்கு ஒருவர் புதியதொரு குற்றத்தை உருவாக்கும் நோக்கில் "பலாத்கார மதமாற்றத்தடை" என்ற பெயரில் தனிப்பட்ட அங்கத்தவர் சட்ட மூலமொன்றை சமர்ப்பித்தார். கிறிஸ்தவர்களால் செய்யப்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகின்ற முறைகேடான மதமாற்றங்கள் நிறுத்தப்படவேண்டும் என்று அதில் கூறப்பட்டது. நீண்ட தலைப்பைக் கொண்டிருந்த அந்தச் சட்டமூலம் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்துக்கு மாற்றுவதற்கு மாத்திரம் சட்டத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்ற நோக்கில் கவனமாக வரையப்பட்டிருந்தது. "பலத்தை அல்லது கவர்ச்சியை அல்லது ஏமாற்று வழிமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம்" அதன் முன்னுரையில் பௌத்த சமயம் பெரும்பான்மை மக்களால் ஏற்கப்பட்டு பின்பற்றப்பட்டு வருவதாகவும், பௌத்த சாசனத்தையும் பௌத்தர்களையும் பாதுகாத்து வளர்ப்பது அரசின் கடமை என்றும் பௌத்தரல்லாதவர்கள் வலுக்கட்டாயத்தின் மூலம், அல்லது கவர்ச்சியின் மூலம் அல்லது ஏமாற்று வழிமுறைகள் மூலம் பலாத்காரமாக மதமாற்றம் செய்யப்படும் மோசமான அச்சுறுத்தலை எதிர்நோக்குகிறார்கள் என்றும் மதத் தலைவர்கள் மதச் சகிப்புத்தன்மையை பாதுகாத்து ஊக்குவிப்பதன் அவசியத்தை உணரவேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது.

அந்தச் சட்ட மூலத்தின் இரண்டாவது பிரிவு ஏமாற்றுதல் (விரிந்த கருத்தில்) மூலம் ஒருவர் தனது மதத்தை விட்டு இன்னொரு மதத்தை ஏற்றுக்கொள்வதற்கு காரணமாக அமையும் முயற்சிகளைத் தடை செய்தது. வாசகம் 4(அ) அதனை 5 வருடச் சிறைத் தண்டனையும் ரூபா. 150,000 அபராதமும் விதிக்கத்தக்க குற்றவியற் குற்றம் என்றது. அக்குற்றத்துக்கு உடந்தையாக இருப்பதும் அதேயளவு தண்டனைக்குரிய குற்றமாகும். வாசகம் (4) அ வின் காப்பு வாசகமும் 1இலும் அட்டவணையும் பருவமடையாதவர்களையும் (18 வயதின் கீழ்) பெண்களையும் (திருமணம் முடிக்க முடியுமானவர்கள்) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள யாராவது ஒருவரை (மொத்தமாக 11 பிரிவினர்) மதம் மாற்றுவது ஒரு பயங்கரமான குற்றம் என்றும் அதற்கு 7 வருட சிறைத்தண்டனையும் ரூபா 500,000 அபராதமும் விதிக்கப்பட முடியும்

எனக் கூறுகின்றது.[18] இந்தக் குற்றம் ஒரு மதகுருவினால், பிக்குவினால், கிறிஸ்தவ குருவினால், அல்லது ஏனைய மத ரீதியான பதவிகளை வகிப்பவர்களால் மட்டுமன்றி எந்தவொரு நபரினாலும் செய்யப்படமுடியும். மதமாற்றத்தை தீர்ப்பின் மூலம் செல்லுபடியற்றதாக்க முடியாது.

வாசகம் 3, ஒரு மதத்தை தழுவும் போது தாமாக முன்வந்து செய்தாலும் மதம்மாறியவரும் மதமாற்றம் செய்பவரும் மதமாற்றத்துக்குப் பொறுப்பாக உள்ளவரும் பிரதேச செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும் என்று கூறுகின்றது. (அமைச்சர் ஒழுங்குவிதிகள் மூலம் விதந்துரைக்கின்ற மதமாற்றப் புத்தகமொன்றில் பதிவுசெய்யப்பட வேண்டும் என்று கருத முடியும்.) அவ்வாறு செய்யாதபோது அவர்கள் 5 வருட சிறைத் தண்டனையும் ரூபா. 150,000 அபராதமும் விதிக்கத்தக்க குற்றமொன்றை இழைத்தவர்களாகக் கருதப்படுவார்கள். வாசகம் 3 இல் உணர்த்தப்படுகின்ற ஒரே வரையறுக்கும் காரணியாக அமையும்.

வாசகம் 5 குற்றவியல் வழக்கொன்றை நீதவான் நீதிமன்றத்தில் தொடர்வதற்கு பலவகையான ஆட்களுக்கு அதிகாரமளிக்கின்றது. 'பாதிக்கப்பட்ட நபர்' ஒருவரின் முறைப்பாட்டின் அடிப்படையில் செயற்படும் பொலிசாரைத் தவிர பொதுமக்களின் நலனுக்காகச் செயற்படும் ஒருவர், அல்லது அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் வழக்குத் தாக்கல் செய்யமுடியும்.

வாசகம் 8 பொருள்கோடல் வாசகமாகும். "அது மதமாற்றம் செய்யப்பட்டவர்" 'கவர்ச்சி' 'பலாத்காரம்' 'ஏமாற்றுதல்' என்பவற்றுடன் சட்ட மூலத்தில் உள்ள முக்கியமான சொற்கள் என்பவற்றுக்கு வரைவிலக்கணம் கூறுகின்றது. 'மதம் மாறுதல்' என்பது ஒரு மனிதனை தனது மதத்தைக் கைவிட்டு வேறு ஒரு மதத்தை

---

18. சமூர்த்தி பயனாளிகள், கைதிகள், புனர்வாழ்வு நிலையங்கள் அல்லது அகதி முகாம்கள் அல்லது தடுப்பு நிலையங்களில் வாழ்கின்றவர்கள், உடல்ரீதியாக அல்லது உளரீதியாக இயலாதவர்கள், நிறுவனங்களின் ஊழியர்கள், ஆயுதப்படை அல்லது பொலிஸ் உறுப்பினர்கள், மாணவர்கள், வைத்தியசாலைகளில் தங்கியிருப்போர், அமைச்சரினால் குறித்துரைக்கப்படும் வேறு ஏதேனும் பகுதியினர்.

மதமாற்றம் என்பதற்கு கிறேக்க வரைவிலக்கணம் என்னவெனில் அனுபவமற்ற, நம்பிக்கையான, தேவையுடைய, அறிவுகுறைந்த ஆளொருவரின் நன்மையைப் பெற்றுக்கொள்வதாகும். இவை எரிச்சலூட்டும் சந்தர்ப்பமாகக் கருதப்படுவதில்லை. ஆனால் பாடசாலை ஒன்றில் அல்லது மனித நேயமுல்ல நிறுவகமொன்றில் குற்றச்செயலின் ஆரம்பம் அத்தகைய சந்தர்ப்பமொன்றாக நோக்கப்படும்.

ஏற்றுக்கொள்ளச் செய்வதைக் குறிப்பதாக குறுகிய நோக்கில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.[19] அது மதமொன்றை மாற்றுவதேயன்றி மதமோ சமயமோ அல்ல 'கவர்ச்சி' என்பது (i) பணமாகவோ பொருளாகவோ ஏதாவது பரிசு அல்லது அன்பளிப்பு ஒன்றைவழங்குவது (ii) பணரீதியான அல்லது வேறுவகையான சட்டரீதியான நன்மைகளை வழங்குவது (iii) தொழில் வழங்குவது அல்லது பதவி உயர்வு வழங்குவது ஆகிய வடிவங்களில் ஆசையூட்டுவதைக் குறிக்கும் என விளக்கப்பட்டுள்ளது.[20] பலாத்காரம் என்பதற்கு மதரீதியான கோபத்துக்கு ஆளாக வேண்டி ஏற்படும் என்று அச்சுறுத்துதல் அல்லது ஏதாவது ஒரு மதத்தை அல்லது ஒரு மத வழிமுறையை நிந்திப்பது என்பவற்றை உள்ளடக்கியதாக வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது.[21]

இந்தச் சட்டமூலம் ஒழுங்கு பத்திரத்தில் சேர்க்கப்பட்ட பின்னர் அது அரசியலமைப்புக்கு முரணானது என 21 முறைப்பாட்டாளர்கள் (முக்கியமாக மத நிறுவனங்களும் பிரபலமான மதச் சார்பற்ற மனித உரிமை குழுக்களும் தனிநபர்களும்) ஆட்சேபம் தெரிவித்தனர். அத்துடன் இடையில் வந்த 21 முறைப்பாட்டாளர்கள் அதனை ஆதரித்தனர். மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டமா அதிபருக்கு வழங்கிய அறிக்கையில் சட்ட மூலத்தின் வாசகங்கள் அரசியலமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகளுக்கான ஏற்பாடுகளை மீறுவதாக கருத்துத் தெரிவித்தது. அந்த அறிக்கையிலுள்ள விடயங்கள் நீதிமன்றத்துக்கு ஒத்திவைக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்த்தது. வாய்மொழியாகச் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்

---

19. ஒப்பீட்டடிப்படையில், கிரேக்க சட்டத்தில் மதமாற்றம் என்பது "ஆளொருவரின் மத நம்பிக்கைகளை வித்தியாசமான சமயக் கோட்பாடொன்றாக பலவந்தமாகத் திணித்தல்" என்பதாகும் (அடிக்குறிப்பு 17 பார்க்கவும்) கிரேக்க நீதிமன்றங்களை தண்டனை வழங்குவதற்கு அனுமதித்த வரைவிலக்கணமானது மதமொன்றிற்குள் நம்பிக்கையினை மாற்றுவது என்பதாகும். *ஒரிசா மதச் சுதந்திரச் சட்டம்* (1967) "ஒரு மத நம்பிக்கையிலிருந்து இன்னொன்றிற்கு" மாற்றுவதை தடை செய்துள்ளது. ஆனால் *மத்திய பிரதேஸ் தர்ம சுவதந்திரிய அத்ஹிநியம் சட்டம்* (1968) ஒரு மதத்திலிருந்து இன்னொன்றிற்கு மாறுவதை தடைசெய்துள்ளது.

20. இது சட்டமூலத்தின் ஆங்கில பதிப்பில் வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணமாகும். சிங்கள பதிப்பில் சிறியதொரு வித்தியாசம் காணப்படுகின்றது. *ஒரிசா சட்டத்தில்* "தூண்டுதல்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. நன்கொடை அல்லது பணமாகவோ, அன்பினாலோ மகிழ்ச்சிப்படுத்தல் மற்றும் பணமாக, பொருளாக அல்லது வேறொரு வழியில் ஏதேனுமொரு நன்மையைச் செய்தல்.

21. *ஒரிசா சட்டத்தில்,* இது தெய்வ கோபத்திற்கு அல்லது சமூகத்தில் எவ்வித தொடர்பும் துண்டிக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்படுதல் என்ற அச்சுறுத்தலை உள்ளடக்கியுள்ளது.

கட்டுப்படுத்தப்பட்டு எழுத்து மூலமான சமர்ப்பணங்கள் சேர்க்கப்பட்டன. சட்டமா அதிபர் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான பிரதிச் சட்டமா அதிபரை நீதிமன்றம் நுணுக்கமாக விசாரித்து சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை அறிந்து கொண்டது. அவர் தனது பதிலில் சட்டமூலத்திலுள்ள சில விடயங்களைத் தவிர ஏனைய விடயங்களை சட்டமா அதிபர் ஆதரிப்பதாகக் கூறினார்.[22] நீதிமன்றம் (நீதிபதி. டி.பி. வீரசூரிய, நீதிபதி. என்.ஈ. திஸாநாயக்க, நீதிபதி. ராஜா பெர்ணாண்டோ ஆகியோர்) தனது தீர்ப்பை உரிய நேரத்தில் முன்வைக்க வேண்டும் என்று அரசியல் அமைப்பினால் கட்டுப்படுத்தப்பட்டது. அது சட்டத்தரணியால் சமர்ப்பிக்கப்பட்டவற்றின் விரிவான விளக்கங்களை ஆராயவில்லை.

4. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு

நீதிமன்றம் தனது தீர்ப்பில்[23] கவர்ச்சியின் மூலம் மதமாற்றம் செய்வதைத் தடைசெய்வதில் எந்தப்பிழையும் இருப்பதாக காணவில்லை. (தனது மதத்தை விடுவதற்குத் தூண்டுகின்ற, நன்மையாக கருதப்படுகின்ற ஒன்றை வழங்குதல் என்று விவரிக்கப்பட்டது). எனினும் நீதிமன்றம் விதந்துரைக்கும் விதத்தில் மத மாற்றும் நோக்கில் ஆசைகாட்டுதல் என்று வரைவிலக்கணம் திருத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றம் நினைத்தது. அந்தத் திருத்தம் பெரிய மாற்றம் எதனையும் கொண்டுவராது. தருமச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு மத நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமையை நீதிமன்றம் விசாரிக்கவில்லை. மாறாக "இந்த இடத்திலுள்ள பொருத்தமற்ற விடயம் மதமாற்றம் செய்வதற்காக மோசடிச் செயற்பாடுகளில் வேண்டுமென்றே ஈடுபடுவதாகும்" என்று கூறியது. கொக்கினாகிஸ் வழக்கில் ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றத்தின் தீர்ப்பு மாத்திரமே ஆதாரமாகக் காட்டப்பட்டது. எனினும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தில் உறுப்புரை 18(2) உசாத்துணையாகக் காட்டப்பட்டது. ஏனெனில் அது

22. சட்டமூலத்தினை கூட்டிணைப்பது தொடர்பான விடயம் சட்டமா அதிபரினால் மேற்கொள்ளப்படவில்லை என்ற வகையில் அதனைப் பாதுகாப்பதற்கும் சட்டமா அதிபர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

23. 2005 சனவரி 4 ஆம் திகதியன்றே பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

வலுக்கட்டாயத்தைத் தடைசெய்கின்றது. உத்தேச திருத்தம் செய்யப்படவேண்டிய கவர்ச்சியின் வரைவிலக்கணத்தின் பிரிவு 2 அரசியலமைப்புக்கு முரணானது எனக் கூறப்படவில்லை. ஆட்சேபனையாளர்கள் பிரிவு 2ஆனது 9ஆம் 10ஆம் உறுப்புரைகளை மீறுகின்றது என்பதைச் சுட்டிக்காட்ட முயற்சிக்கவுமில்லை.

'பலாத்காரம்' என்பதன் விரிவான கருத்து தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 169இ (2) (ஆ) ஐத் திருப்தியற்ற முறையில் குறிப்பிடுவதன் மூலம் நியாயப்படுத்தப்பட்டது.[24] அதேபோல் 'ஏமாற்றுதல்' என்பதன் வரைவிலக்கணம் விருப்பத்துடன் செய்யும் செயல்களுக்கு வரையறுக்கப்படின் சரியானது என்று அங்கீகரித்தது. அத்துடன் கவர்ச்சி என்பதற்குச் செய்யப்பட்ட அதே திருத்தம் இதிலும் செய்யப்பட வேண்டும் என்றும் கூறியது.

மதமாற்றம் பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்ற வாசகம் 3இன் ஏற்பாடு ஒருவரின் சிந்தனை, மனசாட்சி மதம் என்பவற்றுக்கான சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதனால் அது உறுப்புரை 10க்கு முரணாக அமைகின்றது எனக்கூறி அதனை இடைநிறுத்தியது. அறிவிக்கும் கடமையானது ஒருவர் தனது மதத்தை தனது தனிப்பட்ட விவகாரமாக வைத்திருப்பதற்கான உரிமையை மீறுகின்றது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் உறுப்புரை 18க்கான பொது அறிக்கை பின்வருமாறு கூறுகின்றது உறுப்புரை 18(2) மற்றும் 17இன்படி ஒருவரும் தனது சிந்தனையை அல்லது சமய நம்பிக்கையைச் சார்ந்த தன்மையை வெளிப்படுத்துமாறு நிர்ப்பந்திக்கப்பட முடியாது".

பலாத்காரமாக மதமாற்றம் செய்யும் குற்றத்துக்கான தண்டனை (வாசகம் 4) அதிகமானதாகவோ பொருத்தமற்றதாகவோ கருதப்படவில்லை. மாறாக குற்றவியல் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரயோகத்தை தவிர்ப்பது பொருத்தமற்றதும் நியாயமற்றதுமாகும். அத்துடன் அக்குறைபாட்டை நீக்குவதற்காக இந்த வாசகத்தை நீக்க வேண்டும் என்று நீதிமன்றமானது

24. இந்தப்பிரிவின் மூலம் தெய்வத்தின் கோபத்திற்கு அல்லது ஆன்மீக ரீதியான கண்டனத்திற்கு உள்ளாக வேண்டி ஏற்படும் என வாக்காளர் ஒருவரை நம்பச் செய்வதற்கு பலவந்தமாகத் தினிப்பதன் மூலம்: சுதந்திரமாக வாக்குரிமையை பிரயோகிப்பதில் இடையூரை ஏற்படுத்திய தேர்தல் குற்றமொன்றிற்கு காரணமாகின்றது.

பிரேரித்தது (என்ன காரணத்துக்காக நீதிமன்றம் நீதிவானுக்கு சாதாரண தண்டனை வழங்கும் அதிகாரத்தைக் கொடுக்கின்ற குற்றவியல் நடபடிக் கோவையின் பிரிவு 14ஐ உசாவியது என்பது தெளிவற்றதாகும்) பட்டியல் அமைச்சரினால் விரிவாக்கப்படக் கூடாது என்பதைத் தவிர தண்டனை விதிக்கப்படக் காரணமாக அமைகின்ற மதமாற்றம் செய்யப்பட்டவர்களைத் தெரிவு செய்வதில் பிழைகள் எதுவும் இல்லை என நீதிமன்றம் கருதியது. உறுப்புரை 12 (4) பெண்களுக்கு விஷேட பாதுகாப்பு வழங்குவதைக் காரணம் காட்டி இந்தப் பட்டியலில் பெண்கள் சேர்க்கப்பட்டமையை நியாயப்படுத்தியது ஆச்சரியத்துக்குரிய விடயமாகும்.

வழக்குத் தொடர்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நபர்களின் பிரிவுகள் (வாசகம் 5) உறுப்புரை 12(1)ஐ மீறுவதாகவும் நியாயமற்றதாகவும் பகுத்தறிவுக்கு மாற்றமானதாகவும் காணப்பட்டது. வாசகம் 6 வழங்குகின்ற விதிகளை உருவாக்கும் அதிகாரம் அதிகம் விரிவானது என்பதனாலும் நிச்சயமில்லாதது என்பதனாலும் உறுப்புரை 76(1)இன் மூலம் பாராளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள சட்டமியற்றும் அதிகாரத்துடன் முரண்படுவதனாலும் அதனை நிராகரித்தது.

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கி உறுப்புரை 10இற்கு இணங்க அனைத்து மதங்களினதும் முழுமையான சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்த போதிலும் வழக்கு விசாரணையின் போது நீதிமன்றம் உறுப்புரை 9 தொடர்பான வாதத்தில் ஆர்வம் காட்டியது. புதிய தேவாலயங்களின் சந்தேகத்திற்கிடமான செயற்பாடுகளால் பௌத்தமதம் இந்த நாட்டில் அரித்துச் சிதைக்கப்பட்டுக்கொண்டிருப்பதைத் தடுப்பதனை இந்தச் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்ற வாதத்துக்கான பதிலாக இது அமைந்தது. சட்டமூலத்துக்கு ஆதரவாக ஆஜரான வழக்கறிஞரின் கவனத்தை நீதிபதி வீரசூரிய பொது அறிக்கை 22இன் 9ஆம் பந்தியின் பக்கம் ஈர்க்கச் செய்தார். "ஒரு மதம் அரச மதமாக அல்லது பெரும்பான்மையான மக்கள் பின்பற்றும் மதமாக இருக்கின்றது என்ற உண்மையானது உறுப்புரைகள் 18 மற்றும் 27 ஆகியன அடங்கலான சரத்துக்களால் வழங்கப்பட்டுள்ள எந்தவொரு உரிமையையும் பயன்படுத்துவதனைப் பலவீனப்படுத்தவோ ஏனைய மதங்களைப் பின்பற்றுபவர்களுக்கோ அவிசுவாசிகளுக்கோ எதிரான எந்தவொரு "ஒதுக்குதலையும் ஏற்படுத்தவோ மாட்டாது".

முறைப்பாட்டாளர்களில் ஒருவரான சிவில் உரிமைகள் இயக்கம் உறுப்புரைகள் 10 மற்றும் 14(1) (ஈ) என்பவற்றுக்கு உறுப்புரை 7இன் மூலம் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பானது உறுப்புரை 15(7) ஊடாக உறுப்புரை 14(1) (ஈ) மீது வரையறைகள் விதிக்கப்படமுடியாது என உறுதியாகக் குறிப்பிட்டது. ஒரு மதத்தை அல்லது நம்பிக்கையைத் தெரிவு செய்யும் சுதந்திரத்தை அர்த்தமுள்ளதாக பயன்படுத்துவது உறுப்புரை 14(1) உ மூலம் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள சுதந்திரத்தைப் பயன்படுத்தி வெவ்வேறு மதங்களைப் பற்றிய பூரணமான அறிவைப் பெறுவதிலேயே தங்கியுள்ளது.

வழக்கு விசாரணையின் போது உருவாக்கப்பட்ட எதிர்பார்ப்புகளுக்கு மாற்றமாக வாசகம் 2க்கான ஆட்சேபனைகளை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. கவர்ச்சியின் மூலம் மதமாற்றம் செய்வதற்கான தண்டனை "ஒருவர் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளும் சுதந்திரத்தை பலவீனப்படுத்தும் வகையில் வலுக்கட்டாயத்திற்கு உட்படுத்தப்படக் கூடாது" என்ற சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 18(2) ஊடாகவும் *கொக்கினாகிஸ் எதிர் கிறிஸ்* வழக்கின் பெரும்பான்மைக் கருத்தின் ஊடாகவும் அங்கீகரிக்கப்பட்டது. அங்கு உறுப்புரை 15(7) உசாவப்படவில்லை.

கிரேக்க வழக்கிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள் கிறிஸ்தவ வழிபாட்டுக்கும் முறையற்ற மதமாற்றத்துக்கும் இடையிலான வேறுபாட்டை சுட்டிக்காட்டுகின்றது. பின்னையது "ஒரு தேவாலயத்துக்கு புதிய அங்கத்தவர்களைச் சேர்க்கும் நோக்கில் சட்டரீதியான அல்லது சமூகரீதியான நன்மைகளை வழங்கும் செயற்பாடுகளின் வடிவை அல்லது சமூகரீதியான நன்மைகளை வழங்கும் செயற்பாடுகளின் வடிவை அல்லது சட்டத்தில் அல்லது தேவையில் உள்ள மக்கள் மீது முறையற்ற அழுத்தத்தை பிரயோகிக்கும் வடிவைக் கொண்டிருக்க முடியும். அது வன்முறையைப் பயன்படுத்தவதாக அல்லது மூளைச் சலவையாக அமையவும் முடியும். அது பொதுவாக சிந்தனை மனச்சாட்சி என்பவற்றுக்கான சுதந்திரத்துக்கான மதிப்புடன் அல்லது ஏனையவர்களின் மதங்களுடன் இணக்கமானதாக இருக்க முடியாது. கடைசி வாசகம் மக்களை அவர்களது மதத்தை விட்டு நீங்குவதற்கு

நிர்ப்பந்திக்கின்ற வலுக்கட்டாயத்தை உறுப்புரை 18(2) தடை செய்வதாகக் கூறும் பொது அறிக்கை 22உடன் முரண்படுகின்றது.

இங்கு நினைவு கூறப்பட வேண்டிய அம்சம் *கொக்கினாகிஸ்* வழக்கிலும் ஏனைய கிரேக்க வழக்குகளிலும் ஐரோப்பிய நீதிமன்றத்தின் கருத்து, மேலைத்தேய நாடுகளில் கிறிஸ்தவம் அரச மதமாக உள்ளது. என்ற வரலாற்றுப் பின்னணியை அடிப்படையாகக் கொண்ட உறவானது என்பதாகும். சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் அல்லது சிவில் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனம் என்பவற்றுக்கு முன்னரே கிரேக்கத்தில் மதமாற்றம் தடைசெய்யப்பட்டு ஒரு குற்றவியற் குற்றமாகக் கணிக்கப்பட்டது ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றத்தில் மதமாற்றத்தைக் குற்றமாகக் கருதுவது முதற்தடவையாக ஆட்சேபிக்கப்பட்டது *கொக்கினாகிஸ்* வழக்கில்தான். அதுவும் கிரேக்கத்தில் யகோவாவின் சாட்சிகளின் பல்வேறு சட்ட நடவடிக்கைகளின் பின்னரே மேற்கொள்ளப்பட்டது. (Jehovah's Witnesses)

இந்தக் காரணத்துக்காகத்தான் ஐரோப்பிய நீதிமன்றம் அந்தச் சட்டம் மத சுதந்திரம் பற்றிய உறுப்புரைக்கு முரணானது என தடை உத்தரவு பிறப்பிக்க விருப்பம் காட்டவில்லை என்பதை ஒருவர் ஊகிக்க முடியும். எமது நாட்டில் நிலைமை முற்றிலும் மாற்றமானதாகும். எங்களிடம் சகித்துக்கொள்ளும் பாரம்பரியம் காணப்படுகின்றது. எங்களுக்கு அரச மதம் என்ற ஒன்று இல்லை. மதமாற்றத் தடைச் சட்டமொன்றின் தேவையை நியாயப்படுத்துவதற்கு 2004இல் நீதிமன்றம் கிரேக்கச் சட்டத்தை அல்லது வழக்குகளைத் துணையாகக் கொண்டது ஆச்சரியத்துக்குரியதாகும்.

5. முடிவுரை

இந்த விவகாரத்தில் யாரும் வெற்றியடையவோ தோல்வியடையவோ இல்லை. இருதரப்பினருக்கும் தீர்ப்பின் மூலம் ஏதோ ஒன்று கிடைத்தது. அது மதமாற்றத் தடைச் சட்டத்தை உருவாக்குவதற்கான வழியில் தடைகளை ஏற்படுத்தியது. சட்டமூலத்தின் அடிப்படை பிரச்சினையான வாசகம் 2 நீக்கப்படவில்லை. அது சட்டமூலத்தை ஆட்சேபித்த பலருக்கு

ஏமாற்றமாக இருந்தது. எனினும் வெளிப்படையாக தீங்கிழைப்பனவாகக் கருதப்பட்ட ஏற்பாடுகள் விமர்சனத்தில் இருந்து தப்பவில்லை. குறிப்பாக அளவுக்கதிகம் அறிந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கின்றவர்களால் குற்றவியல் வழக்குகள் தொடரப்பட முடியும் என்பது நீக்கப்பட்டு ஒரு வழக்கைத் தொடர்வதற்கு சட்டமா அதிபரின் அங்கீகாரம் பெறப்படவேண்டும் எனத் திருத்தப்பட்டது. எது எவ்வாறிருப்பினும் நல்லெண்ணம் கொண்ட சமூகத்துக்குப் பயன்தரக்கூடிய நாட்டில் நீண்டகாலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்களை தூய்மையானவை என்று கவனத்தில் எடுத்து வழக்குத் தாக்கல் செய்வது தொடரப்படும் என்ற அச்சத்தை நீக்கினாலும் அது சில நல்ல மனிதர்களையும் அமைப்புகளையும் தமது செயற்பாடு குறித்து சஞ்சலப்படுத்தவே செய்யும். தண்டனைகள் மிதமிஞ்சியவை என்றோ பொருத்தமற்றவை என்றோ கருதப்படாமையும் 'பாதிக்கப்பட்டவர்கள்' என்ற விஷேட பிரிவினரை விசாரிக்க வேண்டும் என்று சொல்லப்படாமையும் ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றன. உளரீதியான பின்னடைவைக் கொண்ட மனிதர்களுடனும் சிறைக்கைதிகளுடனும் பெண்களை சேர்த்து நோக்குவது இந்தக் காலத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. சட்டமா அதிபர் கூட அந்தப்பட்டியலில் இருந்து பெண்களை நீக்கவேண்டும் எனக் கோரியிருந்தார்.

வாசகம் 2ஐ பொருள்கோடல் செய்வதில் உறுப்புரை 10 முக்கியமானதாகும். ஆஜரான அனைத்து வழக்கறிஞர்களும் சட்டப் புத்தகங்களையும் நீக்கப்பட்ட வழக்குகளையும் மேற்கோள் காட்டி சொல்வதற்கு ஏதாவது இருந்திருக்கும். ஆனால் வாசகம் 2ஐ ஆராயும் போது நீதிமன்றம் உறுப்புரை 10ஐ மேலோட்டமாகவே விவரிக்கின்றது. "கோரிக்கை மிகவும் அசாதாரணமாகவும் மிகத் தெளிவாக சமயசார்பற்ற தூண்டுதலைக் கொண்டதாகவும் இருந்தாலே அன்றி" அரசியலமைப்புசார் பாதுகாப்பை பெறுவதற்கு மத நம்பிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகவோ, தர்க்க ரீதியானவையாகவோ சீரானதாகவோ புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்று *பெரேரா எதிர் வீரசூரிய* வழக்கின் (1985) இசஅ 177 தீர்ப்பில் நீதிபதி ரணசிங்க குறிப்பிடுகின்றார். "உறுப்புரை 10 (ஒருவர்) தான் விரும்பும் எந்தவொரு மத நம்பிக்கையையும் வைத்திருப்பதனை முழுமையாகப் பாதுகாக்கின்றது. அது எவ்வளவு அசாதாரணமானது அல்லது பகுத்தறிவுக்கு முரணானது என்பது முக்கியமல்ல என்று

தீர்ப்பில் கூறப்பட்டது. "ஒருவரின் விருப்பத்தை ஏதாவது ஒரு வகையில் கொச்சைப்படுத்தும் செயற்பாடுகள் எதுவும் இன்றி" அவர் தனது சிந்தனையையும் மனச்சாட்சியையும் பயன்படுத்துவதன் விளைவாகவே மதத்தெரிவு உருவாகின்றது என்பதனை இதிலிருந்து ஊகிக்க முடியும். அதாவது மதமாற்றத்தைச் செய்வதற்கு இன்னொருவரின் எந்தவொரு முயற்சியும் இருக்கக் கூடாது. இந்தக் கருத்து தவறவிடப்பட்டது உறுப்புரை 14(1) (உ) ஐ குறுகிய வட்டத்தில் நோக்கியதைக் காட்டுகின்றது. கவர்ச்சி போன்றவற்றுக்கான வரைவிலக்கணங்களை எடுத்துக்காட்டி சிறிய மாற்றங்களுடன் அவற்றுக்கு வழங்கிய அங்கீகாரத்தைத் தொடர்ந்து ஒரு முடிவு கூறப்பட்டுள்ளது. "உறுப்புரை 14 (1) (உ) இல் உள்ள 15(7) இன் ஊடாக செய்யப்பட வேண்டும் என்று சட்டமூலம் எதிர்பார்க்கின்ற கட்டுப்பாடுகள் பொது ஒழுங்கையும் ஒழுக்கத்தையும் உறுதிப்படுத்துவதற்காக ஜனநாயக சமூகமொன்றின் பொதுநலத் தேவைப்பாடுகளை அடையும் நோக்கில் வரையப்பட்டவையாகும்." இந்த முடிவு பொருத்தமற்ற முடிவு என்பதை வாசகம் 2ஐ நீதிமன்றம் ஏற்றுக்கொண்டதற்கான காரணங்களை நோக்கும் ஒருவர் புரிந்துகொள்வார். சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாப்பது பிரச்சினையாக உள்ளது என்று நீதிமன்றத்தில் எந்தவொரு வாதமும் முன்வைக்கப்படவில்லை. உண்மையில் சான்றுகள் அதற்கு மாற்றமானவையாக உள்ளன. தேவாலயங்களும் போதகர்களும் அவர்களது சபை அங்கத்தவர்களும் தாக்கப்பட்டு வந்துள்ளார்கள் அவற்றை பொலிசார் விசாரித்திருக்கவில்லை. இலங்கையின் தேசிய கிறிஸ்தவ போதனை முன்னணி 1987 முதல் 2004 வரை கிறிஸ்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள நிகழ்வுகளின் பதிவொன்றை தன்வசம் வைத்துள்ளது. 2003 முதல் 2004 ஜனவரி மாதம் வரையான காலத்தில் 135 நிகழ்வுகள் பதியப்பட்டுள்ளன. தேவாலயங்கள் தாக்கப்பட்ட செய்திகளை உள்நாட்டுச் செய்தித்தாள்களும் பிரசுரித்துள்ளன. மத சுதந்திரம் ஒரு பிரச்சினையாக இருந்ததனால் தான் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மனித உரிமைகளும், மதமாற்றமும் என்பது பற்றி அறிக்கை சமர்ப்பித்ததற்காக இணைப்பாளரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தது. அந்த அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஒரு இணைப்பாளரை

நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தது. அந்த அறிக்கை பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளது இவை அனைத்தும் மதமாற்றத் தடைச் சட்டமூலத்துக்கு முன்னர் நடந்தவையாகும்.

ஏற்கனவே சுட்டிக்காட்டியது போன்று மத உரிமை எமது அரசியலமைப்பில் அனைத்து மனிதர்களினதும் முழுமையானதும் நிபந்தனையற்றதுமான உரிமை என்று சட்டரீதியாக ஏற்றுக்கொண்டிருப்பது போல் இந்திய அரசியலமைப்பில் முழுமையான ஒரு உரிமையாகக் குறிப்பிடப்படவில்லை. ஆனால், ஒருவன் உரிமையுடன் தனது மதத்தை வெளிக்காட்டுவதை (அதாவது வெளியிடுவதை அல்லது பிரகடனப்படுத்துவதை) எவ்வாறு சட்டத்தின் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக்க முடியும் உதாரணமாக ஒருவன் நெரிசல் மிக்க பாதையொன்றின் சந்தியில் பெட்டியொன்றின் மீது நின்று கொண்டு பிரச்சாரம் செய்வதை தடுக்க முடியும். அதே போன்று பிரார்த்தனைகளுடன் இணைந்ததாக அதிக சத்தம் கொண்ட இசையை ஒலிபரப்பி அயலிலுள்ள மக்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்துவது ஏனையோரின் மத நம்பிக்கையின் தனித்துவத்தில் விவாதமாக வரவேற்கத்தகாக விதத்தில் அத்து மீறுவது போன்றவற்றை பொருத்தமான சட்டங்கள் மூலம் கட்டுப்படுத்த முடியும். மனிதர்களைப் பலியிடுதல் அல்லது தெரிவு செய்யப்பட்ட சிலர் மீது காயங்களை ஏற்படுத்தும் விதத்தில் மதத் தண்டனைகளை வழங்குதல் போன்றவை ஒருவர் செய்யக்கூடாது எமது பிராந்தியத்திலும் கூட குறிப்பிட்ட சில மதச் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்காக கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டியிருக்கின்றது. அவையாவன, பண்டிகைக்காலத்தில் இந்தியப் பாதைகளில் நிர்வாணமாக நடக்கின்ற புனித மனிதர்கள், சாட்டையால் அடித்தல் அல்லது கதிர்காமத்தில் உள்ள மதக் கொள்கை போன்ற சுய சித்திரவதை போன்றவை அத்தகைய செயற்பாடுகளாகும். எனினும் அப்பாவி மக்களை குற்றவியல் சட்டத்தின் வலையில் சிக்கவைக்கின்ற பலாத்கார மதமாற்றச் சட்டமூலம் போன்ற பொதுவான குறையைக் கொண்டுள்ள சட்டத்தை உருவாக்குவது முற்றிலும் வேறுபட்ட ஒரு விடயமாகும்.

குறித்த தீர்ப்பு மதமாற்றத்துக்கான வரைவிலக்கணத்தில் 'மதம்' என்பதன் கருத்தையும் விளக்கியிருந்தால் பொருத்தமானதாக இருக்கும். எந்தவொரு மனித உரிமைக் கருவியிலும் மதம் என்பது வரைவிலக்கணப்படுத்தப்படவோ குறுகிய நோக்கில்

விளக்கப்படவோ இல்லை. "உறுப்புரை 18 கடவுளை நம்புகின்ற, கடவுளை நம்பாத நாஸ்திக நம்பிக்கைகளையும் ஏதாவது ஒரு மதத்தை அல்லது நம்பிக்கையை வெளிப்படையாக ஏற்காமல் இருப்பதற்கான உரிமையையும் பாதுகாக்கின்றது. நம்பிக்கை, மதம் என்ற சொற்கள் பரந்த கருத்தில் விளக்கப்பட வேண்டும். உறுப்புரை 18 தனது பிரயோகத்தன்மையை பாரம்பரிய மதங்களுக்கோ அல்லது நிறுவனத் தன்மைகளைக் கொண்ட மதங்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் மாத்திரமோ அல்லது பாரம்பரிய நம்பிக்கைகளுக்கு இயைபான செயற்பாடுகளுக்கோ வரையறுக்கவில்லை" என்று சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் பொது அறிக்கை 22 கூறுகின்றது.

"பௌத்தமதம், சமண மதம் போன்ற இந்தியாவிலுள்ள பிரபலமான மதங்கள் கடவுளையோ எந்தவொரு அறிவுமுதலையோ நம்புவதில்லை" என்ற காரணத்துக்காக *யுலிதா ஹைட் எதிர் அரசு* (1973) AIR 116 (ஒரிஸா) வழக்கில் ஒரிஸா உயர் நீதிமன்றம் மதம் என்பதை படைப்பாளன் ஒருவனை நம்புகின்ற அவனை வணங்குகின்ற நம்பிக்கையொன்றாக வரையறுக்க முடியாது எனக் கூறியது நீதிமன்றம் தொடர்ந்தும் கூறியதாவது "ஒரு மதம் தனக்கே உரிய நம்பிக்கை முறைகளை அல்லது கோட்பாடுகளை கொண்டிருக்கும். அவை தமது ஆன்மீக முன்னேற்றத்துக்கு உதவும் என்று அந்த மதத்தை பின்பற்றுவோர் கருதுவர். எனினும் மதம் என்பது ஒரு கோட்பாடு அல்லது நம்பிக்கை மாத்திரமே என்று கூறுவது சரியானதல்ல. அது மதத்தின் அடிப்படை அம்சங்களாகக் கருதப்படும் சடங்குகளையும், அனுஷ்டானங்களும் வடிவங்களும் உணவுடனும் உடையுடனும் தொடர்புபட்ட விடயங்கள் வரை விரிந்ததாக அமையவும் முடியும். "*எமானுவேல் எதிர் கேரளா மாநில அரசு* AIR 1987 SC 748 வழக்கில் உயர் நீதிமன்றம் பின்வருமாறு கூறியது. "மதத்தை ஏற்றுக்கொள்வதன் அல்லது பின்பற்றுவதன் பகுதியான நம்பிக்கை தூய்மையானதாக அல்லது மனச்சாட்சிக்கு இயைபானதாக இருக்கின்றதா என்பதல்ல பிரச்சினை. எமது தனிப்பட்ட கண்ணோட்டங்களும் துலங்கள்களும் சம்பந்தமற்றவைகளாகும்.

மதச் சுதந்திரத்தின் பரப்பு பற்றி தெளிவான பொருள்கோடல் செய்யாதது தான் தீர்ப்பு பிழையாக அமைவதற்குக் காரணம். மத நம்பிக்கைக்கான உரிமையும் ஒரு மதத்தை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையும் நிபந்தனையற்றவைகளாக இருக்கமுடியும் எனினும், ஒரு மதத்தைப் பரப்புவதற்கான உரிமையை வரையறுக்க முடியுமா என்பதும் எத்தகைய வரையறைகளை விதிப்பது என்பதுவும் தீர்வு காணப்படாத பிரச்சினையாகவே உள்ளது. சிந்தனைக்கும் மனச்சாட்சிக்குமாக சுதந்திரத்தின் முக்கிய மனித உரிமையாக மதச் சுதந்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது மதம் அதன் இறையியல், தத்துவ ரீதியான மூலங்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு ஒரு பெறுமானமாக மாறியது அது ஏனைய பெறுமானங்களுடன் சேர்ந்த இன்னொரு பெறுமானமாகக் கருதப்பட்டது. இங்கு முக்கியமான விடயங்கள் மதத்தை வைத்திருப்பதற்கான உரிமையும் மதத்தைப் பிரச்சாரத்தின் மீது சட்ட ரீதியான வரையறைகளை விதிப்பதற்கான உரிமையுமாகும். "தவறானதும் சட்டரீதியற்றதுமான வழிமுறைகள்" மூலம் மதமாற்றம் செய்வதனைக் கண்டிக்கும் போது கத்தோலிக்க மேற்றானியார்களது மாநாடும் இதனை ஏற்றுக்கொண்டது. (ஐலன்ட் 2003 டிசம்பர் 19). ஒருவர் உறுப்புரை 15(7)இன் ஊடாகவன்றி வலுக்கட்டாயம் மத உரிமை என்று எவ்வாறு அறிமுகப்படுத்த முடியும்? எமது அரசியலமைப்பின் உறுப்புரை 10இல் கூறப்படாதவற்றை சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 18(2) தெளிவுபடுத்துகின்றது. உறுப்புரை 18(2) அடங்கலாக சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் எமது நீதிமன்றங்கள் உறுப்புரை 10ஐப் பொருள்கோடல் செய்யும்போது உறுப்புரைகள் 14(1) (உ) அல்லது 15(7) என்பவற்றை உசாவாமல் ஒரு மதத்தை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையைப் பயன்படுத்துவதில் வலுக்கட்டாயத்தைப் பிரயோகிப்பதற்கான தடையை கவனத்தில் எடுக்கமுடியும். இங்கு வலுக்கட்டாயம் என்பது மத நம்பிக்கை விடயத்தில் ஒருவர் எடுக்கும் தீர்மானத்தில் செல்வாக்குச் செலுத்துவதற்கு இன்னொருவருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமையை துஷ்பிரயோகம் செய்வதனைக் குறிக்கும்.

அரசுக்கும் மதத்துக்கும் இடையிலான தொடர்பு என்ற பரந்த விடயத்தைச் சிந்திப்பதற்கு நீதிபதிகள் சிறிதளவு நேரத்தையே செலவிட்டார்கள். நடத்தை என்ற வட்டத்தைத் தாண்டிச் செல்கின்ற மோசமான முறைமூலம் மதக் கருத்துக்களைப் பரப்புபவர்களுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் அரசுக்கு இருக்கின்றது என்பதே நீதிபதிகள் கூறிய செய்தியாகும். மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றத்தின் நீதிபதி பெட்டியின் வார்த்தைகளை இங்கு ஞாபகப்படுத்துவது பொருத்தமாகும்.

> "ஆன்மீக, மத, தத்துவார்த்த நம்பிக்கைகளானவை நம்பிக்கைகள் மற்றும் அவற்றை வெளியிடுவதற்கான உரிமை என்ற தனிப்பட்ட வரம்புக்குச் சொந்தமானவையாகும். குடிமக்களுக்கு பாதுகாப்பு வழங்காமல் அடக்குமுறையைக் கொண்ட ஒரு அமைப்பு இருக்க அனுமதிப்பதும் அதிகார வர்க்கத்தினர் தமது அரசியலமைப்பில் மதச் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்திவிட்டு அதனை தங்கிவாழ்தல் 'நாசகார வேலைகள்' அல்லது மதமாற்றம் என்பவற்றை குற்றவியல் குற்றங்களாக்கி கட்டுப்படுத்துவதையும் ஒருவர் கண்ட பின்பும் அதற்கு அனுமதி வழங்குவதும் பயங்கரமானதாகும்."

கொக்கினாகஸ் எதிர் கிரிஸ் (கிரேக்க) 17 EHRR 397 பக்கம் 428

அட்டவணை 1

2004ஆம் ஆண்டு மார்கழி 31இல் இலங்கையால் கையொப்பமிடப்பட்ட, பின்னுறுதிப்படுத்தப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பயங்கரவாதம் மீதான சர்வதேச சமவாயங்களும், மனித உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் சமவாயங்களும்.

- இன அழிப்புக் குற்றத்துக்கான தண்டனையும் தடுத்தலும் பற்றிய சமவாயம், 1950 ஐப்பசி 12இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்து 1980 ஆனி 11இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்து, 1980 ஆனி 11இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- பெண்களுக்கெதிரான அனைத்து வடிவிலான பாரபட்சங்கள் பற்றிய சமவாயம், 1981 ஐப்பசி 5இல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.

- ஓர் அரசினுடைய ஓர் ஒப்பந்தத்திற்கான சம்மதம் அவ்வரசின் பிரதிநிதியினுடைய கையொப்பத்தினால் வெளிப்படுத்தப்படுகின்றது. அச்சந்தர்ப்பத்தில் அவ்வொப்பந்தமானது அத்தகைய கையொப்பம் இச் சம்மதத்தை உறுதி செய்வதாக அதற்கான ஏற்பாட்டைக் கொண்டிருத்தல் வேண்டும். பல சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் தரப்பினர் ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தில் சம்மதம் தெரிவித்திருக்க அல்லது அவ்வொப்பந்த சாரத்தை தயாரிக்கும் போது சம்மதத்தை தெரிவித்திருப்பர். இத்தகைய சந்தர்ப்பங்களில் கையொப்பம் மட்டும் போதாது; சம்மதத்தை குறிக்குமுகமாக மற்றொரு நடவடிக்கை தேவைப்படுகின்றது. இதனை பின்னுறுதிப்படுத்தல்

என்பர். இந்த அணுகுமுறையைப் பின்பற்றும் ஒப்பந்தங்கள் கையொப்பமானது ஒப்பந்தத்தின் வாசகத்தை உறுதி செய்வதாகக் கருதப்படும். பின்னுறுதிப்படுத்தலுக்கு மற்றொரு நோக்கமும் உண்டு. சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் ஒப்பந்தத்திற்கு கட்டுப்படுகின்றார்களா இல்லையா என்பதைத் தெளிவாக்க இதனால் இவ்வரசாங்கங்களுக்கு மற்றொரு சந்தர்ப்பமும் வழங்கப்படுகின்றது. ஆரம்ப பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட அரசாங்கங்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமல் ஒப்பந்தத்தோடு சம்பந்தப்பட்ட தரப்பினராக விரும்பும்போது அதனை ஒப்பந்தத்தை ஏற்பதாக கூறுவதன் மூலம் செய்துகொள்ளலாம். ஓர் அரசாங்கம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு சம்மந்தப்படும் பொழுது கையெழுத்திட்டோ அல்லது பின்னுறுதிப்படுத்தியோ சம்பந்தப்படும் பிறதரப்பினர் போன்று இவ்வொப்பந்தத்தின் கீழ் சகல உரிமைகளையும் பொறுப்புக்களையும் கொண்டு விளங்கும்.

- அனைத்து வடிவிலான இனப் பாரபட்சத்தை அகற்றுதல் பற்றிய சர்வதேச சமவாயம், 1982 மாசி 18இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இன ஒதுக்கல் குற்றத்திற்கான (Crime of Apartheid) தண்டனையும் ஒடுக்குமுறையும் பற்றி சர்வதேச கட்டுறுத்து 1982 மாசி 18இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இராஜதந்திர முகவர்கள் உள்ளிட்ட சர்வதேசரீதியாக பாதுகாக்கப்பட்ட நபர்களுக்கெதிரான குற்றங்களின் தண்டனையும், தடுத்து வைத்தலும் 1991 மாசி 27இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1991 ஆடி 12இல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.
- சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது தரக்குறைவான நடத்துகை அல்லது தண்டனைக்கு எதிரான சமவாயம் 1994 தை 3இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- புலம் பெயர்ந்த தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களினதும் உரிமைகள் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயம் 1996 பங்குனி 11இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச கட்டுறுத்துக்கான விருப்புரிமை பின்னேற்றப்பாடு I 1997 ஐப்பசி 3இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- பயங்கரவாதிகளின் குண்டுத்தாக்குதலை ஒடுக்குவதற்கான சர்வதேச சமவாயம் 1999 பங்குனி 23இல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.
- ஆயுதப்பிணக்குகளில் ஈடுபடும் சிறுவர்கள் பற்றிய சிறுவர் உரிமைகள் மீதான சமவாயத்திற்கான விருப்புரிமை பின்னேடு 2000 புரட்டாதி 6இல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.
- பணயக் கைதிகளாக வைத்திருப்பதற்கு எதிரான சர்வதேச சமவாயம் 2000 புரட்டாதி 6இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- கரையோரப் போக்குவரத்து பாதுகாப்பு (Safety of Maritime Navigation) எதிரான சட்டரீதியற்ற நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கான சமவாயம் 2000 புரட்டாதி 6இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குதலைக் கட்டுப்படுத்துவதற்கான சர்வதேச சமவாயம் 2000 புரட்டாதி 6இல் ஒப்பமிடப்பட்டது.
- சர்வதேச ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்திற்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம் 2000 மார்கழி 15இல் ஒப்பமிடப்பட்டது.
- புலம்பெயர்ந்த ஊழியர்களை கடல், நிலம் மற்றும் வளியினூடாக கடத்தலுக்கு எதிரான பின்னேற்பாடு சர்வதேசரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்திற்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் பிற்சேர்க்கை 2000 மார்கழி 15இல் ஒப்பமிடப்பட்டது.

- ஆட்களை விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்களைக் கடத்துதலைத் தடைசெய்தல், கட்டுப்படுத்தல், தண்டனை வழங்கல் ஆகியவற்றிற்கான பின்னேற்பாடு - சர்வதேசரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்திற்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் பிற்சேர்க்கை 2000 மார்கழி 15இல் ஒப்பமிடப்பட்டது.

- சிறுவர்களை விற்றல், சிறுவர் விபச்சாரம், ஆபாசபடம் எடுத்தல் மீதான சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்திற்கான விருப்புரிமை பின்னேடு 2002 வைகாசி 9இல் ஒப்பமிடப்பட்டது.

- சில சம்பிரதாய யுத்த ஆயுதங்களைப் பிரயோகிப்பதன் மூலம் அளவுக்கதிகமான உடல்ரீதியிலான காயங்கள், தீங்குகள் அல்லது பாகுபாடற்ற தாக்கங்களை ஏற்படுத்துவதை முற்றாகத் தடை செய்தல் அல்லது கட்டுப்படுத்துவதற்கான மேலதிக சட்டபூர்வமான விதிகளை சாசனத்தில் இணைத்தல். (விதிகள் 4. இவை கண்களைக் குருடாக்கும் கதிர்வீச்சை ஏற்படுத்தும் உயரிய ஒளிக்கருவி ஆயுதங்கள்)
  2004 செப்ரெம்பர் 27ஆந் திகதியன்று ஏற்படுத்தப்பட்டது.

- மோசடிக்கு எதிரான சாசனம்
  2004 மே 11ஆந் திகதி ஏற்படுத்தப்பட்டது.

- ஆட்களை சட்டவிரோதமாக கூட்டிச்செல்லுதல் மற்றும் மற்றவர்களை விலைமாதர்களாக்கி சுரண்டி வாழ்வதை ஒடுக்குவதற்கான சாசனம்.
  1994 ஜனவரி 03ஆந் திகதி ஏற்படுத்தப்பட்டது.

- சில சம்பிரதாயபூர்வமான ஆயுதங்களைப் பிரயோகிப்பதன் மூலம் அளவுக்கதிகமான உடல்ரீதியிலான காயங்கள் அல்லது பாகுபாடற்ற தாக்கங்களை ஏற்படுத்துவதை

முற்றாகத் தடை செய்தல் அல்லது கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான சாசனம்.
விதிகள் i, ii மற்றும் iii 2004 செப்ரெம்பர் 24ஆந் திகதி ஏற்படுத்தப்பட்டது.

- பெண்களுக்கு எதிரான சகல விதமான பாகுபாடான செயற்பாடுகளையும் முற்றாக இல்லாமல் செய்வதற்கான சாசனத்துக்கான மாற்று விதிமுறை
2003 ஜனவரி 15ஆந் திகதியன்று மீள் அங்கீகரிக்கப்பட்டது.

- நிலக்கண்ணிவெடிகள், கண்ணிவெடிகள் மற்றும் ஏனைய வெடிக்கச் செய்யும் பொருட்களை பயன்படுத்துவதை முற்றாக தடை செய்தல் அல்லது கட்டுப்படுத்துவதற்கான விதி (விதி 2, 1996 மே 03ஆந் திகதியன்று திருத்தப்பட்டதற்கமைய). சில சம்பிரதாயபூர்வ ஆயுதங்களை பயன்படுத்துவதை முற்றாக தடை செய்தல் அல்லது கட்டுப்படுத்துவதற்கான சாசனத்துக்கான பின்னிணைப்பு.
2004 செப்ரெம்பர் 24ஆந் திகதியன்று ஏற்படுத்தப்பட்டது.

- அணுவாயுத பயங்கரவாத செயற்பாடுகளை ஒடுக்குவதற்கான சர்வதேச சாசனம்.
2005 செப்ரெம்பர் 14ஆந் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையால் பின்னுறுதிப்படுத்தப்பட்ட சர்வதேச தொழிலாளர் நிறுவன (ILO) சமவாயங்கள்

சம.இல.	பெயர் தற்போதைய	பின்னுறுதிப்படுத்திய திகதி	நிலை
C4	இரவில் பணிபுரிதல் (பெண்கள்) சமவாயம் 1919	08.10.1951	கைவிடப்பட்டது.
C5	ஆகக்குறைந்த வயது (கைத்தொழில்) சமவாயம் 1919	27.09.1950	கைவிடப்பட்டது.
C6	இளவயது நபர்கள் இரவில் பணி புரிதல் (கைத்தொழில்) சமவாயம் 1919	26.10.1950	கைவிடப்பட்டது.
C7	ஆகக்குறைந்த வயது (கடல்) சமவாயம் 1920	02.09.1950	கைவிடப்பட்டது.
C8	வேலையின்மை இழப்பீட்டு சமவாயம் 1921	25.04.1951	
C10	ஆகக்குறைந்த வயது (விவசாயம்) சமவாயம் 1921	29.11.1991	கைவிடப்பட்டது.
C11	சங்கத்தின் உரிமை (விவசாயம்) சமவாயம் 1921	25.08.1952	
C15	ஆகக்குறைந்த வயது (Trimmers & Stockers) சமவாயம் 1921	25.04.1951	கைவிடப்பட்டது.
C 16	இளம் ஆட்களின் மருத்துவ பரிசோதனை (கடல்) சமவாயம் 1921	25.04.1950	
C18	பணியாளர்களின் நஷ்டஈடு (தொழில்சார்ந்த நோய்கள்) சமவாயம் 1925	17.05.1952	
C26	ஆகக்குறைந்த வேதனம் (இயந்திரம் பொருத்துதல்) சமவாயம் 1930	09.06.1961	
C29	கட்டாய ஊழியம் சமவாயம் 1930	05.04.1950	
C41	இரவு வேலை (பெண்கள்) சமவாயம் (திருத்தப்பட்டது) 1934	02.09.1950	கைவிடப்பட்டது.
C45	நிலத்தின் கீழ் வேலை (பெண்கள்) சமவாயம் 1935	20.12.1950	
C58	ஆகக்குறைந்த வயது (கடல்) சமவாயம் (திருத்தப்பட்டது) 1936	18.05.1959	
C63	வேதனங்கள் மற்றும் வேலைநேரப் புள்ளிவிபரங்கள் தொடர்பான சமவாயம் 1938	25.08.1952	
C80	இறுதி உறுப்புரைகளின் திருத்தம் சமவாயம் 1946	10.09.1950	
C81	தொழில் பரிசோதனை (Labour Inspection) சமவாயம் 1647	03.04.1950	
C87	சங்கத்தின் சுதந்திரம் ஒழுங்குபடுத்துவதற்கான பாதுகாப்பு உரிமை சமவாயம் 1948	15.11.1995	
C89	இரவு வேலை (பெண்கள்) சமவாயம் திருத்தப்பட்டது 1945	31.03.1966	கைவிடப்பட்டது
C90	இளம் ஆட்களின் இரவுவேலை (கைத்தொழில்) சமவாயம் (திருத்தப்பட்ட) 1948	18.05.1959	
C95	வேதனங்களின் பாதுகாப்பு சமவாயம் 1949	27.10.1983	
C96	முன்கட்டணம் அறவிடும் வேலை வாய்ப்பு முகவரகங்கள் சமவாயம் (திருத்தப்பட்டது) 1949	30.04.1958	
C98	ஒழுங்குபடுத்தல், கூட்டாகப் பேரம் பேசுதலுக்கான உரிமை சமவாயம் 1949	13.12.1972	
C99	இயந்திரத்தைப் பொருத்துவதற்கான ஆகக்குறைந்த வேதனம் (விவசாயம்) சமவாயம் 1951	05.04.1954	
C100	சம ஊதியச் சமவாயம் 1951	01.04.1993	
C 103	பிரசவ பாதுகாப்பு சமவாயம் (திருத்தப்பட்டது) 1952	01.04.1993	
C105	கட்டாய ஊழியத்தினை ஒழித்தல் சமவாயம் 195	07.01.2003	

C106	வாராந்த ஓய்வு (வர்த்தக மற்றும் அலுவலகங்கள்) சமவாயம் 1957	27.10.1983
C108	Seafarers அடையாளப் பத்திரங்கள் சமவாயம் 1958	24.11.1995
C110	பெருந்தோட்ட வேலையாட்களின் தொழில் நிலைமைகள் சமவாயம் 1958	24.04.1995
C111	பாரபட்சம் (தொழில் மற்றும் வேலை) சமவாயம் 1958	27.11.1998
C115	கதிர்வீச்சுப் பாதுகாப்பு சமவாயம் 1960	18.06.1986
C116	இறுதிக் கட்டுரைகளின் திருத்தம் சமவாயம் 1961	26.04.1974
C131	ஆகக்குறைந்த வேதன நிர்ணயம் சமவாயம் 1970	17.03.1975
C135	தொழிலாளர் பிரதிநிதிகள் சமவாயம் 1971	16.11.1976
C138	தொழில் அனுமதிக்கான ஆகக்குறைந்த வயது 1973	11.02.2000
C144	உலக தொழிலாளர் ஸ்தாபனத்தின் (ILO) சமவாயத்தினை மேம்படுத்துவதற்கான முவரிடையிலான ஆலோசனைகள் 1976	17.03.1994
C160	தொழிலாளர் புள்ளிவிபரங்கள் சமவாயம் 1985	01.04.1993
C182	அதிகொடூரமான சிறுவர் ஊதியத்திற்கெதிரான சமவாயம்	01.03.2001

இலங்கையினால் பின்னுறுதிப்படுத்தப்பட்ட மனிதாபிமான சட்ட சமவாயங்கள்

- களத்தில் காயமடைந்திருக்கும், நோய்வாய்ப்பற்றிருக்கும் ஆயுதப்படைகளின் நிலைமைகளைச் சீர்படுத்தலுக்கான ஜெனீவா பிரகடனம் 1949
  1959 மாசி 28ல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.
- கடலில் ஆயுதப்படை அங்கத்தவர்கள் காயமடைதல், நோய்வாய்ப்படுதல், கப்பல் உடைவுக்குட்படல் நிலைமைகளை சீர்படுத்துவதற்கான (Amelioration) ஜெனீவா சமவாயம் 1949
  1959 மாசி 28ல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.
- யுத்தக் கைதிகளைப் பராமரிப்பது தொடர்பான ஜெனீவா சமவாயம் 1949
  1959 மாசி 28ல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.
- யுத்த காலத்தில் பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பான ஜெனீவா சமவாயம் 1949
  1959 மாசி 28ல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.

அட்டவணை II
இலங்கையினால் பின்னுறுதிப்படுத்தப்படாத சில மனித உரிமைச் சாசனங்கள்

- குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்தக்கான விருப்புரிமை பின்னேடு II
- மனிதத்தன்மைக்கு எதிரான குற்றங்கள் மற்றும் யுத்தக் குற்றங்களுக்கான பிரயோகத் தன்மையற்ற சட்டரீதியான வரையறைகள் பற்றிய சமவாயம் 1968
- மேலே கூறப்பட்ட உறுப்புரை 21 தொடர்பான பிரகடனம் (அரச தரப்பொன்று இன்னொன்றுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் புகார்கள் தொடர்பானது)
- மேலே கூறப்பட்ட உறுப்புரை 22 தொடர்பான பிரகடனம் (தனி நபர்களினால் மேற்கொள்ளப்படும் புகார்கள் தொடர்பானது)
- சமூகப் பாதுகாப்பின் ஆகக்குறைந்த நியமங்கள் தொடர்பான ஐ.எல்.ஒ. (ILO) சமவாயம் (இல.102)
- புலம்பெயர் தொழிலாளர்களைப் பராமரித்தல் மற்றும் சம சந்தர்ப்பத்தை மேம்படுத்தல் மற்றும் மோசமான நிலைமைகளில் உள்ள புலப்பெயர்வாளர்கள் தொடர்பான ஐ.எல்.ஒ. (ILO) சமவாயம் (இல. 143)
- தொழிற் கொள்கை தொடர்பான ஐ.எல்.ஒ. (ILO) சமவாயம் (இல.122)
- கிராம தொழிலாளர்களின் நிறுவனங்கள் மற்றும் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் அவர்களின் பங்கு தொடர்பான ஐ.எல்.ஒ. (ILO) சமவாயம் (இல.141)
- பொதுத்துறைச் சேவையில் தொழில் நிலைமைகளை நிர்ணயிப்பதற்கான நடைமுறைகள் மற்றும் ஒழுங்கமைப்பதற்கான பாதுகாத்தல் உரிமை தொடர்பான ஐ.எல்.ஒ. (ILO) சமவாயம் (இல. 151)
- அகதிகளின் நிலைமை தொடர்பான சமவாயம் 1951
- 1951 அகதிகள் சமவாயத்திற்கான பின்னேடு 1967
- சர்வதேசரீதியில் அல்லாத ஆயுதப் பிணக்குகளால் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்புடன் (பின்னேடு I) தொடர்புபடுகின்ற 1949 ஆவணி 12ஆம் திகதி ஜெனீவா சமவாயத்திற்கு மேலதிகமான பின்னேடு
- சர்வதேசரீதியில் அல்லாத ஆயுதப் பிணக்குகளால் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்புடன் (பின்னேடு II) தொடர்புபடுத்துகின்ற 1949 ஆவணி 12ஆம் திகதி ஜெனீவா சமவாயத்துக்கு மேலதிகமான பின்னேடு

அட்டவணை III
2003 தீர்ப்பு வழங்கப்பட்ட அடிப்படை உ ரிமை வழக்குகள் உறுப்புரை 11இ 13 (1) மற்றும் 13 (2)

தெவலமுல்ல பதிரனகே அமரசேன எதிர் ஐ.பி.ஜயரத்ன, ஒ.ஐ.சி. புலனாய்வு கூறு, பொலிஸ் நிலையம் மற்றும் ஏனையோர் 4, உ.நீ.(அ.உ) விண்ணப்ப இல. 290/2002, உ.நீ குறிப்பறிக்கை 04.04.2003

ஈ.எம.கே.ஏகனாயக்க எதிர் ரிசர்வ் சப் இன்ஸ்பெக்டர் ஹேவாவசம். உ.நீ. (அ.உ) விண்ணப்ப இல. 34/2002, உ.நீ. குறிப்பறிக்கை 17.03.2003

பரூக் அப்துல் லதீப் மற்றும் உப பொலிஸ்மா அதிபர், நுவரெலிய, உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இல. 244/2002, உ.நீ. குறிப்பறிக்கை 15.12.2003

ஹரித அதிகாரி மற்றும் வேறொருவர் எதிர் கோட்டகே சுமித் அமரசிங்க. உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இல. 251/2002 உ.நீ. குறிப்பறிக்கை 14.02.2003

ஹரிந்த்ர சஷிகா குமார் எதிர் உப பொலிஸ் மா அதிபர் டி.ஏ.த.பொன்சேகா மற்றும் ஏனையோர் உ.நி. (அ.உ.) விண்ணப்ப இல. 462/2001, உ.நீ. குறிப்பறிக்கை 17.03.2003

எச்.ஏ.நாலக்க எரந்த ஹெட்டியாரச்சி எதிர் காமினி மீகஹாகும்புர, உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இல. 340/2001, உ.நீ. குறிப்பறிக்கை 17.10.2003

இந்திகா சதுராணி டயஸ் எதிர் ஹர்ஷ் அமரசிங்க, பொலிஸ் இன்ஸ்பெக்டர், உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இல. 444/2002, உ.நீ. குறிப்பறிக்கை 19.12.2003

கந்தசாமி கோணேசலிங்கம் மற்றும் மேஜர் முதாலீப், ஒ.ஐ.சி. JOOSSP இராணுவ முகாம் உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இல. 555/2001, உ.நீ. குறிப்பறிக்கை 10.02.2003

கொடபடு துருகே சிரியாணி சில்வா எதிர் சானக்க இத்தமல்கொட, ஒ.ஐ.சி. மற்றும் ஏனையோர், உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இல. 471/2000, உ.நீ. குறிப்பறிக்கை 08.08.2003

எம்.டபிள்யு.சரத் ஹேமசந்த்ர த சில்வா எதிர் எஸ்.ஐ.கருணாதிலக, உ.நீ. (விசேட)இல. 02.2002, உ.நீ. குறிப்பறிக்கை 10.10.2003

மனிக்கு கங்கானங்கே ஹுபர்ட் செனவிரத்ன எதிர் எஸ்.ஐ.இராஜகருண, குற்றவியல் விசாரணைப் பிரிவு மற்றும் ஏனையோர், உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இல. 646/2001, உ.நீ. குறிப்பறிக்கை 30.05.2003

பிரியந்த அதுகோரல மற்றும் இன்ஸ்பெக்டர் எம்.ஏ.டி.டி.எஸ்.மல்லவாரச்சி, உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இல. 395/2002, உ.நீ. குறிப்பறிக்கை 17.10.2003

ஆர்.எம்.பி.பிரசன்ன எதிர் ஜுட் ஆர்.பி.சி. உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 106/2003, உ.நீ. குறிப்பறிக்கை 11.12.2003

ரஞ்சித் குமார காரியவசம் எதிர் பி.எல்.வி.த கொடிதுவக்கு, பொலிஸ் மா அதிபர் மற்றும் ஏனையோர் உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 492/2001, உ.நீ. குறிப்பறிக்கை 21.10.2003

சுஜீவ அர்ஜுன சேரசிங்க எதிர் காமினி கருணாதிலக்க மற்றும் ஏனையோர், ஆர்.எம்.பி.பிரசன்ன எதிர் ஜுட் ஆர்.பி.சி. உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 431/2001, உ.நீ. குறிப்பறிக்கை 17.03.2003

செல்லதுரை சண்முகராஜா எதிர் தில்ருக், உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 47/2002, உ.நீ. குறிப்பறிக்கை 10.02.2003

வன்னியாரச்சிலகே தொன் நிஹால் விஜேசிரி எதிர் பெனரகம விதானலாகே உபாலி குமார முனசிங்க, பொலிஸ் இன்ஸ்பெக்டர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 623/2002, உ.நீ. குறிப்பறிக்கை 16.12.2003

டபிள்யு.ஆர்.சஞ்ஜீவ, சட்டத்தரணி எதிர் சேன சுரவீர, ஒ.ஐ.சி. மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 328/2002, உ.நீ. குறிப்பறிக்கை 04.04.2003

உறுப்புரை 12

அசங்கா சுபாஷினி பதிரன மற்றும் ஏனையோர் எதிர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 618/2002, உ.நீ. குறிப்பறிக்கை 05.08.2003

ஏ.எம்.ஈ.பர்ணான்டோ எதிர் சட்டமா அதிபர் மற்றும் ஏனைய ஆறுபேரும், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 55/2003, உ.நீ. குறிப்பறிக்கை 17.07.2003

ஏ.எம்.ஏ.ஜயசிங்க மற்றும் ஏனையோர் எதிர் வீ.கே.நாணயக்கார மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 94/2002, உ.நீ. குறிப்பறிக்கை 23.09.2003

அர்ஜுன ரணதுங்க எதிர் மதிப்புக்குரிய ஜொன்ஸ்ட்டன் பெர்ணான்டோ மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 133/2002, உ.நீ. குறிப்பறிக்கை 10.01.2003

டாக்டர் மஹிந்த பாலசூரிய எதிர் அலவி மௌலானா, வட மாகாண ஆளுனர் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 45/2003, உ.நீ. குறிப்பறிக்கை 19.12.2003

தர்ஷன் நயனகாந்த சேனாநாயக்க எதிர் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடட் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 510/2001, உ.நீ. குறிப்பறிக்கை 29.01.2003

ஈ.டொன் மஹிந்த ஹெட்டியாரச்சி எதிர் சந்திரநந்த த சில்வா, செயலாளர், பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 450/2001, உ.நீ. குறிப்பறிக்கை 03.04.2003

கேஸ் கன்வர்ஷன்ஸ் (பிறைவேற்) லிமிடட் மற்றும் ஏனையோர் எதிர் இலங்கை பெற்ரோலியம் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 91/2002, உ.நீ. குறிப்பறிக்கை 13.01.2003

எச்.திரணகம மற்றும் மஹிந்த மடிஹாஹேவா தொழில் ஆணையாளர் நாயகம் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 91/2002, உ.நீ. குறிப்பறிக்கை 11.02.2003

ஹேவா கனட்டகே ஆரியசேன மற்றும் இலங்கை வங்கி, உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 282/98, உ.நீ. குறிப்பறிக்கை 27.03.2003

கலுவல்ல முதலிகே சம்பா நாலனி அலஸ் எதிர் மிஹிது ரத்னாயக்க, உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 538/2001, உ.நீ. குறிப்பறிக்கை 30.10.2003

கஹா கலகே அபேரத்ன எதிர் ஜனத்தா பர்டிலைஸ என்டர்பிரைசஸ் லிமிடட் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 311/2000, உ.நீ. குறிப்பறிக்கை 23.05.2003

எம்.ஏ.சி.ருஸ்தா பர்வின் எதிர் டபிள்யு.ஏ.மஹிந்த விஜேசிரி, பரீட்சைகள் ஆணையாளர் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 536/2002, உ.நீ. குறிப்பறிக்கை 12.09.2003

முதுன்பிட்டகே கனங்க பிரபாத் எதிர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 86/2002, உ.நீ. குறிப்பறிக்கை 04.04.2003

மலகொட கமகே சதுர காஞ்சன அமரசிங்க மற்றும் ஏனையோர் எதிர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 54/2002, உ.நீ. குறிப்பறிக்கை 22.09.2003

எம்.டி.எஸ்.பத்மநாத் எதிர் உயர்தர தொழில்நுட்ப கல்விக்கான இலங்கை நிறுவனம் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 273/2002, உ.நீ. குறிப்பறிக்கை 17.10.2003

எச்.சமீன் முகமட் முபாரக் எதிர் மதிப்புக்குரிய ஜோன் அமரதுங்க, உள்விவகார அமைச்சர் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 583/2002.

மனிக்கு கங்கானம்கே ஹுபர்ட் செனவிரத்ன எதிர் எஸ்.ஐ.இராஜகருண, குற்றவியல் புலனாய்வு பிரிவு, உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 47/2002, உ.நீ. குறிப்பறிக்கை 10.02.2003

நதீக்க ஹேவகே மற்றும் ஏனையோர் எதிர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 627/2002, உ.நீ. குறிப்பறிக்கை 08.08.2003

பெரமுனே முனசிங்க முதியான் சலாகே பாலித்த குமாரசிறி மஹவ்தேகம எதிர் பேராதனை பல்கலைக்கழக மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 540/2002, உ.நீ. குறிப்பறிக்கை 22.05.2003

ஆர்.ஐ.கே.டி சில்வா எதிர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் ஏனையோரும், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 642/2002, உ.நீ. குறிப்பறிக்கை 30.01.2003

சின்னத்தம்பி சின்னம்மா எதிர் எஸ் நவநீதன் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 109/03, உ.நீ. குறிப்பறிக்கை 16.12.2003

எஸ்.பி.வீ.கனகரட்ன எதிர் உயர்தர தொழில்நுட்ப கல்விக்கான இலங்கை நிறுவனம் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 263/2003, உ.நீ. குறிப்பறிக்கை 17.10.2003

சேபால சந்திரசிறி சேமகே பர்ணான்டோ எதிர் என்.எம்.ஜுனைட் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 233/2002, உ.நீ. குறிப்பறிக்கை 08.08.2003

எஸ்.ஜே.ரன்தெனி எதிர் கே.விக்னராஜா மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 243/2002, உ.நீ. குறிப்பறிக்கை 08.08.2003

சுப்ரமணியம் கணேசபிள்ளை எதிர் இலங்கை வங்கி, உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 186/2002, உ.நீ. குறிப்பறிக்கை 23.06.2003

சேமன் மேரு பதிரனகே தயாசேன எதிர் ஆர்.எம்.பிந்துசர, பணிப்பாளர் தேசிய இரத்தமாற்று சேவை மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 583/2001, உ.நீ. குறிப்பறிக்கை 29.01.2003

டி.ஏ.டீ சிறிமல் மற்றும் ஏனையோர் எதிர் கோபரடிவ் ஹோல்சேல் சங்கத்தின் பணிப்பாளர் குழு மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 445/2002, உ.நீ. குறிப்பறிக்கை 08.08.2003

வேலுப்பிள்ளை தவராஜா எதிர் எஸ்.நவநீதன் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 108/03, 109/03, உ.நீ. குறிப்பறிக்கை 16.12.2003

டபிள்யு.ஏ.கே.டி. ஜீவா பிரியந்த எதிர் இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 103/2002, உ.நீ. குறிப்பறிக்கை 12.09.2003

உறுப்புரை 14

பிரியந்த அதுகோரல எதிர் இன்ஸ்பெக்டர் எம்.ஏ.டி.டி.எஸ்.மல்லவராச்சி, உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 395/2002, உ.நீ. குறிப்பறிக்கை 17.10.2003

சோதிலிங்கம் தவநீதன் மற்றும் தயனந்த திஸாநாயக்க, தேர்தல் ஆணையாளர் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 20/2002, உ.நீ. குறிப்பறிக்கை 25.03.2003

சுஜீவ அர்ஜுன சேனசிங்க எதிர் காமினி கருணாதிலக்க மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 431/2001, உ.நீ. குறிப்பறிக்கை 17.03.2003

வழக்குகளின் பட்டியல்

அபேரத்ன எதிர் ஜனத்தா பர்டிலைஸ என்டர்பிரைசஸ் லிமிடட் மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல.11/2000, உ.நீ. குறிப்பறிக்கை 23.05.2003

அதிகாரி மற்றும் அதிகாரி எதிர் அமரசிங்க மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 251/2002, உ.நீ. குறிப்பறிக்கை 14.02.2003

ஆஜ்ன ரணதுங்க எதிர் ஜொன்ஸ்ட்டன் பெர்ணான்டோ மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 133/2002, உ.நீ. குறிப்பறிக்கை 10.01.2003

அகொஸ்டின் பெரேரா மற்றும் இரு தொடர்புடைய விண்ணப்பங்கள் எதிர் ரிச்சர்ட் பதிரன மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 453/454/1997, மற்றும் 390/99, உ.நீ. குறிப்பறிக்கை 30.01.2003

பண்டாரநாயக்க எதிர் இராஜகுரு 1999 (1) SLR 104

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் டாக்டர் சரவணமுத்து மற்றும் ரெஹான் எதிரிசிங்க எதிர் திசாநாயக்க, CA/487/99இல் உ.நீ. மேன்முறையீடு 26/2002 மற்றும் CA/487/99இல் உ.நீ. மேன்முறையீடு 27/2002, CA/488/99 உ.நீ. குறிப்பறிக்கை 27.03.2003

தயாசேன எதிர் பிந்துசேன மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 453/454/1997, மற்றும் 583/2001, உ.நீ. குறிப்பறிக்கை 20.01.2003

த சில்வா எதிர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 133/2002, உ.நீ. குறிப்பறிக்கை 10.01.2003

தனு கொன்டிரக்டஸ் (பிறைவேற்) லிமிடட் மற்றும் இன்னொருவர் எதிர் மாத்தளை நகர சபை மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 461/2001, உ.நீ. குறிப்பறிக்கை 13.10.2003

ஏகநாயக்க (ஆர்.பி.சி.) எதிர் எஸ்.ஐ.வேவாவசம், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 34/2002, உ.நீ. குறிப்பறிக்கை 17.03.2003

ஹரிந்த சஷிகா குமார எதிர் டி.ஐ.ஜி.த பொன்சேக்கா மற்றும் ஏனையோர், உ.நீ (அ.உ.) விண்ணப்ப இல. 462/2001, உ.நீ. குறிப்பறிக்கை 17.03.2003

புலமைச் சொத்துரிமை சம்பந்தமாக, உ.நீ.விசேட தீர்மானம் இல.14/2003

ஞானமுத்து எதிர் இராணுவ அதிகாரி ஆனந்த மற்றும் ஏனையோர், 1999(2) SLR 213

குணநாதன் எதிர் யாழ் பல்கலைக்கழகம் மற்றும் ஏனையோர் CA/1559/2003, மேன்முறையீட்டு நீதிமன்ற குறிப்பறிக்கை 09.12.2003

கத்ரி (II) எதிர் பிஹார் மாநிலம். 1981 (1) SCC 627

கனகரத்ன மற்றும் ஏனையோர் உயர்தர தொழில்நுட்ப கல்விக்கான இலங்கை நிறுவனம், உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இல. 263/2003, உ.நீ. குறிப்பறிக்கை 17.10.2003 மற்றும் 03.12.2003

கணேசபிள்ளை எதிர் இலங்கை வங்கி மற்றும் ஏனையோர், உ.நீ. (அ.உ) விண்ணப்ப இல.186/2003 மற்றும் 03.12.2003

கோணேசலிங்கம் எதிர் மேஜர் முதாலீப் மற்றும் ஏனையோர், உ.நீ. (அ.உ) விண்ணப்ப இல.555/2001 மற்றும் 10.02.2003

சுகாதார அமைச்சர் மற்றும் ஏனையோர் எதிர் ட்ரீட்மன்ட் அக்ஷன் கம்பெயின் மற்றும் ஏனையோர், 2002 (5) SA721 (CC), 2002 10 BCLR 1033

போரகே லக்ஷ்மன் எதிர் பெர்ணான்டோ, உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இல.24/90, உ.நீ. குறிப்பறிக்கை 29.09.95

பத்மநாத் எதிர் உயர்தர தொழில்நுட்ப கல்விக்கான இலங்கை நிறுவனம், உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இல.273/2003, உ.நீ. குறிப்பறிக்கை 17.10.2003 மற்றும் 03.12.2003

பஸ்சிம் பங்கா கேத் மஸ்தூர் சமித்தி எதிர் வட வங்காள மாநிலம், 1996 SOL வழக்கு இல.169 (இந்திய உயர் நீதிமன்றம்)

சஞ்சீவ எதிர் சுரவீர, ஒ.ஐ.சி, வத்தல மற்றும் ஏனையோர், உ.நி. (அ.உ.) விண்ணப்ப இல. 328/2002, உ.நீ. குறிப்பறிக்கை 04.04.2003

செனவிரத்ன எதிர் உப இன்ஸ்பெக்டர் இராஜகருண மற்றும் ஏனையோர் ஐவர், உ.நீ. (அ.உ) விண்ணப்ப இல. 646/2001, உ.நீ. குறிப்பறிக்கை 30.05.2003

சேனநாயக்க மற்றும் அருண எதிர் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடட், உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இல. 510/2001, உ.நீ. குறிப்பறிக்கை 29.01.2003

சண்முகராஜா எதிர் தில்ருக், எஸ்.ஐ.வவுனியா, உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இல.47/2002, உ.நீ. குறிப்பறிக்கை 10.02.2003

சுப்ரமணி எதிர் சுகாதார அமைச்சர், க்வாசுலு நேடல், 1998 (1) SA 765 (CC), 1997 (12) BCLR 1696 (CC)

சரியானி சில்வா எதிர் ஒ.ஐ.சி. பயாகல, உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இல. 471/2000 உ.நீ. குறிப்பறிக்கை 08.08.2003

சுஜீவ அர்ஜுன சேனசிங்க எதிர் காமினி கருணாதிலக மற்றும் ஏனையோர், உ.நீ.(அ.உ.) விண்ணப்ப இல. 431/2001, உ.நீ. குறிப்பறிக்கை 17.03.2003

சரிமல் மற்றும் ஏனையோர் எதிர் டபிள்யு., மற்றும் ஏனையோர், உ.நீ.(அ.உ.) விண்ணப்ப இல. 445/2002, உ.நீ. குறிப்பறிக்கை 08.08.2003

தவநீதன் எதிர் திசாநாயக்க மற்றும் ஏனையோர், தங்கவேல் மற்றும் இன்னொருவர் எதிர் திசாநாயக்க மற்றும் ஏனையோர் இத்துடன் அழகசுந்தரம் மற்றும் இன்னொருவர் எதிர் திசாநாயக்க மற்றும் ஏனையோர், உ.நீ. (அ.உ.) விண்ணப்ப இலக்கங்கள் 20/2002, 25/2002 மற்றும் 26/2002, உ.நீ. குறிப்பறிக்கை 25.03.2003

விநாயகமூர்த்தி எதிர் இராணுவ தலைவர் 1997 (1) SLR 113

வாக்கர் அன்ட் சன்ஸ் எதிர் குணதிலக மற்றும் ஏனையோர், (1978 - 79) SLR 231

வீரசேகர எதிர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏனையோர், உ.நீ.(அ.உ.) விண்ணப்ப இல.86/2002, உ.நீ. குறிப்பறிக்கை 04.04.2003

மனித உரிமைகளின் நிலை 2005

இவ்வறிக்கை 2004 இல் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் தொடர்பான நிகழ்வுகளை விபரமாக அடக்கியுள்ள ஆங்கில மூல அறிக்கையின் தமிழாக்கமாக உள்ளது.

இவ்வறிக்கையில் அரசியலமைப்புக்கான 17 ஆவது திருத்தம், 2001 இல் நீதித்துறை, சமூக, பொருளாதார உரிமைகள் மீது மின்சக்தி நெருக்கடியின் தாக்கமும் நிலைபேண் அபிவிருத்தியும், மனித உரிமைகளுக்கான நீதிமுறைப் பாதுகாப்பு, இலங்கையில் பொதுத்துறைச் சேவை ஆகிய விடயங்கள் ஆராயப்படுகின்றன. இதனால் இவ்வறிக்கை இலங்கையிலுள்ள மனித உரிமைகள் இயக்கத்தின் ஒரு முக்கிய மைல் கல்லாக விளங்குகின்றது.

சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம்
3, கின்சி ரெறஸ், கொழும்பு 8
இலங்கை
Tel: 2691228/2684845
Tele fax: 2686843
E-mail: lst@eureka.lk
Website: http://www.lawandsocietytrust.org

Printed by Karunaratne & Sons (Pvt) Ltd.